யாப்பு

சுண்ணைக்காண்டம்

மூலமும் உரையும்

தாமரை நூலகம், சென்னை - 26.

யாகோபு

சுண்ணக் காண்டம் 600

(மூலமும் உரையும்)

பதிப்பாசிரியர்
ஆர். சி. மோகன்

தாமரை நூலகம்
7, N.G.O. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் 23620249

தாமரை வெளியீடு எண் : 275

முதல் பதிப்பு : மார்ச் - 2002

இரண்டாம் பதிப்பு : மார்ச் 2014
மூன்றாம் பதிப்பு : அக்டோபர் 2019

உரிமைபெற்றது

நூலைப்பற்றி

நூலின் பெயர்	:	யாகோபு சுண்ணக் காண்டம் 600 (மூலமும் உரையும்)
பதிப்பாசிரியர்	:	ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, N.G.O. காலனி 3வது தெரு வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	அக்டோபர் 2019
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	21 செ. மீ. x 14 செ. மீ
அச்சுத்தாள்	:	16.கி. மேப்லித்தோ
எழுத்துக்கள்	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	261+12
பிரதிகள்	:	1000
நூல் விலை	:	ரூ.100/-
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை - 34

பதிப்புரை

முன்னர் யாகோபு சுண்ணம், சுண்ணக்காண்டம், லோகசெந்தூரம் என மூன்று அரிய புத்தகங்களை ஒன்று சேர்த்து வெளியிட்டிருந்தோம். அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. இதற்கு காரணம் யாகோபு எளிய படைப்புகள் தாம் காரணம். பெரும்பாலும் அவர் அதிகமாக மறைப்புப் பொருளை சொல்லாது வெளிப்படையாக சொல்லியிருந்தார்.

சிங்கம்புணரி வைத்தியர் திரு.டி.கே.வெங்கட்டராமன் யாகோபு சுண்ணக்காண்டம்-600 க்கு மிகவும் தெளிவான உரைகள் எழுதி இந்த நூலகத்தின் ஸ்தாபகர் திரு. எஸ்.பி. இராமச்சந்திரன் அவர்களிடம் ஏற்கெனவே அளித்திருந்தார். ஏற்கெனவே தயாரித்து வைத்திருந்த முழுமை பெற்ற இந்த படைப்பாகிய 'யாகோபு சுண்ணக் காண்டம்-600 மூலமும் உரையும்' தனியாகவே வெளியிடலாம் என முடிவு செய்து தற்போது வெளியிட்டுள்ளோம். மற்ற இரண்டு படைப்புகளாகிய சுண்ணம் மற்றும் லோகசெந்தூரம் ஆகியவற்றினை தனியே வெளியிடுகிறோம்.

இந்த புத்தகத்தில் சித்த மருத்துவத்தில் மிகவும் விசேஷமாக பயன்படுத்தப்படுகின்ற பல்வகை சுண்ணங்கள், செந்தூரங்கள் ஆகியவை தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இதனைப் படித்து அனைவரும் பயனடைவார்கள் என நம்புகிறோம்.

பதிப்பாசிரியர்
ஆர்.சி.மோகன்

91/4

அன்பும் பண்பும் நிறைந்த ஆன்மீக சகோதரர்களே!
சித்த மருத்துவ சிறப்பாளர்களே!

எல்லோருக்கும் என்னுடைய பணிவான வ்ணக்கங்கள். விஞ்ஞானத்தின் பல அற்புதங்களை நேரில் பார்த்து மகிழும் இந்த காலத்தில், இதைவிட பிரமிக்க வைக்கும் முறைகளை விஞ்ஞானத்திற்கும் எட்டாத முறைகளை அன்றே நம் சித்தர்கள் செய்துள்ளார்கள் என்றால் அது மறுக்க முடியாத உண்மை. அப்படிப்பட்ட உண்மையான முறைகளையும் உலகில் இன்னும் நம்மால் அறிந்து கொள்ள முடியாத பல அதிசயங்களையும் பல நூல்களின் வாயிலாக நமக்கு அழகிய தமிழில் பாடல்களாகக் கூறிவைத்தனர். அவைகள் பல காலப்போக்கில் பலரால் மறைக்கப்பட்டும், அழிந்தும் விட்டன. ஆனால்

இன்று சித்த மருத்துவ, வாத , யோக, ஞான சாஸ்திரங்களை புதுப்பொலிவுடன் நம் கைகளில் தவழவிட்ட பெருமை அனைத்தும், சித்தர்களின் நூல்கள் மட்டுமே வெளியிட வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன், தாம் வாழ்நாள் இதற்காகவே ஒதுக்கப்பட்டது என்பதை உணர்ந்து, தன்னலமின்றி, நேரம், பொருள், செலவு, உடல் உழைப்பு இவைகளைப் பாராமல் பல கிடைத்தற்கறிய சாஸ்திரங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கும் மாமனிதர் பேரறிவாளர் திரு. எஸ்.பி. இராமச்சந்திரன் அவர்களை நாம் என்றென்றும் நினைவில் கொண்டு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அவரது அயராது உழைப்பிற்கு நம்முடைய அன்பினையும், வணக்கத்தையும் காணிக்கையாக்குவோம்.

யாகோபு .என்னும் சித்தர் எழுதிய எத்தனையோ நூல்கள் வெளிவந்த போதிலும் இந்த“சுண்ணகாண்டம்600” என்னும் சிறப்பு மிக்க நூல் போல், வேறு நூல் இல்லை எனலாம். இதில் இவர் சித்தர்களின் மத்தியில் மிக இரகசியமாக மறைத்து

பரிபாஷைகளால் எழுதப்பட்டு இருக்கும் வழலை என்ற பொருளை மிகத் தெளிவாக மறைப்பின்றி விளக்குகிறார். அந்த பாடல் சுண்ணகாண்டம் 600 ல் 270 வது பாடலில்

ஓதினார் வழலையது வென்பேரு
உறுதியாய்ப் பூநீரில் சுண்ணங்கூட்டிப்
பாதியே பாணிவிட்டுத் தொட்டுப்பாரு
பதிவாக வழவழப்பு கையில்தோனும்
சோதிபெற இதுக்குப்பேர் வழலையாகும்
தொல்லுலகில் அறியாத மூடர்தானும்
சோதித்தார் பிண்டமென்றும் தீட்டாமென்றும்
போக்கோடே யெடுத்துமே சுடுவார்தானே

என்று மிக அருமையாகக் கூறியுள்ளார்,

பூநீறையும், சுண்ணாம்பையும் சேர்த்து தண்ணீர்விட்டு கரைத்து தொட்டுப் பார்க்க வழவழப்பாக இருக்கும். இதுவே வழலையாகும். இதை அறியாத மூடர்கள் குழந்தைகளின் பணத்தையும், தீட்டுப்பட்ட குருதியையும் எடுத்து சுட்டு அலைகிறார்கள் என்று மிக அருமையாக பரிபாஷையை உடைத்துளார்.

மேலும் பல ரசவாதம் செய்பவர்கள் ரசவாதம் மூலம் தங்கம் செய்து வீட்டிற்கு செலவு செய்யக் கூடாது. பாபம் எய்தும் என்றும், இல்லறத்தில் உள்ளவர்கள் ரசவாதம் செய்யக்கூடாது என்றும் பலவாறு கூறுவார்கள். அதைப்பற்றிய சந்தேகம் பலருக்கு இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதைப்பற்றி மிகக்தெளிவாக எந்த முறைப்படி செய்த தங்கத்தை வீட்டிற்கு செலவ்ழிப்பது. எந்த விதமான தங்கத்தை செலவழிக்கக்கூடாது என்பதை இவர்போல் யாரும் கூறவில்லை. இவர் தன்னுடைய பாடலில்

தானென்ற யெழுநூறு முன்னேபார்த்துத்
தாட்டிகமாய் வயித்தியங்கள் மிகவுஞ்செய்து
ஊனென்ற சோற்றுக்கு யிடத்தைப்பண்ணி
ஒழுங்காக அதன்பின்னே முன்னூறுரெண்டும்
வானென்று பார்த்துமே களங்குசெய்து
வடிவாக ஐம்பத்தி ஐந்தும்பார்த்து
கானென்ற செம்புதான் பிரித்தெடுக்கும்
கைபாக மறிந்துமே தேறுவாயே

தேறுவாய் செம்பெடுத்து மதியில்தாக்கித்
திடமாக விற்றுமே செலவுசெய்து
ஆறுவாய் வீடுமனை பெண்டிர்மக்கள்
அடைவான வீட்டுக்குச் செல்லுமானம்
பாறுவாய் கொடுத்துமே செலவுசெய்து
பக்குவமாய் அதன்பின்னே சொல்லக்கேளு
ஊறுவாய் உண்டுடுத்திப் பின்புநீயும்
உறுதிபெற அதன்பின்னே சொல்லக்கேளே.

என்று தன்னுடைய 593, 594 பாடல்களில் களங்கிலிருந்து செம்பு பிரித்து வெள்ளியில் கொடுத்து செய்த தங்கத்தை வீடு, மனைவி, மக்கள் முதலியவர்களுக்கும் வீட்டுச் செலவுக்கும் வைத்துக் கொள்ளலாம். இதை விற்று சாப்பிடலாம் என்றும்,

நீறான துரிசுனுடை நீறுதன்னை
நேராகப் பணவிடைதான் விராலிக்கிட்டு
வாராகப் பிழிந்துமே சூதமிட்டு
வகையாகக் காய்ச்சிடவே சூதங்கட்டும்
நேராக யிச்சூதங் கரியில்நின்று
நிகராக உருகுமாபோ தங்கஞ்சேர்த்துப்
பாராகச் செந்தூரம் பண்ணிநீயும்
பதிவாக நவலோகம் தன்னிலியே

ஈயவே நவலோகம் பழுத்துப்போகும்
இதமாக உலகத்தில் விற்றுநீயும்
நாயமார் சொன்னபடி அல்லாவுக்கு
நலமான பள்ளிதான் வாசல்கட்டிக்
காயவே கந்திரிதான் ஆக்கிநீயும்
கனிவாகக் கொடுத்துமே அப்பாற் கேளு
வாயவே இச்சொத்தை வீட்டில்தானே
வடிவாக உண்டிடவே வேண்டாந்தள்ளே

என்று பாடல்கள் 597, 598 லும் சூதமும், துரிசும் சேர்ந்து செய்யும் தங்கத்தை விற்று பள்ளிவாசல், அன்னதானம் செய் வீட்டிற்கு செலவு செய்யாதே என்றும் மிக அற்புதமாக கூறியுள்ளதை நினைக்கும் போது நம்மை பிரமிக்க வைக்கிறது.

இவர் கனமியாக தன்னுடைய நூலில் தான் எழுதியதில் ஒரு சிறு தவறுகூட இல்லை என்றும் அப்படி ஏதாவது தவறு இருந்தால் தன்னை இகழும் படியும் மிக உறுதியாக கூறியுள்ளார் தன்னுடைய 268, 269ம் பாடல்களில்

சுண்ணமா மீந்நூற் படியேதானும்
துடியாக ஒருசுண்ணஞ் செய்துபாரு
நன்னவே நான்சொன்ன தெல்லாஞ்செய்யில்
நலமாக ஒன்றுதப்பில் சொல்லக்கேளு
கன்னலாய் நடைகெட்ட யாக்கோப்பென்று
கருணைபெற சொல்லிவிடு கணக்குமாகும்
பண்ணவே பாகமிது தப்பிற்றானால்
பகரரிய சுண்ணமது தப்பும்பாரே.

தப்பிதமாய்ச் செய்யாமல் நூலைப்பார்த்துத்
தருகாவி லேசெய்தாப் போலேசெய்து
முப்பினுட குருமுடித்துச் சரக்குக்கட்டி
முவுலக மெய்யக்கவே சுண்ணம்பண்ணி

எப்படியும் நபிமாரைப் போலசெய்து
இருந்திடத்தில் ரசவாதம் செய்துவித்து
உப்பினுட பொருளறிந்து பார்த்துத்தேறு
உறுதிபெற யாகோபு ஓதினாரே

என்று தன்னுடைய சுண்ணம் காண்டம் - 600 என்னும் இந்த நூலில் உள்ள ஒரு சுண்ணம், நான் சொன்ன முறைப்படி செய்து பார். கெட்டுப்போனால் என்னை கடைகெட்ட யாகோபு என்று கூறி இதழ்ந்து பேசு. ஆனால் கைபாகம், எடைபாகம், செய்பாகம் தவறினால் சுண்ணம் வராது. எனவே தவறாகச் செய்யாமல் இந் நூலைப் பார்த்து நான் தர்காவில் செய்ததுபோல் செய்து குருமருந்து செய்து, அதனால் சரக்குளைக் கட்டி, சுண்ணம் செய்து நபிமார்கள் போல் வாழ்ந்து, அலைந்து திரியாமல் இருந்த இடத்தில் இருந்து ரசவாதம் செய்து விற்று முப்புவின் பொருள் அறிந்து செய்து தேறு என்று உறுதியுடன் யாகோபு கூறுகிறார். எனவே ஆத்மநண்பர்களே, பெரியோர்களே, உண்மையான முறையில் நூல்களை ஆராய்ந்து முறைப்படி ரசவாதம் எனும் அற்புத கலையைக் கற்று அதன் மூலம் நம்முடைய வறுமையையும், நாட்டினுடைய வறுமையை நீக்கி சித்தர்கள் நிலையை அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் இப்படிப்பட்ட இன்னும் பல அறிய சாஸ்திரங்களை நமக்குப் புதுப் பொலிவுடன் கொடுக்கக் காத்திருக்கும் சித்தர்களின் அருளாசியை முழுவதும் பெற்று அதற்காகவே தங்கள் வாழ்வை அற்பணித்துக் கொண்டு தன் உயிர், மூச்சு வாழ்வு எல்லாமே சித்தர்களின் அற்புதங்களை உலகறியச் செய்வதற்காகவே முதுமையிலும் தன்நிலை பாராது தொண்டாற்றி வரும் பேரறிவாளர் ஆகிய திரு. எஸ்.பி., இராமச்சந்திரன் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த வணங்கங்களை இந்த உலகில் உள்ளோர் பொருட்டும் கூறிக்கொள்கிறேன்.

இப்படி

திரு. K.V.ராமன்

பொருளடக்கம்

சுண்ணக்காண்டம் 600

காப்பு :

ஆனந்தமாய் நிறைந்த அல்லாபாதம்
அடுத்துநின்ற நபிமார்கள் பாதம்போற்றி
தானந்த மகமதுவைத் தொழுதுபோற்றித்
தாட்டிகமாய்ச் சுண்ணமென்ற காண்டந்தன்னை
வானந்த மாகவே அறுநூறாக
வகையாகப் பாடினேன் வண்மையாகக்
கோனந்த மெய்ப்பொருளா மின்னூல்தன்னைக்
குறிப்பாகப் பாடினேன் கூர்ந்துபாரே. 1

பாடல் : எங்கும் ஆனந்தமயமாய் நிறைந்து நிற்கின்ற அல்லாவின் பாதங்களையும், அல்லாவின் வழி நடக்கின்ற சித்தர்களான நபிமார்களின் பாதங்களையும், தானே தானாய் நின்ற முகமதுவின் பாதங்களையும் போற்றி உறுதியுடன் சுண்ணம் என்ற இந்த காண்டத்தை அறுநூறு பாடல்களாக உண்மையுடன் பாடினேன். உண்மைப் பொருளான இந்த நூலை மிக குறிப்புடன் பாடினேன். எனவே இதை நீ நன்கு ஆராய்ந்து பார்ப்பாயாக.

நூல் தொகுப்பு

பாரேநீ வைத்தியமெழு நூறுபாடிப்
பதிவாகச் சுண்ணமுந் நூறுபாடிக்
காரேநீ அதைக்குறுக்கி நூற்றைம்பத்தைந்தும்
கனிவாகப் பாடியே யதைக்குறுக்கி
வாரேநீ ஐம்பத்து யேழாய்ப்பாடி
வரிசையாய்ப் பதினாறு இடைபாகங்கள்
தாரென்று சொல்லியே அதின்மார்க்கத்தைத்
தாட்டிகமா யாகோபு தன்மைதானே. 2

தன்மையா யறுநூறிற் சுண்ணமெல்லாம்
தாக்கிடவே கைபாக வரிசையோடு
உண்மையாய்ச் சொல்லிவிட்டே னுற்றுக்கேளு
உறுதிபெறக் கைபாகம் உண்மையாக
வுண்மையா யறுநூறு பார்த்துத்தேறில்
வரிசையாய்த் தொட்டதெல்லாம் பழுக்கும் பாரு
புண்மையாய்த் துரிசதுவின் நீறினாலே
போக்கோடே கோடிவரை ஓடுந்தானே. 3

பாடல்கள் : 2-3 : நான் வைத்தியம் எழுநூறு என்று ஒரு நூலை முதலில் பாடினேன். அதன் பின்னர் சுண்ணம்முன்னூறு என்ற நூலையும், அதையும் சுருக்கி ஐம்பத்தேழு என்ற நூலையும் பாடினேன். அதையும் சுருக்கி ஐம்பத்தேழு என்ற நூலாய் பாடினேன். இதில் பதினாறு இடைபாகங்களையும் வரிசையாக கூறி அதன் வழிகளையும் பாடினேன். இந்த அறுநூறில் சுண்ணங்களின் செய்பாக வரிசைகளையும் கூறினேன். இதை நன்கு புடித்து செய்தால் எல்லா உலோகங்களும் தங்கமாகும். துரிசு சுண்ணமானால் கோடிக்கணக்கான வேதைகள் உண்டாகும்.

உண்மை வாதியின் இலக்கணம்

ஓடுமே வாதியென்ற பேர்களுக்கு
உறுதிபெற மெஞ்ஞானம் வரவேவேணும்
பாடுமே ஆதார மறியவேணும்
பதிவான காயமதை நிறுத்தவேணும்
வாடுமே அல்லாவை துதிக்கவேணும்
வண்ணமாய் வாதமென்ற பருவத்தைத்தான்
காடுமே தாளிக்கா வருமம்வேணும்
கண்டுகொள்ளு கைமுறையின் காதலாமே. 4

காதலா யிதுவெல்லா மறியாவிட்டால்
கனமான வாதமெல்லாம் பொய்யாய்ப்போகும்

ஆதலால் வாதத்தை நிறுத்தவென்றால்
அணுப்போலே சவுக்காரஞ் செய்யும்மார்க்கம்
ஊதலா யதையறிய வேணும்பாரு
உற்றுணர்ந்து உப்பைநன்றாய்க் கட்டிப்பாரு
நீதமாய்ப் பூரத்தை உப்புப்பண்ணு
நிலையாகத் தாளகத்தைச் சுண்ணம்பண்ணே. 5

சுண்ணமாந் தாளகத்தை நீறுபண்ணு
சுருதிபெற வங்கத்தைச் சுண்ணம்பண்ணு
நன்மையாய் வேதைக்குத் துருசுதன்னை
நாடியே குருபண்ணு நாடித்தேர்ந்து
வண்ணமாம் வாதமெல்லாங் கைக்குள்ளாகும்
வகையாகுஞ் சுண்ணமென்ற போக்குத்தானும்
இன்னிலத்தில் ரசவாத மெல்லாமாகும்
இயல்பான யாகோபு யிதஞ்சொன்னாரே. 6

இதமாகச் சவுக்காரக் குருவைச்சொல்வேன்
என்னாலே யறிந்தமட்டு மின்பமாக
அதமாக உலகத்தோர் வாதிதானும்
அன்பாகச் சவுக்கார மில்லையென்று
பதமாகப் பேச்சுகள்தான் பேசித்தேர்ந்து
பாகமாய் மூலிகையா லாகுதென்பார்
விதமாக யிப்படிக்குப் பேசிப்பேசி
விருதாவாய்ச் சுட்டுமே அலைவார்தானே 7

அலையாமற் சவுக்காரக் குருவைப்பண்ணி
அறைகிறேன் அல்லாவுக் கொப்பாய்த்தானும்
விலையாக யெண்ணெயதைக் கழற்றமாட்டார்
விருதாவாய்ச் சொல்லிவிட்டுப் புலம்புவார்கள்
கலையான மான்போலே துள்ளிவீழ்வார்
கருத்தறியா வாதியவர் காணமாட்டார்
உலையில்வைத்து ஊதிடவே சவுக்காரத்தை
உண்மையா யுருகியே போகுந்தானே. 8

போகுமே நீறாமற் றிரண்டுபோகும்
போக்கோடே யெடுத்தெறிந்து யில்லையென்பார்
வாகுபெறச் சவுரியங்கள் சொல்வார்வாதி
வகையறிய மாட்டாமற் புலம்புவார்கள்
நாகுமே யிப்படிக்குப் புலம்பச்செய்து
நலமாகப் பேசியே யில்லையென்பார்
பாகுமே பூனீரி லெல்லாமாச்சு
பருவம்வந்த பழச்சாற்றை யறியார்தானே 9

தானென்ற சவுக்காரச் சுண்ணந்தன்னைச்
சாற்றரிது சாற்றுகிறேன் தன்மையாக
வானென்ற சித்திரைவை காசிமாதம்
வகையாகப் பூத்துமே நிற்கும்பாரு
கோனென்ற சித்திரையா மாதந்தன்னில்
குறிப்பான பூநீரு யெடுக்கலாகா
கானென்ற பங்குனியிற் பூத்தபூவை
கருணைபெற யெடுத்திடவே கணக்குக்காணே. 10

பாடல்கள் 4-10: உண்மையான ரசவாதிகளுக்கு நிச்சயமாக மெய்ஞானம் உண்டாக வேண்டும். ஆறு ஆதாரங்களையும் அறியவேண்டும். உடலை காயசித்தி செய்து நிலை நிறுத்த வேண்டும். எப்போதும் எல்லாம் வல்ல அல்லாவை எந்நேரமும் வணங்க வேண்டும். ரசவாதம் என்ற பருவத்தை நுணுக்கமுடன் அறிய வேணும். இப்படி உண்மையை அறிந்து செய்தால் பல நன்மைகள் ஏற்படும். இப்படி முறையாக அறியவில்லை என்றால் ரசவாதம் என்பது பொய்யாகும். எனவே வாதம் சித்தியடைய வேண்டுமானால் சவுக்காரம் செய்யும் மார்க்கத்தையும், உப்பைக் கட்டும் முறையையும் நன்கு அறியவேண்டும். இப்படி அறிந்து பின் பூரத்தை உப்பாகச் செய்தும், தாளகத்தை சுண்ணம் செய்.

பக்குவத்தை அறிந்து வங்கத்தை சுண்ணம் செய். வேதையை சித்தி செய்வதற்கு துரிசை குருமருந்தாக செய். இப்படி செய்தால் ரசவாதமானது உன் கைக்குள் அடங்கும். சுண்ணங்களின் போக்கினாலேயே இந்த உலகினில் ரசவாதம் சித்தியாகும். இதை யாகோபுவாகிய நான் உண்மையாகக் கூறுகிறேன். சவுக்கார குருவை நான் செய்து பார்த்து அறிந்த வரை உண்மையாகக் கூறினேன். இந்த உலகில் உள்ள ரசவாதிகள் சவுக்காரம் இல்லை என்றும் பொய் என்றும் கூறிக் கொண்டு பல பொய்யான பேச்சுகள் பேசிக் கொண்டு மூலிகைகளால் ஆகும் என்று கூடிப்பேசிக் கொண்டு வீணாக சுட்டு சுட்டு அலைகின்றனர்.

இப்படி அலையாமல் உண்மையான முறையில் நான் சவுக்கார குருவை செய்து அல்லாவுக்கு ஒப்பான அதனுடைய பெருமையை இங்கு கூறுகிறேன். சவுக்காரத்தை எண்ணை நீக்கத் தெரியாமல் வீணாக சொல்லி சொல்லி புலம்புவார். இங்கும் அங்கும் ஓடித் திரிந்தாலும் உண்மையை அறியாத வாதிகள் சவுக்காரத்தை அறிய மாட்டார்கள். இவர்கள் செய்யும் சவுக்காரமானது உலையில் வைத்து ஊதிட சுண்ணம் போல் ஆகாமல் உருகி ஓடி விடும். இதை எடுத்து தூரஎறிந்து விட்டு பொய்யென்பார்கள். பல, பல முறைகள் வாயால் கூறுவார்கள். ஆனால் அதன் உண்மையான முறையை அறிய மாட்டார்கள். புலம்பி புலம்பி இவை எல்லாம் இல்லை பொய் என்பார்கள். உண்மையாக உவர் மண்ணில் விளையும் பூநீரில்தான் எல்லாம் உண்டாயிற்று, இதையும் உண்மையான பழச்சாறு என்பது என்ன? அதை எப்படி செய்வது என்பதையும் அறிய மாட்டார்கள். உண்மையான சவுக்காரம் செய்யும் மார்க்கத்தைக் கூறுகிறேன். யாரும் கூறாத இந்த முறையை நான் கூறுகிறேன் கேட்பாயாக

(சித்திரை, வைகாசி மாதங்களில் உவர் மண் பூமியில் மண்ணானது விடியற்காலையில் சூரியன் உதயம் ஆகும் நேரம் மஞ்சள் நிறத்துடன் கடலின் அலையைப் போன்று அலை அலையாக சிறு கறையான் புத்தைப் போன்று மேலெழும்பி பூவைப் போன்று மென்மையாக உப்பு கரிப்பான சுவையுடன் கையில் அள்ளினால் பிசு பிசுப்புடன் இருக்கும். இதுவே மனோன்மணியாளின் நாதம் என்றும் உவர் மண் பூ என்றும், மஞ்சள், சிகப்பு பூ என்றும், ஊசரம் என்றும், பூநீறு என்றும் எல்லா சித்தர்களாலும் கூறப்படுகின்றதாகும். இதை பலர் மறைமுகமாகவும், பரிபாஷைகளிலும் கூறினாலும் என் உண்மையான அனுபவ முறைப்படி இதுவே பூநீறு ஆகும். சூரியன் சற்று மேலேறி சூடு உண்டானால் இந்த மண் கரைந்து தரையோடு தரையா்கி விடும்.) சித்திரை, வைகாசி மாதங்களில் பூநீறானது பூத்து நிற்கும் அதில் சவுக்காரம் செய்வதற்கு சித்திரை மாதத்தில் பூநீரை எடுக்கக்கூடாது. பங்குனி மாதம் விடியற் காலையில் சென்று சூரியன் உதயமாகின்ற நேரத்தில் மேற்கூறியபடி பூக்கின்ற பூநீறை எடுத்து வந்து வேண்டிய மட்டும் சேகரித்துக் கொள்ளவும்.

சவுக்காரம் செய்ய

காணப்பா பூனீறு யெடுக்கமாதம்
கருணைபெறப் பங்குனியி லெடுத்துக்கேளு
வாணப்பா படிநாலு அளந்துவிட்டு
வடிவான கற்சுண்ணம் படிதான்போடு
தானப்பா கல்லுப்புப் படிதான்போடு
தகைமையா யின்னுமொரு தன்மைகேளு
பாணப்பா யெழுநூற்றி லமுரிதன்னைப்
பக்குவமாய் முறிக்கவே சொன்னேன்பாரே. 11

சொன்னதொரு அமுரிபடி யெட்டுத்தானும்
சுருதியாய்ப் போட்டுமே திரிநாள்வைத்து
நன்னயமாய் நாலாநாள் தெளிவைவாங்கி
நலமாக அடுப்பில்வைத்து யெரிநேர்பாகம்
கன்னல்போற் குளம்பாக வருதல்கண்டு
கணக்காகப் படியரைநல் லெண்ணெய்விட்டு
முன்னமே சொல்லிவிட்டாப் போலேவாரு
முக்கியமாய்த் திட்டமாய் வார்த்திடாயே. 12

வார்த்திட்டுத் திரளவே காய்ச்சிநீயும்
வடிவாகப் பக்குவமா யானபின்பு
ஏத்திட்டுப் பருவமுடன் சாம்பல்தன்னை
இதமாக அடிதனிலே சாணுநீளம்
காத்திட்டுப் பரப்பியே அதின்மேற்கேளு
கனிவாக யிரண்டுமே சீலையிட்டு
பாத்தியிட்டு அகப்பையினாற் குளம்புதன்னைப்
பதியவே யெடுத்தூத்திப் பின்புகேளே 13

பின்புதான் அகப்பையினால் மொண்டுஊத்தப்
பிசாகமல் பூனீரி லிருக்கும்நீரை
அன்பாக உண்டுவிடும் மேலேதானும்
அடைவாக முன்போலே துணிபரப்பி
தென்பாகச் சாம்பலைத்தான் மேலேகொட்டித்
திறமாகப் பார்க்கமேல் நீரைத்தானும்
வன்பாக உண்டுவிடு மெல்லத்தானும்
வழுவில்லா மேற்றுணியை நீக்கிப்பாரே. 14

நீக்கியே பூனீரிலிருந்த நீரை
நிலையாகச் சாம்பலது குடித்துப்போடும்
பாக்கியமா யெடுத்துமே உண்டைபண்ணிப்
பதிவாக விளாங்காய்போ லுண்டைசெய்து
நோக்கியே கதிரில்வைத்துத் திரிநாளாறு
நிலையாக வைத்துமே யெடுத்துக்கொள்ளு

வாக்கிலே நிலைத்துமே சொல்லக்கேளு
வடிவாகப் பாகத்தை வழுத்தக்கேளே. 15

பாடல்கள் :-11-15 : இப்படி பங்குனி மாதம் உவர்மண் இருக்கும் இடம் சென்று வேண்டிய மட்டும் பூநீறை அளந்து எடுத்து வைத்துக் கொள். இப்படி ஏடுத்த பூநீறில் நான்கு படி அளந்து எடுத்துக் கொள். அத்துடன் கல்லு சுண்ணாம்பு ஒரு படிபோடு. பின்பு என் நூலான வைத்தியம் எழுநூறு என்னும் நூலில் சிறுநீரை முறிக்கும் முறையைக் கூறியுள்ளேன். அதை படித்து அறிந்து அதன்படி முறித்த சிறுநீறு எட்டுபடி அளந்து எடுத்துக் கொண்டு அதையும் முன் கலந்து வைத்துள்ள பூநீறும், கல் சுண்ணாம்பும் சேர்ந்த கலவையில் ஊற்றி நன்கு கலக்கி வை. அடிக்கடி கலக்கி வை. மூன்று நாட்கள் சென்ற பின்பு நான்காம் நாள் தெளிவை எல்லாம் ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொள்.

இப்படி எடுத்ததை ஒரு சட்டியில் ஊற்றி அடுப்பில் வைத்து நன்கு காய்ச்சு, குழம்பு போன்ற பருவம் கண்டு அதில் அரைப்படி சுத்தமானதான நல்லெண்ணையை ஊற்று. இப்படி ஊற்றிக் கலக்கிக் கொண்டு நன்கு திரண்டு வரும் வரை காய்ச்சியபின் குழம்பு பதம் ஆனவுடன் எடுத்து ஊற்றும் முறையைக் கூறுகிறேன். நன்கு கவனமுடன் நீ கேட்பாயாக. தரையில் ஒரு சாண் நீள அகலத்தில் சாம்பலைப் பரப்பி அதன் மேல் இரண்டு மடிப்பான வெள்ளைத் துணியைப் போட்டு, அதன் மீது மேற்படி குழம்பை ஒரு அகப்பையால் எடுத்து ஊற்றவும். இப்படி ஊற்றினால் பூநீரை குழம்பாகக் காய்ச்சியதால் பூநீரில் இருக்கும் நீர்சத்தை கீழே உள்ள சாம்பல் இழுத்துக் கொள்ளும். பின்பு அதன் மேல் இரண்டு மடிப்புள்ள

சீலையை போட்டு அதன் மீது சாம்பலை கொட்டு, இப்படி வைக்கோல் மேல் உள்ள துணியும், சாம்பலும் மிஞ்சியுள்ள நீரையும் இழுத்துக் கொள்ளும். சிறிது நேரம் சென்ற பின்பு மெதுவாக மேலேயுள்ள துணியை விலக்கி பார். பூநீரில் உள்ள நீரை எல்லாம் சாம்பல் குடித்து விட்டதால் பூநீறு சேறு போல இருக்கும். இதை எடுத்து விளாங்காய் போல உருண்டையாக செய்து நல்ல வெயிலில் பதினெட்டு நாட்கள் காயவைத்து எடுத்து வைத்துக்கொள்.

இதன் செய்பாகத்தை கூறினேன். மேலும் இதனை எப்படி எண்ணெய் கழற்றலாம். எப்படி சுத்தி பண்ணலாம் என்ற செய்பாகங்களை உண்மையாகக் கூறுகிறேன், கேட்பாயாக.

சவுக்காரச் சுத்தி

வழுத்ததே புதுப்பாண்டந் தனையெடுத்து
வகையாகச் சுத்திமுறை வழுத்தக்கேளு
நழுத்தவே சவுக்காரந் தனையெடுத்து
நலமான பாக்குப்போற் சீவிப்பின்பு
நழுத்தவே நாகமல்லி உரலிலிட்டு
நலமாக யிடித்துவிடச் சாறுவீழும்
பழுக்கவே முன்வைத்த சவுக்காரத்தைப்
பக்குவமாய் நாகமல்லிச் சாற்றில்தோயே. 16

தோய்த்துமே யேழுநாள் ரவியிற்போடு
சுகமாகக் காய்ந்தபின்பு யெடுத்துநீயும்
வாய்த்துமே வரிசையது வாகக்கேளு
வண்மையாய் நெற்பாண்டந் தன்னிலிட்டுக்
காய்த்துமே மல்லிகையி னிலைபரப்பிக்
கனிவாக அதன்பேரில் சவுக்காரம்வைத்துப்
பாய்த்துமே மேலுமந்த யிலைபரப்பிப்
பதிவாக மேலுமந்த யிலையைக்கொட்டே. 17

கொட்டியே பாணிவிட்டுப் பானைதன்னைக்
குணமாக அடுப்பில்வைத்து யெரிநேர்பாகம்
துட்டியே அவித்துயெடு கடிகைரெண்டு
துணையாகச் சென்றெடுத்துக் காயப்போடு
நட்டியே யிப்படிக்குந் தரமுமைந்து
நலமான பாகமாய்ச் செய்துநீயும்
முட்டியே பாவகமாய்ப் பண்ணிப்பின்பு
முடிவாக யெடுத்துமே சொல்லக்கேளே. 18

கிளிஞ்சி நீறு

சொல்லவே முன்வைத்த சவுக்காரத்தில்
சுகமாக மேலேதான் கவசங்கேளு
நல்கவே யேறவென்ற கிளிஞ்சிதன்னை
நலமாக உவர்மண்ணு சுண்ணம்நேரே
பல்கவே பாணிவிட்டுக் கிளிஞ்சிதன்னைப்
பதிவாகப் போட்டுமே குமுறக்காய்ச்சிச்
சல்தியா யூதிடவே' நீறிப்போகும்
சரியாக அரைத்துமே தாக்கிடாயே. 19

சவுக்காரச் சுண்ணம்

தாக்கிடவே முன்வைத்த சவுக்காரத்தில்
தடையறவே மேற்கவசம் போடக்கேளு
வாக்கிடவே சவுக்கார வில்லைக்குத்தான்
வடுவாகக் கவசத்தைப் பலமாய்க்கட்டி
நோக்கிடவே பத்தெருவி லடுக்கிப்போடு
நொடிக்குள்ளே சவுக்காரஞ் சுண்ணமாச்சு
பாக்கிடவே சவுக்காரச் சுண்ணந்தன்னைப்
பதிவாகத் துறைக்கெல்லா மிதனைஆட்டே. 20

பாடல்கள்: 16-20: சவுக்காரத்தின் சுத்தி முறையை கூறுகிறேன் கேள். சவுக்காரத்தை எடுத்து பாக்கு போல சீவிக் கொள். நாகமல்லி (இலையை) உரலில் போட்டு நன்கு இடித்துப் பிழிய

சாறு வரும். அந்த சாற்றில் முன் வைத்த சவுக்காரத்தைத் தோய்த்து வெயிலில் போடு, இப்படி அடிக்கடி தோய்த்துத் தோய்த்து ஏழு நாட்கள் வெயிலில் போடு. நன்கு காய்ந்த பின்பு எடுத்து நெல் அவிக்கும் அண்டாவிற்குள் மல்லிகையின் இலையைப் பரப்பி அதன் மீது முன் காய வைத்துள்ள சவுக்காரத்தை வைத்து அதன் மீது இலையைப் பரப்பி அதன் மீது இலையைக் கொட்டு.

இப்படி கொட்டி தண்ணீர் விட்டு பானையை அடுப்பில் வைத்து இரண்டு கடிகை நேரம் எரித்து அவித்து எடு. எடுத்து காயப்போடு, இப்படி ஐந்து முறை செய்து எடுத்து அதன் பின்பு கூறுகிறேன் கேள். உவர் மண்ணையும் கல் சுண்ணாம்பையும் சம அளவு எடுத்து நல்ல தண்ணீர் விட்டு கரைத்துக் கொண்டு அதில் கிளிஞ்சலை போட்டு நன்கு கொதிக்க காய்ச்சி எடுத்து கிளிஞ்சலை உலையில் வைத்து ஊத சுண்ணாம்பாகி விடும். இந்த சுண்ணாம்பை தண்ணீர் விட்டு அரைத்து எடுத்து முன் வைத்துள்ள சவுக்ககாரத்திற்கு பலமான கவசம் செய்து காய வைத்து பத்து எருவில் புடம் போட்டு எடுக்க சவுக்காரமானது சுண்ணாம்பாகும். இந்த சவுக்காரச் சுண்ணத்தை எல்லா வேலைகளுக்கும் பயன்படுத்து. இது மிக காரமானது.

கடுங்கார செயநீர்

ஆட்டான சவுக்காரங் காரமெத்த
அம்மம்மா சொல்லுகிறே னறிந்துகேளு
கூட்டான பூனீறு கல்லுச்சுண்ணம்
குருவாக அமுரிதனை முறித்துவிட்டு
நீட்டான மூன்றுதினங் கடந்தபின்பு
நிலவரமாய்த் தெளிவிறுத்துச் சேரைரெண்டு
காட்டான பீங்கானி லிட்டுக்கொண்டு
கனமான பாணிதனிற் போடக்கேளே. 21

போடவே அஞ்சுசுண்ணங் காசிடையேபோடு
பொலிவான காசிடைதான் வங்கச்சுண்ணம்
ஆடவே வெடியுப்புச் சுண்ணம்போடு
அடைவான சீனமொரு காசுபோடு
காடவே சூடனுமோ காசுபோடு
கனிவாகப் பூரமொரு காசுபோடே
தாடவே வீரமொரு காசுபோடு
தடையறவே நாபியொரு காசுபோடே 22

காசாகுஞ் சாரமொரு காசுபோடு
கனிவான குருவண்டு உரமுஞ்சூதம்
வாசான புழுகோடு புறாவினெச்சம்
வடிவான குக்குடவெண் மலமுங்கூட்டு
தாசான அமுரிவிட்டு அரைநால்சாமம்
தாட்டிகமாய் அந்நீரி லரைத்துக்கொண்டு
பாசாக அண்டமது முப்பத்தொன்று
பதிவாக வெண்கருவைக் கூடவிட்டே 23

விட்டுமே யெருக்கலம்பால் சேரைவிட்டு
விதமாகக் கையாலே மத்தித்துப்பார்
நட்டுமே தெளிவிறுத்துப் பீங்கானுக்குள்
நலமாக முன்வைத்துத் தொழுதுபோற்றி
கட்டுமே கந்தரிகள் மிகவுமாக்கிக்
கனிவாகக் கொடுத்துமே கனிந்துபின்பு
பட்டுமே மணிதனையே ஓதிப்பின்பு
பதிவாகச் சொல்லுகிறேன் பாரிலோர்க்கே 24

பாரிலே முன்வைத்த சவுக்காரத்தைப்
பதமாகத் தெளிவிலே தோய்த்துத்தோய்த்து
காரிலே கதிரதனிற் தினமும்வைத்துக்
காட்டியே போட்டுவா கருணைகூர்ந்து
நாரிலே யிப்படிக்குப் பத்துநாளும்
நலமாக யிட்டுமே நாட்டங்கேளு
தாரிலே அங்கிதனைச் சாற்றக்கேளு
தகுந்தபடி சொல்லுகிறேன் தாக்கிடாயே. 25

ாக்கிடவே சுண்ணாம்பும் உப்பும்நேரே
தடையறவே மேனியென்ற சாற்றாலாட்டி
மாக்கிடவே புடம்போட்டு யெடுத்துநீயும்
றறவாமற் சவுக்கார மேலேகட்டிப்
பாக்கிடவே பத்தெருவிற் புடத்தைப்போட்டுப்
பதிவாக யெடுத்திடவே பாகமாகும்
நோக்கிடவே யிப்படிக்கு ஐந்துபோடு
நொடிக்குமுன்னே கடுங்காரச் சுண்ணமாச்சே. 26

சுண்ணமாந் துறைக்கெல்லாங் காரமேற்றத்
தொடுகுறிபோற் கடுங்கார மேறுமேறும்
கண்ணலென்ற துறைக்கெல்லாங் கடூரமாகும்
கனலான திறவுகோ லாகும்பாரு
ுண்ணமாஞ் சரக்குகள்தான் கட்டிப்போகும்
வாட்டையிலே அறுபத்து னாலுஞ்சாகும்
தன்னிகரில் கல்லுப்பு யிதிலேசாகும்
தனதான நவச்சாரங் கட்டிப்போமே. 27

கட்டியே வீரமது மணிபோலாடும்
கடிதான பூரமது சுண்ணமாகும்
பட்டியே தாதுமுன் னறுபத்துநாலும்
பதிவாகச் சுண்ணமாம் வேதையாகும்
நட்டியே செந்தூர முதலுமாகும்
நலமாகத் தாதுவெல்லாஞ் சுண்ணமாகும்
குட்டியே போட்டுயெடு நீறிப்போகும்
குணமாகச் சகலமுந்தான் சித்தியாமே. 28

பாடல்கள்: .21-28: பூநீறு, கல்லு சுண்ணாம்பு இரண்டையும் சம அளவு எடுத்து அதில் ஒன்றுக்கு இரண்டு பங்கு அமுரியை முறித்து ஊற்றி நன்கு கலக்கி வைத்து மூன்று நாட்கள் ஆன பின்பு நான்காம் நாள் தெளிவை இறுத்து எடுத்து இரண்டு சேர் அளவு எடுத்து ஒரு பீங்கானில் விட்டுக் கொண்டு அதில் போடும் மருந்தை கூறுகிறேன் கேள். ஐந்து வகையான

சுண்ணங்கள் வகைக்கு காசு எடை போடு, இதே போல பூரம், வீரம், நாபி, நவச்சாரம், இவைகளையும் ஒரு காசு எடை போடு, இத்துடன் குரு வண்டின் உரம் (குருவண்டு என்பது துவரைச் செடியின் அடியில் இருக்கும் சிகப்பு நிறமான கறுப்பு புள்ளிகளுடன் உடையது. இதை கையால் அழுத்த பின்பக்கம் மஞ்சள் நிறமான திரவம் வெளியாகும். இது மிக காரமானது இதையே குருவண்டின் உரம் என்று கூறுவார்கள்) பாதரஸம், புனுகு, புறாவின் எச்சம், கோழியின் வெண்மலம், இவைகளை வகைக்கு ஒரு காசு எடை எடுத்து அதை அமுரிநீர் விட்டு நன்கு அரை. நான்கு ஜாமம் இப்படி அரைத்து எடுத்து மேற்படி நீரில் கரைத்துக் கொள். இத்துடன் முட்டையின் வெண்கருவை முப்பத்தியொன்று முட்டைகளில் இருந்து எடுத்து கலந்து கொள்.

இத்துடன் எருக்கம் பாலை ஒரு சேரு விட்டு கையால் நன்கு கலந்து கொள். கலந்து வைத்து மூன்று நாட்கள் கழித்து நான்காம் நாள் தெளிவை இறுத்து ஒரு பீங்கானில் விட்டு வைத்துக் கொள். அல்லாவை மனதார வணங்கி கந்திரிகள் கொடுத்து வணங்கிக்கொள். பின்பு முன் வைத்துள்ள சவுக்காரத்தை இந்த நீரில் தோய்த்து தோய்த்து வெயிலில் போடு. இப்படிக்கு பத்து நாட்கள் போட்டு எடுத்துக் கொள். அதன் பின்பு இதன் மேல் கவசம் செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள். உப்பையும், சுண்ணாம்பையும் சம அளவு எடுத்துக் கொண்டு அதை குப்பைமேனி சாறு விட்டு நன்கு அரை. இப்படி அரைத்து சிறிய வில்லையாக கட்டி காயவைத்து புடம் போட்டு எடுத்து மேற்படி சவுக்காரத்தை எடுத்து அதன் மீது இந்த புடம் போட்டு எடுத்த மருந்தை கவசம் தட்டி காயவைத்து பத்து எருவில் புடம் போடு. இப்படி ஐந்து முறை போட்டு எடுத்து வைத்துக் கொள். இது கடுமையான காரமுடைய சுண்ணாம்பு ஆகும்.

இதனால் சுண்ணங்களுக்கு எல்லாம் காரம் ஏற்ற மிக கடுங்காரம் ஏறும். இது மிக கொடூரமானது ஆகும். இதனால் எல்லா சரக்குகளும் கட்டும். இந்த சுண்ணந் தடவி வாட்ட அறுபத்தி நான்கு பாடாணமும் சாகும். இதனால் கல்லுப்பு மடியும். நவச்சாரம் கட்டும் மேலும் இதனால் வீரமானது கட்டி மணிபோல் ஆகும். கடுமையான பூரமானது இதனால் சுண்ணாம்பாகும். இதனால் அறுபத்திநான்கு தாதுக்களும் சுண்ணமாகும். வேதையும் உண்டாகும். இதனால் செந்தூரம் சித்திக்கும். எல்லா தாதுக்களும் சுண்ணாம்பாகும். இதனை உபயோகித்து ஒன்றொன்றாக சுண்ணம் ஆக்கிப் பார். இதனை கைபாகம் அறிந்து செய்தால் எல்லாவிமான சித்திகளும் ஏற்படும். இதை அறிந்து கொள்.

அறிவுரை கூறல்

சித்தியாய் மக்காவின் தேசந்தன்னில்
சீர்பெற்ற நபிமார்கள் தன்னைத்தானும்
புத்தியாய்த் தொழுதுமே வணங்கிக்கேட்டேன்
போக்கோடே சவுக்காரஞ் செய்துகாட்ட
நத்தியே நபிமாரைத் தொழுதுபோற்றி
நானிலத்தில் உலகத்தோர் பிழைக்கவென்று
சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் சவுக்காரத்தைத்
தாட்டிகமாய் யாகோபு தான்கண்டேனே 29

கண்டுமே சுண்ணத்தை அறுநூறுதன்னில்
கனிவாக மறைப்பெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
பண்டுமே புத்தியில்லாப் புல்லருக்குப்
பதிவாகச் சுண்ணத்தைப் பார்த்துச்சொல்லு
வண்டுமே மொய்த்ததுபோல் வழலைமார்க்கம்
வடிவாகச் சொல்லிவைத்த மார்க்கங்கண்டு
முண்டுமீண்டு செய்யாமற் சுண்ணஞ்செய்து
முடியமட்டுஞ் சுண்ணத்தைப் பார்த்திடாயே. 30

பாத்திடவே நபிமாரைத் துதித்துப்போற்றிப்
பலனாக ஆதார மேறிப்பாரு
ஏத்திடவே வாசியைத்தான் அங்கென்றூணு
எழும்பாமல் மாயைதனை அறுத்துத்தள்ளு
காத்திடவே சடமெல்லாங் கற்பமுண்ணு
கருதியே நிலையறிந்து மனத்தையூணு
சேத்திடவே தேகத்தைச் சித்திபண்ணு
சித்திதருங் குருவினுட பதத்தையுன்னே 31

பாடல்கள்:29-31: மக்காதேசத்தில் பெறும் சித்திகளை அடைந்தவர்களான நபிமார்களைத் தொழுது வணங்கி உலகத்தில் நல்லவர்கள் பிழைக்க வேண்டும் என்று சவுக்காரத்தை செய்யும் மார்க்கத்தை அறிந்து இங்கு கூறினேன். இதை நானும் செய்து பார்த்தேன். இந்த சுண்ணம் அறுநூறு என்னும் நூலில் மறைப்பில்லாமல் எல்லாவற்றையும் வெளிப்படையாகக் கூறினேன். புரியாத மூடர்களுக்கு இதைப் பார்த்து சொல். வழலை மார்க்கத்தை நான் கூறியது பார்த்து முரண்பாடு இன்றி சுண்ணங்களை செய்து முடிந்த மட்டும் சித்தி செய்து கொள். இப்படி நபிமார்களை மனதார தொழுது போற்றி ஆறு ஆதாரங்களையும் அறிந்து வாசியை நிறுத்தி உலக மாயையை நிறுத்தி எல்லா நிலைகளையும் அறிந்து உடலை காய கற்பம் உண்டு சித்தி செய்து கொள். இப்படி இருந்து குருவினுடைய பாதங்களை வணங்குவாயாக.

உப்புக்கட்டு சாரச் சுண்ணம்

உன்னவே உப்பினுட கட்டுக்கேளு
ஓடுகிற தூரமது உயர்வுமெத்த
மன்னவே பலநூலி லில்லையில்லை
பாடினதாற் சித்தரெல்லாம் பகையுமானார்
கன்னவே சவுக்காரச் சுண்ணமொன்று
கலந்துசமன் சாரத்தைக் கல்வத்திட்டு

பன்னவே நால்சாமம் உமிழ்நீர்விட்டுப்
பக்குவமா யரைத்துருட்டிக் குகையில்வையே. 32

வையப்பா மேல்முடிச் சீலைசெய்து
வடிவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
கையப்பா யெடுத்துமே சொல்லக்கேளு
கனிவாக முன்சொன்ன செயநீர்குத்தி
நையப்பா வெண்ணெய்போல் நேகரைத்து
நலமாக உண்டைபண்ணிக் கதிரில்வைத்து
வையப்பா காடையென்ற புடத்திலிட்டு
வடிவாக யெடுத்துமே சொல்லக்கேளே. 33

சொல்லவே சாரமது சுண்ணமாச்சு
சுருதிபெறச் சரக்கெல்லா மேவல்கேட்கும்
நல்கவே சந்திரனிற் பீங்கானிட்டு
நலமாக வைத்திடவே செயநீராகும்
புல்லறிவா யெடுத்துமே யின்னீர்தன்னில்
புகழாக வீரமிடு பின்புநீயும்
செல்லவே கல்வத்தி லிந்துப்பிட்டுச்
செயமாகச் சாரநீர் தன்னாலாட்டே. 34

பாடல்கள்: 32-34: உப்பின் கட்டும் முறையைக் கேள் இது மிக அற்புதமான வேதையாகும். இந்த முறை பல நூல்களில் இல்லை. இதை நான் பாடினதால் எல்லா சித்தர்களும் என் மேல் பகையானார்கள். சவுக்காரச் சுண்ணத்தை நவச்சாரம் கலந்து உமிழ்நீர் விட்டு நான்கு ஜாமம் அரைத்து எடுத்து உருட்டி குகையில் வை. இப்படி வைத்து மேல் மூடி சீலைமண் செய்து பத்து எருவில் புடம் போடு. புடம் போட்டு எடுத்து முன்பு சொன்ன செயநீர் ஊற்றி வெண்ணைய் போல் நன்கு அரைத்து உருண்டையாக செய்து வெயிலில் வை. வைத்து எடுத்து காடையென்ற புடம் போட்டு எடுத்துக் கொள்.

இப்படி நவச்சாரம் சுண்ணமாயிற்று. இதனால் எல்லா சரக்குகளும் சொன்னபடி கேட்கும். இதை எடுத்து பனியில் வைக்க ஜெயநீராகும். இந்த நீரில் வீரத்தை பொடித்து போட்டுக் கொண்டு வைத்துக் கொள்.

இந்துப்புச் சுண்ணம்

ஆட்டியே யிருசாம மரைத்தபின்பு
அன்பாக வில்லைதட்டிக் கதிரில்வைத்துக்
கூட்டியே குக்குடத்தின் புடமுமிட்டால்
குணமான யிந்துப்புச் சுண்ணமாச்சு
தேட்டிலே யிந்துப்புச் சுண்ணமானால்
செகத்குரு வென்றுமொரு பெயருமாகும்
ஊட்டியே பின்பெடுத்துச் சொல்லக்கேளு
உறுதிபெற யாகோபு வோதினாரே. 35

பாடல்: 35: இந்துப்பை கல்வத்தில் போட்டு இந்த செயநீர் விட்டு அரை. இப்படி அரைத்து இரண்டு ஜாமம் ஆன பின்பு மெல்லிய வில்லையாக தட்டி வெயிலில் காய வைத்து குக்குடபுடமிட்டால் இந்துப்பு சுண்ணம் ஆகும். இந்த மாதிரி இந்துப்பு சுண்ணமானால் இதற்கு உலக குரு என்று பெயர். இதன்பின் இன்னும் முறையை யாகோபு ஆகிய நான் உறுதியுடன் கூறுகிறேன் கவனமுடன் கேட்பாயாக.

பூரச் சுண்ணம்

ஓதினார் யிந்துப்புச் சுண்ணத்தோடே
உத்தமமாஞ் சாரமிட்டுப் பனியில்வைக்க
ஆதியாய் ஆறுபோற் செயநீராகும்
அடுத்துநின்ற வீரத்தைப் பொடித்துத்தூரவு
காதியாம் ரத்தம்போற் சிவந்துபோகும்
கணக்காகச் செயநீரு பலமேதூக்கிச்
சாதியா மிதற்குள்ளே பூரந்தானும்
சரியாக ஒருபலந்தான் கூடச்சேரே. 36

சேர்த்துஅரை யிருசாமஞ் சென்றபின்பு
செழுமைபெற வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நாற்றிசையு மெய்க்கவே புடமுமிட்டு
நலமாக யெடுத்துப்பார் பூரம்நீறும்
வாழ்த்தியே யெடுத்துமே சாரமிட்டு
வகையாகப் பனியில்வைக்கச் செயநீராகும்
சாத்தியே பூரமது பலமேயிட்டுச்
சரியாக அரைத்துமே பீங்கான்வையே 37

பாடல்கள்: 36-37: இந்த இந்துப்பு சுண்ணத்துடன் சம அளவு நவச்சாரம் சேர்த்து நன்கு அரைத்து பனியில் வைக்க ஜெயநீராகும். இந்த செயநீரில் வீரத்தை பொடி செய்து தூவு. இரத்தம் போல சிவப்பு நிறமாகும். இந்த செயநீரை ஒரு பலம் எடுத்து ஒரு பீங்கானில் ஊற்றி அதில் பூரத்தை ஒரு பலம் போட்டு நன்கு அரைத்து மெல்லியதாக வில்லை தட்டி காயவைத்து எடுத்து வைத்துக் கொள்.

பூர உப்பு

வையப்பா பட்சந்தான் சென்றபின்பு
வகையாக யெடுத்துப்பார் உப்புமாகும்
செய்யப்பா சுண்ணாம்புக் குகையிலிட்டுச்
சிறப்பாக மேல்மூடிச் சீலைசெய்து
நையப்பா பத்தெருவிற் புடத்தைப்போடு
நலமாகும் நலமாகும் பூரச்சுண்ணம்
கையப்பா பட்டுதென்றால் வெந்துநீறும்
கனிவாக யின்னமொரு கணக்குக்கேளே. 38

கணக்காக முன்சொன்ன செயநீர்தன்னில்
காரியமாய் நனைத்துமே சொல்லக்கேளு
பிணக்காக அஞ்சுசுண்ணக் குகையில்வைத்துப்
பேசாதே புடம்போட்டு யெடுத்துப்பாரு
தணக்கமாய்க் கடுஞ்சுண்ணம் பூரச்சுண்ணம்
தாட்டிகமாயொருவருடன் சொல்லவேண்டாம்
வணக்கமாய்ச் ஜெகசால வித்தையாடும்
வாதமடை திறப்பாகும் வண்மையாமே. 39

வண்மையா யிச்சுண்ணந் தன்னிற்றானும்
வடிவாகச் ஜெகசால மடங்கிப்போச்சு
தன்மையாய் சுண்ணமெல்லா மிதன்கீழாச்சு
தயவாகக் கரையில்லை கணக்குமில்லை
உண்மையாய் ஒப்பனைதான் சொல்லவென்றால்
உறுதியாய் முடியாது உண்மைசொன்னேன்
வெண்மையாய் விம்மிவிம்மி யலையவேண்டாம்
வெருளாதே பீங்கானில் பதனம்பண்ணே. 40

பாடல்கள்: 38-40: பூர உப்பு வைப்பு முறையைக் கூறுகிறேன் கேள். பூரம் ஒரு பலம் எடுத்துக் கொண்டு மேற்படி செயநீர் விட்டு அரைத்து பீங்கானில் வைத்து விடு. பதினைந்து நாட்கள் சென்ற பின்பு எடுத்துப் பார்க்க உப்பாக இருக்கும். இதை சுண்ணாம்பு குகையில் போட்டு மூடியை போட்டு மூடி சீலை மண் செய்து பத்து எருவில் புடத்தைப் போடு. ஆறிய பின் எடுத்துப் பார்க்க பூரம் சுண்ணமாகும். மேலும் ஒரு மார்க்கம் கூறுகிறேன் கேள். இந்த சுண்ணத்தை மேற்படி செயநீரில் நனைத்து எடுத்து அஞ்சு சுண்ணக் குகையினில் வைத்து சில்லு மூடி சீலை மண் செய்து புடம் போட்டு எடு. கடுமையான சுண்ணமாகும். இதன் பெருமையை யாரிடமும் கூறாதே. இதனால் எல்லா முறைகளும் ஜெயமாகும். ரசனை என்ற மடை இதனால் திறந்து போகும். இந்த சுண்ணத்தில் எல்லா வித்தைகளும் அடக்கம். மற்ற சுண்ணங்கள் எல்லாம் இதன் கீழ் ஆகும். இதை கூற கணக்கில்லை. இதன் பெருமையை கூற உதாரணம் இல்லை. எனவே தேடித் தேடி ஏங்கி அலையாமல் இதை பீங்கானில் பதனம் செய்

வீரச் சுண்ணம்

பண்ணப்பா வீரமது பலமுந்தூக்கிப்
பதிவாகச் சவுக்காரச் செயநீர்விட்டுத்

தண்ணப்பா கல்வத்தி லரைநால்சாமம்
தனிப்பெறவே வழித்தெடுத்து வில்லையாக்கிக்
கண்ணப்பா ரவிதனிலே உலர்ந்தபின்பு
காசிடைதான் சவுக்காரச் சுண்ணமிட்டு
விண்ணப்பா பூரமாஞ் சுண்ணமொன்று
வெங்காரஞ் சாரமொரு காசுதூக்கே. 41

தூக்கியே கல்வத்திற் சாரநீரால்
துடியாக அரைத்துமே கவசங்கட்டிப்
பாக்கியே வெண்கருவும் சுக்கான்கல்லும்
பக்குவமா யரைத்துமேற் கவசங்கட்டித்
தாக்கியே ரவிதனிலே காயவைத்துச்
சாதகமாய்ச் சுண்ணாம்புக் குகையிலிட்டு
நீக்கியபின் சீலைசெய்து புடத்தைப்போடு
நிர்மலமாம் வெண்ணீறாய் நிறைந்துபோமே. 42

பாடல்கள்: 41-42: வீரம் ஒரு பலம் எடுத்து மேற்படி சவுக்கார ஜெயநீர் விட்டு நான்கு ஜாமம் அரைத்து அதை வழித்து எடுத்து மெல்லிய வில்லையாக தட்டி வெயிலில் உலரவை. பின்பு சவுக்கார சுண்ணம், பூரச் சுண்ணம், வெங்காரம், நவச்சாரம் இவைகளை ஒரு காசெடை எடுத்து கல்வத்தில் போட்டு மேற்படி செயநீர் விட்டு அரைத்து உலர்ந்த வில்லைக்கு கவசம் கட்டி அதன் மேல் கல்சுண்ணாம்பை முட்டையின் வெண்கருவால் அரைத்து கவசம் கட்டி வெயிலில் காயவைத்து சுண்ணாம்பு குகையில் போட்டு சில்லு மூடி சீலை மண் செய்து புடம் போட்டு ஆறியபின் எடுத்துப் பார்க்க சுண்ணாம் பாகியிருக்கும்.

வெடியுப்பு செயநீர்

போகாமல் வெடியுப்புச் செயநீர்கேளு
போக்கோடே வெடியுப்பு தூக்குநாலு

வாகாமல் சட்டியிட்டுப் பாணிதானும்
வடிவாக வொன்றுக்கு நாலுவிட்டு
பாகமாய்ப் பொங்காமற் காய்ச்சுகாய்ச்சு
பதிவாக வோலையா லெடுத்துநீயும்
தாகமாய் நிகந்தனிலே வைத்துப்பாரு
தடையறவே துவரைபோ லுறையும்பாரே. 43

உறைவதுபோற் கண்டாக்காற் பதமாமென்று
உறுதிபெற மறுசட்டி தன்னிலிட்டு
வறைகிறது கவிழ்த்துமே வைத்துப்பாரு
வடிவாகக் கம்பிபோல் விழுகும்உப்பு
நிறையாக உப்பெல்லாஞ் சுரண்டிநீயும்
நிலவரமாய்க் கதிரில்வைத்துப் பின்புநீயும்
பறையாகத் தண்ணீரு மிருக்கும்பாரு
பற்றியதைக் காய்ச்சிமெள்ள வைத்திடாயே 44

வைத்திடவே சவுட்டுப்புப் பொடியாய்வீழும்
வடிவாக யெடுத்துமே அப்பால்வைத்து
கைத்திடவே முன்காய்ந்த உப்புநேரே
கனிவாகப் பாணிவிட்டு ரெட்டிப்பாக
நைத்திடவே முன்போலே காய்ச்சித்தீரு
நலமாகப் பெருங்கம்பி யாகவீழும்
பைத்திடவே யெண்ணெய்கக்கும் பதிவாய்ப்பாரு
பகரரிது யிப்படிக்குக் காய்ச்சிடாயே 45

காச்சிடவே ஐந்துதரங் கம்பியாகும்
கனமான கம்பியோடு தட்டிப்பாரு
ஓச்சிடவே சத்தமது கேழ்க்குங்கண்டாய்
உறுதியுள்ள கம்பியது பாகமாகும்
வாச்சுதே யிப்படிக்குச் செய்தாலுப்பு
வளமாக முறிந்துமே வடிவம்நல்லாம்
தோச்சுதே யிந்தஉப்புக் கொப்பேதென்றால்
தொல்லுலகில் நபிமார்கள் தோய்ந்தஉப்பே. 46

பாடல்கள்: 43-46: வெடியுப்பு செயநீர் செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள். நான்கு தூக்கு வெடியுப்பை ஒரு பெரிய சட்டியில் போட்டு அதில் ஒன்றுக்கு நான்கு என்ற விகிதத்தில் தண்ணீர் ஊற்றி பொங்காமல் காய்ச்சவும். நன்கு வற்றிய பின்பு ஒரு ஓலையில் ஒரு சொட்டு எடுத்து நகத்தில் குத்த துவரம் பருப்பு போல் உறையும். இப்படிக்கு உறைந்தால் இதுதான் பதம் என்று அறிந்து கொண்டு அதை இறக்கி மறு சட்டியில் ஊற்றி மூடிவை. ஆறியபின் பார்க்க கம்பி போன்று உப்பு இறங்கும். மேலே தண்ணீரும் நிற்கும். உப்பை எல்லாம் சுரண்டி எடுத்துக் கொள். மேலே உள்ள தண்ணீரை ஒரு பாண்டத்தில் இறுத்து நன்கு காய்ச்சியபின் அசையாமல் இறக்கி வைக்கவும். ஆறிய பின்பு பார்க்க பொடிப் பொடியாக உப்பு இறங்கியிருக்கும். இதற்கு சவுட்டுப்பு என்று பெயர். இதை தனியாக வைத்துக் கொள். முன்னர் எடுத்து வெயிலில் உலர்த்திய உப்பை எடுத்து அதற்கு இரண்டு பங்கு தண்ணீர் விட்டு காய்ச்சி முன்போல பதம் பார்த்து இறக்கி வைத்து பார்க்க பெரும் கம்பியாக உப்பு உறையும். இப்படி ஐந்து தடவை காய்ச்சி எடுக்க கனமான கம்பியாக விழும். இந்த கம்பியை எடுத்து தட்டிப்பார்க்க சப்தம் கேட்கும். உறுதியான முறை இதுதான். இதுவே சிறந்த உப்பாகும்.

வெடியுப்பு சுண்ணம்

தோய்ந்துபார் வெடியுப்புச் சுண்ணங்கேளு
சொற்பெரிய வெடியுப்பு ஐந்தாங்காய்ச்சல்
வாய்ந்துபார் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வடிவாக முன்சொன்ன சவுடுதன்னை
ஆய்ந்துபார் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
அடைவாக எலுமிச்சம் பழச்சார்விட்டு
தாய்ந்துமே யிருசாம மரைத்துநீயும்
தடையறவே சட்டியிட்டு உருக்கிடாயே. 47

உருக்கிடவே தந்தம்போ லுருகிநிற்கும்
உறுதிபெற யெடுத்துமே கல்வத்திட்டு
நருக்கிடவே பூனீறு பலமும்போடு
நாடியே சீனமது பலமும்போடு
கருக்கிடவே கல்லுப்புப் பலமும்போடு
கடிதான சூடனது பலமும்போடு
வருக்கிடவே சாரமது பலமும்போடு
வடிவாக யிதுவெல்லாம் நீத்திப்போடே 48

நீத்துவது சவுக்காரச் செயநீராலே
நிர்ணயமா யெல்லாமுங் கூட்டிநீயும்
வாத்தியே யெல்லாமுங் கல்வத்திட்டு
வளமாகப் பழச்சாறு விட்டுஆட்டி
காத்தியே மூன்றுநா ளரைத்துநீயும்
கனிவாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நாத்திசையு மெய்க்கவே சொல்லக்கேளு
நலமான அயச்சட்டி யிட்டுக்கேளே 49

இட்டுமே முத்தீயு மெரித்துப்பாரு
யிதமாக யிருசாமஞ் சென்றபின்பு
கட்டுமே வழித்திட்டுப் பீங்கானிட்டால்
கனிவாகக் கடுங்காரச் செயநீராகும்
பட்டுமே சரக்கெல்லாம் ஆடுபோலாம்
பதிவாக வேங்கையா மிச்சுண்ணந்தான்
வட்டுமே யெல்லாமுஞ் சித்தியாகும்
வடிவாகச் செய்யுகிற வரிசைகேளே. 50

பாடல்கள்:47-50: வெடியுப்பு சுண்ணம் செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள். முன்பு ஐந்து முறை காய்ச்சி எடுத்த கம்பி உப்பை பத்து பலம் நிறுத்து எடு. அத்துடன் சவுட்டு உப்பை பத்துபலம் நிறுத்து எடு. இரண்டையும் சேர்த்து எலுமிச்சம்பழ சாறு விட்டு நன்கு அரை. இரண்டு ஜாமம் அரைத்து எடுத்து ஒரு சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து உருக்கு. இப்படி உருக்க யானைத்தந்தம் போல் கெட்டியாக இருக்கும். இதை

எடுத்து கல்வத்தில் போட்டு இத்துடன் பூனீறு ஒரு பலம், சீனம் ஒருபலம்,. கல்லுப்பு ஒரு பலம், சூடம் ஒரு பலம், நவச்சாரம் ஒரு பலம், இவைகளை எல்லாம் சவுக்கார செயநீர் விட்டு அரைத்து போட்டு எல்லா மருந்தையும் ஒன்றாக கூட்டி கல்வத்தில் போட்டு எலுமிச்சஞ்சாறு விட்டு அரைத்து மூன்று நாட்கள் அரைத்து எடுத்து வில்லையாகத் தட்டி வெயிலில் காயவை. நன்கு காய்ந்த பின்பு எடுத்து ஒரு இரும்புச் சட்டிக்குள் வைத்து இரண்டு ஜாமம் எரித்து எடுக்க செயநீராகும். இந்த செயநீர் மிகக் கடுமையான காரம் உடையதாகும். இதனால் எல்லா சரக்குகளும் மடியும். எல்லா தொழில் முறைகளும் வெற்றியடையும். இதன் மார்க்கத்தைக் கூறுகிறேன் கேள்.

சீனச் சுண்ணம்

வரிசையாம் வெடியுப்புச் செயநீராலே
மகத்தான சரக்கெல்லாஞ் சுண்ணமாகும்
உரிசையாம் வெடியுப்புச் செயநீர்தன்னை
ஒட்டிரெட்டி பீங்கானி விட்டுநீயும்
பரிசையாம் வீரமிட்டு வைத்துக்கொண்டு
பக்குவமாஞ் சீனமது பலமும்பத்து
நரிசையாய்க் கல்வமிட்டு அரைத்துநீயும்
நலமாக வில்லைதட்டிக் கதிரில்வையே. 51

வையப்பா வில்லைதட்டிக் காய்ந்தபின்பு
வடிவாகக் கரியில்வைத்து ஊதிப்பாரு
மெய்யப்பா கடுஞ்சுண்ணம் சீனச்சுண்ணம்
மேதினியுங் கொள்ளாது யிதனில் நாட்டு
பொய்யப்பா போகாது கல்லுப்புத்தான்
பொறுமையாய் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வெய்யப்பா வெடியுப்புச் செயநீராலே
விதமாக யிருசாம மரைத்திடாயே. 52

பாடல்கள்: 51:52:- இந்த வெடியுப்பு செயநீரால் எல்லா சரக்குகளும் சுண்ணமாகும். சீனக்காரத்தை பத்து பலம் எடுத்துக்கொண்டு இதற்கு இரண்டு பங்கு வெடியுப்பு செயநீர் எடுத்து அதில் சிறிது வீரத்தை பொடி செய்து போட்டுக் கொண்டு சீனத்தை கல்வத்தில் போட்டு மேற்படி செயநீர் விட்டு நான்கு ஜாமம் அரைத்து வழித்து எடுத்து மெல்லியதாக வில்லை தட்டிக் காயவை. நன்கு காய்ந்த பின்பு எடுத்து கரிநெருப்பில் வைத்து ஊதிப்பாரு. உண்மையாக கடுமையான சுண்ணம் ஆகும். இந்த சீனச் சுண்ணத்தின் மகிமையைக் கூற யாராலும் முடியாது.

கல்லுப்புச் சுண்ணம்

அரைத்துமே வில்லைதட்டிச் சொல்லக்கேளு
அதைவைத்து அஞ்சுசுண்ணக் குகையிலூது
வரைத்துதே கல்லுப்புச் சுண்ணமாகும்
வாயினாற் சொல்லவே முடியாதப்பா
குரைத்துமே அப்பாலே யெடுத்துவைத்துக்
குணமாகச் சொல்லுகிறேன் கூர்ந்துகேளு
பரைத்துமே சாரமது பலமும்நாலு
பதிவாகக் கல்வத்தி லிட்டிடாயே 53

பாடல்:53 கல்லுப்பை பத்துபலம் எடுத்துக் கொண்டு வெடியுப்பு செயநீர் விட்டு இரண்டு ஜாமம் அரை. அரைத்து மெல்லிய வில்லை தட்டி காயவை. பின்பு ஐந்து சுண்ணக் குகையில் வைத்து உலையில் வைத்து ஊது. சில்லு மூடி சீலை மண் செய்து குகை பழுக்க ஊதி எடுக்க கல்லுப்பு சுண்ணமாகும். இதன் பெருமையை கூற வார்த்தைகள் இல்லை. இதை எடுத்து பத்திரமாக வைத்துக் கொள்.

சாரச் சுண்ணம்

இட்டுமே வெடியுப்புச் செயநீராலே
யிதமாகப் பனிரெண்டு சாமமாட்டிக்
கட்டுமே வில்லைபண்ணிக் கதிரில்வைத்துக்
கணக்காக அஞ்சுசுண்ணம் நடுவில்வைத்து
பட்டுமே காயில்வைத்து ஊதநீறும்
பதிவாக யெடுத்துப்பார் தந்தம்போலாம்
முட்டுமே யிச்சாரச் சுண்ணந்தனை
மொழியவே கணக்கிட்டு முடியாதென்னே. 54

பாடல் 54: நான்கு பலம் நவச்சாரத்தை எடுத்துக் கொள். அதை மேற்படி வெடியுப்பு செயநீர் விட்டு பன்னிரெண்டு ஜாமம் அரை. நன்கு அரைத்து மெல்லிய வில்லை தட்டி கதிரில் காய வை. பின்பு அதை எடுத்து ஐந்து சுண்ணக் குகையில் வைத்து கரிநெருப்பில் வைத்து ஊது கடுமையான சுண்ணாம்பாகும். இதன் பெருமையை கூற முடியாது. இது நபிமார்கள் செய்யும் முறையாகும்.

இந்துப்புச் சுண்ணம்

முடியாது நபிமார்கள் சாரந்தன்னை
மூவுலகு மெச்சுமே ஆடுமாட்டு
படியாது வெகுதூரம் யெட்டியோடும்
பாகமாய்ச் சாரத்தி னோட்டந்தானும்
வடிவாக யிந்துப்புப் பலமும்நாலு
வாகாகக் கல்வமிட்டுச் செயநீராலே
பிடியாக யிருசாம மரைத்துப்பின்பு
பேசாதே வில்லைதட்டிக் கதிரில்வையே. 55

கதிரில்வைத்துக் காய்ந்தபின்பு சொல்லக்கேளு
கனதைபெற ஐந்துசுண்ணம் குகையில்வைத்து
பதிவாகக் கரியிலிட்டு ஊதிப்பாரு
பக்குவமாங் கடுஞ்சுண்ண மிந்துப்புத்தான்

விதியாக யிந்துப்புச் சுண்ணப்போக்கு
வித்தகரே சொல்லவே முடியாதப்பா
கெதிபெறவே வேங்கையி னாட்டைப்போலாம்
கெதம்பெறவே யாகோபு சொன்னவாறே 56

பாடல்கள்55-56: நான்கு பலம் இந்துப்பை எடுத்து வெடியுப்பு செயநீர் விட்டு அரை. மெல்லிய வில்லை தட்டி வெயிலில் காய வைத்து எடுத்து ஐந்து சுண்ணக் குகையில் வைத்து ஊது. மிக அருமையான கடும்சுண்ணம் ஆகும். இது புலியைப் போன்று எல்லாவித சரக்குகளையும் மடியச் செய்யும். இதை யாகோபு ஆகிய நான் உண்மையுடன் கூறினேன்.

வெங்காரச் சுண்ணம்

சொன்னதொரு வெங்காரம் பலமும்நாலு
சுகமான வெடியுப்புச் செயநீராட்டிக்
கன்னலாய் வில்லைதட்டி ரவியிலிட்டுக்
கணக்காகப் புடமிட்டு யெடுக்கச்சுண்ணம்
நன்னயமாய் வெங்காரச் சுண்ணம்போலாம்
நாட்டிலே சொல்லவே முடியாதப்பா
இன்னிலத்திற் சுண்ணங்கள் செய்யவென்றால்
இதமாகத் தொந்தமதைச் செய்திடாயே. 57

பாடல் 57- நான்கு பலம் வெங்காரத்தை எடுத்து கல்வத்தில் போட்டு அதை வெடியுப்பு செயநீர் விட்டு அரைத்து வில்லைதட்டி வெயிலில் காயவைத்து புடம் போட்டு எடுக்க உயர்ந்த சுண்ணமாகும். இதன் பெருமையை நான் கூற முடியாது, எந்த சுண்ணங்கள் செய்வதாக இருந்தாலும் இதே சுண்ணத்தை சேர்த்துக் கொள்ள சித்தியாம்.

துருசுகெந்திச் சுண்ணம்

செய்திடவே யின்னுமொரு செயலைக்கேளு
சிறப்பான துருசினுடன் கெந்திநேராம்
பைதிடவே வெடியுப்புச் செயநீராட்டிப்
பதிவாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து

நைதிடவே காய்ந்தபின்பு சுண்ணந்தன்னை
நலமாக மேலங்கி கட்டிநீயும்
கைதிடவே பத்தெருவிற் புடத்தைபபோடு
கனிவாகக் கடுஞ்சுண்ண மாகும்பாரே. 58

,குமே யிப்படிக்குச் சுண்ணமெல்லாம்
அடைவாக யெல்லாமுங் கூடச்சேர்த்துப்
பாகுபெற வெடியுப்புச் செயநீராலே
பதிவாக அரைத்துமே வில்லைதட்டி
வாகுபெறக் கதிரில்வைத்துப் பின்புநீயும்
வடிவாகப் புடம்போட்டு யெடுத்துப்பார்த்துத்
தாகுபெறக் கல்வமிட்டு முன்னேசொன்ன
சவுக்கார நீராலே தாக்கியாட்டே 59

ஆட்டியே இருசாமஞ் சென்றபின்பு
அதைவழித்து வில்லைதட்டிக் காயப்போடு
நீட்டியே ஐந்துசுண்ணம் குகையிலிட்டு
நேராகப் பத்தெருவிற் புடத்தைப்போட்டுத்
தாட்டிகமா யெடுத்துப்பார் தந்தம்போலாம்
தாக்கரிது நபிமார்க ளாடும்நேர்மை
பூட்டிய பூட்டெல்லாமு மிதனாலாச்சு
பொல்லாதார் தங்களுக்குப் புகலார்தாமே. 60

புகலவே யிச்சுண்ணம் யேதுக்கொப்பும்
போக்கான அல்லாவாம் பொருந்தப்பாரு
நகலவே யெல்லாமு மிதனாலாச்சு
நாடரிய நால்வேத மொப்பாம்பாரு
வகலவே தொட்டதெல்லாஞ் சுண்ணமாகும்
வடிவான யிச்சுண்ணம் வலுவாமெத்த
அகலவே யிதைவிட்டு நின்றாயானால்
அடைவான சித்தியில்லை யறிந்துபாரே. 61

பாடல்கள் 58-61: மற்றும் ஒரு முறையைக் கூறுகிறேன் கேள். துரிசையும், கெந்தகமும் சம எடையாக எடுத்துக் கொண்டு வெடியுப்பு செயநீர் விட்டு அரைத்து மெல்லியதாக வில்லை தட்டி வெயிலில் காய வைத்து காய்ந்த பின்பு சுண்ணாம்பு கவசம் செய்து பத்து எருவில் புடம் போட கடுமையான சுண்ணம் ஆகும். இப்படி எல்லா சுண்ணங்களும் செய்து கொண்டு அதன் பின் எல்லாவற்றையும் சேர்ந்து ஒன்றாக கலந்து வெடியுப்பு செயநீர் விட்டு அரைத்து மெல்லிய வில்லையாக தட்டி வெய்யிலில் காயவைத்து எடுத்து புடம் போட்டு எடு. பின் கல்வத்தில் இதனைப் போட்டு முன்பு சொன்ன சாரநீர் விட்டு இரண்டு ஜாமம் அரை. அரைத்து எடுத்து மெல்லிய வில்லை தட்டி வெயிலில் காயவைத்து எடுத்து ஐந்து சுண்ணக் குகையில் வைத்துப் பத்து எருவில் புடம் போடு. ஆறியபின் எடுத்துப் பார்க்க தந்தம் போன்ற சுண்ணம் ஆகும். இதை அருகதையில்லாதவர்களிடம் கூறாதே. இது அல்லாவிற்கு ஒப்பானது ஆகும். இதனால் எல்லா சரக்குகளும் பொன்னாகும். இதை செய்து கொண்டால் எல்லாம் சித்தியாகும். (இந்த சுண்ண முறைகள் சற்று கடுமையானதாக இருப்பினும் செய்து விட்டால் இதைப்போன்ற சித்தி எதுவும் இல்லை. எனவே ஒரே மனதுடன் செய்து பார்க்க எல்லாம் சித்தியாகும்)

தாம்பிரச் சுண்ணம்

அறிந்துபார் தாம்பிரத் தகடுதட்டி
அதன்மேலே சுண்ணத்தைக் கொஞ்சம்பூசி
வரிந்துமே குக்குடத்திற் போட்டுப்பாரு
வகையாகத் தந்தம்போல் நீறிப்போகும்
தெரிந்துமே ரசங்கட்டும் கெவுனமோடும்
செயமாக யெல்லாமும் நீறிப்போகும்
வரிந்துமே யிதனாலே கவரோகோடி
வடிவான பொருளறிந்தால் மார்க்கமாமே. 62

பாடல்- 62: தாமிரத்தை தகடாக தட்டிக்கொண்டு அதன்மீது மேற்படி சுண்ணத்தை வாய்நீரில் குழைத்துப் பூசி உலரவைத்து குக்குட புடமிட சுண்ணம் ஆகும். இதனால் பாதரஸம் கட்டி மணியாகி ஆகாய மார்க்கமாக செல்லும் கெவுன சித்தி ஏற்படும். இதனால் எல்லா உலோகங்களும் சுண்ணமாகும். இதன் பெருமை கோடான கோடியாகும். இதை அறிந்தவர்க்கு எல்லாம் சித்தியாகும்.

தங்கச் சுண்ணம்

மார்க்கமாய்த் தங்கத்தைத் தகடுதட்டி
மயமாகச் சுண்ணத்தை மேலேபூசிக்
கார்க்கவே கதிரில்வைத்துச் சொல்லக்கேளு
கனமாகச் சீலைசெய்து அகலிலிட்டு
ஏர்க்கவே பெரியபுடம் போட்டுத்தீரு
எனையாண்ட நபிமார்க ளாடும்நேர்மை
பார்க்கவே யெல்லாமுங் கிட்டலாகும்
பதிவாகப் பலனறிய வாதமாமே. 63

வாதமாஞ் சுண்ணமென்ற துறைகளெல்லாம்
வடிவாக யிப்படிக்குச் செய்துகொண்டு
சேதமாம் வராமல் தங்கம்நீத்திச்
செயமாக நவலோகம் பழுக்கச்செய்து
வேதமோ நம்புதல்போல் உண்டுதேரு
விதமான காயசித்தி சணத்திலாகும்
காதந்தான் வழிநடக்கில் கண்ணிற்றோனும்
கனியான கனியைத்தான் பார்த்திடாயே. 64

பார்த்திடவே லோகங்க ளெல்லாம்நீற்றிப்
பதிவாக உண்டுடுத்து பலனுமாகும்
ஈத்திடவே மண்ணோடு லோகமெல்லாம்
எளிதாக நீறுமந்த நீறுதன்னைக்
காத்திடவே லோகத்திற் றடவிவாட்டக்
கனகமய மாகுமது கருணைகூர்ந்து

சாத்திடவே யிக்காண்டம் தன்னிற்சொன்னேன்
சரியான பாகமிது தன்மையாமே. 65

தன்மையாய்ச் சிறிதுபேர் வாதிமார்கள்
தாட்டிகமாய்த் தழைபிடுங்கிச் சுட்டுக்கெட்டு
உண்மையா யில்லையென்று உலகத்தோடே
உறுதிபெறச் சொல்லியே புலம்பிப்பார்த்துக்
கண்மையாய் நான்கெட்டே னென்றுசொல்வார்
கருத்தில்லா வாதிகள்தான் கழுதைமேய்க்கி
பெண்ணவளைக் கண்டதே யிச்சிப்பார்கள்
பிறட்டரவர் பொய்சொல்லும் வாதிதானே 66

பிறட்டாகச் சொல்லிவிடுவார் போக்கைத்தானும்
பிரியமாய் நிலையை யறியாமற்றானும்
திறட்டான நூல்தனையே பார்த்துத்தேறிச்
செப்பமா யுலகத்திற் சொல்லிச்சொல்லிக்
கறட்டான வழக்குத்தான் சொல்லுவார்கள்
காரியத்தை யறியாத வாதிமார்கள்
வரிட்டாகப் பேசியே புலம்பியேங்கி
வடிவாக முட்டாளாய் மாள்வார்தானே. 67

மாளாம லிருக்கவல்லோ சவுக்காரத்தை
மறைப்பாகச் சொல்லவில்லை மகிமைபாரு
கோளாகச் சொல்லாமற் பூநீர் தன்னைக்
கொடிய தொரு வேகமாய்ச் செய்து கொள்ளு
வாளாக அறுத்திடுங்காண் சவுக்காரந்தான்
வகையாகச் செவ்வையாய்ச் செய்து கொள்ளு
தாளா-மற் றாய்ப்பத்தைக் கண்டுதேறு
தாக்கிடவே துருசதுவுஞ் சுண்ணமாமே. 68

பாடல்கள்63-65: தங்கத்தை தகடாக தட்டிக் கொள். அதன் மீது மேற்படி சுண்ணத்தை வாய்நீரால் குழைத்துப் பூசி வெயிலில் காயவைத்து எடுத்து ஒரு அகலில் வைத்து மேல் அகல்மூடி சீலைமண் செய்து பெரும் புடமாய் போட்டு எடுக்க தங்கம்

சுண்ணமாகும். இதனால் எல்லாம் சித்தியாகும். இது நபிமார்களின் முறை. இப்படி சுண்ண முறைகளை எல்லாம் செய்து கொண்டு தங்கத்தை சுண்ணம் செய்து அதன் மூலம் ஒன்பது உலோகங்களையும் பொன்னாக்கி வேதையின் மூலம் செய்த தங்கத்தை விற்று வாழ்ந்து யோகத்தில் தேர்ச்சி அடைவாய். இதனால் காயசித்தி சீக்கிரம் ஏற்படும் வாசியோகமானது சித்தியாகும். இப்படி செய்து வாழ்ந்து தவத்தின் பலனை அடைவாயாக. இதனால் மண் முதல் உலோகங்கள் எல்லாம் பொன்னாகும் படி சுண்ணமாகும். அப்படி ஆன சுண்ணத்தை உலோகங்களில் தடவி வாட்ட பொன்னாகும். இதனை உன் மீது உள்ள கருணையால் இந்த சுண்ணகாண்டத்தில் கூறினேன். உண்மையான முறை இதுவேயாகும்.

குருட்டு வாதிகள்

பாடல்கள் 66-68: இந்த மாதிரி உண்மையை அறியாத சில ரசவாதிகள் மூலிகைகளின் இலைகளைப் புடுங்கி அதை வைத்து ரசவாதம் செய்கிறேன் என்று கூறி சுட்டு கெட்டலைந்து போய் ரசவாதம் உலகில் உண்மையில்லை என்று புலம்பி, இதை நம்பி நான் கெட்டேன் என்று கூறிக்கொண்டு கழுதைமேய்ப்பவன் போல் அலைவார்கள். பார்த்த பெண்களை எல்லாம் ஆசைப்படும் இவர்கள் பிறட்டுகள் கூறி பொய் சொல்லும் ரசவாதிகள் ஆவார்கள். இவர்கள் உண்மைக்கு புறம்பாக ரசவாதத்தை பல பல நூல்களைப் பார்த்து பார்த்து தேர்ச்சி பெற்று செய்தது போல உலகத்தில் தற்பெருமையாக கூறிக்கொண்டு எந்த செயல்பாட்டையும் அறியாமல் வீணாக பேசிப் பேசி புலம்பி அலைந்து கடைசிவரை முட்டாளாக அலைந்து மாண்டு போவார்கள்.

இப்படி நீ மாண்டு போகாமல் இருக்கவே உண்மையான சவுக்கார முறையை கூறினேன். இதில் எந்த மறைப்பும் இல்லை. எனவே வெட்டியாக பேசி அலையாமல் பூநீரைக் கொண்டு கடுமையான சுண்ணத்தை செய்து கொள். இது ரசவாதத்திற்கு வாள் போன்றது. இதை முறையாக செய்து கொள். பராசக்தியாகிய மனோன்மணித்தாயின் பாதங்களைப் போற்றி வைத்து துரிசை சுண்ணம் செய்து கொள்.

மறைப்பு நாமம்

சுண்ணமாம் வழலையென்றும் பிண்டமென்றும்
சொற்பெரிய வெண்சாரை அண்டமென்றும்
கன்னமா யெல்லாமும் பூநீராச்சு
கருத்தறியார் பூநீற்றைத் தள்ளுவார்கள்
நன்னயமாய்ச் சவுக்கார வர்மங்காணார்
நாட்டிலே வாதந்தா னில்லையென்பார்
சொன்னபடி செய்யாமல் துன்மார்க்கங்கள்
சொற்பெரிய பாகமது தோய்ந்துபாரே 69

தோய்ந்துபார் சவுக்கார மில்லாக்கட்டு
சொற்பெரிய வாறுகோற் கட்டுமாகும்
பாய்ந்துமே வெடியுப்புச் செயநீரில்லாப்
பதிவாகச் சவுக்காரஞ் சுண்ணமாகா
வாய்ந்துமே உப்பில்லாக் கட்டுவெல்லாம்
வாறுகோல் கட்டாகும் வண்மைபாரு
காய்ந்துமே வீரமில்லாச் சத்துவெல்லாம்
சரியான மயமில்லை வண்மையாமே 70

வண்மையாஞ் சவுக்கார வர்மந்தன்னை
வகையாக யிக்காண்டம் வழியைக்காட்டித்
தன்மையாய்த் தங்கமதை நீத்தச்சொல்லு
தடையறவே செம்பதனைப் பழுக்கவைத்து

உண்மையாய் நபிமார்கள் சொன்னநீதி
உறுதிபெற யாகோபு யென்பேராச்சு
கண்மையா யிதைச்செய்து பாடினேன்யான்
கருத்துரைத்த நபிமாரைக் கண்டுதேரே. 71

கண்டுமே பூநீற்றை முன்னெடுத்துக்
கருதியே சவுக்காரம் பண்ணித்தேர்ந்து
கொண்டுமே லோகமெல்லாந் தொந்தமேத்திக்
குணமாகச் செம்புதனிற் கொடுத்துப்பாரு
பண்டுபோற் றங்கமது பரிவுமெத்தப்
பத்திமான் யாகோபு சொன்னநீதி
முண்டியே பார்த்தாக்கால் யெல்லாமாகும்
முற்றுணர்ந்தாற் பலனாகு மூர்க்கமாமே. 72

பாடல்கள்:69-72: இப்படி சுண்ணத்தை செய்ய உதவும் பூநீரை வழலையென்றும் பிண்டமென்றும், வெண்சாரை என்றும் அண்டம் என்றும் கூறுவார்கள். இந்த சூட்சுமமான பாஷை எல்லாம் பூநீற்றிற்கேயாகும். இதை அறியாத மூடர்கள் பூநீற்றைத் தள்ளுவார்கள். இவர்கள் உண்மையான சவுக்கார முறையை அறியமாட்டார்கள். உலகில் ரசவாதம் பொய் என்பார்கள். நூலில் கூறியபடி செய்யாமல் துன்மார்க்கர்கள் கூறும் முறையில் செய்வார்கள். இதை நீ அறிந்து கொள். சவுக்காரம் இல்லாத கட்டும் முறை எல்லாம் வைக்கல் கட்டு போன்றது. வெடியுப்பு செயநீர் இல்லாமல் சவுக்காரம் சுண்ணமாகாது. உப்பு இல்லாத கட்டு எல்லாம் உண்மையான கட்டு ஆகாது. அதேபோல் வீரம் இல்லாத சத்து எல்லாம் உண்மையான முறையாகாது. வலிமையுள்ள சவுக்காரமுறையை இந்த காண்டத்தின் வழியாக உனக்கு காட்டினேன். இதே போன்று செய்து தங்கத்தை சுண்ணாம்பாக்கி அதன்மூலம் செம்பை பொன்னாக்கு. இது உண்மையாக நபிமார்கள் சொன்ன நீதியாகும். இதைக்கூறிய என்பேர் யாகோபு ஆகும். இதைச் செய்துபார்த்து நான் பாடினேன். இதை எனக்குகூறிய நபிமார்களை வணங்கி இதைச்

செய்து கொள். எனவே நீ முதலில் பூநீரை எடுத்து சவுக்காரம் செய்து அதன் மூலம் உலோகங்களை சுண்ணமாக்கி செம்பில் கொடுக்க உயர்ந்த மாற்றுள்ள பொன்னாகும். இது யாகோபு சொன்ன உண்மையாகும். இதை ஆராய்ந்து பார்த்து செய்தால் எல்லாம் சித்தியாகும். அதனால் எல்லா பயன்களும் ஏற்படும்.

சவுக்கார முறை

மூர்க்கமா மின்னுமொரு சவுக்காரந்தான்
முத்திபெறச் சொல்லுகிறேன் முறைமையாக
ஏர்க்கவே பூநீரு விளையும்பூமி
இதமாக அவ்விடத்திற் கெழுந்துசென்று
கார்க்கவே அவ்விடத்தின் அகலங்கேளு
கனிவாகப் பதினாறு தூரம்வெட்டிப்
பார்க்கவே அடியில்நிற்கும் கல்லுதன்னைப்
பதிவாக யெடுத்துமே சொல்லக்கேளே. 73

சொல்லவே பாணிதனிற் கழுவிப்பின்பு
சொற்பெரிய சுத்திமுறை செய்யக்கேளு
நல்லவே உவர்மண்ணுஞ் சுண்ணாம்புத்தான்
நாடியே கரைத்தபின்பு நாட்டங்கேளு
கல்லவே கல்லிட்டுத் திரிநாள்வைத்துக்
கடுமைபெறக் குமுறவே காய்ச்சிட்டாக்கால்
வெல்லவே வெள்ளைக்கல் கட்டிப்போகும்
வேதாந்தக் கல்லாகும் விளங்கிப்பாரே. 74

விளங்கவே வெள்ளைக்கல் தன்னைநீற்ற
விருப்பமாய்ச் சொல்லுகிறோ மேன்மையாக
தளம்பவே சுண்ணாம்பு நீற்றினாப்போல்
தடையறவே காலவாய் தன்னிலிட்டு
உளம்பவே கரிகொட்டி விராட்டியிட்டு
உறுதிபெற நீற்றிவிடு உண்மையாகும்
களம்பவே சங்குபோல் நீறிப்போகும்
கனிவான நீரெடுத்தாக் கணக்குக்கேளே. 75

கணக்காக அண்டமென்றால் மேகமாச்சு
கருதரிய கோடைகாலந் தன்னிற்பேயும்
அணக்காக அத்திக்காய் போலேவிழும்
அடைவாக அதையெடுத்துப் பாண்டத்திட்டு
பிணக்காக வைத்திடவே சலமுமாகும்
பேசாதே சிவந்தன்னைப் பேணிநீயும்
உனக்காக வெள்ளையென்ற சுக்காணீற்றில்
உறுதியாய் விட்டுவைக்க உண்மைதானே. 76

உண்மையாய் விட்டுவைத்துப் பின்புநீயும்
உறுதிபெற மண்டலந்தான் கடந்தபின்பு
தண்மையாய் மேலேதா னுப்புத்தானும்
தாட்டிகமாய்ப் படர்ந்துமே தயவாய்நிற்கும்
அண்மையாய்ப் படர்ந்த உப்பு அதைவழித்து
அடைவாகப் பீங்கானில் விட்டு நீயும்
கண்மையாய்க் கதிரில்வைத்துக் காயப்போடு
கணக்காக உப்பினுட பேரைக்கேளே. 77

பேராக யிந்தஉப்பு வழலையென்றும்
பேசிடுவார் அண்டமென்றும் பிண்டமென்றும்
பாராகச் சொல்லிடுவார். கல்லுப்பென்றும்
பகரரிய வெண்சாரை யென்றும்பேராம்
கூராகச் சிவமென்றுங் கல்லுப்பென்றும்
கூறினார் சித்தரவர் கொடுமையாகக்
காராக நஞ்சில்நின்ற கொடியோனென்று
காரணமாய்ச் சொல்லிடுவார் கருதிப்பாரே. 78

கருதியே பரிபாஷை நாமமாகக்
காட்டுவர்கள் சித்தரவர் கருணையில்லார்
பருதியே யென்பேரு ராமதேவர்
பக்குவத்தில் மக்காவின் தேசமேகி
நருதியே மகமதுவின் வேதந்தன்னில்
நாடியே புகுந்துமே நபிமாரேர்டே

வருதியே யிருந்துமே வணங்கிக்கேட்ட
வடிவான பாகமிது வண்மைதானே 79.

பாடல்கள் :73-79 மற்றொரு சவுக்கார முறையைக் கூறுகிறேன் கேள். பூநீறு விளையும் உவரிமண் நிலத்திற்கு சென்று பதினாறு முழம் பள்ளம் வெட்டி அடியில் நிற்கும் முட்டை போன்ற வடிவம் உள்ள வெள்ளைக் கல்லை எடுத்து வேண்டிய அளவு சேகரித்து கொண்டு பத்திரப்படுத்து.

இதை எடுத்து தண்ணீர் விட்டு நன்கு கழுவி சுத்தி செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள். உவர் மண்ணும், சுண்ணாம்பும் சம அளவு கரைத்துக் கொள். அதில் மேற்படி கல்லைப் போட்டு மூன்று நாட்கள் வைத்திரு. நான்காம் நாள் எடுத்து நன்கு குமறக் காய்ச்சி இறக்கி ஆற வைத்து எடுக்க வெள்ளைக்கல் கட்டி சிறப்பான சக்தியுள்ளதாகும். இதனை நீற்றி சுண்ணாம்பாக்கும் முறையைக் கூறுகிறேன் கேள். சுண்ணாம்பை வேகவைப்பது போல காளவாயில் கொட்டி கரியும், விறகும் போட்டு நெருப்பிட்டு எரித்து ஆறியபின் எடுக்க சூட்டால் வெந்து சுண்ணாம்பு ஆகும். இதை எடுத்து வைத்துக் கொள்.

அண்டமென்ற சொல் மேகம் என்ற பெயரும் உண்டு. கோடைகாலத்தில் மழை பெய்யும் போது பனிக்கட்டியானது அத்திக்காய் போன்று விழும். அதை எடுத்து ஒரு பீங்கானின் போட்டு வைக்க நீராகும். இந்த நீரை மேற்படி சுக்கானை நீற்ற சுண்ணாம்பு கல்லில் ஊற்றி அசையாமல் ஓரிடத்தில் வைப்பாயாக. ஒரு மண்டலம் சென்ற பின்பு பார்க்க மேற்பக்கம் உப்பானது ஆடைப்போல் படர்ந்து நிறைந்து நிற்கும். இந்த உப்பை மெதுவாக வழித்து எடுத்து ஒரு பீங்கான் போட்டு வெயிலில் வைக்க காய்ந்து உப்பாகும். அந்த உப்பின் பெயரைக் கூறுகிறேன் கேள். இதை வழலை என்றும், அண்டமென்றும்,

பிண்டமென்றும், கல்உப்பென்றும், வெண்சாரையென்றும், சிவமென்றும், நஞ்சில் நின்ற கொடியோன் என்றும் சித்தர்கள் பரிபாஷையில் கூறினார்க்ள். இப்படி கருணையில்லாமல் சித்தர்கள் பரிபாஷையால் கூறியதை நான் வெளிப்படையாக கூறினேன் என் பெயர் முதலில் இராமதேவர். நான் சில காலம் சென்று மக்கா தேசம் சென்று முகமதுவின் வேதத்தை கற்று அங்குள்ள நபிமார்களுடன் சேர்ந்து இருந்து அவர்களிடம் இருந்து பணிந்து கேட்டு செய்து பார்த்து வெற்றி கொண்ட முறை இது. இது மிகவும் உண்மையான பாகமாகும்.

உலகவாதி செய்கை

தானென்ற சவுக்கார யெண்ணெய்வாங்கத்
தத்தளிப்பார் புத்தியில்லார் தகைமையாக
ஊனென்ற கடைதனிலே பூநீர் வாங்கி
உகந்துமே முத்திரத்தை விட்டுக்காய்ச்சி
நானென்று புழுத்துமே யெறிந்துபோட்டு
நான்கெட்டே னென்பார்கள் மூடர்தாமும்
வானென்ற வகையறியார் அலிமாரெல்லாம்
வாதாடிச் சண்டைசெய்வார் வழக்கந்தானே. 80

வழக்காக யிப்படிக்குச் சொல்லிச்சொல்லி
வாதாடி உலகத்திற் சண்டையிட்டு
இழக்கவே சொல்லியே பேசுவார்கள்
இதமில்லை படியாத மூடர்தாமும்
பழக்கமாய்ப் பேசியே பையப்பையப்
பதிவாகச் சவுக்காரங் கண்டோமென்பார்
தழக்கமாய் வெகுபாடு பட்டுப்பட்டுத்
தாட்டிகமா யுழன்றுமே தலிப்பாராமே. 81

பாடல்கள்: 80-81 இந்த உலகவாதிகள் சவுக்காரத்தில் உள்ள எண்ணெயை எடுக்கத் தெரியாமல் தவிப்பார்கள் புத்தியில்லாதவர்கள். கடையில் பூநீர் வாங்கி வந்து அதில் சிறு நீரை விட்டு காய்ச்சி புழு உண்டாகியதை பார்த்து மனம் புழுங்கி தூர எறிந்து விட்டு நான் கெட்டு போனேன் என்று புலம்புவர். இவர்கள் அலியைப் போன்று சண்டையடித்துக் கொள்வர். இவர்கள் இப்படி வாதாடி சண்டையிட்டு மெதுவாக சவுக்காரம் செய்து விட்டேன் என்று கூறி வெகுபாடுபட்டு உழன்று தவிப்பார்கள்.

வழலைச் சுண்ணம்

தவிப்பில்லா முன்வைத்த வெள்ளைக்கல்லு
தனைச்சுட்டு நீத்தும்உப்புக் கல்வத்திட்டுக்
கவிப்பியே வெடியுப்புச் சுண்ணங்கேளு
கடுமையாய் முன்காய்ச்சச் சொன்னஉப்பு
பவிப்பியே பலம்பத்துக் கல்வத்திட்டுப்
பதிவாகச் சீனமது சேருநாலு
சவிப்பாகப் புதுச்சட்டி தன்னிலிட்டுச்
சாதகமாய்ப் பொரித்துமே தன்மைகேளே. 82

பாடல்:82: முன் வைத்த வெள்ளைக்கல்லை நீற்று உப்பெடுத்து அந்த உப்பை கல்வத்தில் போடு. அடுத்து வெடியுப்புச் சுண்ணம் கேளு. முதலில் ஐந்தாம் காய்ச்சல் வெடியுப்பை பத்து பலம் எடுத்துக் கொள். சீனிக்காரம் நான்கு சேர் நிறுத்து எடுத்துக் கொண்டு ஒரு புது சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து வெள்ளையாக பொரித்து எடுத்துக் கொள்.

சீனச் சுண்ணம்

தன்மையாய்க் கல்வமிட்டுப் பின்புநீயும்
தாட்டிகமாய் எருக்கம்பாலில் சேருஒன்றில்

உண்மையாய் வெண்கருவைக் கூடவிட்டு
உறுதியாய்த் திரிநாள்வை முறிந்துநீராம்
வண்மையாய்ச் செல்மாகும் ஜலத்தில்நன்றாய்
வடிவாக யிறுத்துமே வகையைக்கேளு
கண்மையாய் முன்சீனம் பொரிந்தநோடே
காட்டியரை யிருசாமங் கடுமையாமே. 83

கடுமையா யிருசாமமரைத்து வில்லை
கனிவாக அரைத்துக்கதிர் காயவைத்துத்
தடிமையாய்க் கரியில்வைத்து நாளத்தாலே
தாட்டிகமா யூதியெடு வலுவாய்த்தானும்
படிமையாய் மலர்ந்துமே தந்தம்போலாம்,
பக்குவமா யூதியெடு பருவமாகும்
அடுமையா யெடுத்துமே அப்பாற்கேளு
ஆதியா யாகோபு அறைந்தார்தாமே. 84

பாடல்கள்: 83-84: இப்படி பொரித்து எடுத்த சீனிக்காரத்தை கல்வத்தில் போட்டுக் கொள். அதன் பின் ஒரு சேர் எருக்கம் பாலில் முட்டையின் வெண் கருவை மட்டும் ஊற்றி மூன்று நாட்கள் வைத்திருக்க முறிந்து தண்ணீர் போல் ஆகும். அந்த நீரை இறுத்துக் கொண்டு மேற்படி சீனிக்காரத்தில் ஊற்றி நன்கு இரண்டு ஜாமம் அரை அரைத்து மெல்லிய வில்லையாக தட்டி நல்ல வெயிலில் காயவைத்து எடுத்து உலையில் வைத்து ஊது.

மலர்ந்து மல்லிகைப் பூ போன்ற சுண்ணம் கிட்டும். யானைத் தந்தம் போல் இருக்கும். பின்பு கேட்பாயாக.

வெடியுப்புச் சுண்ணம்

அறையுகிறேன் முன்காய்ச்சல் வெடியுப்புத்தான்
அடைவாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு

பறையுகிறேன் சீனமதின் சுண்ணமைந்து
பக்குவமாய் ரெண்டுமொன்றாய்க் கல்வமிட்டுக்
கறையுகிறேன் ஊற்றிவெண் கருத்தெளிந்த
கனிவாக நீர்விட்டு அரைநால்சாமம்
உறையுகிறேன் வில்லைத்தட்டிக் கதிரில்வைத்து
ஒழுங்காகப் புடம்போட்டு யெடுத்துக்கொள்ளே. 85

எடுத்துமே மறுபடியுஞ் சீனச்சுண்ணம்
இதமாகப் பாதியிட்டுத் தெளிந்தநீரால்
கடுத்துமே அரைத்துநீ வில்லைதட்டிக்
கனிவாகப் புடம்போடச் சுண்ணமாகும்
தடுத்துமே சாரத்தை யிடையேசேர்த்துத்
தகைமைபெறப் பனியில்வைக்கச் செயநீராகும்
உடுத்துமே செயநீரில் வீரமிட்டால்
உறுதியாய்ச் சிவப்பாகும் உண்மைகேளே. 86

உண்மையாய்ச் செயநீரை யிருத்திநீயும்
உணர்வாகச் சுக்கான்கல் லுப்பிலிட்டுத்
தண்மையா யரைத்துவில்லை கதிரிலிட்டுக்
தாட்டிகாமா யைந்துசுண்ணக் குகையிலிட்டு
உண்மையாய்ப் புடம்போடச் சுண்ணமாகும்
உறுவான சுண்ணத்திற் காலாம்வீரம்
வண்மையாய்ச் சேர்த்துஅரை செயநீராலே
வடிவாக வில்லைதட்டிக் கதிரில்வையே. 87

கதிரிலிட்டுக் காய்ந்தபின்பு சொல்லக்கேளு
காரணமா யஞ்சுசுண்ணந் தன்னில்வைத்துப்
பதிவாகக் காயவைத்துப் புடமுமிட்டுப்
பக்குவமாய்ப் பிரித்துமே கல்வத்திட்டு
நீதிபெறவே வீரங்கா லிட்டுநீயும்
நிலையான வெடியுப்பு நீரைவார்த்து
முதிரவே அரைத்துவில்லை கதிரில்வைத்து
முடிவாகப் புடம்போட்டு யெடுத்துவாங்கே. 88

வாங்கியே யிப்படிக்குத் தரமுமஞ்சு
வடிவாகப் புடம்போடச் சவுக்காரந்தான்
தாங்கியே கடுஞ்சுண்ண மாகுங்கையில்
தானெடுத்தால் தையதுவும் விரிந்துபோகும்
ஏங்கியே திரியாதே சடத்திற்பட்டால்
இதமாக விரிந்துவிடும் சவுக்காரந்தான்
பாங்கியேயிச் சுண்ணமது நமனோடொப்பாம்
பாதையிதில் வெகுபோக்கு பரிந்துபாரே. 89

பரிந்துபார் சவுக்கார வழலையாச்சு
படுமுன்னே சரக்கெல்லாம் நீறிப்போகும்
அரிந்துபார் லோகமெல்லா முடனேநீறும்
அணுவளவு தொட்டவுடன் செம்புநீறும்
பரிந்துமே லோகமெல்லாம் நீறிப்போகும்
பகலவன்போற் பதியாகும் பாரிலோர்க்குச்
செரிந்துமே இச்சுண்ணந் திறமதாகுஞ்
செப்பினேன் யாகோபு திறமைதானே. 90

திறமாகச் சவுக்காரச் சுண்ணந்தன்னைத்
திரண்டகொட்டைப் பாக்களவு தானெடுத்து
வறமாகத் துருசுபண விடையிற்சேர்த்தே
வடிமாக அரைத்துமே துருசிற்பூசிக்
கறமாகக் காடையென்ற புடத்திலிட்டடால்
கனிவாகக் கொக்கிறகு போலேதானும்
தறமாக நீறிவிடும் பணவிடையுந்தானும்
தாக்கினார் யாகோபு திறமதாமே. 91

தாமேதான் பணவிடையில் துரிசினாலே
தான்கோடி லட்சமது தாண்டிஓடும்
வாமேதான் சூதமது கட்டிப்போகும்
மாசற்ற கெவுனமது ஓடலாகும்
காமேதான் மண்ணோடு யிரும்புதானும்
கனமான யெகுகுவோ பழுக்குங்கண்டீர்
நாமேதான் பாகத்தைக் கண்டுதேர்ந்தோம்
நாட்டிலே சொல்லாதே நயமதாமே. 92

பாடல்கள் : 85:92 : ஐந்தாம் காய்ச்சல் வெடியுப்பை பத்து பலம் நிறுத்து எடுத்துக் கொண்டு அத்துடன் சீனிக்காரச் சுண்ணம் ஐந்து பலம் சேர்த்து கலந்து கல்வத்தில் போட்டு முன் எடுத்த எருக்கம்பால் தெளிந்த நீரால் நான்கு ஜாமம் அரைப்பாயாக. பின் அதை மெல்லிய வில்லையாக தட்டி வெயிலில் காயவைத்து எடுத்து புடம் போட்டு எடு. எடுத்து இதன் எடைக்கு பாதி எடை சீனச் சுண்ணம் சேர்த்து மறுபடியும் முன்போல எருக்கம் பால் தெளிந்த நீர் விட்டு முன்போல அரைத்து எடுத்து வில்லை தட்டி காயவைத்து புடம் போட்டு எடுக்க சுண்ணாம்பாகும். இத்துடன் எடைக்கு எடை நவச்சாரம் சேர்த்து நன்கு அரைத்து பனியில் வைக்க ஜெயநீராகும் இப்படி எடுத்து சேகரித்த ஜெய்நீரில் சிறிது வீரத்தை பொடித்து தூவ செயநீரானது சிகப்பு நிறமாகும். மேலும் இந்த நீரை இறுத்து வைத்துக் கொண்டு இன்னம் கூறுகிறேன் நீ கேட்பாயாக.

மேற்படி நீரை சுக்கான் கல்லிலிருந்து எடுத்த உப்பில் ஊற்றி நன்கு அரைத்து வெயிலில் காய வை. பின் எடுத்து ஐந்து சுண்ணக் குகையில் வைத்து புடம் போட்டு எடுக்க சுண்ணம் ஆகும். இந்த சுண்ணத்தில் கால் பங்கு வீரம் சேர்த்து மேற்படி செயநீர் விட்டு அரைத்து வில்லைதட்டி காயவைத்து எடுத்துக் கொள். இதை ஐந்து சுண்ணக் குகையில் வைத்து புடம் போடு புடம் ஆறிய பின் எடுத்து கல்வத்தில் போட்டு இதன் எடைக்கு கால்பங்கு வீரம் கூட்டி மேற்படி செயநீர் விட்டு அரைத்து வில்லை தட்டி காயவைத்து எடுத்துக் கொள். இதை ஐந்து சுண்ணக் குகையில் வைத்து புடம் போடு புடம் ஆறிய பின் எடுத்து கல்வத்தில் போட்டு இதன் எடைக்கு கால்பங்கு வீரம் கூட்டி மேற்படி செயநீர் விட்டு அரைத்து வில்லை தட்டி காய வைத்து எடுத்து புடம் போட்டு எடு. இப்படி ஐந்து தடவை

புடம் போட்டு எடு. சவுக்காரமானது கடுமையான சுண்ணம் ஆகும். கையினால் எடுத்தாலோ, உடலில் பட்டாலோ தோல் உரிந்து விடும். இது எமனுக்கு ஒப்பானது ஆகும். இதனால் பலவிதமான முறைகளை செய்யலாம். இதற்கு சவுக்கார வழலை என்று பெயர். இது பட்ட உடன் எல்லா சரக்கும் சுண்ணமாகும். உலோகமெல்லாம் இதனால் சுண்ணமாகும். செம்பு சுண்ணமாகும். இது மிக உன்னதமான சுண்ணமாகும். இதை திறமையுடன் யாகோபு ஆகிய நான் கூறினேன்.

இந்த சவுக்கார சுண்ணத்தை ஒரு கொட்டைப் பாக்கு அளவு எடுத்து அத்துடன் துருசு ஒரு பணஎடை சேர்த்து மேற்படி செயநீர் விட்டு நன்கு அரைத்து துருசின் மேல் பூசி காடை புடமிட (ஒரு எருவில்) துரிசு தூய வெள்ளை நிறமாகும். இந்த துரிசினால் பல லட்சக்கணக்கான வேதைகள் உண்டாகும். இதனால் பாதரஸம் கட்டி மணியாகும். இதனால் கெவுனத்தில் செல்லலாம். இதனால் மண்முதல் இரும்பு வரை எல்லாம் தங்கமாகும். இது நான் செய்து பார்த்த முறையாகும். இதை நீ செய்து கொள். யாருக்கும் கூறாதே.

ரசமணி

நயமாக முன்வைத்த துருசுச்சுண்ணம்
நாடியே விறாலியிலை பிடிநறுக்கிப்
பயமாக அதிலிட்டுப் பிசைந்துபாரு
பார்த்திடவே ஜலமாகும் பகரக்கேளு
கயமாக அயக்கரண்டி தன்னிலிட்டுக்
காரணமாய்ச் சூதமென்ற ராஜாதன்னைச்
செயமாகக் காய்ச்சிவிடு வெண்ணெய்யாகும்
செய்திட்டு உருட்டியே சொல்லக்கேளே. 93

சொல்லவே மணிபோலே உருட்டிநீயும்
சுகமாயூ மத்தங்காய்க் குள்ளேவைத்து
நல்லவே அவிபுடமாய் நூறுபோடு
நாடியே யெடுத்துப்பார் மணிபோலாகும்
கல்லவே மணிநிறந்தான் வெள்ளிபோலாங்
காரணமா யிருந்துவிடும் கருதிப்பாரு
செல்லவே மணியதனைத் தொழுதுபோற்று
செயமாக மணிப்பெருமை யின்னுங்கேளே 94

இன்னமாம் அல்லாவின் கயற்றாறாகும்
இதமாக நபிமார்கள் மேனியாகும்
நன்னயமாய் முகமதுவின் மேனியாகும்
நாடியே ஒளியாகும் ரசிதம்போலாம்
சொன்னபடி யாயிருக்கும் மணியினோடே
துவாரமிட்டு யிடையிலே கட்டினாக்கால்
தன்னகரில் பெண்ணோடே பேசினாக்கால்
தப்பாமல் மணியிறுகுந் தன்மைதானே. 95

தன்மையாய்ச் சூதமென்ற மணியைத்தானும்
தாக்கியே கரியில்வைத்து உருக்கிப்பாரு
உண்மையாய் வெள்ளிபோற் கண்விட்டாடும்
உறுதிமெச்ச மணியாகும் உயரவோடும்
வண்மையாய்ச் சித்தாதி தனக்குள்தானும்
வடிவான மணியுண்டு கொடுக்கமாட்டார்
பெண்மையாய்ப் பாகமாய்ச் செய்துகொண்டால்
பெரியநபி யாயிருப்பார் பேருமாமே. 96

பாடல்கள்: 93-96: இப்படி செய்த துருசு சுண்ணத்தை எடுத்து ஒரு கைப்பிடி அளவு விராலி இலையை நறுக்கி எடுத்துக் கொண்டு அதில் கொஞ்சம் போட்டு நன்கு பிசைந்து பார்க்க நீராகும். இந்த நீரை ஒரு சுத்தமான இரும்புக் கரண்டிக்குள் வைத்து அதில் பாதரஸத்தை பாதியிட்டு கரி நெருப்பில் வைத்து

காய்ச்ச வெண்மையாக திரண்டு வெண்ணை போலாகும். இதை எடுத்து உருட்டி பச்சை தண்ணீரில் போட்டு வைக்க மணியாகும். இந்த மணியை எடுத்து ஊமத்தங்காயைப் பிளந்து அதனுள் மணியை வைத்து சீலை மண் செய்து அவிபுடம் போடு. இப்படி நூறு புடம் போட்டு எடுக்க மணிபோல இருக்கும். இதன் நிறம் வெள்ளி போல் இருக்கும். இந்த மணியை தொழுது வணங்கிக் கொள். இது அல்லாவின் அருளாகும். நபிமார்களின் உடலாகும். முகமதுவின் உடலாகும். இது வெள்ளிபோன்று ஒளிவீசும். இந்த மணியை நடுவில் தமர் கொண்டு துவாரமிட்டு அதில் நூல் கோர்த்து இடுப்பில் கட்டிக் கொண்டால் எத்தனை பெண்களுடன் உடலுறவு கொண்டாலும் விந்து நழுவாது இறுகும். இந்த மணியை கரிநெருப்பில் உருக்கி பார்க்க வெள்ளி போன்று கண்விட்டு ஆடும். இது ககனமார்க்கத்திலும் செல்லும் எல்லா சித்தர்கள் வசமும் இந்த மணி உண்டு. கேட்டால் கொடுக்கமாட்டார்கள். மென்மையாக கைபாகமாக நீயே செய்து கொண்டால் நபிமார்களைப் போலே இருப்பாய். சிறந்த பெயரும் கிடைக்கும்.

ரசக் களங்கு

பேராகச் சூதமணி பலமும்நாலு
பிசகாமல் கரியில்நின்று உருகும்போது
காராகத் தங்கமொன்று நாகமொன்று
கனிவாகக் கொடுத்துருக்கக் களங்கமாகும்
சீராகக் களங்கத்தை யெடுத்துவைத்துச்
செயமான அல்லாவைத் தொழுதுபோற்றி
வாராக நபிமாரை வணங்கிப்போற்றி
வடிவாகக் கைதொழுது வரிசைகேளே. 97

வரிசையாய் நவலோகந் தன்னிற்றானும்
வாதைபடா நூற்றுக்கு ஒன்றுதாக்கு
உரிசையாய் வாங்கியது தங்கமாகும்
உண்மையிது பத்தியமாம் உறுதிசொன்னேன்
பரிசையாய்ச் சூதமது பட்டதெல்லாம்
பதிவாகத் தங்கமாம் பாரிலோர்க்குச்
சரியான வேதையிது மார்க்கந்தன்னைத்
தாட்டிகமா யாகோபு சொன்னவாறே. 98

சொன்னதொரு அல்லாவைத் தொழுதுபோற்றிச்
சொற்பெரிய நபிமாரை வணங்கியேற்றிக்
கன்னதொரு சவுக்காரம் பண்ணிநீயும்
கனிவாகத் துருசதுவை நீத்திப்பின்பு
அன்னிலத்தில் ரசங்கட்டிக் குளிகைசெய்து
இதமான களங்குச்செந் தூரஞ்செய்து
தன்னிகரில் நவலோகங் கொடுத்துப்பாரு
தன்மைபெற யாகோபு தாக்கினாரே. 99

தாக்கியே மௌனமா யிருந்துகொண்டு
தாட்டிகமாய்ச் சவுக்காரச் சுண்ணம்பண்ணி
நோக்கியே பூரணத்தி லெட்டியோடி
நுணுக்கரிய நபிமாரை வணங்கியேற்றிப்
பாக்கியத்தைக் கண்டுமே செலவுசெய்து
பத்தியாய் துனியாவில் நின்றுதேறு
சாக்கியே ஒருவற்கண்ணிற் காட்டிடாமல்
சரிதையாய்க் கண்டறிந்தால் வாதியாமே. 100

பாடல்கள்: 97-100: இந்த மணியை நான்கு பலம் நிறுத்து எடுத்துக் கொண்டு கரி நெருப்பில் வைத்து உருக்கு, நன்கு உருகும் போது அதில் ஒரு பலம் தங்கமும், ஒரு பலம் நாகமும் போட்டு உருக்க களங்கு ஆகும். இதை எடுத்து வைத்துக் கொண்டு அல்லாவையும், நபிமாரையும் தொழுது போற்றிக்

கொண்டு ஒன்பது உலோகங்களிலும் நூற்றுக்கு ஒன்று கொடுக்க தங்கமாகும். இது உண்மையான முறையாகும். இந்த சளங்கு பட்ட இடமெல்லாம் தங்கமாகும். சரியான முறையான இந்த வேதை மார்க்கத்தை யாகோபு ஆகிய நான் கூறியபடி செய்து பார். நான் கூறியபடி அல்லாவை வணங்கி, நபிமாரை வணங்கி முதலில் சவுக்காரம் பண்ணி அதைக் கொண்டு துரிசை சுண்ணம் செய்து அதை வைத்து ரசத்தை கட்டி மணியாக்கி குளிகை செய்து. அதைக் கொண்டு களங்கு செய்து செந்தூரம் செய்து ஒன்பது உலோகங்களில் கொடுத்துப் பாரு, தங்கமாகும். அதன் பின் மவுனமாய் இருந்து கொண்டு சவுக்காரத்தை சுண்ணம்பண்ணி நபிமாரை வணங்கி தங்கம் செய்து விற்று செலவு செய்து யாரிடமும் காட்டாமல் நுணுக்கமாக செய்து கொண்டால் சிறந்த வாதியாவான்.

ரசக்கட்டுச் செந்தூரம்

வாதியாம் சூதம்நின்ற களங்குதன்னை
வண்மையாய் செந்தூரம் பண்ணக்கேளு
சோதிபெறக் களங்கதுவும் பலமும்பத்துச்
சுருதிபெறக் கல்வத்தி லிட்டுக் கொண்டு
நாதியாங் கெந்திரெண்டு கல்வத்திட்டு
நலமாகப் பொற்றலையின் சாற்றினாலே
மோதியே அரைத்திரண்டு சாமந்தானும்
முடிவாக வில்லைதட்டிக் கதிரில்லையே 101

வையப்பா வில்லைதனை யெடுத்துநீயும்
மார்க்கமாய்ப் புதுஅகலில் வைத்துமுடி
செய்யப்பா புடம்போடக் கரியதாகும்
செப்பமாய்க் கரியெடுத்துக் கல்வத்திட்டு
நையப்பா நாலிலொன்று தாளகத்தை
நலமாகச் சேர்த்துமே கையானிரால்
பையப்பா யிருசாம மரைத்துவில்லை
பதிவாகத் தட்டியே பலனைக்கேளே. 102

பலனாக அகலிலிட்டுப் புடமுமிட்டால்
பகரரிது செந்தூர முருக்கம்பூவாம்
கலனாக யிருக்காது சிவப்புமிக்கக்
கடூரமாய் நவலோகம் நூறுருக்கி
அலனாக ஒன்றிட்டால் பழுக்குந்தங்கம்
ஆதியாம் பொருளதுவுங் கைக்குள்ளாகும்
பெலனாக அல்லாவாம் பெரியோர்சொன்ன
பேசாத வாதத்தின் பெருமைதானே. 103

பெருமையாம் பணவிடையாய் மண்டலந்தான்
பேசரிய செந்தூரம் உண்டுதேறு
அருமையா யுண்டிடவே சட்டைகக்கும்
ஆனந்தம் வெகுகோடி யிருக்கலாகும்
கருமைமயிர் நரம்பிறுகும் கற்றூணாகும்
காதிலொலி கண்டிடுங்காண் கனிவுமொத்தப்
பொருமையைாய்ச் செய்திடிலோ பலனுமாகும்
புகலரிய வேதையதன் பெருமையாமே. 104

ஆமேதான் உலகத்தோர் செய்பாகங்கள்
அடைவாகத் தவறினால் யெல்லாம்பாழாம்
நாமேதான் வேதையெல்லாம் பொய்த்துப்போகும்
நாதாந்த யாகோபு சொன்னநீதி
காமேதான் கண்டிட்டால் பலனுமாகும்
காணாட்டாற் சித்தியில்லை கண்டுகொள்ளு
வாமேதான் சொன்னதினாற் பலனுமில்லை
வடிவாகத் தொழுதிடவே பலனுமாமே. 105

பல்னாகச் சுண்ணத்தை முன்னேசெய்து
பத்திதரத் துருசுக்கு முடித்துத்தேரு
கலனாகச் சுண்ணமென்றால் எளிதோஅல்ல
கனிந்துரைத்த நபிமார்க ளாடுங்கூத்து

பிலனாக வாசியோ கத்தைப்பாரு
பேர்பெரிய சித்தியாம் பிலக்கும்வேதை
தலனாக யிருந்துண்டால் நன்மையாகும்
த்ராட்டிகமா யாகோபு சாற்றினாரே. 106

சாற்றிட்ட சவுக்காரச் சுண்ணத்தாலே
சகலசித்து மாடலாம் நபிமார்சொல்லார்
கோத்திட்ட அல்லாவைக் கேட்டுக்கொண்டேன்
குருவான வாதமெல்லாஞ் சொல்வார்பாரு
நாத்திட்ட மனதுதான் ஆங்காரத்தால்
நலமில்லை திட்டியே புலம்புவார்கள்
காத்திட்ட கனிபோலே ருசியைப்பார்த்துக்
கருணைபெற அறுநூற்றைக் கருதிப்பாரே. 107

கருதியே மனந்தன்னை ஆங்காரத்தால்
கடுமையாய்ப் பேசிடுவார் உலகவாதி
பருதியே பணியறியார் வாதிமார்கள்
பக்குவத்தில் பூநீற்றை அறியாமுடர்
சுருதியைத்தான் பாராமற் சுட்டுச்சுட்டுச்
சூட்சமில்லை யென்பார்க ளூலுத்தவாதி
முருதியே பெண்போலே திரிவார்முடர்
முத்தியில்லை யென்பார்க ளுறுதிதானே 108

உறுதிபார் பாகமதைச் செய்துநீயும்
உற்றுமே பரிகரித்தால் உண்மையாகும்
பருதியே பூநீறு விளையும்பூமி
பக்குவத்திற் கண்டுமே யெடுத்துநீயும்
வருதிபட அமுரிதனை இன்னதென்று
வடிவாக அறிந்திடவே வளமைகண்டு
சுருதிதனைத் தோய்ந்துணர்ந்த நபிமார்பாதம்
சுருக்கத்திற் கண்டுமே பிடித்திடாயே 109

பாடல்கள் 101-109: மேற்படி பாதரஸக் களங்கை செந்தூரம் செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள். மேற்படி களங்கை பத்துபலம் நிறுத்து எடுத்து கல்வத்தில் போட்டுக் கொண்டு இரண்டு பலம் கெந்தகத்தை அத்துடன் சேர்த்து பொற்றிலை கரப்பான் சாறு விட்டு நன்கு அரைத்து இரண்டு ஜாமம் அரைத்து மெல்லியதாக வில்லை தட்டி வெயிலில் வை. காய்ந்த பின்பு எடுத்து அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலை மண் செய்து புடம் போட கரியாகும். இந்த கரி போல ஆனதை எடுத்து கல்வத்தில் போட்டு இதன் எடைக்கு நாலுக்கு ஒன்று தாளகம் சேர்த்து அரைத்து மேற்படி சாற்றால் இரண்டு ஜாமம் அரைத்து மெல்லிய வில்லையாக தட்டி வெயிலில் காயவை. இதை அகலில் வைத்து மூடி சீலைமண் செய்து புடம் போட்டு ஆறிய பின் எடுத்துப் பார்க்க முருக்கம் பூ போன்ற செந்தூரம் கிடைக்கும். இது மிக கொடூரமான சிகப்பாக இருக்கும். ஒன்பது உலோகங்களையும் உருக்கிக் கொண்டு இதை நூற்றுக்கு ஒன்று கொடுக்க தங்கமாகும். இது அல்லாவும், பெரியோர்களும் கூறிய சிறந்த வாத முறையாகும். இந்த செந்தூரத்தை பண எடை வீதம் ஒரு மண்டலம் உட்கொள்ள உடலில் சட்டை கழன்று பொன்போலாகி வெகு கோடி காலம் இருக்கலாம். நரை நீங்கி, நரம்புகள் உறுதி பெற்று உடல் கல்தூணாகும். காதில் சங்கு நாதம் கேட்கும். இது மிக அருமையான கற்பமாகும். இதை செய்து வெற்றியடைந்தால் எல்லாம் சித்தியாகும். இல்லையென்றால் எதுவும் இல்லை. எனவே சுண்ணம் முதலில் செய்து பின்பு அதைக்கொண்டு துரிசை சுண்ணமாக்கு. இது அவ்வளவு எளிதல்ல, நபிமார்களின் முறையாகும், முறையாக வாசியோகம் செய்தால் வேதை சித்தியாகும். இதை வைத்து உண்டு உடுத்தி வாழ்ந்தால் நன்மையாகும். இதை யாகோபு ஆகிய நான் உறுதியுடன் கூறுகிறேன். சவுக்கார சுண்ணத்தால் எல்லா சித்திகளும் உண்டாகும். இதை நபிமார்கள்

சொல்லமாட்டார்கள். அல்லாவைத் தொழுது கேட்டால் எல்லாம் சொல்வார். மனம் ஆங்காரம் கொண்டால் ஏதும் கிடைக்காது. எனவே கனி போல இருக்கும் இந்த அறுநூறு எனும் நூலை பார்த்துத் தேடு. மனம் நான் எனும் ஆங்காரத்தில் உழல்வதால் கடுமையாக பேசுவார்கள் உலக வாதிகள். உண்மையான பூநீறு என்ன என்று அறியாத மூடர்கள் சூட்சுமத்தை அறியாமல் சுட்டு சுட்டு கெட்டுப்போயி ஒன்றும் இல்லை என்பார்கள். இவர்கள் பொய் வாதிகள். பொட்டைகளைப் போன்று அலைந்து கொண்டு முக்தி என்பது இல்லை என்று கூறுவார்கள். எனவே நீ உண்மையான பாகத்தை அறிந்து செய். பூநீறு விளையும் இடம் கண்டு பருவத்தில் எடுத்து வந்து அ௺முரியை என்ன என்று அறிந்து அதன் உண்மையை உணர்ந்து நபிமார்களின் பாதங்களை தொழுது போற்றி சித்தியடைவாயாக.

தாளகச் சுண்ணம்

பிடித்திடவே முன்வைத்த சவுக்காரத்தைப்
பிசகாமல் தாளகத்தின் மேலேகட்டு
வடித்திட்டு மண்சீலை செய்துநீயும்
வடிவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
குடித்துமே யெடுத்துப்பார் தந்தம்போலே
கொடிதான சுண்ணமாம் குறிப்புமெத்த
தடித்துமே தாளகமும் நீறிற்றானால்
தாட்டிகமாய்ச் செம்பதுவும் நீறுந்தானே. 110

நீறுமே தாளகத்தின் சுண்ணம்நாலு
நிறுத்துமே வீரமது ஒன்றுகூட்டி
வாறுமே அரைத்துநீ சொல்லக் கேளு
வடிவாகத் துருசின்மே லப்பிப்போடு
காறுமே கதிரில்வைத்துக் காயப்போடு
கதிபெறக் காடையென்ற புடமுமிட்டால்
சாறுமே நீறியது துருசுச்சுண்ணம்
சகஸ்திரத்துக் கோடுமது தன்மைதானே. 111

பாடல்கள் : 110-111: முன்பு செய்த சவுக்காரத்தை தாளகத்தின் மேல் வெடியுப்பு கொண்டு நீர்விட்டு அரைத்து கவசம் செய்து அதன் மீது சீலை மண் செய்து பத்து எருவில் புடம் போட்டு எடுக்க தந்தம் போன்று கொடிய சுண்ணாம்பாகும். தாளகம் சுண்ணமானால் செம்பு சுண்ணமாகும். தாளக சுண்ணம் நான்கு பலம் நிறுத்து எடுத்து அத்துடன் வீரம் ஒரு பலம் கூட்டி மேற்படி செயநீர் விட்டு அரைத்து துரிசின் மீது அப்பி வெயிலில் காயப் போட்டு எடுத்து ஒரு எருவில் புடமிட துருசு நீறி சுண்ணம் ஆகும். இதனால் ஆயிரவிதமான வேதைகள் செய்யலாம்.

தாமிரச் சுண்ணம்

தண்மையாய்த் துருசதுவின் நீறுதன்னைத்
தாட்டிகமாய்க் களஞ்சியது நிறுத்துக்கொண்டு
பெண்மையாய் வீரமிட்டு உமிழ்நீராலே
பேதிக்க அரைத்துமே நவலோகத்தில்
உண்மையாய்ப் பூசியே புடம்போட்டு
உறுதியா யெடுத்துப்பார் தாம்பிரந்தான்
வண்மையா நீறியது தந்தமாகும்
வடிவான கடுஞ்சுண்ண மாகுந்தானே, 112

ஆகுமே தாம்பிரச் சுண்ணந்தன்னை
அடைவாக வாழையதின் கனியிலிட்டால்
பாகுபெறக் கனியதுவு மிறுகிப்போகும்
பக்குவமா யிப்படிக்குச் சோதித்தேரு
வாகுபெறத் தாமிரச் சுண்ணந்தன்னை
வடிவாக நவலோக மேலேபூசித்
தாகுமே புடம்போடச் சுண்ணமாகும்
தாக்கிடவே நவலோகம் யேமமாமே. 113

ஏமமாம் நவலோகம் நூற்றுக்கொன்று
இட்டிடவே நல்லதங்கம் பத்துமாத்து
நாமமாம் புடத்துக்கும் உப்புக்குந்தான்
நலமாக யிறங்குமது நாட்டுளோர்க்குத்
தாமமாந் தாமிரத்தின் பற்பமுண்டால்
தடையறவே மேனியது தங்கமாகும்
வாமமாம் பதம்கரங்கள் நரம்புதானும்
வடிவாக யிறுகிவிடும் வண்மைதானே. 114

வண்மையாய் பாகமதைக் கருத்திலெண்ணி
வகையாகக் கைபாக வரிசையோடே
தன்மையாய்ச் செய்துமே புத்திதன்னில்
தான்மதித்துச் செய்திடிலோ பலனுமாகும்
கண்மையாய் ஆதார மறிந்துசெய்தால்
கருத்துறவே யோகசித்தி கெவுனமோடும்
துண்மையாய்க் கெவுனத்தி லோடும்போது
துடியான நன்மையாந் தோய்ந்துபாரே. 115

தோய்ந்து பார் சவுக்காரந் தன்னிற்றானும்
துடியான மயக்கமெல்லாந் தீர்ந்துபோகும்
ஆய்ந்துபார் அறிவுக்குட் புகுந்தாலல்லோ
அடைவான சுண்ணமது யெளிதிலாகும்
வா ப்ந்துபார் யெளிதாகச் சொல்லவேண்டாம்
வடிவாக யெளியவனாய்த் திரியவேண்டாம்
தாய்ந்துமே சுண்ணத்தைச் செய்துநீயும்
தடையறவே செய்தாக்கால் தன்மையாமே 116

தன்மையாய் நபிமார்கள் சொல்லும்நேர்மை
தடையறவே கைபாக வரிசைகண்டு
உண்மையாய் வரிசையாய்ச் செய்துகொண்டு
உறுதிபெற உற்றமே உணர்ந்துபாரு
கன்மையாய் வயிறுதனை வளர்த்துக்கொண்டு
கடிதான சுண்ணத்தை வைத்துக்கொண்டு
பெண்மையாய் காயசித்தி பண்ணித்தேறு
பேதையா யுண்டாக்காற் பலனுமாமே. 117

ஆமேதா னடுத்தவர்கள் தன்னைத்தானும்
அடைவாக ரட்சிக்க வேணுமென்று
தாமேதான் நபிமார்க ளாடுமோட்டு
தடையறவே நானுந்தா னாடித்தேர்ந்து
காமேதான் காயசித்தி பண்ணித்தானும்
கதிர்பொருகுங் காயத்தைக் கல்தூணாக்கிப்
பாமேதான் யாகோபு சொன்னநீதி
பக்குவத்தில் சொல்லிடவே பாகமாமே. 118

பாகமாய்ச் சுண்ணத்தின் பயனறிந்து
பக்குவமாம் பொருளறிந்து பழக்கங்கண்டு
யோகமாம் வெள்ளைக்கல் பூநீர்கண்டு
யோக்கியமாய் சுமுரியுட பலனறிந்து
சாகமாம் குணாகுணத்தில் குணமறிந்து
சத்தியமாய்க் கண்டறிந்து சரிநேர்பார்த்து
வாகமாய் மனமதுவை யொக்கப்பண்ணி
வரிசையாய்ச் செய்திடவே வழக்கமாமே. 119

120-வது பாட்டு ஏட்டில் கிழிந்து போயிருந்ததால் அச்சிடவில்லை

பாடல்கள் :112-119: துருசு சுண்ணத்தை ஒரு களஞ்சு எடுத்துக் கொண்டு அத்துடன் சம எடை வீரம் சேர்த்து எச்சில் விட்டு அரைத்து ஒன்பது உலோகங்களில் தடவி எடுத்து காயவைத்து புடம் போட சுண்ணமாகும். தாமிரம் இது போன்று செய்ய தந்தம் போன்ற சுண்ணமாகும். இது மிக கடுமையான சுண்ணம் ஆகும். இந்த தாமிரச் சுண்ணத்தை வாழைப்பழத்தில் ஒரு ஊசியில் தொட்டு குத்தி வைத்து மறுநாள் பார்க்க கனி இறுகி காய் ஆகும். இதை சோதனை செய்து பார்த்துக் கொள். இந்த தாம்பிரச் சுண்ணத்தை ஒன்பது உலோகங்களின் மீதும் உமிழ் நீரால் அரைத்துப் பூசி காய வைத்து புடம் போட

சுண்ணமாகும். இந்த முறையில் உண்டான சுண்ணத்தை ஒன்பது உலோகங்களில் கொடுக்க தங்கமாகும். நவலோகங்களில் நூற்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் கொடுக்க பத்து மாற்று தங்கமாகும்.

இது நல்ல தங்கமாகும். இது உப்புக்கும், காவிக்கும் நிற்கும் இந்த தாமிர பற்பத்தை உட்கொள்ள உடல் தங்கமாகும். உடல், இறுகும், நரம்புகள் இறுகி தன்மையாகும். எனவே முறையை அறிந்து கைபாகம் அறிந்து, நுணுக்கமாக செய்தால் நிச்சயம் பலன் உண்டாகும். ஆறு ஆதாரங்களையும் அறிந்து கருத்துடன் செய்தால் யோகசித்தியுடன் கெவுன சித்தியாகும். எனவே இதை செய்து பார். இந்த சவுக்கார சுண்ணத்தால் எல்லாம் ஆகும். எனவே யாரிடமும் கூறாமல் செய்து பலனை அடைவாயாக.

இப்படி நபிமார்கள் சொல்லும் தன்மையை உணர்ந்து கைபாகத்துடன் வரிசையாக செய்து விற்று உண்டு இந்த சுண்ணத்தை வைத்துக் கொண்டு காய சித்தியும் செய்து கொள். இப்படி எல்லோரும் காக்க வேண்டும் என்று நபிமார்கள் செய்த இந்த செயலை நானும் செய்து வெற்றி அடைந்து உடலை காயசித்தி மூலம் கல்தூண்போல ஆக்கிக் கொண்டு இந்த முறைகளை பக்குவமாக கூறினேன். இந்த சுண்ணத்தின் பயனை அறிந்து அதன் உண்மையையும் அறிந்து பூநீர் அமுரி இவைகளின் பயனை அறிந்து கொண்டு அதன் குணபேதங்களை அறிந்து கொண்டு அதைச் செய்து சரிபார்த்து மனதை தூய்மையாக்கிக் கொண்டு வரிசையாக ஒவ்வொன்றாய் செய்து பார்க்க பலனாகும்.

உப்புக்கட்டு

சித்தியா யின்னமொரு கட்டுமார்க்கம்
செயம்பெறவே சொல்லுகிறேன் திட்டமாகப்
பத்தியா யுப்பேது வென்றாயானால்
பதிவாக வாருதிக்குள் சத்திநாதம்
உத்தியாய் மலைபோலே வளர்ந்துநிற்கும்
உப்பெடுத்துப் பாக்குப்போ லுடைத்துநீயும்
சுத்தியாய்ப் பழச்சாற்றிற் மூன்றுநாளும்
சுகமாக ஊறவைத்துத் துவைத்துப்போடே 121

போட்டுமே கதிரில்வைத்து யெடுக்கநீயும்
போக்கோடே உப்பதுவுஞ் சுத்தியாச்சு
காட்டுமே முன்வைத்த சவுக்காரத்தைக்
கனிவாக வீரமொன்று பூரமொன்று
நாட்டமே அரைத்துவெடி யுப்புநீரால்
நலமாகக் குளம்புபண்ணிக் கொண்டுநீயும்
தாட்டமே கல்லுப்பைத் தோய்த்துவாட்டு
தனியாகத் தணலுக்கு ளடரவாட்டே. 122

வாட்டிடவே குளம்புக்கு ளடரவாட்டு
வடிவாக வாட்டியெல்லா மானபின்பு
நீட்டியே அடுக்கடுக்காய் முதிரவாட்டு
நிலையாகக் கல்லுப்புத் தெறிப்படங்கும்
முட்டியே சுண்ணாம்பு உப்புநேரே
முனிவாக அரைத்துமே கவசங்கட்டி
நாட்டியே கிளிஞ்சிநீர் சரியாய்க்கூட்டி
நலமாகச் சட்டியிட்டு நன்றாய்க்கேளே. 123

நல்லாக வாட்டியதோர் கல்லுப்பைத்தான்
நடுவில்வைத்து மேலுமந்தச் சுண்ணமிட்டு
அல்லாவை நினைத்துமே யெரிநால்சாமம்
அடைவாக யெரித்துமே மெல்லத்தானும்

பொல்லாமை யில்லாம லெடுத்துநீயும்
போக்கான சவுக்காரச் சுண்ணங்கட்டிக்
கொல்லாமை பெரியபுடம் போட்டுத்திரு
கொடிதான கட்டாகும் குணமுமாமே. 124

குணமாக வயிரம்போ லிறுகிநிற்கும்
கொள்ளையிதில் வாதமது கோடிக்கொக்கும்
தனமான வயிரம்போல் முத்துப்போலாம்
தாட்டிகமாய் வயிரமணி போலாம்பாரு
கனமாகக் கரிதனிலே உருக்கிப்பாரு
கண்விட்டுப் பொன்போலே ஆடும்பாரு
வணமாகக் கரியதுதான் குடியாதப்பா
வடிவாகக் கரிக்குடித்தால் வண்மைகேளே. 125

வண்மையாய் முன்போல துவைத்துவாட்டு
வடிவாகப் புடம்போட்டு உருக்கிப்பாரு
தண்மையாய் முத்துப்போ லுருகும்பாரு
தனையுடைத்தால் தங்கம்போல் நிறமுமாகும்
கண்மையா யிந்தஉப்புக் கொப்பேதென்றால்
கருத்துறவே நபிமாரைப் போலேயாகும்
பண்மையா யுப்பைமுந்திக் கட்டிப்பாரு
பதிவான சித்தியெல்லாம் பலனுமாமே. 126

பலனாக உப்புத்தான் கரியில்வைத்துப்
பாங்காக உருக்கியே பனியதாகத்
தலனாகத் தாவடமாய்ப் பூண்டுகொண்டு
தருகாலின் நபிபோல செபத்தைப்பண்ணு
அலனாகத் திரியாதே கந்திரியாக்கு
அடைவாக உண்டுமே உடுத்திநீயும்
பெலனாக யிருந்துமே செபத்தைப்பண்ணு
பேர்பெரிய முன்னோர்க ளுரைத்தவாறே. 127

உரைதப்பில் பேச்சுத்தான் தப்பிப்போனால்
உலுத்தரவர் வாதிமா ரறியமாட்டார்

கரைதப்பில் வெள்ளமது பொருக்கெடுக்கும்
கைதப்பில் வாதமது தலைகீழாகும்
முறைதப்பில் சாயந்தான் பிடித்திடாது
முத்தியில்லை வாதிமார் சொல்வார்நீதி
துறைதப்பித் திரிந்தவர்கள் அனேககாலம்
தொல்லுலகில் யாகோபு தோய்ந்திட்டாரே. 128

தோய்ந்திட்ட நபிமார்கள் வாதந்தன்னைத்
துணையாகச் சொல்லுவா ரநேகநீதி
பாய்ந்துமே யெட்டெட்டுக் கர்மந்தன்னைப்
பதிவாகச் சொல்லிடுவார் பலனைக்கொண்டு
தாய்ந்துமே பரிகரிப்பார் தடையோயில்லை
தாட்டிகமா யாகோபு சொன்னநீதி
மாய்ந்துமே நல்மார்க்கஞ் செய்துகொள்ளு
மயமாக வடிவமெல்லா மெய்யதாமே. 129

பாடல்கள்:121-129: இன்னும் ஒரு கட்டு மார்க்கத்தை கேள் கடலுக்குள் மலைபோல் வளர்ந்திருக்கும் உப்பை பாக்கு போல உடைத்துக் கொண்டு பழச்சாற்றில் மூன்று நாட்கள் உறைவைத்து எடுத்து வெயிலில் போடு. உப்பு சுத்தியாகும். பின்பு எடுத்துக் கொண்டு முன்பு செய்த சவுக்காரத்துடன் வீரம்,பூரம் இரண்டையும் வகைக்கு ஒரு பங்கு கூட்டி வெடியுப்பு நீர் விட்டு அரைத்து குளம்பாக பண்ணிக் கொண்டு அந்த குளம்பில் மேற்சொன்ன சுத்தி செய்த உப்பைச் தோய்த்து தணலில் வாட்டு இப்படி எல்லாக் குளம்பும் தீர்ந்த பின் நன்றாக வாட்டு உதிரும் வரை வாட்ட கல்லுப்பு தெறிப்படங்கி இருக்கும். பின்பு உப்பும், சுண்ணாம்பும் சம எடை எடுத்து அரைத்து முன் உப்பின் மேல் கவசமாகக் கட்டி வெயிலில் காயவை. பின்பு ஒரு சட்டியில் பாதியளவு கிளிஞ்சல் சுண்ணாம்பை போட்டு அதன் மீது கவசம் கட்டிய உப்பை வைத்து அதன்மீது கிளிஞ்சல் சுண்ணாம்பு போட்டு அல்லாவை வணங்கி நான்கு ஜாமம்

அடுப்பேற்றி எரி. ஆறிய பின் எடுத்து சவுக்காரச் சுண்ணத்தை வெடியுப்பு நீர் விட்டு அரைத்து கவசம் கட்டி காயவைத்து பெரிய புடமாக போட்டு எடு. இது மிக அருமையான கட்டாகும். வயிரம் போல் இறுகி இருக்கும். இதனால் பல வாத வேலைகள் ஆகும்.

இது வயிரம், முத்து, வயிரமணி போல் இருக்கும். இதை கரியில் வைத்து உருக்க உருகும். பொன் போல கண் விட்டு ஆடும். கரி குடிக்காது, அப்படி கரிக்குடித்தால் மறுபடியும் முன் போல குளம்பில் துவைத்து வாட்டு. பின் முன்போல புடம் போட்டு எடுத்து உருக்கு. முத்து போல உருகும் உடைத்தால் தங்கம் போல இருக்கும். இது நபிமார்களின் குணத்தைப் போன்றதாகும். எனவே இந்த உப்பை முன்னால் கட்டு. இந்த உப்பை உறுக்கு மணி செய்து மாலையாக்கி அதைக் கொண்டு செபம் செய்து கந்திரிகள் செய்து உண்டு உடுத்தி வாழ்ந்து பெரியோர்கள் கூறியதைப் போல் நடந்து கொள். என் பேச்சைக் கேளாது உண்மை தவறி நடந்தால் வாதம் சித்தியடைய மாட்டாது. கரை உடைந்தால் வெள்ளம் பெறுகும். அதுபோல் கை பாகம் தவறினால் வாதம் தலைகீழாகும். பொன்னும் உண்டாகாது. இப்படி முறை தப்பி முக்தியும் இல்லாமல் பல காலம் அலைவார்கள். இது யாகோபின் உண்மை சொல்லாகும். எனவே நபிமாரை வணங்கி பல தொழில்களையும் கற்று வாதத்தை உணர்ந்து அதைச் செய்து பலனை அறிந்து நல்ல மார்க்கத்தில் செல். எல்லா உண்மைகளும் புரியும்.

உப்புக்குரு

மெய்யாக உப்பினுட குருவைச்சொல்ல
விதமான சவுக்காரச் சுண்ணமொன்று
பையாகக் கற்புரச் சுண்ணமொன்று
பதிவாக வீரத்தின் சுண்ணமொன்று

நையாகப் புழுகொன்று சீனமொன்று
நலமான சவுக்காரச் செயநீராலே
மையாக உப்பினுட மணிக்குப்பூசி
மாசற்ற ரவிதனிலே உலரப்போடே. 130

உலர்ந்தபின்பு சுண்ணாம்புக் குகையில்வைத்து
உத்தமனே மேல்மூடிச் சீலைசெய்து
அலர்ந்துமே பத்தெருவிற் புடத்தைப்போடு
ஆதியென்ற கல்லுப்புச் சுண்ணமாகும்
நலந்துமே குலந்தனக்குக் கோடாலிதான்
நல்லதோர் சரக்குக்குக் காலன்காலன்
வலந்தனக்குக் கடுங்காரச் செயநீராகும்
வடிவாக நாளேழு உலரப்போடே. 131

உலரவே போட்டெடுத்தா லேழுநாளும்
உண்ணுமய்யா பூப்போலே பொருமிநீறும்
அலரவே பொருமினதோர் சுண்ணந்தன்னில்
அடைவாகச் சாரமது யிடையேகூட்டிக்
கலரவே தினமொன்று அரைத்தாயானால்
கருணைஜலம் போலவே நிற்கும்பாரு
தலரவே ரவிதனிலே உலர்ந்தபின்பு
தளராமற் சுண்ணாம்புக் குகையில்வைத்தே, 132

குகையில்வைத்து மேல்மூடிப் புடமுமிட்டால்
குணமாகச் சங்குபோல் நீறுமாகும்
தகையாகப் பனியில்வைக்கச் செயநீராகும்
தாட்டிகமா யிந்நீரில் வீரம்பூரம்
வகையாகச் சவுக்காரச் சுண்ணம்போடு
வடிவாகப் பூரத்தின் சுண்ணமோடு
பகையாக வெளியாக்கும் நீரிற்போடு
பதிவாகக் கலக்கியொன்றாய் மத்திச்சேறே. 133

மத்திச்சுப் பீங்கானில் பனியில்வைத்து
மதிமயங்கிப் போகாமல் சொல்லக்கேளு
நித்தியமாய்ப் பாஷாண மறுபத்திநாலும்
நிலையான உப்புவகை யிருபத்தஞ்சும்
சித்திபெற உபரசங்க ளெல்லாந்தானும்
சிறிதான கட்டாகு மெழுகுமாகும்
பத்தியே வெகுபோக்கும் ஆகும்நல்லாய்ப்
பாலித்தார் யாகோபு பாக்கியவானே. 134

பாக்கியவான் ஜெயநீரில் உப்பைக்கட்டிப்
பதிவாகக் குகையில்நின்று உருகும்போது
நோக்கியே தங்கந்தா னாலிலொன்று
நுட்பமாய் நாகமொன்று கூடவிட்டு
வாங்கியே உருக்கியெடு களங்கமாகும்
வடிவாக நவலோகம் நூற்றுக்கொன்று
தாக்கியே கொடுத்துருக்கு யெட்டேகாலாம்
சரியான மாத்தாகுந் தன்மைபாரே. 135

தன்மைபார் தங்கத்தைக் கண்டபோதே
தாட்டிகமாய்க் கெர்ச்சிக்கா தப்பாகேளு
நன்மையாய் நபிமாரைத் தினம்வணங்கி
ரகுமானின் பாதமதைப் போற்றிசெய்து
உண்மைபார் அன்னத்தைக் கொஞ்சமுண்ணு
உலுத்தருடன் பேசாதே ஒழுங்குமாகும்
பெண்மைபார் புளியகற்றி உண்டுதேறு
பேதமையாய்த் திரியாதே யின்னங்கேளே. 136

இன்னமென்ன சொல்லுகிறேன் செந்தூரத்தை
இதமான வாதிகள்தாம் தெரிந்துகொள்ள
நன்னயமாய்ச் சூதமொன்று நாகமொன்று
நலமாக உருக்கியெல்லாம் பொடியதாக்கிக்
கன்னல்போல் வீரமொன்று சுண்ணமொன்று
கருத்தாக மத்தித்துப் பனியில்வைக்கத்
தன்னிலே நீராகுஞ் செயநீர்தன்னைத்
தாட்டிகமாய்ச் சொல்லுகிறேன் தன்மைகேளே. 137

தன்மையா யுப்புமணி தன்னைத்தானும்
தாட்டிகமாய் வைத்துமே பின்புநீயும்
உண்மையாய்ப் பரித்தகட்டை மேலேசுத்தி
உறவாக யிலுப்பைநெய்யில் விளக்குவைத்துப்
பண்மையாய் நுலிழையிற் றிரியைப்போடு
பக்குவமாய் வாங்குமட்டும் வாட்டித்தீரு
பண்மையா யுட்புகுந்து பரிதானப்பா
பதிவான அருணனைப்பே லாகும்பாரே. 138

ஆகுமே நவலோகம் நூற்றுக்கொன்று
அடைவாகக் கொடுத்திடவே மாற்றுப்பத்து
வாகுபெற உப்புக்குங் காவிக்குந்தான்
வளமாக அருகுகட்டி யிறங்கும்நேரே
ஏகுபெறச் செந்தூரங் குன்றியுண்ணு
இனிவாகக் கோடிவரை வளருந்தேகம்
போகுமே விந்திறுகிக் கட்டிப்போகும்
போக்கோடே உண்டிடவே சித்தியாமே. 139

சித்திதா னாகவென்றால் செந்தூரத்தைத்
தினமுமே மண்டலந்தா னுண்ணும்போது
பத்தியாய்த் தேகமது மின்னிநிற்கும்
பதிவான கண்களுஞ் செவ்வலரிபோலாம்
சத்தியாய்ச் சட்டைகக்கும் சதிராய்மேனி
சரியான வேர்வையில்லை சொல்லக்கேளு
முத்திபெறச் சேர்த்துச்செந் தூரந்தன்னை
முக்கியமாய்ச் செய்துநீ யுண்டிடாயே. 140

உண்டிடவே கோடான கோடிதானும்
உறுதிமெத்தக் கற்றூணாந் தேகசித்தி
பண்டிடவே கொடிதானநோய்கள் போகும்
பாதையிது பெரும்பாதை பாருளோர்க்கு
வண்டிடவே பூமாலை போலேயாகும்
வடிவான யாகோபு வழக்கஞ்சொன்னார்
முண்டனாய் திரியாதே சுண்ணந்தன்னை
முடியுமட்டுஞ் சோதித்தாற் சோதிதானே. 141

தானென்ற நரைதிரைக ளற்றுப்போகும்
தாட்டிகமாய்ப் பச்சையுப்பைத் தின்றானாகில்
வானென்ற வேர்வையிலே வடிந்துபோகும்
வகையான மூத்திரத்தி லிறங்கிப்போகும்
காவென்ற சடலமெல்லா முலைந்துபோகும்
கருவான சடலமது நரைமேலாகி
ஊனென்ற தந்தமெல்லாங் கழன்றுபோகும்
உறுதிபெற்று யாகோபு இருந்திட்டேனே. 142

இருந்திட்டேன் சமாதியிலே அநேககாலம்
இதமான நபிமார்க ளென்னைக்கண்டு
வருந்திட்டே யெனையழைத்துச் சொன்னாரப்பா
மகிழ்வான செந்தூர வகைபாகங்கள்
பொருந்தவே கைபாகம் பார்க்கும்போது
புகலரிய சுண்ணங்கள் மிகவுஞ்சொன்னார்
திருந்தவே உப்புமணி யொன்றுசொன்னார்
செய்பாக கைபாக வரிசைதானே. 143

வரிசையாய்ப் பாகத்தைக் கற்றுக்கொண்டேன்
வடிவாகத் தொழுதிறைஞ்சி வண்மையாக
உரிசையாய்ச் சுண்ணத்தின் மார்க்கங்கண்டு
ஓதரிய கோரானை யோதித்தேர்ந்தேன்
பரிசமது யெழுநூற்றுக் காததூரம்
பதிவான குளிகையிட்டுப் பறந்தேன்யானும்
குரிசைதர நபிமார்க ளுபதேசித்த
குறியான சவுக்கார மாடுமாட்டே. 144

ஆட்டான கேள்வியினால் வாதம்பார்த்து
அறியாமற் சுண்ணமெல்லாம் பொய்யென்பார்கள்
நீட்டான குருவேணும் நூல்கள்வேணும்
நேரான கைமுறைகள் நிலைக்கவேணும்
பாட்டான பாடலைத்தா னறியவேணும்
பதிவான கணக்கினுட பாகம்வேணும்
ஊட்டான யோகசித்தி காயசித்தி,
ஒழுங்காகப் பண்ணிடவே உறுதியாமே. 145

பாடல்கள் : 130-145: உண்மையாக உப்பினுடைய குரு மருந்தை சொல்கிறேன் கேள். சவுக்கார சுண்ணம், பூரர சுண்ணம், வீரச் சுண்ணம், புனுகு, சீனம், இவைகளை வகைக்கு ஒரு பலம் எடுத்து சவுக்கார செய்நீர் விட்டு அரைத்து உப்பை உருக்கி செய்த உப்பு மணியின் மேல் பூசி வெயிலில் உலரவை. உலர்ந்த பின் சுண்ணாம்பால் செய்த குகையில் வைத்து மேல் மூடி சீலை மண் செய்து உலர்ந்த பின் பத்து எருவில் புடம் போடு. கல்லுப்பு சுண்ணமாகும். இது மிக கொடூரமானதாகும். இதை கடுங்கார ஜெயநீரில் நனைத்து உலரப்போடு. ஏழுநாட்கள் உலரப்போட்டால் பொறுமி நீறும். இப்படி பூப்போல உலர்ந்த சுண்ணத்தில் சம எடை நவச்சாரம் கூட்டி ஒரு நாள் அரைத்து பார்க்க தண்ணீர் போல நிற்கும். இதை நன்கு வெயிலில் காயப்போட்டு சுண்ணாம்பு குகையில் வைத்து மேல் மூடி சீலைமண் செய்து பத்து எருவில் புடம் போடு. ஆறிய பின்பு எடுத்துப் பார்க்க சங்கு போன்ற சுண்ணமாகும். இதை பனியில் வைக்க செயநீராகும். இந்த நீரில் வீரம், பூரம், சவுக்காரச் சுண்ணம், பூரச் சுண்ணம் இவைகளை வகைக்கு காசெடை போட்டு நன்கு கலக்கி வைத்துக் கொள். இதை பீங்கானில் ஊற்றி பனியில் வைக்க கொடூரமான செயநீராகும். இதனால் அறுபத்தி நான்கு பாடாணங்களும், இருபத்தி ஐந்து வகை உப்புகளும், நுற்றி இருபது உபரசங்களும், கட்டும் மெழுகாகும். இது சிறந்த பொருள் ஆகும். ஜெயநீரில் உப்பைக் கட்டி அந்த உப்பை குகையில் வைத்து உருக்கி உருகும்போது அதன் எடையில் நாலில் ஒன்று தங்கம், நாகம் இரண்டையும் கூட விட்டு உருக்கி எடுக்க களங்கு ஆகும். இதை நவலோகங்களில் நூற்றுக்கு ஒன்று கொடுக்க எட்டேகால் மாற்று உடைய பொன் கிடைக்கும். இப்படி செய்து தங்கத்தை கண்டவுடன் கர்வம்

கொள்ளாதே. தினமும் நபிமாரை வணங்கி ஒரு வேளை உண்டு தீயவர்களிடம் பேச்சை நீக்கி உப்பு, புளி நீக்கி உண்டு, மனம் பேதலித்து அலையாமல் யோகத்தில் நில். அப்படி தினமும் ரகுமானின் பாதமலர்களைத் தொழுது கொண்டு மேலும் முறையைக் கூறுகிறேன் கேள்.

வாதிகள் அறிந்து கொள்ளும் பொருட்டு இந்த செந்தூரத்தை கூறுகிறேன் கேள். பாதரசம் ஒரு பலம், நாகம் ஒரு பலம் இரண்டையும் சேர்த்து உருக்கி பொடியாக்கி அத்துடன் வீரச் சுண்ணம் ஒருபலம் கூட்டி நன்றாக அரைத்து பனியில் வைக்க செயநீர் ஆகும். இதில் உப்பு மணியை தோய்த்து வெயிலில் போடு. பின் எடுத்து இதன் மீது தங்கத்தை தகடாக தட்டி இதன் மேல் சுற்றி ஒரு விளக்கில் இலுப்பை நெய்யை ஊற்றி திரி போட்டு பற்ற வைத்து மேற்படி மணியை மேற் கூறிய செயநீரில் தோய்த்து வாட்டு தகட்டை எல்லாம் மணி வாங்கிக் கொள்ளும் வரை வாட்டு. தங்கம் மணியின் உள்புகுந்து சூரியனைப் போல் நிறமாகும்.

இதை ஒன்பது உலோகங்களில் நூற்றுக்கு ஒன்று கொடுக்க பத்து மாற்று ஆகும். இது உப்புக்கும் காவிக்கும் நிற்கும். இந்த செந்தூரத்தை குன்றியளவு உண்டு வர கோடி காலங்கள் உடல் அழியாது விந்தானது இறுகிக் கட்டும். இதை உட்கொள்ள காய சித்தி உண்டாகும். இதை காயசித்தியடையும் பொருட்டு ஒரு மண்டலம் உட்கொள்ள, உடல் பொன் போன்று மின்னும் கண்கள் செவ்வலரி மலர்கள் போலாகும். உடலில் சட்டை கழலும், உடலில் வியர்வை உண்டாகாது. எனவே முக்தியடைய வேண்டுமென்றால் நீ இந்த செந்தூரத்தை செய்து உட்கொள். இதை உட்கொள்ள உடல் கல்தூண் போலாகும். எல்லா

நோய்களும் தீரும். இது சிறப்பான மார்க்கமாகும். இதை முடிந்த மட்டும் செய்து தேர்ச்சி பெறு. இதனால் நரை, திரைகள் போகும். இதை விடுத்து பச்சை உப்பை உணவில் தின்றால் அது வியர்வையிலும், சிறுநீரிலும் இறங்கி விடும். உடல் தளர்ந்து, நரை உண்டாகி, பற்களெல்லாம் விழுந்து விடும். எனவே இந்த செந்தூரத்தை உட்கொள். இதை உட்கொண்டு யாகோபு ஆகிய நான் உறுதியுடன் வெகுகாலம் சமாதியில் இருந்தேன். இப்படி இருந்த என்னைக் கண்டு நபிமார்கள் வலிய அழைத்து எனக்கு செந்தூரங்கள் செய்முறைகள், கைபாகங்கள், சுண்ணங்கள், உப்பு மணி முதலியவைகளை கூறினார்கள். இப்படி சுண்ணத்தின் முறையை செய்து பார்த்து கற்றுக் கொண்டு இறைவனை வணங்கி குரான் கற்று குளிகையின் மூலம் எழுநூறு காததூரம் பறந்து சென்றேன். இது நபிமார்கள் சொல்லிக் கொடுத்த சவுக்காரத்தின் மகிமையாகும்.

இந்த உலகவாதிகள் கேள்விப்பட்டு செய்து பார்த்து சுண்ணங்கள் பொய் என்று கூறுவர். தக்க குரு வேண்டும். நல்ல நூல்கள் வேண்டும். உண்மையான கைபாகம் அறிய வேண்டும். பாட்டின் பொருளை அறிய வேண்டும். எடைகளை நன்கு அறிய வேண்டும். இப்படி அறிந்து ஒழுங்காக யோக சித்தி, காய சித்தி செய்து கொள்ள ஞானம் உறுதியாகக் கிடைக்கும்.

கல்லுப்புச் சுண்ணம்

உறுதியா யின்னமொரு சுண்ணங்கேளு
ஒருவருடன் பேசாதே உற்றுப்பாரு
நறியதாய்க் கல்லுப்புப் பலமும்பத்து
நாடியேதோர் கடல்நுறையு மிடையேசேரு
அறுதியாய் வெடியுப்பு நீராலாட்டி
அடைவாகக் கரியில்வைத்து ஊதிப்பாரு

பெறுதியே கடுஞ்சுண்ண மாகும்பாரு
பெலமாகக் கல்வமிட்டுச் சொல்லக்கேளே. 146

சொல்லவே . வெடியுப்பு நீராலாட்டிச்
சுருதிபெற வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நல்லவே காயவைத்துக் கரியில்வைத்து
நாடியே ஊதிடவே நல்லசுண்ணம்
வல்லவே சாரத்தையிடையே சேர்த்து
வசமாக அரைத்துமே சொல்லக்கேளு
கல்லவே வில்லைதட்டிச் செயநீராலே
கனிவாக அரைத்துமே கணக்காய்த்தானே. 147

பாடல்கள்: 146-147: மற்றுமொரு சுண்ணத்தைக் கூறுகிறேன் கேள். கல்லுப்பையும் கடல் நுரையையும் சம எடை சேர்த்து வெடியுப்பு நீர் விட்டு அரைத்து கரியில் வைத்து ஊது. கடும் சுண்ணம் ஆகும். பின்பு அதை கல்வத்தில் கொட்டி வெடியுப்பு நீர்விட்டு அரைத்து வில்லை தட்டி காய்வைத்து கரியில் வைத்து ஊதிட நல்ல சுண்ணம் ஆகும். இதன் எடைக்கு சாரம் சேர்த்து நன்கு அரைத்து வில்லை தட்டி காயவைத்து பின்பு வெடியுப்பு ஜெயநீர் விட்டு அரைத்து வில்லை தட்டி காயவைத்து ஓட்டில் வைத்து மேல் ஓடு மூடி சீலைமண் செய்து சேவல் என்ற புடமும் போடு. ஆறிய பின் எடுத்து பனியில் வைக்க தண்ணீராகும். இதை பீங்கானில் எடுத்து வை.

நாகக்கட்டு

கணக்காகச் சேவலென்ற புடமுமிட்டுக்
கனிவாக யெடுத்துமே பனியில்வைத்துத்
தணக்காக நீராகும் நீருதன்னைத்
தாட்டிகமாய்ப் பீங்கானி லிட்டிறுத்து
வணக்காக நாகத்தை யிருபத்தொன்று
வண்மையாய்ச் சாய்த்துயெடு கட்டுங்கட்டும்
பிணக்காக் கட்டிநிறை நாகத்தோடே
பிசகாமல் சூதமிடை சேர்த்திடாயே. 148

பாடல்: 148 : மேற்படி நீரில் நாகத்தை கரண்டியிட்டு உருக்கிக் கொண்டு இருபத்தியொரு தரம் சாய்த்து எடு. நாகம் கட்டும். இந்த கட்டிய நாகத்திற்கு சமஎடை பாதரஸம் சேர். சேர்ந்து உருக்க புட்டு போல ஆகும். இதன் எடைக்கு சமஎடை வீரம் சேரு.

நாகச் செயநீர்

சேர்த்துமே உருக்கியெடு புட்டுப்போலே
செப்பமாய் வீரமது பாதிசேர்த்துக்
கார்த்துமே கல்வத்தி லரைத்துப்பாரு
கருத்தரிய செயநீராங் கண்டுகொள்ளு
பார்த்துமே பீங்கானி லிட்டுநீயும்
பனியிலே நாளேழு வைத்துப்பாரு
கார்த்துயேழ் கல்லுப்பு கட்டியாகக்
கனிவாகக் கடல்நுரையை ஊதிக்கட்டே 149

பாடல் 149: இப்படி வீரம் பாதி சேர்த்து கல்வத்தில் கொட்டி நன்கு அரை. நல்ல செயநீர் ஆகும். இதை ஒரு பீங்கானில் போட்டு ஏழுநாட்கள் பனியில் வைத்து எடு.

உப்புச் செந்தூரம்

ஊதியே வலுவாகக் கட்டிமேலே
உற்றுமே பெரியபுடம் போட்டெடுக்க
வாதியே தெறிப்படங்கிக் கட்டிப்போகும்
மகத்தான கல்வமிட்டு மார்க்கங்கேளு
சாதியே நாகத்தின் செயநீராலே
சரியாக அரைத்துவில்லை காயப்போடு
நாதியாய்க் காய்ந்தபின்பு சொல்லக்கேளு
நலமாக அகலிலிட்டுப் புடத்தைப்போடே. 150

புடம்போட்டு நீயெடுத்து நாகச் செயநீர்
புகலாக அரைத்துமே வில்லைதட்டி
அடைவாகக் கதிரில் வைத்துக் காயப்போட்டு
ஆதியாய் முன்போலே புடமுமிட்டுத்

திடமாக யெடுத்துமே கல்வத்திட்டுத்
திட்டமாய் நாகத்தின் ஜெயநீராலே
படமாக அரைத்துமே வில்லைதட்டிப்
பதியவே இப்படிக்குப் போட்டிடாயே. 151

போட்டிடவே உப்புதான் சிவக்குமட்டும்
பொலிவாகப் புடம்போட்டு யெடுத்துக்கொள்ளு
நாட்டிலே சொல்லாதே சிவந்துபோகும்
நாதாந்த நபிமார்க ளாடும்உப்பு
கூட்டிலே கிளியடைத்த வாறுபோலக்
குணமாக நாகமது உப்பில்சேர்ந்து
தாட்டிகமாய்ச் செந்தூர மாகும்பாரு
தங்கநபி மார்சொன்ன தன்மைதானே 152

தன்மையாய்ச் செம்புநூ றொன்றுருக்கித்
தடையறவே செந்தூரம் ஒன்றுதாக்கு
உண்மையாய் மாத்ததுவும் பத்துமாத்து
உலகத்தோர்க் காகுமிது உற்றுப்பாரு
வண்மையாய்ப் பணவிடைதான் தேனிலுண்ண
வடிவான காயமது யிரும்புபோலாம்
புண்மையாய் நோயெல்லாம் ஓடிப்போகும்
புகழான நரம்புகளு மிறுகும்பாரே. 153

இறுகுமே செவ்வலரி போலாந்தேகம்
இருக்கவல்லோ புத்தியியல் பாகச்சொன்னேன்
பெருகவே செந்தூரந் தன்னையுண்டால்
பிலக்குமே தேகந்தா னிறுகியேறும்
கருகவே விந்திறுகும் நரையுமில்லை
காரணமாய் மலைபோலே தேகமாகும்
பருதிபோல் மேனியெல்லாஞ் சிவந்துமின்னும்
பாகமா யாகோபு பயின்றவாறே. 154

வாறேது என்றாக்கால் சொல்லக்கேளு
வடிவான கல்லுப்பைச் சுண்ணம்பண்ணக்
காறேது சரக்கெல்லாம் நொடியிற்கட்டும்
கைமுறையாய் நாகத்தைக் கவ்விக்கொள்ளும்
தாறேது சகலமெல்லாஞ் சித்தியாகும்
நடையில்லை யென்றுசொன்னார் நபிமாரெல்லாம்
கூறேது வாதமெல்லாங் கொள்ளைகொள்ளை
குடிபோகும் நசலெல்லாங் கூறொணாதே. 155

பாடல்கள்: 150 -155: கல்லுப்பை ஒரு கட்டியாக எடு அதன் மீது கடல் நுரையை ஊதி கவசம் கட்டு. பெரிய புடமாக போட்டு எடுக்க உப்பு தெறிப்படங்கி கட்டும். இதனைக் கல்வத்தில் போட்டு மேற்கூறிய நாக செயநீர் விட்டு அரை. நன்கு அரைத்து வில்லை தட்டி காயவை. பின் அகலில் வைத்து புடம் போட்டு எடு மறுபடியும் நாக செயநீர் விட்டு அரைத்து வில்லை தட்டி காயவைத்து புடம் போட்டு எடு. இப்படி அரைத்து சிவக்கும் வரை புடம் போடு. இந்த சிவந்த உப்பானது நாதாக்களுக்கு நிகரானது. நாகமானது உப்புடன் சேர்ந்து உயர்ந்த செந்தூரம் ஆகும். இது நபிமார் சொன்ன முறையாகும். செம்பை நன்கு உறுக்கிக் கொண்டு செந்தூரத்தை ஒன்று கொடு. பத்து மாற்று தங்கம் ஆகும். இது உலகவாதிகள் செய்வதற்காக கூறினேன். இந்த செந்தூரத்தைப் பணஎடை மண்டலம் தேனில் உட்கொள்.

இப்படி உட்கொண்டால் உடல் இரும்பு போலாகும் நோய்கள் எல்லாம் ஓடிவிடும், நரம்புகள் இறுகும், உடல் செவ்வலரி நிறமாகும். அதிக பலம் உண்டாகும், மலையை போன்ற உறுதியுடன் விந்தானது இறுகி நரை மாறும், உடல் சிவந்து மினுமினுப்பு உண்டாகும். இதை யாகோபு ஆகிய நான் செய்து பார்த்து கூறுகிறேன். இப்படி கல் உப்பை சுண்ணம் பண்ண எல்லா சரக்குகளும் விரைவில் கட்டும். இது நாகத்தை

தன்னுள் கொள்ளும், எல்லாம் சித்தியாகும். இதனால் நபிமார்கள் பல வாதங்கள் செய்தனர். எல்லா நோய்களும் ஓடிப்போகும் இதன் பெருமையை கூறமுடியாது.

புத்தி கூறல்

கூறுவே னுலகத்தில் வாதிமார்க்குக்
கொள்ளைசெய்ய வாதமது சுண்ணஞ்சொன்னேன்
நூற்றுக்கு ஒன்றுகொடு பழுக்கச்சொன்னேன்
நொடிக்குள்ளே தங்கம்வரும் பாகஞ்சொன்னேன்
தாரேது சவுக்காரச் சுண்ணஞ்சொன்னேன்
சஞ்சலங்க ளில்லாமல் தகமைகண்டு
ஊரேது பேரேது உற்றாரேது
உற்றுப்பா ரெல்லாமுஞ் சித்தியாமே. 156

சித்தியா யிருப்பதற்கு வாதம்வேணும்
செய்முறையாய்ச் செய்கிறதுந் தீர்க்கம்வேணும்
பத்தியாய் நூலெல்லாம் படிக்கவேணும்
பல்னாகச் சவுக்காரச் சுண்ணம்வேணும்
நத்தியே திரிவதற்குத் தங்கம்வேணும்
நானறிந்த நூல்களெல்லாம் நாட்டம்வேணும்
புத்தியே யரிவதுவும் நிலைத்துதானால்
புகலரிய நபிமார்கள் தோன்றுவாரே. 157

பாடல்கள்:156-157: இந்த உலகத்தில் உள்ள வாதிமார்கள் பிழைப்பதற்கு சுண்ணம் சொன்னேன். நூற்றுக்கு ஒன்று கொடுத்தால் தங்கம் ஆகும் மருந்தைச் சொன்னேன். நொடிக்குள் தங்கம் செய்யும் முறையைக் கூறினேன். சவுக்காரச் சுண்ணம் செய்யும் முறையைச் சொன்னேன். மனதில் சஞ்சலங்களை நீக்கி உற்றார் உறவினர் என்பது எல்லாம் மாயை என்பதை உணர்ந்து யோகத்தில் நில். எல்லாம் சித்தியாகும், இப்படி சித்தி பெற வாதம் வர வேண்டும். செய்முறையாய் செய்ய அறிவு வேண்டும். எல்லா நூல்களையும் பார்க்க வேணும். அதன் படி சவுக்கார

சுண்ணம் செய்ய வேண்டும். அடிமை வேலை செய்யாமல் உண்டு, உடுத்த தங்கம் வேண்டும். நான் எழுதிய நூல்களில் எல்லாம் கருத்து வேண்டும். இப்படி இருந்து அறிவு தெளிவு உண்டானால் நபிமார்கள் தோன்றுவார்கள்.

நபிமார்கள் சொல்லும் நேர்மை

தோன்றுவார் நபிமார்கள் சொல்லும்நேர்மை
துணையான நூலதனைப் படிக்கச்சொல்வார்
கான்றுபார் கைபாக வரிசைசொல்வார்
காசினியி லிருந்துமே கருணைகூர்ந்து
வான்றுவா யுளர்ாம லிருக்கச்சொல்வார்
வடிவான பொருளறிந்து வணங்கச்சொல்வார்
தான்றுமே சுண்ணங்கள் மிகவுஞ்சொல்லித்
தடையற்வே யோகமதைச் சொல்லுவாரே. 158

சொல்லுவார் உப்புக்குக் காரமெத்தச்
சுருதிதனை ஆராய்ந்து சுருக்கச்சொல்வார்
நல்லுவார் சவுக்கார வர்மஞ்சொல்வார்
நாடியே யெண்ணெய்தனை வாங்கச்சொல்வார்
கல்லுவார் பொருளைத்தான் காட்டுவார்கள்
கருத்திலுறை உபதேசம் கருதிச்சொல்வார்
வெல்லுவார் கோடிலெட்சந் தங்கஞ்செய்ய
விரும்பியே சொல்வார்கள் நபிமார்தானே. 159

நபிமார்கள் மக்காவின் தேசந்தன்னில்
நாடியே சவுக்காரக் குருவைச்செய்து
துபியாகத் துருசுதுவை நீத்திக்கொண்டு
துப்புரவா யிரதமணி கட்டித்தேற்றி
வபியாக நவலோகந் தன்னிலீய்ந்து
வடிவாகப் பொருள்தேடி உண்பாரப்பா
கபியான விண்ணுமண்ணும் பொன்னேசெய்து
கருத்தாகச் செலவுசெய்வார் கண்டுபாரே. 160

கண்டுபா ரண்டபகி ரண்டமெல்லாம்
கடந்துமே குளிகையிட்டு ஓடிச்சென்றேன்
பண்டுபார் மலைதோரும் நபிமார்கோடி
பதிவான மலையருகே தைக்கால்ரெம்ப
முண்டுமே சித்துரெம்பக் கோடாகோடி
முனிவான அந்தந்த மலைகள்தோறும்
வண்டுமே தாதாக்கள் கோடாகோடி
வடிவான யாகோபு வகைசொன்னாரே, 161

வகையாகச் சாஸ்திரங்கள் மெத்தவுண்டு
வடிவான சூத்திரமு மதனில்ரெட்டி
தொகையாக யெல்லாமுஞ் சுருக்கிப்பார்த்துத்
துடியாகச் சுண்ணமென்ற காண்டமாகப்
பகையாகக் கைபாக வரிசையோடே
படிப்படியாயச் சொல்லிவிட்டேன் பார்த்துத்தேறி
நகையாக உப்பதுவை மறைத்துச்சொன்னார்
நாடியே வெளியாகச் சொன்னேன்பாரே. 162

பாரென்ற நூல்களெல்லாஞ் சித்தர்தானும்
பதிவாக மறைத்ததென்ன வென்றாற்கேளு
காரென்ற மலைதோறுஞ் சித்தராவார்
கனிவாக யென்றுமே மறைத்துப்போட்டார்
தாரென்ற யென்னூலில் சுண்ணப்போக்குத்
தாட்டிகமாய்ச் சொல்லிவிட்டேன் தன்மையாக
வாரென்ற வழலையைத்தான் மூடிப்போட்டார்
மகிழ்வாக நான்சொன்ன வகையிதாமே. 163

வகையாகச் சவுக்கார உண்டைசெய்து
வருதியாய்ச் சுத்திபண்ணிச் சுண்ணம்பண்ணி
நகையான கடுங்காரச் செயநீர்பண்ணு
நன்மைபெறக் கற்பூர உப்புப்பண்ணு
சிகையான வீரத்தைச் சுண்ணம்பண்ணிச்
சிறப்பாக வெடியுப்புச் செயநீர்பண்ணு
பகையான கல்லுப்புக் கட்டியாகும்
பதிவான வாதமிதி லடங்கிப்போமே, 164

பாடல்கள்:158-164: நபிமார்கள் நூல்களை படிக்கும்படி கூறுவார். கைப்பாகம் சொல்வார், எல்லாம் அறிந்து கொண்டு எவையும், யாரிடமும் கூறாமல் இருக்கச் சொல்வார், உண்மை பொருளை அறிந்து வணங்கும்படி கூறுவார். பின்பு பல விதமான சுண்ணங்களைப் பற்றிக் கூறி உண்மையான யோகத்தையும் கூறுவார். உப்புக்கு காரம் ஏற்றும் முறை, சவுக்காரம் செய்முறை, எண்ணை நீக்கும் முறை முதலியவைகளைக் கூறி உண்மைப் பொருளை உணர்த்தி கருத்துடன் உபதேசம் கூறுவார். பல தங்கம் செய்யும் முறைகளையும் கூறுவார்.

இப்படி மக்காதேசத்தில் உள்ள நபிமார்கள் சவுக்கார குருவை செய்து அதை வைத்து துருசை சுண்ணமாக்கி, அதைக் கொண்டு இரசமணி கட்டி அதை ஒன்பது உலோகங்களில் கொடுத்து பொன் செய்து விற்று உண்பார்கள். விண்ணையும், மண்ணையும் பொன் ஆக்கும் அளவு திறமையுள்ளவர்கள். இப்படி செய்து செலவு செய்வார்கள். இவர்களிடம் எல்லாவற்றையும் கற்றுக் கொண்டு நான் குளிகை செய்து அண்ட பேரண்டங்கள் எல்லாம் பறந்து சென்றேன். மலைகள் தோறும் கோடான கோடி ஆசிரமங்களும், சமாதிகளும், சித்தர்களும், நாதாக்களும் கோடான கோடி பேர்களுண்டு. இவர்களிடம் பலபல சாஸ்திரங்களும், அதன் இரண்டு பங்கு சூத்திரங்களும் உண்டு. இவை எல்லாவற்றையும் சுருக்கி ஆராய்ந்து கைபாகமாக செய்து பார்த்துத் தேறி சுண்ணமென்ற காண்டமாக வரிசையாக கூறினேன். எல்லா நூல்களிலும் உப்பை செந்தூரமாக்கும் முறை கட்டும் முறையை மறைத்தனர். நான் அதை வெளிப்படையாகக் கூறினேன்.

எல்லா நூல்களிலும் சித்தர்கள் உண்மையை மறைத்து பரிபாஷையில் எழுதியது ஏன் என்றால் கேள். மலைகள் தோறும் சித்தர்கள் ஆகிவிடுவார்கள் என்று மறைத்தனர். ஆனால் என்னுடைய நூலில் சுண்ணத்தின் செய்முறையை உண்மையாகக் கூறினேன். வழலையை எல்லோரும் மறைத்தனர். அதையும் நான் மனம் மகிழ்ந்து தெளிவாகக் கூறிவிட்டேன். எனவே இந்த முறைை; நீ அறிந்து சுத்தி செய்து அதை வகை அறிந்து சுத்தி செய்து சுண்ணம் செய்து அதைக் கொண்டு கடுங்கார செயநீர் செய்து கொள். கற்பூர உப்பு பண்ணு. பின்பு வீரத்தை சுண்ணம் செய்து கொள். வெடியுப்பு செயநீர் செய்து கொள். இவைகளால் கல்லுப்பு கட்டி கல்லுப்போல் ஆகும். இப்படி கல்போல ஆன ரசவாதமானது உனக்கு அடங்கி நிற்கும். அறிவு கொண்டு இவைகளை செய்து கொள்.

உப்புமெழுகு

அடங்கவே உப்பினுட மெழுகைக்கேளு
அடைவான உப்பதுவும் பலமுமொன்று
துடங்கவே குகையில்நின்று உருகும்போது
துப்புரவாய்ச் சாரமது பலமுங்கால்தான்
மடங்கவே நீர்சென்ற வெங்காரந்தான்
வடிவான பலங்கால்தா னிறுத்துக்கொண்டு
தடங்கவே கெந்திபல மரைதான்போடு
தடையறவே சவுக்கார நீர்தான்வாரே. 165

நீர்வார்த்துக் கலந்தரைத்து நெறியதாக
நிலவரமா யுண்டையது செய்துநீயும்
காரவே உப்புநின்று உருகும்போது
கனிவாக ஒவ்வொன்றாய்க் கொடுத்துவாநீ
பாரவே உண்டைதனைக் கொடுத்துமேதான்
பதிவாக மயினம்போல் பதமாய்நிற்கும்
தாரவே நவலோகம் நூற்றுக்கொன்று
தடையறவே கொடுத்திடவே தன்மையாமே. 166

தண்மையாய்த் தசமாத்து ஆகும்பாரு
தாக்கான உப்புக்குங் காவிக்குந்தான்
உண்மையாய் ஓடாது புடமிறங்கும்
உறுதிபெற வெகுதூரம் எட்டியோடும்
வண்மையாய் மெழுகதனைக் குன்றியுண்ணு
வகையாகப் பத்தியமா யுண்டு தேறு
கண்மையாய் நாற்பதுநா ளுண்டுதேறு
காரியமா யுள்ளரையில் வாழுங்காணே. 167

காணவே யோகத்தைப் பார்த்துத்தேறு
கனிவாக சட்டையொன்று தள்ளிபோடும்
வாணவே சூரியர்சந் திரனோவென்பார்
வடிவான சூரியன்போல் திரேகமாகும்
தோணவே உலகத்தில வாதமெய்தில்
துடியான எண்ணெயொடு பெண்ணைச்சேர்த்து
பாணவே அதரமுண்டு வருவானாகிற்
பலநினைவாய்க் கவலையுற்ற பாசமாமே. 168

பாசமா மெய்தியே காயசித்தி
படிவாக வாதமதில் பலனுமேது
நேசமா யேறியே குளிகையோடு
நிலவரமாய்ச் சுண்ணங்கள் நிலைக்கப்பண்ணி
வாசமா யின்னூலில் உலகத்தோர்க்கு
வடிவாகச் சுண்ணமது பாடினேன்யான்
காசமா யெல்லோர்க்கும் வாதஞ்சொன்னேன்
கனிவான காயசித்தி கண்டுபாரே. 169

கண்டுபார் உப்பென்ற சுண்ணமொன்று
கதிபெறவே அரைத்திடவே இடைசேர்சாரம்
பண்டுமே கல்வத்தி லரைநால்சாமம்
பதிவான சுண்ணமென்ற குகையில்வைத்து
வண்டுபெற ஊதிநல மாகத்தானும்
வகையாகக் கடுங்காரச் செயநீர்குத்தித்
துண்டுமே நாள்மூன்று மத்தித்தேதான்
: துடியாகப் பனியில்வைக்கச் செயநீராமே. 170

செயநீரா மின்னீரில் பெருமைதானும்
செப்பமாய்ச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
பயநீரா மின்னீரில் வீரச்சுண்ணம்
பதிவாக மத்தித்துப் பலந்தான்பூரம்
நயநீரால் ஒருநாள் பீங்கானிற்பூரம்
நலமாகச் செயநீரை அதிலேவாரு
கயநீரை மூன்றுநாள் நிழலில்வைத்துக்
கனிவாக அஞ்சுநாள் ரவியில்போடே, 171

போட்டுமே அரைத்துநன்றாய் வில்லைதட்டிப்
போக்கோடே சவுக்காரச் சுண்ணம்பூசி
நாட்டுமே அஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
நலமாக ஊதிடவே கடுமையாகும்
காட்டுமே நபிமாரைத் தொழுதுபோற்றிக்
கணக்காகச் சுண்ணத்தைக் கனிந்துநீயும்
பாட்டுமே பனியில்வைக்கச் ஜெயநீராகும்
பதிவான பூரமது பலம்தானொன்றே, 172

பலமாகத் தெளிவான சாரமொன்று
பத்தியோடு ரெண்டுமே கல்வத்திட்டு
அலமாக நெட்டடங்க மட்டுமாட்டு
அடைவாகச் சுண்ணாம்புக் குகையில்வைத்துக்
கலமாக மேல்மூடிச் சீலைசெய்து
கனிவாகப் புடம்போட வைத்துநீறாம்
சலமாக ஆச்சரியம் பனியில்வைக்கச்
சரியான ஜெயநீராம் தாக்கக்கேளே. 173

தாக்கவே இன்னீரில் வீரச்சுண்ணம்
தனியாகக் கலக்கிமெள்ள வைத்துக்கொண்டு
ஏர்க்கவே சரக்கான அறுபத்துநாலும்
இதமாக நனைத்துமெள்ள வாட்டித்தீரு
பார்க்கவே கட்டாகு மணியுமாகும்
பதிவான உபரசங்கள் லவணமெல்லாம்

ஆக்கினதோர் சோரதுபோ லாகும்பாரு
அடைவாகச் சணத்திலே சுண்ணமாமே. 174

சுண்ணமாம் சுண்ணாம்பாய் வெந்துநீறாம்
துடியான தாம்பூரஞ் சுண்ணமாகும்
எண்ணவே தங்கமது சுண்ணமாகும்
ஏழைபோ லிரும்புமுதல் லோகமெல்லாம்
திண்ணமாய் நீற்றிவிடும் மெழுகுமாகும்
தேசமெல்லாங் கண்டிட்டால் நீறிப்போகும்
பண்ணவே கதிரதுதான் கோடியாகும்
படிப்படிப்பாய் யேறுமது பரிந்துதானே. 175

பரிந்துமே வெள்ளையது நீறிப்போகும்
பதிவான தாளகந்தான் மஞ்சள்போகும்
விரிந்துமே கெந்தகந்தா னீறிப்போகும்
வேதாந்த வீரமது குருவுமாகும்
கரிந்துமே லிங்கமது கட்டும்நீறும்
கனிவான மெழுகாகும் வேதையாகும்
தரிந்துமே கல்லுப்பு மணியுமாகும்
தாக்கிடவே உபரசங்க ளீயமாமே. 176

ஈயமாந் தொடுமுன்னே சூதமாகும்
இதமாக விரைச்சுமே போகுங்கண்டீர்
நாயமார் சொன்னபடி நிமிளைவெள்ளை
நலமாக நூற்றுக்கே ஒன்றுகாட்ட
மாயமாய் வாங்கியது தங்கமாகும்
மாசற்ற லோகமெல்லா மேமமாகும்
காயமது நிலைத்துமே கற்றூணாகும்
கண்டுரைத்தார் யாகோபு கருணைதானே. 177

கருணையாய்த் தங்கமது ஆச்சுதென்றால்
கனிவாகப் புளகிக்க வேண்டாம்பாரு
வருணையாய் நபிமாரை வணங்கியேறு
வடிவான பொருளாகும் வலுமைமெத்தத்

தருணையாய் மகமதுவைப் போற்றிசெய்து
தாட்டிகமாய் வழியாறு தலத்திலேறி
அருணையாய்த் தமர்வாச லுள்ளேபுக்கி
அடைவாகச் செய்திடவே ஆதியாமே. 178

ஆதியாம் பூரமென்ற நீரிலேதான்
அடைவாகத் தாளகத்தைச் சுருக்குத்தாக்கு
சோதிபெறச் சவுக்காரச் சுண்ணம்வீரம்
துடியாகப் பூரமென்ற சுண்ணமூன்றும்
ஆதியே வெடியுப்பு நீராலாட்டி
அப்பியே தாளகத்தில் ரவியிற்போட்டுச்
சாதியாய்ச் சுண்ணாம்பாம் குகையில்வைத்துச்
சரியான மண்செய்து ஊதிடாயே, 179

ஊதிடவே சுண்ணாம்பாந் தாளகந்தான்
உற்றதோர் வீரமது கூட்டியூது
நாத்திடவே மத்திச்சு வங்கத்தப்பி
நலமாகச் சுண்ணமென்ற அண்டச் சுண்ணம்
கோதிடவே வங்கத்திற் கவசஞ்செய்து
குகையிலிட்டுக் காயவைத்தே யெடுத்துக்கொண்டு
காதிடவே குகையில்வைத்து ஊதிநன்றாய்க்
கனமாக மேற்கட்டி ஊதிடாயே. 180

ஊதிடவே வங்கமது நீறிப்போகும்
உற்றுமே கடுஞ்சுண்ண மாகும்பாரு
நாதிடவே வர்தமென்ற கடைதிறக்கும்
நலமான திறவுகோ லாகும்பாரு
காதிடவே சின்னமென்ற வேங்கைபோலாம்
கனிவான ஆடுபோற் கலங்கிநிற்கும்
பாதிடவே சூதமது உண்டையாகும்
பதிவான துறையாகும் பலனுமாமே. 181

பலனாகத் துருசியது பலந்தான்தூக்கிப்
பக்குவமாய்ப் பூரநீர் தண்ணீர்தோய்த்து
செலமாக ரவிதனிலே காயப்போடு,
சிறப்பாக ஏழுநா ளானபின்பு

கலனாகச் சவுக்காரச் சுண்ணமொன்று
        கனிவாக வீரமென்ற சுண்ணமொன்று
வலனாக வங்கமென்ற சுண்ணமொன்று
        வகையான சீனமொரு காசுதானே. 182

தானென்ற புழுகோடு உரமுங்கூட்டித்
        தடையறவே கடுங்காரச் செயநீரிட்டு
வானென்ற துருசின்மேல் கவசங்கட்டி
        வகையான சுண்ணாம்புக் குகையில்வைத்துக்
கானென்ற மேல்மூடிச் சீலைசெய்து
        கனிவான கெஜபுடத்திற் போட்டெடுத்துப்
பானென்ற கவசத்தை உடைத்தெடுக்கப்
        பக்குவமாய்க் கடுஞ்சுண்ண மாகுந்தானே. 183

ஆகுமே துருசுமது குருவுமானால்
        அண்டரண்ட கடாகமெல்லாங் கிழித்துஆடும்
தாகுமே மூச்சிடுமுன் சூதங்கட்டும்
        தடையறவே சவ்வீரம் மெழுகுமாகும்
ஏகுமே அண்டமெல்லாம் மெழுகுமாகும்
        இதமான பாசாணக் குலங்களெல்லாம்
ஆகமாய் வெண்ணெய்போ லாகும்பாரு
        அன்பாகப் பரிநீறும் வெள்ளிநீறே 184

வெள்ளியே நீறிடவே கவரோகோடி
        வேதையிதில் அளவாகச் சொல்லப்போகா
தள்ளியே குறுக்குந்தான் அநேகங்கோடி
        தாயாநிதியாம் நபிமார்கள் சொன்னபுத்தி
வள்ளியது கொடிபோலே படரும்பாரு
        வகையான சுண்ணமென்ற குகைகளெல்லாம்
அள்ளியே உண்டதுபோல் கோடிதொந்தம்
        அடைவாக யாகோபு அரைந்தார்தாமே. 185

பாடல்கள்: 165 - 185: உப்பினுடைய மெழுகு முறையைக் கூறுகிறேன். நவச்சாரம் கால்பலம், பொரித்த வெங்காரம் கால்பலம், கெந்தகம் அரைப்பலம் இவைகளை கல்வத்தில் போட்டு சவுக்கார நீர் விட்டு அரை. நன்கு அரைத்து உருண்டை

சுண்டைக்காய் அளவாக செய்து கொண்டு வெயிலில் உலர்த்தி எடுத்துக் கொள். பின்பு கட்டிய உப்பை குகையில் வைத்து உருக்கு. உப்பு உருகும் போது அதில் ஒவ்வொரு உருண்டையாக கொடு. உப்பானது மெழுகு ஆகும். இந்த மெழுகை ஒன்பது உலோகங்களில் நூற்றுக்கு ஒன்று கொடுக்க பத்து மாற்று ஆகும். இது உப்புக்கும், காவிக்கும் ஓடாது. புடத்திற்கு நிற்கும். இதனால் வேதை வெகு எளிதாகும். இம்மெழுகை குன்றியளவு பத்தியமாய் மண்டலம் உட்கொள். காயம் சித்தியடையும். இப்படி இருந்து கொண்டு யோகத்தை செய் இதன் சக்தியால் உடலில் சட்டை ஒன்று கழலும், உடல் சூரிய சந்திரர்களைப்போல் பிரகாசம் அடையும், இந்த உலகில் வாழும் வாதிகள் ரசவாதம் சித்தியடைந்த பின்னும் எண்ணை, பெண்யோகம் முதலியவைகளுடன் வாழ்ந்து கொண்டு அறுசுவை உணவை உண்டு கொண்டு வாழ்வானாகில் அவன் பல பல நினைவாலே பாதிக்கப்பட்டு கவலையும், பாசமும் ஆட்கொண்டு காய சித்தி செய்ய மாட்டான். இப்படி இருப்பதால் வாதம் வந்தும் பயன் என்ன? நான் குளிகை கொண்டு எல்லா தேசங்களையும் சுற்றி வந்து சுண்ணங்கள் எல்லாம் செய்து பார்த்து இந்த உலகில் உள்ளவர்களுக்கு காய சித்தியும் வாதமும் நிலைக்கும் பொருட்டு இந்த நூலைப் பாடினேன். எனவே இதைப் படித்து செய்து பார்.

உப்பு சுண்ணத்தை கல்வத்தில் போட்டுக் கொள். இதன் எடைக்கு சம எடை நவச்சாரம் சேர்த்து அரை நான்கு ஜாமம் அரைத்து எடுத்து சுண்ணாம்புக் குகையில் வைத்து நன்கு ஊதி எடு. பின்பு கடுங்கார செயநீர் விட்டு அரைத்து மூன்று நாட்கள் மத்தித்து பனியில் வை. செயநீராகும். இதன் பெருமையை கூறுகிறேன் கேள். இந்த செயநீரில் வீரச் சுண்ணத்தை போட்டு நன்கு மத்தித்து கொண்டு ஒரு பீங்கானில் ஒரு பலம் பூரத்தைப்

போட்டு அதில் மேற்படி வீரச் சுண்ணம் போட்ட செயநீரை ஊற்றி மூன்று நாட்கள் நிழலில் வைத்து பின்பு ஐந்து நாட்கள் வெயிலில் வை. இப்படி வைத்து எடுத்து நன்கு அரைத்து வில்லை தட்டி காய வைத்து அதன் மீது சவுக்காரச் சுண்ணம் பூசி ஐந்து சுண்ணக் குகையில் வைத்து கரி நெருப்பில் ஊதி எடுக்க கடும் சுண்ணம் ஆகும். நபிமாரை வணங்கி இந்த சுண்ணத்தை எடுத்து பனியில் வைக்க செயநீராகும். இந்த் பூரச் சுண்ணம் ஒரு பலம், சாரம் ஒரு பலம் இந்த இரண்டையும் கல்வத்தில் கொட்டி நன்றாக அரைத்து சுண்ணாம்புக் குகையில் வைத்து மேல் மூடி சீலை மண் செய்து புடம் போட்டு எடுத்து பார்க்க கடும் சுண்ணம் ஆகும். அதை பனியில் வைக்க ஜெயநீர் ஆகும். இந்த செயநீரில் வீரச் சுண்ணம் கலக்கி வைத்துக் கொண்டு 64 சரக்குகளையும் இதில் நனைத்து மெதுவாக வாட்ட கட்டி மணியாகும். இதனால் உபரசங்கள், உப்பு வகைகள் எல்லாம் சுண்ணமாகும். இதனால் தாம்பிரம், தங்கம், இரும்பு முதலிய உலோகங்கள் எல்லாம் சுண்ணமாகும். மெழுகாகும் இதனால் பல வேதைகள் உண்டாகும்.

மேலும் இதனால் வெள்ளை பாடாணம் சுண்ணமாகும். தாளகம் சுண்ணமாகும், கெந்தகம் சுண்ணமாகும். வீரம் குருவாகும். லிங்கம் கட்டி சுண்ணமாகும். மெழுகு ஆகும். அதனால் வேதையுண்டாகும், கல்லுப்பு கட்டி மணியாகும். உபரசங்கள் ஈயமாகும். இது படுமுன்னே சூதமானது மாண்டு விறைத்துப் போகும்.நிமிளை,வெள்ளை இவைகள் சுண்ணமாகி நூற்றுக்கு ஒன்று கொடுக்க உள் வாங்கி தங்கமாகும். எல்லா உலோகங்களும் தங்கமாகும். உடல் கல்தூண் போல் மாறும். இதைச் செய்து தங்கம் உண்டாயிற்று என்றால் அதைக்கண்டு மகிழ்ச்சியடையாமல் பெரியோர்களை வணங்கிக் கொண்டு

உண்மைப் பொருளை அறிந்து ஆறு தலங்களையும் அறிந்து சுழிமுனை நாடி வழியாக சுவாசத்தை ஏற்றி யோகத்தில் நில்.

பூர செயநீரில் தாளகத்தை சுருக்குப் போடு. பின்பு சவுக்கார சுண்ணம், வீரச்சுண்ணம், பூரச் சுண்ணம் மூன்றையும் சமஅளவு எடுத்து வெடியுப்பு நீர் விட்டு நன்கு அரைத்து தாளகத்தின் மேல் அப்பி வெயிலில் போடு. காய்ந்த பின்பு சுண்ணாம்புக் குகையில் வைத்து ஊது, தாளகம் சுண்ணம் ஆகும். இந்த தாளகச் சுண்ணத்துடன் வீரம் கூட்டி ஊதி எடுத்து வெடியுப்பு நீரில் மத்தித்து வங்கத்திற்கு மேல் அப்பி அதன் மேல் அண்டச்சுண்ணம் கவசம் செய்து குகையில் வைத்து லேசாக ஊதி காயவை. பின்பு எடுத்து குகையில் வைத்து நன்கு அதட்டி ஊது. வங்கம் நீறிச் சுண்ணாம்பு ஆகும்.

இதனால் வாதம் சித்தியாகும். இது வாதத்தின் திறவு கோலாகும். இதனால் பாதரஸம் மணியாகும். துரிசை ஒரு பலம் கட்டியாக எடுத்து பூரநீரில் தோய்த்து வெயிலில் காயப்போடு. இப்படி ஏழுநாட்கள் காயப்போட்டு எடுத்து சவுக்கார சுண்ணம், வீரச் சுண்ணம், வங்கச் சுண்ணம், சீனச் சுண்ணம், புனுகு, உரம் இவைகள் வகைக்கு ஒரு காசெடைகூட்டி கடுங்கார செய்நீர் விட்டு அரைத்து துரிசின் மேல் கவசமாக கட்டி காய வைத்து சுண்ணாம்பு குகையில் வைத்து மேல் மூடி சீலை செய்து காயவைத்து கெஜபுடம் போட்டு எடு. ஆறிய பின் கவசம் நீக்கிப் பார்க்க கடுமையான சுண்ணம் ஆகும். இப்படி துரிசு குருவானால் அண்ட பேரண்டங்கள் எல்லாம் பாயும். இதனால் பாதரஸம் உடனே கட்டும்; சவ்வீரம், முட்டைகள், பாசாணங்கள் இவைகள் எல்லாம் மெழுகாகும் எண்ணெய்போல் மாறும். இதனால் தங்கம், வெள்ளி இவைகளும் சுண்ணமாகும் இப்படி வெள்ளி சுண்ணமானால்

அளவிடமுடியாத வேதையுண்டாகும். குரு உண்டாகும். இது நபிமார்கள் முறையாகும். சுண்ணாம்பு குகைகளில் மருந்தை வைப்பதால் பலமுறை தொந்தம் ஏறும்.

சாரக்கட்டு

நாமேதான் சாரமொரு கட்டுச்சொல்வேன்
தாட்டிகமாய்ச் சாரமது பலமும்பத்து
வாமேதான் சாரத்தை யண்டம்போல
வகையாகச் சீவியே சொல்லக்கேளு
நாமேதான் அபினியொடு மிளகுபூரம்
நலமாக மேனிச்சார் விட்டுஆட்டிக்
காமேதான் சாரத்தின் மேலேகட்டு
கனிவாக அரக்குப்போல் இளக்கிடாயே. 186

இளக்கியே வங்கத்தைக் கணக்கவிட்டு
இதமாகக் குறட்டாலே பிடித்துநீயும்
தளக்கமா யுருதையிலே தோய்த்துவாநீ
தாட்டிகமா யேழுதரந் தோய்த்துநீயும்
வளக்கவே சாரமது சுத்தியாகும்
வகையான சவுக்காரம் வீரத்தோடு
களக்கவே பூரமொடு முன்றுந்தானும்
கனிவாக வெடியுப்பு நீரைவாரே. 187

வார்த்துமே நாலுநா ளாட்டுநீயும்
வடிவாகச் சாரத்தின் மேலேபூசிக்
காத்துமே அஞ்சுசுண்ணக் குகையில்வைத்துக்
கனிவாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
நாத்துமே தவளம்போல் நீறுமாகும்
நாடியே கல்வமிட்டு வெடிநீராலே
பார்த்துஒரு சாமம்அரை பனியில்வைக்கப்
பத்தியாய்க் கடுங்காரச் செயநீராமே. 188

நீராகுஞ் சரக்குகளில் சுருக்குப்போட்டால்
நிமைக்குமுன்னே கட்டிவிடும் நிலைமையாகு
ஆராகும் மெழுகாகும் வேதையாகும்
ஆசையா யெண்ணாதே கற்பமுண்ணு
வாராகும் அருணனைப்போல் சிவப்பேயாகும்
வடிவான காயமது கற்றூணாகும்
காராக யின்னீரி லனந்தங்கோடி
காட்டுமுன்னே வேதையாங் கண்டுபாரே. 189

கண்டுபார் செயநீரில் வீரச்சுண்ணம்
கசகாமற் பூரமென்ற சுண்ணமொன்று
கண்டுபார் சவுக்காரச் சுண்ணமொன்று
கலந்தந்தச் செயநீரில் படிகமேலே
வண்டுமே தினந்தோறும் தோய்த்துத்தோய்த்து
மகத்தான ரவிதனிலே யேழுநாளும்
தொண்டுபடப் போட்டுமே யெடுத்துநீயும்
துணையாக வெடியுப்புச் சுண்ணம்பூசே. 190

பூசியே அஞ்சுசுண்ணக் குகையில்வைத்துப்
போக்கோடே புடம்போடப் பொருமிநீறும்
ஆசியதைக் காடுங்காரச் செயநீர்குத்தி
அப்பனே பனியில்வைக்கச் செயநீராகும்
தேசியதைச் சரக்குகளிற் சுருக்குப்போடச்
செயமான மெழுகாகும் வேதையாகும்
ஆசியதை யெண்ணாதே கற்பமுண்ணு
அருணனைப்போல் சிவப்பாகுங் காயந்தானே. 191

காயந்தா னாகுமது செயநீர்தன்னில்
கடிதான வீரமது சுண்ணம்போட்டு
நாயன்மார் சொன்னபடி பூரமொன்று
நாடியே சவுக்காரச் சுண்ணமொன்று
தாயகமாய்க் கலந்தந்தச் செயநீரில்தான்
தடையறவே படிகையைத் தோய்த்துப்போட
வாயகமாய் தினந்தோறும் தோய்த்துத்தோய்த்து
வடிவான ரவிதனிலே யேழுநாளே. 192

ஏழுநாள் போட்டபின்பு யெடுத்துநீயும்
இதமாக வெடியுப்புச் சுண்ணம்பூசித்
தாழுமே அஞ்சுசுண்ணக் குகையில் வைத்துத்
தாட்டிகமாய்ச் சீலைசெய்து புடத்தைப்போடு
காழுமே யெடுத்துப்பார் சுண்ணமாகும்
கைத்துமே கடுங்காரச் செயநீர்குத்தித்
தாழுமே சமனாகச் சாரஞ்சேர்த்துத்
தப்பாமற் பனியில் வைக்கத் தன்மைதாமே. 193

தானென்ற பனியில் வைக்கச் செயநீராகும்
தனியான நீராலே பாஷாணங்கள்
வானென்ற கட்டாகு மெழுகுமாகும்
வடிவான கரையில்லை துறையுமில்லை
பானென்ற நீரிலே வீரச் சுண்ணம்
பதிவான பூரமென்ற சுண்ணமிட்டுக்
கானென்ற நீரிலே கலக்கிவைத்துக்
கடுஞ்சூடன் பலமொன்றில் நீரைவாரே. 194

வார்த்துமே மூன்றாநா ளிருத்துவைத்து
வடிவான யேழுநாள் ரவியிற்போடு
கார்த்துமே கல்வத்தி லிட்டுநீயும்
கனிவாக அரைத்துமே வில்லைதட்டிப்
பார்த்துமே உலரவைத்துப் பின்புநீயும்
பதிவாகக் கல்லுப்புச் சுண்ணம்பூசிச்
சாத்துமே அஞ்சுசுண்ணக் குகையிலிட்டுச்
சாதகமாய் மூடியே புடத்தைப் போடே. 195

புடம்போடப் பூப்போலே சூடன்சுண்ணம்
போக்கோடே பீங்கானி லெடுத்துவைத்து
அடமாகக் கடுங்காரச் செய்நீர்குத்தி
ஆதியாம் அண்டத்தை மேலேபூசிக்
கடம்போடு செந்துருக்க மதுக்குள்ளிட்டுக்
கனிவாக ரவியில்வைத்துப் பின்புநீயும்
நடம்போடு சேவலென்ற புடமுமிட்டால்
நாடியே கடுமையாய் நீறிப்போமே. 196

நீறியே போனவுடன் வீரச்சுண்ணம்
நேர்பாகச் சாரநீர் விட்டுஆட்டி
மாறியே நிமிளையின்மேற். கவசங்கட்டி
மகத்தான சுண்ணாம்புக் குகையிலிட்டுக்
காரியே புடம்போடப் பூப்போலாகும்
கனிவான கடுங்காரச் செயநீர்குத்திப்
பாரியாம் அண்டத்தின் மேலேபூசிப்
பதிவாகப் புடம்போட நீறுந்தானே. 197

நீறுமே சுண்ணமதைக் கல்வமிட்டு
நிலையான வீரமொன்று சுண்ணமிட்டுக்
காறுமே சாரமென்ற நீர்விட்டாட்டிக்
கனிவான நிமிளையின்மேல் கவசங்கட்டி
வாருமே அஞ்சுசுண்ணக் குகையிலிட்டு
வளமாகப் புடம்போடக் கடுமையாகச்
சாருமே பூப்போலே நிமிளைதானும்
தடையறவே நீறிடுமே தன்மைதானே. 198

தன்மையாய் நிமிளையது நீறினாக்கால்
சதகோடி வேதையுமாம் தூக்கிப்பாரு
வண்மையாய் நிமிளையது சுண்ணந்தன்னில்
வடிவாகப் பூரமென்ற சுண்ணமிட்டுக்
கண்மையாய் இரண்டரைநாள் சாரநீரால்
கனிவாக அரைத்துமே தங்கத்தப்பி
வண்மையாய் அண்டமென்ற சுண்ணங்கட்டி
வடிவாகக் கெசபுடத்திற் போட்டிடாயே 199

போட்டுயெடு பரிதானுஞ் சுண்ணமாகும்
போக்கதிலே வாதமடை திறந்துபோகும்
நாட்டுமே கைக்குள்ள குருவிபோலே
நாடியே சுத்திவிடும் வாதம்பாரு
கூட்டுமே நவலோக மெல்லாந்தானும்
கொள்ளையாய்ப் பழுத்துவிடும் குறிதானப்பா
பாட்டுள்ளே தங்கந்தான் சுண்ணமாகும்
பாதையிதில் ரெம்பவுண்டு பரிசுதானே. 200

பரிசுதான் தங்கமென்ற நீறினாலே
பாதையிது வெகுபர்தை பகரப்போகா
நரிசுதான் சூதமது கட்டிப்போகும்
நலமான துருசதுவும் நீறுமாகும்
புரிசுதான் நவலோக மெல்லாம்நீறும்
போக்கோடே செய்தாக்கால் புதுமைமெத்த
வரிசையாய்த் தேகமது கற்றூணாகும்
வடிவான சித்திியெல்லாந் தங்கமாமே. 201

தங்கமாந் தாயைவைத்து வாதம்பாரு
தனியாகப் பழுத்துவிடும் தன்மையுண்டாம்
பொங்கமாம் விந்துவினாற் சடமுமாச்சு
போக்கோடே பாராட்டா விருளுமாச்சு
சிங்கமது புதைதனிலே யிருந்தாற்கேளு
சிறக்கவே மனிதற்குப் பயமுந்தோணும்
பங்கமது வாராமற் தங்கத்தாயைப்
பாரித்துச் செய்தாக்காற் பலனுமாமே. 202

பாடல்கள்: 186-202: சாரத்தின் கட்டு முறையைக் கூறுகிறேன் கேள். பத்து பலம் சாரத்தை முட்டையைப் போல் சீவிக் கொள். பின்பு அபின், மிளகு, பூரம் இம்மூன்றையும் சம எடை எடுத்து குப்பை மேனிச் சாறுவிட்டு ஆட்டி சாரத்தின் மேலே கட்டி தீயில் வாட்டி அரக்கைப் போல இளக்கிக் கொள். பின்பு ஒரு அயக்கரண்டியில் காரீயத்தை போட்டு உருக்கி அதற்குள் மேற்படி சட்டியை குரட்டால் பிடி, இப்படி ஏழுதரம் தோய்த்து எடுக்க சாரம் சுத்தியாகும். பின்பு சவுக்காரம், வீரம், பூரம் மூன்றும் சம எடை எடுத்து வெடியுப்பு நீர்விட்டு அரை. இப்படி நான்கு நாட்கள் அரைத்து மேற்படி சாரத்தின் மேலே பூசி காயவைத்து அஞ்சு கண்ணக் குகையில் வைத்து மூடி சீலைமண் செய்து புடம் போட்டு எடு. நல்ல சுண்ணமாகும். பின்பு இதை கல்வம் இட்டு வெடியுப்பு நீர் விட்டு ஒரு ஜாமம் அரைத்து

பனியில் வைக்க கடுங்கார செயநீர் ஆகும். இந்த செயநீரால் சரக்குகளை சுருக்கு போட்டால் உடனே கட்டும் மெழுகாகும் வேதிக்கும். இதில் ஆசை கொள்ளாமல் கற்பத்தை உட்கொள். உடல் சூரியன் போலாகும், உடல் கல் போலாகும் இந்த செயநீரால் பலகோடி முறைகள் உண்டாகும்.

இந்த செயநீரில் வீரச் சுண்ணம், பூரச் சுண்ணம், சவுக்காரச் சுண்ணம் மூன்றையும் வகைக்கு ஒரு பலம் சேர்த்து மேற்படி செயநீரில் கலந்து மத்தித்துக் கொண்டு இந்த செயநீரில் படிகாரத்தை தோய்த்து தோய்த்து ஏழுநாட்கள் வெயிலில் போடு. எட்டாம் நாள் எடுத்து இதன் மேல் வெடியுப்பு சுண்ணத்தை மேற்படி செயநீரில் அரைத்து பூசி புதுக் குகையில் வைத்து புடம் போடு. பொறுமி சுண்ணமாகும். இதை கடுங்கார செயநீர் குத்திப் பனியில் வைக்க செயநீர் ஆகும். இந்த செயநீரில் சரக்குகளை சுருக்குப் போட மெழுகாகும். இதனால் வேதையுண்டாகும். இதன் மீது ஆசைப்படாமல் கற்பம் உண்டு காயத்தை சித்தி செய்து கொள்ள உடல் சூரியன் போல் சிவந்து காணும். இந்த செயநீரில் மறுபடியும் முன்போல மூன்று சுண்ணங்களையும் போட்டு கலந்து வைத்துக் கொண்டு அதில் படிகாரத்தை தோய்த்து தோய்த்து வெயிலில் ஏழு நாட்கள் போடு. பின்பு எட்டாம் நாள் எடுத்து வெடியுப்பு சுண்ணத்தை மேற்படி நீரில் அரைத்து பூசி அஞ்சு சுண்ணக் குகையில் வைத்து நன்கு சீலை செய்து புடத்தைப் போடு. ஆறிய பின்பு எடுத்துப் பார் சுண்ணமாகும். இதன் எடைக்கு சாரம் சேர்த்து கடுங்கார செயநீர் ஊற்றி அரைத்து பனியில் வைக்க செயநீராகும். இந்த நீரால் பாடாணங்கள் எல்லாம் கட்டும், மெழுகு ஆகும். இதன் வேதைக்கு அளவேயில்லை.

இந்த நீரில் வீரச்சுண்ணமும், பூரச் சுண்ணமும் கூட்டி கலந்து வைத்துக் கொண்டு ஒரு பலம் சூடத்தை ஒரு பீங்கானில் போட்டு அதில் அந்த நீரை ஊற்று. மூன்று நாட்கள் வைத்திருந்து பின்பு ஏழு நாட்கள் வெயிலில் வை. பின்பு கல்வத்தில் போட்டு நன்கு அரைத்து வில்லை தட்டி வெயிலில் காயவை. பின்பு இதன் மேல் கல்லுப்பு சுண்ணத்தை மேற்படி நீர் விட்டு அரைத்து பூசி அஞ்சு சுண்ணக் குகையில் வைத்து மூடி சீலை மண் செய்து புடம் போடு. ஆறிய பின் எடுத்துப் பார்க்க பூப்போன்ற சுண்ணம் ஆகும். இதை பீங்கானில் எடுத்து வைத்துக் கொள் இதன் மேல் கடுங்கார செயநீரை ஊற்றி முட்டையின் மேல் பூசி ஒட்டில் வைத்து சீலை மண் செய்து உலர்ந்த பின் சேவல் புடமிட கடுமையான சுண்ணம் ஆகும். இப்படி சுண்ணமானவுடன் இணையாக வீரச் சுண்ணம் கூட்டி சாரநீர் விட்டு அரைத்து நிமிளையின் மேல் கவசமாகக் கட்டி சுண்ணாம்புக் குகையில் வைத்து புடம் போட்டு எடுக்க பூப் போன்ற சுண்ணம் ஆகும். இதில் கடுங்கார செயநீர் குத்தி முட்டையின் மேல் பூசி புடம் போட சுண்ணமாகும்.

இந்த சுண்ணத்தை கல்வத்தில் போட்டு வீர சுண்ணம் ஒரு பங்கு சேர்த்து சாரநீர் விட்டு ஆட்டி மறுபடியும் நிமிளையின் மேல் பூசி அஞ்சு சுண்ண குகையில் வைத்து சீலை மண் செய்து கடுமையாக புடம் போட பூப்போல நீறி நிமிளை சுண்ணமாகும். இப்படி நிமிளை சுண்ணமானால் பல கோடி ரசவாத வேலைகள் செய்யும். இந்த நிமிளைச் சுண்ணத்துடன் பூரச் சுண்ணம் கூட்டி சாரநீர் விட்டு இரண்டரை நாள் அரைத்து தங்கத் தகட்டில் அப்பி அதன் மேல் அண்டச் சுண்ணத்தை கவசமாகக் கட்டி கெஜபுடம் போடு.

இப்படி தங்கம் சுண்ணமானால் வாதமானது சித்தியாகும். இதனால் நவலோகம் எல்லாம் தங்கமாகும். இதனால் பல

முறைகள் செய்யலாம். ரசமானது கட்டும். துரிசானது சுண்ணமாகும். நவலோக மெல்லாம் சுண்ணமாகும். இதனால் உடல் கல்போன்று உறுதியுடன் சித்தியாகும். எனவே தங்கத்தை வைத்து ரசவாதத்தைச் செய் விந்துவாலே இந்த உடல் உண்டாயிற்று. இதை சித்தி செய்யவில்லையென்றால் எல்லாம் பாழாகும். எனவே தங்கத்தை வைத்து வாதம் செய்தால் பலன் கிடைக்கும்.

வெங்காரக்கட்டு

பலனாக வெங்காரக் கட்டுக்கேளு
பதிவாக யிதன்பெருமை நபிமார்சொன்னார்
அலனாகச் சரக்கெல்லா மிதனாலல்லோ
ஆடவே சித்திக்கு மிதுதானாதி
பிலனாக லோகங்கள் கம்மித்தென்றால்
பிலக்காவே இதைநீட்டக் கசடுமற்றுத்
தலமாகக் கண்விட்டு ஆடுமாடும்
தடையறவே யெல்லாமுங் காரத்தாட்டே, 203

ஆட்டான காரத்தின் பெரியபோக்கை
அல்லாவு மகமதுவு மறிவாரப்பா
நீட்டான காரத்தைக் கைவிட்டாக்கால்
நிலைதப்புங் கசடறா நிலைக்காச்சத்துப்
பூட்டான பூட்டதுபோல் காரமாகும்
புகழ்பெரிய நபிமார்க ளாடுமாட்டு
தாட்டாண்மை தள்ளியே காரந்தன்னைத்
தாக்கியெடு பலம்பத்துத் தண்மையாமே. 204

தண்மையாய்ப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
தாட்டிகமாய்ப் பலகைபோ லெடுத்துக்கொள்ளு
உண்மையாய் ஆவெருதின் சாணிதன்னில்
உறுதியாய்க் கழுவியே காயப்போடு
கண்மையாய்ச் சவுக்காரச் சுண்ணம்வீரம்
கனிவான பூரமொடு மூன்றுங்கேழு
வண்மையாய்க் கழஞ்சரைதான் தூக்கிக்கொண்டு
வடிவாக மத்திக்கச் சாரநீரே. 205

சாரமென்ற நீரிலே மத்திச்சப்பா
சரியாக யேழுநாள் ரவியிற்போடு
பாரமாங் காரமாய் வெளுத்துநிற்கும்
பதிவான பூனைக்கண் ணொளிவுதோணும்
காரமாம் நாகமொன்று சூதமொன்று
கடிதாக உருக்கிடவே புட்டுப்போலாம்
நேரமாய் வீரத்தைப் பாதியிட்டு
நிலையாகக் கல்வத்தி லரைத்திடாயே. 206

அரைத்திடவே செயநீரா மிந்தநீரை
அடைவாக வெங்காரந் தனிலேயிட்டுப்
பரைத்திடவே அரைத்துவில்லை திரினாள்காயப்
பகரவே ஒட்டில்ரவி புடமுமிட்டு
வரைத்திடவே யெடுத்துமே கல்வத்திட்டு
வகையாக நாகத்தின் செயநீராலே
தரைத்துமே அரைத்துவில்லை காயவைத்துத்
தாட்டிகமாய் முன்போலே புடமும்போடே 207

போட்டுமே செந்தூர மாகுமட்டும்
போக்கோடே அருணனைப்போற் சிவந்ததானால்
நாட்டிலே சொல்லாதே செம்புநூறு
நலமாக உருக்கியே ஒன்றுயிய
வாட்டமுடன் தங்கமது வாகும்பாரு
வழியோடே தங்கமது பச்சையாகும்
தோட்டமுடன் யெடுத்துமே வித்துநீயும்
திடமாகப் பள்ளியைத்தான் கட்டிடாயே. 208

கட்டவே அல்லாவுந் துணையேசெய்வார்
சுசடாக யிருந்தாலோ பலித்திடாது
பட்டிவைத்த செயநீரா லனேகவித்தை
பாலித்தேன் யாகோபு பரிவுமெத்தத்
திட்டிவைத்த வாசல்போல் காணும்நேர்மை
ஜெகசால மாடலாம் சுண்ணப்போக்கு
வட்டிக்கி வாங்கினது போலவாகும்
வண்மையா யாகோபு வழிசொன்னாரே. 209

சொன்னதொரு வெங்காரச் செந்தூரத்தைச்
சுயமாகப் பணவிடைதான் தேனிலுண்ணக்
கன்னல்போல் மேனியாம் கண்டுதானும்
கரும்பொன்போ லிருக்குமது கள்ளமில்லை
நன்னயமா யொருவருக்குஞ் சொல்லவேண்டாம்
நானிலத்தில் பகரரிது நாட்டமுள்ளோர்
இன்னதென்று அறியாத மூடருக்கு
இதமாக உரைக்காதே இயல்புள்ளோரே. 210

இயல்பாகச் சாரநீர்க் குள்ளேவாவா
இன்பமாய்ச் சவுக்காரச் சுண்ணமிட்டுக்
கயல்பாக வீரமிட்டுப் பூரமிட்டுக்
கனிவாகப் பீங்கானில் வாங்கிக்கொண்டு
நயமாக அண்டமது ஐம்பத்தொன்று
நாடியே மஞ்சளாங் கருவைவாங்கித்
தயவாக யித்தூரளைச் சட்டியிட்டுத்
தன்மையா யடுப்பேற்றி யெரித்திடாயே. 211

எரித்துமே வறுத்துயெடு கருகத்தானே
இயல்பாகக் கருகவே தயிலமாகும்
தரித்துமே தயிலமது படிதானொன்று
சட்டியிலே யிலுப்பெண்ணெய் படியும்விட்டுக்
கரித்துமே பக்குவமா யெரித்தபின்பு
கனிவாக யிருத்துமே காரம்போட்டுப்
பிரித்துமே அப்பிரகம் பலந்தான்ரெண்டு
பரிவான காந்தமது பலமும் ரெண்டே. 212

ரெண்டாகக் கருவளையல் பலமும்ரெண்டு
நேராக யிதுவெல்லாங் கூடப்போட்டு
வண்டாக அண்டத்தின் தயிலங்குத்தி
வடிவாக மண்ணாலே குகைதான்பண்ணித்
துண்டாகச் சுட்டெடுத்து வைத்துக்கொண்டு
துடியான தைலத்தை உட்குகையில்பூசிப்
பண்டாக நாகமொரு பலந்தானிட்டுப்
பரிவாகப் பெருங்குகைக்குள் உருக்கிடாயே. 213

உருக்கிடவே சாரத்தின் பொடிமேற்றூவி
உருகையிலே நாகமது கண்விட்டாடும்
பருக்கிடவே மருந்திட்ட குகையிலூத்து
பதிவாக வார்க்கையிலே தயிலங்குத்திச்
சுருக்கிடவே சாரத்திலே குத்திவாரு
சுளிவான வில்லையா யிருக்கும்பாரு
முருக்கிடவே யிப்படிக்கு ஐம்பத்தொன்று
முடிவாக உருக்கியே சாய்த்திடாயே. 214.

சாய்த்திட்டுக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
சமரசமாய்ப் புகையெல்லாங் கட்டிப்போகும்
வாய்த்திட்டுக் கரியில்நின்று பொன்போலாடும்
வடிவான வாதமடை திறக்குங்கண்டீர்
ஏய்த்திட்டுத் திரியாததே வாதமெல்லாம்
இறைக்கிறைக்கக் கேணிபோ லிருக்கும்பாரு
ஆய்த்திட்டுத் தங்கமது எளிதிலாகும்
ஆதிநபி தனைவணங்கி யாடிப்பாரே. 215

ஆடியே நாகமது கட்டிற்றானால்
அண்டபா தாளமெல்லாந் தாண்டியோடும்
ஓடியே பணபேதி சணபேதிதானும்
ஓகோகோ வெகுஅட்டம் அனேகவித்தை
பாடியே திரியாதே சொல்லக்கேளு
பதிவான நபிமார்கள் கண்டுகொள்வார்
சூடியே திரிந்தாக்கா ளெல்லாமாகும்
சுடிகையாய்க் கைமுறையைக் கண்டுபாரே. 216

பாடல்கள்: 203-216: வெங்காரக்கட்டு முறையைக் கூறுகிறேன் கேள். இதன் பெருமையை நபிமார்கள் எனக்குச் சொன்னார். எல்லா ரசவாத வேலைகளுக்கும் இதுவே ஆதியாகும். உலோகங்கள் மங்கும் போது இதைக் கொடுத்து உருக்க அழுக்கு நீங்கி கண்விட்டு ஆடும். இதன் பெருமையை அல்லாவும், மகமதுவும் அறிவார்கள். இந்த காரம்

இல்லாவிட்டால் முறை தப்பி சத்துக்கள், களிம்பு நீங்காது. வெங்காரத்தை பத்துபலம் எடைக்கு ஒரு பலகையாக எடுத்துக் கொள். இதை காளைமாட்டின் சாணி கரைத்த நீரில் நன்கு கழுவி வெயிலில் காயப்போடு.

சவுக்காரச் சுண்ணத்துடன், வீரம், பூரம் மூன்றையும் வகைக்கு அரைக் களைஞ்சி எடை எடுத்துக் கொண்டு சாரநீரில் நன்கு மத்தித்துக் கொள்.

இதை நன்கு மத்தித்து வெங்காரப் பலகை மீது பூசி ஏழுநாள் வெயிலில் போடு. காரமானது நன்கு வெளுத்து இருக்கும். பூனையின் கண் போன்ற ஒளியுடன் இருக்கும். நாகத்தையும் ரசத்தையும் வகைக்கு ஒரு பலம் எடுத்து உருக்கப் புட்டுபோல ஆகும். இதன் எடைக்கு பாதி எடை வீரத்தைப் போட்டு கல்வத்தில் அரைக்க செயநீராகும். இந்த நீரை வெங்காரத்தில் விட்டு நன்கு அரைத்து வில்லை தட்டி மூன்று நாட்கள் காய வைத்து ஒட்டில் வைத்து மூடி சீலை செய்து வெயிலில் காய வை புடம் போடு பின்பு எடுத்து கல்வத்தில் போட்டு நாகத்தின் செயநீர் விட்டு அரைத்து வில்லைதட்டி வெயிலில் மூன்று நாள் காய வைத்து முன் போல புடம் போடு. இப்படி சூரியன் போல் சிவக்கும் வரை புடம் போடு. நன்கு சிவந்த பின்பு எடுத்துக் கொண்டு செம்பை சுத்தப்படுத்திக் கொண்டு நூறுபங்குக்கு ஒரு பங்கு என்ற விகிதத்தில் உருக்கு முகத்தில் கொடுக்க பச்சைத் தங்கமாகும்.

இதனைச் செய்து விற்று பள்ளிவாசல்கள் கட்டு. இதற்கு அல்லாவும் துணை செய்வார். முட்டாளாக இருந்தால் எதுவும் பலிக்காது. இந்த செயநீரால் அனேகவித்தைகள் யாகோபு ஆகிய நான் கூறினேன்.

இந்த வெங்காரச் செந்தூரத்தை பண எடை வீதம் தேனில் உட்கொள்ள உடல் கரும் பொன்போல் மின்னும். இதை யாரிடமும் கூற வேண்டாம். சாரநீர்க்குள் சவுக்காரச் சுண்ணம் போட்டு வீரம், பூரம் போட்டு பீங்கானில் வைத்துக்கொண்டு முட்டை ஐம்பத்தி ஒன்று (51) வாங்கி அவித்துக் கொண்டு எடுத்து உடைத்து மஞ்சள் கருவை மட்டும் ஒரு சட்டியில் உதிர்த்துக் கொண்டு அடுப்பேற்றி எரிப்பாயாக. நன்றாக கருகும் வரையில் வறுத்து வர தைலமாகும். இந்தத் தைலம் 1படியுடன் 1 படி இலுப்பெண்ணெய் விட்டு பக்குவமாக எரித்து எடுத்து வடித்துக் கொண்டு இத்துடன் வெங்காரக் குரு போட்டுக் கலக்கிவைத்துக்கொள். அப்பிரேகம் இரண்டு பலம், காந்தம் ரெண்டு பலம், கருவளையல் மண் இரண்டு பலம் இவைகளுடன் அண்டத் தைலம் விட்டு அரைத்து குகைபோல் செய்து சுட்டு எடுத்து வைத்துக் கொள். இந்த குகையின் உட்புறம் அண்டத் தைலத்தைப் பூசு, பின்பு நாகத்தை ஒரு பலம் எடுத்து ஒரு குகையில் விட்டு நன்றாக உருக்கு. உருகும் போது நவச்சாரத் தூளைத் தூவு நாகம் கண் விட்டு ஆடும். இதை முன் மருந்து பூசி வைத்துள்ள குகையில் ஊற்று. ஊற்றும்போது அண்டத்தைலத்தைக் குத்து. சாரம் சேர்த்துக் குத்து. நாகம் வில்லையாக இருக்கும். இப்படி 51 தடவை உருக்கிச் சாய்ப்பாயாக. இப்படி உருக்கி சாய்த்ததை குகையில் வைத்து உருக்கிப்பார். புகையடங்கி நாகம் கட்டி இருக்கும். கரியில் நாகமானது உருகி கண்விட்டு ஆடும். வாதம் சித்தியாகும் இதனால் தங்கம் எளிதில் செய்யலாம். நபியை வணங்கிச் செய். இந்த நாகக் கட்டால் பணபேதி, சணபேதி முதலிய குளிகை முறைகள் சித்தியாகும். எனவே வாயால் உளறிக் கொண்டு திரியாமல் முறையாக செய்தாக்கால். கைமுறையாக செய்தால் பலன் உண்டாகும்

நாகசெந்தூரம்

கண்டுபார் கட்டினதோர் நாகந்தன்னைக்
கனிவாகப் பலமுருக்கு முகத்தில்தானும்
தொண்டுமே யிடைக்கிடைதான் தங்கமீயத்
துடியாகப் புட்டுப்போல் நொறுங்கிநிற்கும்
வண்டுமே ரெண்டுமொன்றா யுருக்கிக்கொண்டு
வடிவான சூதமொரு பலத்தையீயப்
பண்டுமே தூளாக உடைந்துபோகும்
பாதையிதில் வெகுபோக்குப் பரிசுதானே. 217

பரிசாகச் செவ்வல்லிப் பூச்சார்விட்டுப்
பாகமா யரைத்துநா ளேழதாக
விரிவாகக் கெந்தகந்தான் பலமுமிட்டு
விடுதிபெற அரைத்துமே சொல்லக்கேளு
சரியாகக் காசியென்ற குப்பிதன்னில்
தனையெடுத்துப் பனிரெண்டு சாமந்தானும்
கரியாக யெரித்துயெடு செந்தூரமாகும்
கனிந்துமே நபிமாரைத் தொழுதுபோற்றே. 218

தொழுதுமே நபிமாரைப் பணிந்துபோற்றித்
தோய்வுதர நவலோகம் நூற்றுக்கொன்று
பழுதுவரா திதைக்கொடுக்க மாற்றுக்கேளு.
பசுமையா யிருபத்து ஐந்துமாற்று
உழுதுமே நடவுநட்டார் பலனுண்டாகும்
உற்றுமே வெள்ளியது யிடைசேரே
அழுதுவிட்ட பிள்ளைக்கா தரவுபண்ணும்
அழுகாத பிள்ளைகதை ஆகுந்தானே. 219

ஆகுமே செந்தூரங் குன்றியுண்ண
அன்பாக மண்டலத்திற் காயசித்தி
ஏகுமே பழவினைக ளெல்லாமேகும்
எனையாண்ட நபிமார்கள் சொன்னநேர்மை
பாகுபெற இக்காண்டந் தனிலேசொன்னேன்
பாதைக்கு வெகுபலனாம் பாரிலோர்க்குத்
தாகுமே யெல்லாமும் நாகத்தாலே
தனிழ்மான நாகமென்ன சொர்ணுந்தானே. 220

சொர்ணமாம் நாகத்தின் பெருமைதன்னைச்
சொல்லுதற்கு நாவினால் முடியாதப்பா
வர்ணமாம் நாகமது பொன்னுக்காதி
வடிவான செயநீருக் காதியாகும்
பறணமா யாதியல்லோ செய்யவேணும்
பாதையிதில் வெகுபோக்குப் பதிவுமாகும்
திறணமாம் வாதமது யேவல்கேட்கும்
திடமாக முப்பூவின் பொருளைக்காணே. 221

பொருளாவ தேதென்றாற் சொல்லக்கேளு
போக்கோடே அல்லாவைத் தொழுதுநிற்போர்
அருளான நபிமார்கள் பொருளுமாகும்
அடைவான முகமதுவின் பொருளுமாகும்
வருமளவும் பொருளெல்லாம் வாதமாகும்
வடிவுபெறச் சுண்ணமது பொருளுமாகும்
உருவாகச் செய்ததுவும் பொருளுமாகும்
உற்றுணர்ந்த பொருளதுவும் பூநீர்தானே. 222

தானென்று முன்சொன்ன செந்தூரத்தைத்
தடையறவே பணவிடைதான் மண்டலத்தில்
கானென்று உண்டுமே பாருநீயும்
கனிவான சட்டைதள்ளும் நோயும்போகும்
வானென்ற சட்டைகக்கும் பிணியெல்லாம்போம்
வடிவான காயமது யிறுகியேறும்
கானென்ற சிலைபோலே தேகமாகும்
கருத்துற்று யாகோபு கருச்சொன்னேனே. 223

சொன்னதொரு சுண்ணத்தின் சுண்ணப்போக்குச்
சொற்பெரிய சவுக்காரச் சுண்ணப்போக்கு
நன்னயமாய்ச் சொல்லிவிட்டே னாடித்தேர்ந்து
நலமாக நாகத்தின் ஆட்டங்கண்டு
இன்னிலத்தி லிருக்கும்மட்டும் வாதபோக்கை
இருந்தயிடந் தன்னிலே யிருந்துசெய்து
முன்பின்னாய்ச் செய்திட்டால் முறிந்துபோகும்
முடியமட்டும் யோசனைகள் பண்ணித்தேரே. 224

பண்ணியே செந்தூரம் உண்ணும்போது
பதிவாக ஒருவரிடம் பேசிடாதே
கண்ணியே கள்ளுடனே அபினிகஞ்சா
கனிவான சாராயம் போதையெல்லாம்
தண்ணியே நிறுத்திவிட்டு உண்டுதேறு
தடையறவே சொல்லாதே தாக்கியாடு
புண்ணிலே கோல்விட்டாப் போற்சொல்லாதே
போக்கோடே தருமத்தைச் செய்வாய்நீயே 225

பாடல்கள் : 217-225:இந்த கட்டிய நாகத்தை ஒரு பலம் எடுத்துக் கொண்டு உருக்கிக் கொள். உருகும் போது எடைக்கு எடை தங்கத்தைக் கொடுக்க இரண்டும் ஒன்றாகி புட்டுப்போல் நொறுங்கி நிற்கும். இதை எடுத்து குகையில் வைத்து உருக்கிக் கொண்டு உருக்கு முகத்தில் ஒரு பலம் ரசத்தைக் கொடுக்க தூளாக உடைந்து நிற்கும். இதைக் கல்வத்தில் இட்டு நொறுக்கி செவ்வல்லிப் பூச்சாறு விட்டு ஏழுநாட்கள் அரைத்துக் கொள் அரைக்கும் போது கெந்தகம் 1 பலம் சேர்த்து அரைத்துக் கொள். அரைத்து பொடி செய்து காசிக்குப்பியில் போட்டு வாலுகையில் வைத்து12 ஜாமம் முத்தீயும் எரித்து எடுக்க சிறந்த செந்தூரம் ஆகும். இதை எடுத்துக் கொண்டு நபிமாரைத் தொழுது கொள். இதை நவலோகங்களில் நூற்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் கொடுக்க இருபத்தி ஐந்து மாற்றுத் தங்கம் ஆகும். உழுது நட்டாலே பலனுண்டாகும். அழுத பிள்ளைக்கே ஆதரவு கிடைக்கும். இந்த செந்தூரத்தை குன்றி எடை வீதம் உட்கொள்ள 1 மண்டலத்தில் காய சித்தியடையும். இதை எனக்கு என் நபிமார்கள் கூறினார். அதை நான் இக்காண்டத்தில் கூறினேன். நாகத்தால் எல்லாம் ஆகும். நாகமே தங்கத்திற்கு ஆதியாகும். செயநீருக்கு ஆதியாகும். இதனால் ரசவாதம் சித்தியாகும் முப்பூ, அல்லா, நபி, முகமது என்ற இறைநிலைப்பொருளெல்லாம் ரசவாதம் ஆகும். சுண்ணம்

முதலியவைகளின்பொருள் பூநீராகும். இந்த செந்தூரத்தை பண எடை வீதம் ஒரு மண்டலம் உட்கொள்ள உடல் சட்டை கழன்று உடலின் நோய்கள் தீர்ந்து உடல் இறுகி கற்சிலை போன்று தேகம் ஆகும். நான் சொன்ன சுண்ணங்களைச் செய்து அதன் பலனை உணர்ந்து சவுக்காரச் சுண்ணத்தின் பலனை அறிந்து நாகத்தின் பயனை அறிந்து இவ்வுலகம் இருக்கும் வரை ரசவாதத்தை இருந்த இடத்திலிருந்து முறையாகச் செய்து முடிந்த மட்டும் யோசனையுடன் செய்து தேறு. இந்த செந்தூரம் உட்கொள்ளும் போது யாரிடமும் பேசாதே கள்ளு, கஞ்சா, அபினி, சாராயம் இவைகளை நிறுத்தி விட்டு உட்கொள். பொய்கள், புரட்டான பேச்சுகளைப் பேசிக்கொண்டு திரியாமல் தருமம் செய்து வாழு.

சூதக்கட்டு

செய்திடவே நாகமொரு பலத்தில்நீயும்
ஜெயமாகத் தகடாக்கிப் பூசக்கேளு
கைதிடவே வீரமென்ற சுண்ணந்தன்னைக்
கடிதாக அரைத்துமே பூசிநீயும்
வைதிடவே அரைத்துமே பூசிப்பூசி
வளமாக ஓட்டிலிட்டுப் புடமுமிட்டால்
கைதிடவே சுண்ணாம்பாம் நாகந்தானும்
தடையில்லை பாசாணஞ் சாகுந்தானே. 226

சாகுமே சூதமது கட்டிப்போகும்
சமுசயங்க ளெண்ணாதே சொல்லக்கேளு
வாகுபெற வீரமது மணியுமாகும்
வடிவான லிங்கமது கட்டிப்போகும்
தாகபெறச் சரக்குகளிற் பூசிவாட்டத்
தடையற்றுச் சரக்கெல்லா மணிபோலாகும்
பாகுமே நாகத்தின் ஆட்டந்தன்னைப்
பதிவாக நபிமார்க்குப் பழக்கினாரே. 227

பழக்கமாய் யிருக்கவல்லோ சுண்ணஞ்செய்து
பாதைரெம்பப் பார்த்திடவே வேதையாகும்
இழுக்கென்று சொல்லாதே சித்திமுத்தி
இதமாக ஒருவருடன் பேசவேண்டாம்
சமுக்கென்று நாய்போலே திரியவேண்டாம்
சாடியே வாதமது தங்கும்கேளு
முழுக்கமாய்த் திரியாதே கலங்கம்பாரு
முடிவாக வதின்பின்னே சுண்ணமாமே. 228

சுண்ணமா மிப்படிக்குப் பார்த்துத்தேற
தொடுகுறிபோ லெல்லாமுந் தோணுந்தோணும்
நன்னயமாய்த் தொட்டதெல்லாஞ் சித்தியாகும்
நபிமார்க ளறிந்திடுவார் வாதப்போக்கு
கன்னல்ருசி யறியாத காமவாதி
கனிவாகப் பொய்யென்று சொல்வாரப்பா
இன்னிலத்தி லிருக்குமட்டும் வாதம் பார்த்து
இதமாக உண்டிடவே உறுதியாமே. 229

உறுதியாம் நரகம்போற் காரியத்தை
உற்றுமே செய்தெடுத்துக் களங்கம்வந்த
அறுதியா யிடந்தனிலே சேர்த்துருக்க
அடைவான செம்பைத்தான் பிடித்துக்கொள்ளும்
வருதிபட யில்லாதே போனாற்கேளு
வகையாக வருகாது செம்புமார்க்கம்
பருதிகண்ட பனிபோலாம் இந்த வித்தை
பாதைக்கும் நில்லாது பரிந்துபாரே. 230

பாடல்கள்: 226-230: நாகத்தை ஒரு பலம் எடுத்து தகடாகத் தட்டிக் கொள். அதன் மீது வீரச் சுண்ணத்தை நன்கு அரைத்து பூசி புடமிடவும். இப்படி அரைத்து அரைத்துப் பூசிப்புடமிட நாகம் சுண்ணாம்பாகும். இதனால் எல்லா பாசாணமுஞ் சாகும். இதனால் சூதம் கட்டும். சந்தேகம் வேண்டாம். வீரம் மணியாகும். லிங்கம் கட்டும். இதை சரக்குகளில் பூசி அனலில்

வாட்ட சரக்கெல்லாம் மணிபோல் ஆகும். இந்த நாகத்தின் மகிமையை நபிமார்கள் எனக்குப் சொல்லி கொடுத்தனர். இப்படி சுண்ணம் செய்து பார்க்க வேதை எளிதாகும். இதனால் எல்லா சித்திகளும், முத்தி நிலையும் உண்டாகும். நாய் போல் திரியாமல், யாருடனும் பேசாமல் முதலில் களங்கு செய்து. அதன் பின் சுண்ணம் செய்து தேறு இப்படிச் செய்ய எல்லாம் தோன்றும். தொட்டதெல்லாம் சித்தியாகும். இந்த வாதப்போக்கை நபிமார்கள் நன்கு அறிவார்கள். உண்மை அறியாத வாதிகள் ரசவாதம் பொய் என்பார்கள். இவ்வுலகில் வாழும் வரை வாதம் செய்து உண்டு உடுத்தி வாழ்வது நலம். காரீயத்தை சுத்தி செய்து களங்கு வந்த இடங்களில் சேர்த்து இருக்க செம்பைப் பிடித்துக் கொள்ளும். முறையில்லாது செய்தால் வராது. இது மிக சுலபமான வித்தை செய்து பார்.

நூற் கோர்வை

பரிந்துபார் வயித்தியந்தான் யெழுநூறுதன்னில்
பதிவாகச் செம்பெடுக்கப் பதிவாய்ச்சொன்னேன்
விரிந்துமே பஞ்சமித்திர முந்நூறுதன்னில்
விதமான காரீயஞ் சொன்னேன்பாரு
முறிந்துமே போகாமல் பதினாறுதன்னில்
முடியவே யிடைபாகம் சொன்னேன்பாரு
அறிந்துமே ஐம்பத்து ஐந்துதன்னை
அடைவாகச் சோதித்துக் களங்குசெய்யே, 231

செய்யவே களங்குமுந் நூறும்பாரு
ஜெயமான ரெண்டான வேதைதானும்
பையவே சத்தாகும் சத்தைத்தானும்
பதிவாகச் செம்பெடுக்கும் பாகம்பார்த்து
நைதுமே வெள்ளியது பழுக்கச்செய்து
நாடியே விற்றுமே செலவு செய்து

எய்யவந்த கணைபோலே பின்புநீயும்
இதமான சுண்ணத்தைப் பார்த்திடாயே. 232

பாடல்கள்: 231-232 : என்னுடைய நூல் வைத்தியம்-700 என்னும் நூலில் செம்பெடுக்கும் விதங்களைச் சொன்னேன். பஞ்சமித்திரம் -300 என்னும் நூலில் காரீயத் தன்மைகளைக் கூறினேன். இடைபாகம் 16 என்னும் நூலில் சரக்குகளின் எடை அளவுகளைக் கூறினேன்.

சூத்திரம் -55 என்னும் நூலில் களங்கு செய்யும் வகைகள் கூறினேன். களங்கு -300 என்னும் நூல் பார்த்து சத்து எடுத்து சத்தியிருந்து செம்பெடுத்து இதனால் வெள்ளியை பழுக்க செய்து அதை விற்று செலவு செய்து கொண்டு அதன் பின் சுண்ணங்கள் செய்து பார்.

வங்கச் சுண்ணம்

பார்த்திடவே பலனாகும் பொருளுமாகும்
பதிவான காரீயச் சுண்ணங்கேளு
நாத்திடவே காரீயம் பலமும்பத்து
நலமான அயக்கரண்டி தன்னிலிட்டு
காத்திடவே துருத்திதனி லுருக்கிப்பாரு
இதமாக உருகியது ஆடும்போது
வாத்திடவே வெடியுப்பு ஐந்தாங்காய்ச்சல்
வகையாகப் பலம்பத்து யெடுத்துக்கொள்ளே. 233

எடுத்துமே உருகையிலே போட்டுப்போட்டு
இதமாகக் கிண்டிவா சலாகையாலே
அடுத்துமே சாமந்தா னானபின்பு
அடைவாகச் சிவந்துவரும் மஞ்சளாகும்
தொடுத்துமே பாகமது வழித்தெடுத்துத்
தோய்வுதரக் கல்வமிட்டு மஞ்சள்தன்னைப்
படுத்துமே இளைத்துவிடு வங்கச்சுண்ணம்
பதிவாக மஞ்சள்தனில் போட்டுப்பாரே. 234

போட்டிடவே உண்ணிரெத்தம் போற்சிவந்தால்
பொருளான சுண்ணமாம் புவியுள்ளோர்க்குக்
காட்டிடவே வங்கத்தின் சுண்ணம்நேரே
கனிவான சாரத்தை யிடையேகூட்டி
மாட்டியே அரைத்திடவே சலமதாகும்
மதியான பனியில்வைக்கச் செயநீராகும்
நாட்டிடவே வீரமிட்டுப் பூரமிட்டு
நலமாகச் செயநீரை அரைத்துக்கொள்ளே. 235

கொள்கவே பாசாண மறுபத்தினாலும்
கொள்கையால் சுருக்கிடவே கட்டிப்போகும்
நள்கவே வாட்டிடநீ சரக்கெல்லாந்தான்
நாடியே கட்டிநின்று உருகியாடும்
வள்கவே ஆடினதோர் பாஷாணத்தில்
வகைவகையாய்த் தனித்தனியே வேதையாகும்
உள்கவே வங்கத்தின் பெருமைதன்னே
ஒருவரால் அளவிடவும் போகாதென்னே. 236

போகாது கைபாக வரிசையாகப்
போக்கோடே செய்துவரப் புகழுண்டாகும்
வாகாகச் சூதத்தைக் கட்டிப்பாரு
மணியான பிற்பாடு தங்கஞ்சேரு
ஏகாமற் சுண்ணத்தை யேத்திப்பாரு
இதமாக நவலோகந் தன்னிலீய்ந்து
பாகாமல் வாதியென்ற பேரெடுக்கப்
பலனாகும் இம்முறையைச் செய்துபாரே. 237

செய்துபார் புத்தியுள்ள வாதிதானும்
ஜெகந்தனிலே அலையாமல்ஒரு வேலைகண்டு
பைதுமே படித்திடுவார் பலனைக்காண்பார்
படபடப்பாய் திரியாமல் பதத்தில்நிற்பார்
நைதுமே பதமறியார் நூல்கள்காணார்
நலமாகக் கேட்டுமே செய்துபார்த்து
கைதவறாய்த் தொட்டதெல்லாங் கரியாய்ப்போகக்
கணக்கின்றிச் சொல்லியே புலம்புவாரே. 238

புலம்பாமல் அல்லாவை மூன்றுநேரம்
பிரியமாய்க் கால்மடித்துத் தொழுதுநீயும்
அலம்பாமல் நினைவுதனை மேலேயேத்தி
அடைவாகக் கையைத்தான் மடித்துயேத்திக்
குலம்பாகத் தொழுதுமே யிருந்துநீயும்
குணமாகப் பின்புதான் களங்கைப்போற்றிப்
பலமாகப் பாகமாய்ச் செய்துகொள்ளு
பதிவாகச் சித்தியாம் பயின்றிட்டேனே. 239

பயின்றிட்டேன் பாகம்வந்தால் தங்கமாகும்
பதிவான தங்கத்தை அல்லாவைப்போல்
நயின்றிட்டுத் தொழுதுமே போற்றிநீயும்
நலமாக ரெம்பத்தான் செலவுசெய்யா
அயின்றிட்டுக் கணக்காகச் செய்துகொண்டு
ஆதிநீ யாகவே யிருந்துவாழு
குயின்றிட்டுத் திரியாதே செல்லாதென்று
கூறினார் யாகோபு குணமதாமே. 240

பாடல்கள் : 233-240 காரீயச் சுண்ணத்தை கூறுகின்றேன் கேள். காரீயம் சுத்தி செய்து 10 பலம் எடுத்துக்கொண்டு ஒரு இரும்புக் கரண்டியில் இட்டு உருக்கிக் கொண்டு உருக்கு முகத்தில் வெடியுப்பு ஐந்தாங் காய்ச்சல் 10 பலம் எடுத்து கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு கம்பியால் கிண்டு - இப்படி கடுமையாக அடுப்பெரித்துக் கொண்டு ஒரு ஜாமம் வறுக்க சிவந்து மஞ்சள் நிறமாகும். இதை சிறிது மஞ்சளுடன் உறைத்துப் பார்க்க சிவப்பு நிறமாகும். இது மாதிரி சிவந்தால் சுண்ணம் ஆகிவிட்டது என்பதை அறிந்து இந்த சுண்ணத்தின் எடைக்கு எடை சாரம் சேர்த்து நன்கு அரைக்க தண்ணீர் போல் ஆகும். இதை வழித்துப் பனியில் வைக்க ஜெயநீராகும். இந்த நீரில் வீரம், பூரம் இரண்டும் சிறிது போட்டு சீசாவில் அடைத்துக்கொள்.

இந்த ஜெயநீரால் 64 பாடாணங்களும் சுருக்கிடக் கட்டும். இதனைத் தோய்த்து வாட்ட சரக்கெல்லாம் உருகி ஆடும், இதனால் பாடாணங்களில் தனித்தனியே வேதை செய்யலாம்.

இப்படி வங்கத்தின் பெருமையைக் கூற ஒருவராலும் முடியாது. எனவே கைபாகம் தவறாமல் வரிசையாகச் செய்து வர புகழ் உண்டாகும். ரசத்தைக் கட்டு, அதனுடன் தங்கம் சேரு, சுண்ணம் செய். இதை நவலோகத்தில் கொடுத்து உண்மையான ரசவாதி என்று பெயர் எடு. உண்மையான வாதிகள் ஒரு வேலையை சரிவரச் செய்து முறையாகப் படித்து பலன் கண்டு படபடப்பின்றி பக்தியுடன் இருப்பார்கள். இப்படி இல்லாதவர்கள் முறையாகப் படிப்பின்றி கேட்பார் பேச்சைக் கேட்டு சுட்டு எல்லாம் கரியாய் போய் புலம்பி அலைவார்கள். எனவே தினமும் அல்லாவை மூன்று நேரமும் கால் மடித்து உட்கார்ந்து நினைவை சுழிமுனைக்கு ஏற்றி கைகளை மடித்துயேந்தி தொழுது பின்பு களங்கைச் செய்து கைபாகம் தவறாமல் செய்யவே இவைகளைக் கூறினேன். உண்மையான கைபாகம் உடன் செய்தால் தங்கம் கிடைக்கும். இந்த தங்கத்தை அல்லாவைப் போல் நினைத்து தொழுது தேவையான அளவு மட்டும் செலவு செய்து அமைதியாக வாழு என்று யாகோபு கூறினார். உண்மையான வாதியின் குணம் இதுதான்.

உப்புக் கட்டு

குணமாக யின்னமொரு உப்புக்கட்டு
கூறுகிறேன் நபிமார்கள் கூறக்கேட்டு
மணமாக வெகுதூரம் யெட்டிஓடும்
வடிவான யிந்தஉப்பு உயர்த்திமெத்த
பணமாகப் பலனூலி லில்லையில்லை
பாடினதால் சித்தரென்மேல் பகையுமானார்
கணமாகச் சவுக்காரச் சுண்ணமொன்று
கழறுசமன் சாரத்தைக் கல்வத்திட்டே 241

இட்டுமே நால்சாமம் உமிழ்நீர்விட்டு
இடைவிடா தரைத்துமே சொல்லக்கேளு
பட்டுமே அரைத்துருட்டிக் குகையில்வைத்துப்
பதிவாக மேற்சில்லுப் பதியமூடி
நட்டுமே சீலைசெய்து வளமாகத்தான்
நாடியே பத்தெருவில் புடத்தைப்போடு
கட்டுமே ஆறவிட்டு யெடுத்துப்பாரு
கனமான சுண்ணமதாம் கருதிடாயே. 242

கருதியே சாரமிதில் சேர்த்துமேதான்
கருணைபெறப் பனியில்வைக்கச் ஜெயநீராகும்
பருதியே தான்போன்ற ஜெயநீர்தன்னில்
பாய்ச்சிடுவாய் வீரத்தைக் கொஞ்சமிட்டு
வருதியிடு யிந்துப்புக் கல்வத்திட்டு
வடிவாகச் செயநீரை விட்டுஆட்டிக்
குருதியா மிந்துப்புச் சுண்ணமாகும்
கொடியதொரு காரமாம் ரவியிற்போடே. 243

போடவே தினமூன்று காயக்காயப்
பொடியாகும் பின்பெடுத்துப் பனியில்வைக்க
நீடவே ஜெயநீரா மிதனைவாங்கி
நிலைத்துநிற்கும் வீரத்தைப்பொடித்துத் தூவு
ஆடவே ஜெயநீரு ஒருபலந்தான்
அதற்குள்ளே பூரமொரு பலத்தைப்போடு
நாடவே மூன்றுநாள் மூடிவைத்து
நலமாக ரவியில்அஞ்சு நாள்தான்போடே. 244

போடவே பூரமது கரைந்துப்பாகும்
போக்கான சுண்ணாம்புக் குகையிலிட்டு
ஆடவே மேல்மூடிச் சீலைசெய்து
அடைவாகப் பத்தெருவிற் புடமுமிட்டுக்
காடவே யெடுத்துப்பார் சுண்ணமாகும்
கைபட்டா லுடனேதான் வெந்துநீறும்
பாடவே முன்வைத்த செயநீர்தன்னைப்
பருவமா யூதியே வைத்திடாயே. 245

வைத்திட்ட பீங்கானை ரவியிற்போடு
வடிவான அஞ்சுநா ளானபின்பு
உய்த்திட்டு மருகவே செயநீர்குத்தி
உறுதிபெற ஒருவருடன் சொல்லாமற்றான்
பைத்திட்டுச் ஜெகஜால மதிலடங்கும்
பண்பான சுண்ணமெல்லா மிதிலேயாச்சு
நைத்திட்டுக் கரையில்லை துறையுமில்லை
நபிமார்க ளாட்டெல்லா மிதினாலாட்டே. 246

ஆட்டான வீரமோ பலந்தான்தூக்கு
அறிவான சவுக்காரச் செயநீர்குத்திக்
கூட்டான கல்வத்தி லரைநால்சாமம்
குணமாக வழித்தெடுத்து வில்லையாக்கிக்
காட்டான கதிரில்வைத்து உலர்ந்தபின்பு
காசிடைதான் சவுக்காரச் சுண்ணமிட்டுத்
தீட்டான பூரமாஞ் சுண்ணமொன்று
திடமான வெங்காரச் சுண்ணமொன்றே 247

சுண்ணமொரு காசிடைதான் சாரந்தூக்கு
சுருதிபெறக் கல்வத்திற் சாரநீரால்
நன்னயமா யரைத்துமே கவசங்கட்டி
நலமாக வெண்கருவுஞ் சுக்கான்கல்லும்
பன்னகமா யரைத்துமேற் கவசங்கட்டிப்
பதிவாக ரவிதனிலே உலரவைத்துக்
கன்னல்போற் சுண்ணாம்புக் குகையிலிட்டுக்
கருதியே சீலைசெய்து புடத்தைப்போடே 248

பாடல்கள்: 241-248: இன்னுமொரு உப்புக் கட்டைக் கூறுகிறேன் கேள். இந்த கட்டு மிக உயர்வானது பல நூல்களில் இல்லை. இதைக் கூறினதால் சித்தர்கள் என் மேல் கோபம் கொண்டார்கள். ஒரு பலம் சவுக்காரச் சுண்ணமுடன் சரி எடை நவச்சாரம் சேர்த்து கல்வத்தில் இட்டு வெடியுப்பு திராவகம் (உமிழ்நீர்) விட்டு நான்கு ஜாமம் அரை, இடைவிடாமல்

அரைத்து உருட்டி எடுத்து ஒரு குகையில் வைத்து சில்லுமூடி சீலைமண் செய்து பத்து எருவில் புடம் போட்டு ஆற விட்டு எடுத்துப் பார்க்க சிறந்த சுண்ணமாகும். இந்த சுண்ணமுடன் சம எடை நவச்சாரம் சேர்த்து அரைத்து பனியில் வைக்க ஜெயநீராகும். இந்த ஜெய நீரில் வீரம் கொஞ்சம் போட்டுக் கொண்டு இந்துப்பை வேணமட்டும் கல்வத்தில் போட்டு இந்த நீர்விட்டு அரைக்க இந்துப்பு சுண்ணமாகும். இதை நன்கு ஆட்டி கொடிய காரமான இந்தச் சுண்ணத்தை வெயிலில் போடு. மூன்று நாள் காயப்போட்டால் பொடியாகும். பின்பு சுரண்டி எடுத்து பீங்கானில் போட்டு பனியில் வைக்க ஜெயநீராகும். இந்த ஜெய நீரில் வீரத்தை கொஞ்சம் பொடித்துத் தூவி எடுத்துவை. இந்த ஜெயநீரில் ஒரு பலம் எடுத்து அதற்குள் பூரத்தை ஒரு பலம் போட்டு மூன்று நாட்கள் மூடி வைத்து பின்பு ஐந்து நாட்கள் வெயிலில் போடு. பூரமது கரைந்து இருக்கும். இதை சுண்ணாம்புக் குகையில் வைத்து மேல் மூடி சீலை மண் செய்து பத்து எருவில் புடமிட்டு எடுத்துப்பார். சுண்ணாம்பாக இருக்கும். இதில் கைபட்டால் வெந்து விடும். எனவே இதை ஒரு பீங்கானில் போட்டு இதில் முன் ஜெயநீர் குத்தி உலரப் போடு. யாரிடமும் சொல்லாதே. இதனால் எல்லா வித்தைகளும் செய்யலாம். நபிமார்கள் செய்த முறையிது. வீரம் ஒரு பலம் எடுத்துக்கொள். அதில் சவுக்கார ஜெயநீரை ஊற்றி கல்வத்தில் இட்டு நன்கு ஜாமம் விடாமல் அரை, வழித்தெடுத்து வில்லை தட்டிக் காய வைத்து எடு. பின்பு சவுக்காரச் சுண்ணம் காசெடை, பூரச் சுண்ணம் காசெடை, வெங்காரச் சுண்ணம் காசெடை, நவச்சாரம் காசெடை இவைகளை கல்வத்தில் இட்டு சாரநீர் விட்டு நன்கு அரைத்து வழித்து முன்பு காயவைத்த வில்லைக்கு கவசம் கட்டி, வெயிலில் உலர்த்தி சுண்ணாம்பு குகையில் வைத்து சீலை செய்து புடத்தைப் போடு.

வெடியுப்புச் செயநீர்

புடம்போட்டு எடுத்துப்பார் வெண்ணீராகும்
புகலரிய வெடியுப்புச் செயநீர்கேளு
அடம்போடு வெடியுப்பு ஐந்தாங்காய்ச்சல்
ஆகவே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
கடம்போடு பூநீறு பலமும்போடு
கசகாமல சீனமொரு பலமும் போடு
நடம் போடு கல்லுப்புப் பலமும் போடு
நாடியே சூடனொரு காசுபோடே. 249

போடவே சாரமது காசுபோடு
போட்டெல்லாங் கல்வத்திற் பழச்சார்விட்டு
ஆடவே மூன்றுநாள் நேகஆட்டி
அடைவாக வழித்து அயச்சட்டியிலிட்டு
நாடவே நீயெரிப்பாய் நாலுசாமம்
நலமாக வழித்துஒரு பீங்கானுக்குள்
சாடவே யிட்டுமே அதன்பின்கேளு
சரியான கடுங்காரச் செயநீர்குத்தே 250

குத்தியே ஐந்துநாள் ரவியிற்போடு
குணமாகச் சுண்ணாம்புக் குகையிலிட்டுப்
புத்தியாய் ஊதையிலே சுண்ணமாகிப்
பூப்போலே வெந்துவிடும் புகலக்கேளு
நத்தியே யெடுத்துமே பீங்கானிட்டு
நலமாகக் கடுங்காரச் ஜெயநீர்குத்திப்
பத்தியே முன்போல குமுறவூது
பாதையிது வெகுபோக்குக் காகுந்தானே. 251

ஆகுமே சுண்ணத்தைப் பனியில்வைக்க
அடைவாகச் ஜெயநீரா மறிந்துகொள்ளு
வேகுமே ஜெலமாகு மிந்தநீரில்
விதமான வழலையென்ற சுண்ணங்காசு
போகுமே பூரமென்ற சுண்ணங்காசு
போக்கோடே வீரமென்ற சுண்ணங்காசு

பாகுமே செயநீரிற் காசிடைதான்போட்டுப்
பக்குவமாய்ச் சரக்குகளிற் சுருக்குப்போடே 252

போடவே அறுபத்து நாலுங்கட்டும்
போக்கோடே சரக்கெல்லாம் வாடைதன்னில்
வாடவே உபரசங்கள் சத்தேயாகும்
வடிவான சரக்கெல்லா மீயமாகும்
தாடவே கெவுரிவெள்ளை லிங்கம்வீரம்
தயங்காத தாளகமுஞ் சிலையுங்கெந்தி
பாடவே நாகத்தைப் பதையாமற்கொல்லும்
பணபேதி சணபேதி யாகுந்தானே. 253

ஆகுமே கருவங்க மதனைக்கொல்லும்
அடைவாகச் சணத்திலே சித்தியாகும்
ஏகுமே உப்பதுக்கு உறுதிகேளு
ஏத்தமாம் வெடியுப்புச் சீனக்காரம்
தாகுமே கடல்நுரையுஞ் சூடனீய்ந்து
தடையறவே வெங்காரம் துருசுதாரம்
பாகுமே வெடியுப்பு நீரைவார்த்துப்
பதிவாக அரைத்திடவே சொல்லக்கேளே.. 254

சொல்லவே ஏழுநாள் அரைத்துநீயும்
சொற்பெரிய ரவியிலெழு நாளும்போடு
மெல்லவே சரக்கெல்லாம் வெந்துநீறும்
வேதையின் முடிவுசொல்ல விண்கொள்ளாது
கல்லவே பீங்கானி லெடுத்துவைத்துக்
கருத்தாகச் சொல்லுகிறேன் கண்டுகொள்ளு
நல்லவே சகலமுந்தான் சித்தியாகும்
நாமறிந்த போக்குத்தான் நல்கினோமே. 255

நல்கியே உப்பேது வென்றாற்கேளு
நலமான வாருதியிற் சத்திநாதம்
வல்கியே மலைபோலே நிற்கும்பாரு
வடிவாக அதையெடுத்துப் பாக்குப்போலே
கல்கியே பழச்சாறு தினமுமூன்று
கனிவாகத் தோய்த்துகதிர் காயவைத்துத்

தல்கியே உப்பங்கே சுத்தியாச்சு
தாட்டிகமாய்ப் பின்புதான் தகமைகேளே. 256

கேளப்பா சவுக்காரச் சுண்ணமொன்று
கெடியான வீரமொன்று பூரமொன்று
வாளப்பா சவுக்காரச் செயநீர்விட்டு
மைந்தனே குழம்புபோல் கல்வத்தாட்டி
கோளப்பா கல்லுப்பைத் தோய்த்துவாட்டு
கொள்கியந்த தணலுக்கு ளடர்ந்துவாட்டு
நாளப்பா குழம்பை யெல்லாம் பூசிவாட்டி
நலந்தபின்பு முன்னெட்டு மருந்தைப்பூசே. 257

பூசியதை வாட்டுதற்கு விபரங்கேளு
பொலிவான வெடியுப்பு நீரைவார்த்துத்
தாசியதைக் கல்வத்திற் குழப்பிக்கொண்டு
சரக்கெல்லாம் பிரட்டிநன்றாய் வாட்டிப்போடு
மாசியதைக் கல்லுப்பு நிறையக்கேளு
மயமாகப் பலமுன்றில் பூசிப்போடு
தேசியதை அடுக்கடுக்காய் முதிரவாட்டு
சிறப்பாகத் தணலுக்கு ளடர்ந்துவாட்டே. 258

வாட்டிடவே கல்லுப்பு வெடிக்காதப்பா
மருவியதோர் ஊசரமும் உப்பும்நேரே
நாட்டிடவே நாயுருவி பிரண்டைச்சாம்பல்
நலமான கிளிஞ்சில்நீர் சரியாய்க்கூட்டி
ஆட்டிடவே அமுரிவிட்டு மெழுகாய்ப்பண்ணி
அடைபோலே ரெண்டாக்கிச் சட்டியிட்டு
நீட்டவே அடைமேலே உப்பையிட்டு
நேராக அதுமேலே அடையால்மூடே. 259

மூடியே மேற்சட்டி சீலைசெய்து
முசியாதே அடுப்பேற்றி யெரிநால்சாமம்
ஆடியே தீபம்போ லெரித்து வாங்கி
ஆறவிட்டு யெடுத்தந்தப் படியேவைத்து

நாடியே கெசபுடத்திற் போட்டாயானால்
நலமான வைரம்போ லுருகிக்கட்டும்
தேடியே ஆறவிட்டு யெடுத்துப்பாரு
சிறியபிள்ளை தானறியும் உப்பினாட்டே, 260

ஆட்டிடவே முத்துப்போ லுருகியாடும்
அறிவாகப் பொன்போலே கரியிலாடும்
நீட்டியே வயிரம்போ லிறுகிக்கட்டும்
நிலையான உப்புத்தான் வலுத்துக்கட்டும்
கூட்டியே வயிரமணி தன்னைத்தானும்
குறிப்பாகக் கோர்த்துமே கழுத்திலிட்டால்
வாட்டியே நபிமார்கள் வணங்குவார்கள்
வழியான மார்க்கமிது வண்மையாமே. 261

வண்மையாய்க் கிச்சடிச் சோறுமாக்கி
வழியோடே பாத்தியா ஓதிநன்றாய்த்
தண்மையாய் நபிமாரை மிகவும்வோதி
தடையறவே அல்லாவைத் தொழுதுபோற்றிக்
கண்மையாய் முக்காலும் வணங்கியேற்றிக்
காரணமா மகமதுவைக் கருத்திற்போற்றி
உண்மையாய்ச் செய்துமே மணியைத்தானும்
உறுதிபெற ஓதிடவே சித்தியாமே. 262

சித்தியா யாகவென்றால் சொல்லக்கேளு
சிறப்பாகச் சவுக்காரச் 'சுண்ணமொன்று
பத்தியாய்க் கற்பூரச் சுண்ணமொன்று
பகரரிய வீரத்தின் சுண்ணமொன்று
கத்தியாய்ப் புழுகொன்று சீனமொன்று
கனிவான சவுக்காரச் செயநீராலே
முத்திபெற அரைசாமம் நாலதாக
முடிவான உப்பினுட மணிக்குப்பூசே. 263

பூசியே கதிரில்வைத்துக் காயப்போட்டுப்
புகழாகச் சுண்ணாம்புக் குகையிற்றானும்
ஆசியே வைத்திட்டுக் குகையைமூடி
அடைவாகச் சீலைசெய்து புடத்தைப்போடு

தாசியே யெடுத்துப்பார் கவசந்தன்னைத்
தகைமைபெறப் பிரித்திடவே சுண்ணமாகும்
பாசியே குலந்தனக்குக் கோடாலிக்காம்பு
பகைமையாம் போலவே பார்த்திடாயே. 264

பார்த்திடவே சரக்குக்குக் காலனாகும்
பதிவான கடுங்காரச் செயநீர்குத்தி
ஏத்திடவே நாளேழு கடந்தபின்பு
ஏழைமதி போகாதே உலரப்போடு
பார்த்திடவே தினமேழில் பூப்போலாகும்
பதிவான சுண்ணத்தி னிடையேசாரம்
நாத்திடவே தினமொன்று அரைத்தாயானால்
நலமான வருணஜலம் போலேயாமே. 265

ஆகுமே ரவிதனிலே உலர்ந்தபின்பு
அடைவான சுண்ணாம்புக் குகையில்வைத்துப்
பாகுபெற மேல்மூடிச் சீலைசெது
பக்குவமாய்ப் புடம்போடச் சுண்ணமாகும்
ஏகுமே யிச்சுண்ணம் பனியில்வைக்க
இதமான ஜெயநீராம் வீரச்சுண்ணம்
தாகுமே போட்டுவிடு சவுக்காரச்சுண்ணம்
சரியான ஒளியாகும் பூரம்போட்டே. 266

பூரமாஞ் சுண்ணத்தைப் போட்டுவைத்துப்
பொலிவாகக் கலக்கியே பின்புதானும்
பாரமொடு கலக்கியொன்றாய் மத்திக்கத்தான்
பதிவாகத் தொட்டரைக்க யெல்லாஞ்சுண்ணம்
வாரமென்று பேசுமுன்னே சரக்கெல்லாந்தான்
வடிவாகக் கட்டிநின்று கரியிலாடும்
காரமொடு உபரசங்கள் சத்தேயாகும்
கனிவான லவணமெல்லாம் சுண்ணமாமே. 267

சுண்ணமா மிந்தநூற் படியேதானும்
துடியாக ஒருசுண்ணஞ் செய்துபாரு
நன்னவே நான்சொன்ன தெல்லாஞ்செய்யில்
நலமாக ஒன்றுதப்பில் சொல்லக்கேளு
கன்னலாய்க் கடைகெட்ட யாக்கோப்பென்று
கருணைபெறச் சொல்லிவிடு கணக்குமாகும்
பண்ணவே பாகமது தப்பிற்றானால்
பகரரிய சுண்ணமது தப்பும்பாரே. 268

தப்பிதமாய்ச் செய்யாமல் நூலைப்பார்த்துத்
தருகாவி லேசெய்தாப் போலேசெய்து
முப்பினுட குருமுடித்துச் சரக்குக்கட்டி
மூவுலக மெய்க்கவே சுண்ணம்பண்ணி
எப்படியும் நபிமாரைப் போலேசெய்து
இருந்திடத்தில் ரசவாதம் செய்துவிந்து
உப்பினுட பொருளறிந்து பார்த்துத்தேறு
உறுதிபெற யாகோபு ஓதினாரே. 269

பாடல்கள் 249:-269: புடத்தை எடுத்து பார்க்க வெந்து சுண்ணமாகும். அடுத்து வெடியுப்பு செயநீர் ஒன்று கூறுகிறேன் கேள். ஐந்தாங் காய்ச்சல் வெடியுப்பு பத்துபலம், பூநீறு 1 பலம், சீனம் 1பலம், கல்லுப்பு 1 பலம், சூடம் 1 காசு எடை, நவச்சாரம் 1 காசு எடை, இவைகளை கல்வத்தில் போட்டு பழச்சாறு விட்டு மூன்று நாட்கள் நன்கு ஆட்டி வழித்து எடுத்து ஒரு இரும்புச்சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து நான்கு ஜாமம் தீ எரிப்பாயாக. பின்பு வழித்து எடுத்து ஒரு பீங்கானில் போட்டு அதன் மேல் கடுங்காரச் செயநீர் ஊற்று.

இதை ஐந்து நாட்கள் வெயிலில் வை. பின்பு சுரண்டி எடுத்து சுண்ணாம்புக் குகையில் போட்டு உலையில் வைத்து ஊது. ஊதும் போது சுண்ணமாகி பூப்போன்று வெந்து மலர்ந்து விடும். இதை எடுத்து பீங்கானில் போட்டு முன் போல ஜெயநீர் குத்தி

ஐந்து நாட்கள் வெயிலில் போட்டு பின் சுண்ணாம்புக் குகையில் வைத்து நன்கு ஊது. இது சிறப்பான முறையாகும். இந்த சுண்ணத்தை பனியில் வைக்க ஜெயநீராகும் இந்த நீரில் சவுக்காரச் சுண்ணம் காசு எடை பூரச் சுண்ணம் காசு எடை, வீரச் சுண்ணம் காசு எடை, போட்டு கலக்கிக் கொள். இந்த நீரால் சரக்குகளைச் சுருக்குப் போட அறுபத்து நான்கு பாடாணமும கட்டும். இந்த நீரால் உபரசங்கள் சத்தாகும். ஈயமாகும். கெவுரிபாடாணம், வெள்ளை பாடாணம், லிங்கம், வீரம், தாளகம், மனோசிலை, கெந்தகம், நாகம் முதலியவைகளைக் கொல்லும். காரீயத்தை கொல்லும். எல்லாம் உடனே சித்தியாகும்.

உப்புக் கட்டைக் கூறுகிறேன் கேள். வெடியுப்பு, சீனிக்காரம், வெங்காரம், கடல்நுரை, சூடன் இந்த ஐந்தும் துருசு, அரிதாரம் இவைகளுடன் வெடியுப்பு ஜெயநீர் விட்டு ஏழுநாட்கள் அரைத்து ஏழுநாட்கள் வெயிலில் உலர்த்தி எடு. இதனால் எல்லா சரக்கும் வெந்து சுண்ணமாகும். இதன் வேதை முடிவு சொல்லமுடியாது. இதை பீங்கானில் எடுத்து வை. இதனால் சகலமும் சித்தியாகும் நான் செய்த அனுபவ முறையைக் கூறினேன்.

உப்பு எது என்றால் கடலுக்குள் மலைபோல வளர்ந்து நிற்கும். இதை எடுத்து வந்து பாக்கு போல் உடைத்துக் கொண்டு இதை பழச்சாற்றில் தோய்த்துத் தோய்த்து வெயிலில் காய வை. உப்பு சுத்தியாகும். சவுக்காரச் சுண்ணம் 1 பலம் வீரச் சுண்ணம் ஒருபலம், பூரச் சுண்ணம் 1பலம், மூன்றையும் சவுக்கார செயநீர் விட்டு குழம்பு போல கல்வத்தில் ஆட்டிக் கொண்டு அதில் முன் சுத்தி செய்த உப்பை தோய்த்து எடுத்து அனலில் வாட்டு குழம்பைப் பூசிப்பூசி வாட்டு. மருந்து முடிந்த உடன் மறுபடியும்

முன் போல சவுக்காரச் சுண்ணம், வீரச்சுண்ணம், பூரச்சண்ணம் வகைக்கு 1 பலம் எடுத்து கல்வத்தில் போட்டு வெடியுப்பு நீர் விட்டு அரைத்து குழம்புபோலக் குழப்பிக் கொண்டு மறுபடியும்கல்லுப்பில் பூசிப்பூசி அனலில் வாட்டு. மூன்றுபலம் கல்லுப்பில் பூசி வாட்டு. நன்றாக வாட்டி விடு. கல்லுப்பு வெடிக்காது. பின்பு கேள். பூநீர் 1 பலம், உப்பு 1பலம், நாயுருவிச் சுட்ட சாம்பல் 1 பலம், பிரண்டைச் சுட்ட சாம்பல் 1பலம், கிளிஞ்சல் சுண்ணாம்பு 1 பலம் இவைகளை சிறுநீர் விட்டு நன்கு அரைத்து மெழுகு போல் ஆக்கி அடைபோல் இரண்டு செய்து கொள். ஒருசட்டியில் ஒரு அடையை வைத்து அதன்மேல் முன் வாட்டிய உப்பை வைத்து அதன்மேல் மற்றொரு அடையால் மூடு. பின்பு சட்டியின் வாயை மூடி சீலைமண் செய்து அடுப்பேற்றி நான்கு சாமம் தீ எரிப்பாயாக. தீபம் போன்று எரித்து எடுத்து ஆற வைத்துக்கொள். பின்பு மறுபடியும் முன்போல சட்டியிட்டு சீலை மண் செய்து கெஜபுடத்தில் வைத்து எடுக்க உப்பானது உருகி வைரம் போல் கட்டி நிற்கும். ஆறவிட்டு எடு. இதனால் சிறு பிள்ளைக்கும் வாதம் சித்தியாகும் இதை கரியில் வைத்து உருக்க முத்துப்போல் உருகி ஆடும். இது வைரம் போல் இருக்கும். இதைக் கோர்த்து கழுத்தில் கட்டிக் கொள்ள நபிமார்களும் உன்னைக் கண்டு வணங்குவார்கள். இதை வைத்து வணங்கி, கிச்சடி சோறு சமைத்து, பாத்திய ஓதி, நபிமார்களை வணங்கி, அல்லாவைத் தொழுது போற்ற எல்லாம் சித்தியாகும்.

சவுக்காரச் சுண்ணம் 1பலம் “ கற்பூரச் சுண்ணம்” ஒரு பலம், வீரச் சுண்ணம் 1 பலம், புனுகு 1பலம், சீனம் 1 பலம் இவைகளை சவுக்கார ஜெயநீர் விட்டு நன்கு அரைத்து நான்கு ஜாமம் அரைத்து எடுத்து உப்பு மணிக்கு பூசு, பூசி வெயிலில்

காய வை. பின்பு சுண்ணாம்புக் குகையில் வைத்து குகையை மூடி சீலை செய்து உலர்த்தி புடம் போடு. ஆறிய பின் எடுத்துப் பார்க்க சுண்ணமாகும், இதுவே ஆதியாகும், இது எல்லாச் சரக்கையும் கொல்லும் காலன் ஆகும். இந்தச் சுண்ணத்தில் கடுங்கார ஜெயநீர் ஊற்றி ஏழுநாட்கள் மூடிவை. பின்பு ஏழுநாட்கள் வெயிலில் உலரப்போடு. ஏழாம் நாள் பூப்போல மலர்ந்து சுண்ணமாகும். இதன் எடைக்கு நவச்சாரம் சேர்த்து ஒரு நாள் அரைக்க மழைநீர் போல் ஆகும். இதை வெயிலில் வைக்க உலர்ந்து சுண்ணமாகும். இதை எடுத்து சுண்ணக் குகையில் வைத்து மேல் மூடி சீலை செய்து உலர்த்தி பக்குவமாய்ப் புடம் போடச் சுண்ணம் ஆகும். இந்தச் சுண்ணத்தை ஒரு பீங்கானில் வைத்துப் பனியில் வைக்க ஜெயநீராகும். இந்த ஜெயநீரில் வீரச் சுண்ணம், சவுக்காரச் சுண்ணம், பூரச் சுண்ணம் மூன்றையும் வகைக்கு 1பலம் போட்டு கலக்கி நன்றாக மத்தித்து வைத்துக் கொள்.

இந்த நீரில் தொட்டு அரைக்க எல்லாம் சுண்ணம் ஆகும். இதனால் எல்லா சரக்குகளும் கட்டி கரியில் நின்று உருகும். இதனால் உபரசங்கள் சத்தாகும். லவணங்கள் எல்லாம் சுண்ணமாகும். இந்த நூலில் சொல்லியபடி ஒரு சுண்ணம் செய்து பார். நான் சொன்னது எல்லாம் செய்யும் போது ஒன்று தப்பினாலும் கடை கெட்ட யாகோபு என்று கூறிவிடு. நீ செய்யும் முறை தப்பினால் சுண்ணமும் தப்பாகும்.

எனவே தவறாகச் செய்யாமல் நூலைப் பார்த்து நான் தர்காவில் செய்ததுபோல் செய்து முப்பு குரு முடித்து அதனால் சரக்குகளைக் கட்டி மூன்று உலகமும் மெச்சும்படி உப்பினுடைய பொருளை அறிந்து பார்த்துத் தேறி வா என்று உறுதியுடன் யாகோபு கூறினார்கள்.

வழலை விபரம்

ஓதினார் வழலையது யென்றபேரு
உறுதியாய்ப் பூநீரில் சுண்ணங்கூட்டிப்
பாதியே பாணிவிட்டுத் தொட்டுப்பாரு
பதிவாக வழவழப்புக் கையில்தோணும்
சோதிபெற யிதுக்குப்பேர் வழலையாகும்
தொல்லுலகி லறியாத மூடர்தானும்
போதித்தார் பிண்டமென்றும் தீட்டாமென்றும்
போக்கோடே யெடுத்துமே சுடுவார்தானே. 270

சுடுவாய்நீ அமுரியென்ற மூத்திரத்தைச்
சொற்பெரிய மூத்திரந்தான் புகைத்தநீராகும்
அடுவார்கள் சுத்தஜெல மாச்சுதப்போ
அன்பாக வயித்யமெழு நூறிற்சொன்னேன்
படுபாவி சாத்திரத்தைப் பொய்யென்பார்கள்
படிப்புத்தான் தெரியாமற் போனதாலே
கடுமையாய்ச் சொல்லிடுவார் உலகவாதி
கனிவாகத் தெரியாதார் மட்டிதானே 271

மட்டியென்றால் சுண்ணாம்புக் குதவும்பாரு
மட்டியல்ல குட்டியென்ற சுவருக்கொப்பாம்
துட்டியாய்ச் சுவரென்றால் ஒருவருக்குத்
துணையாக மறைக்குமது சுவருமல்ல
முட்டியாய்க் கழுதையென்று சொல்லவேணும்
முனையான கழுதையது பொதிதான்தூக்கும்
பட்டியாய்ப் பலர்க்குமுப காரமாகும்
படிப்பில்லா னொன்றுக்கு முதவான்தானே. 272

ஒன்றுக்கு முதவாதார் சுடுவான்சுட்டு
உறுதியில்லா தொருவருட பேச்சைக்கேட்டுக்
கண்டுமே சுடுவார்கள் கணக்குக்காணார்
காதலாய் மூலிகையைத் தேடுவார்கள்
நன்றாக யிருக்குதென்று முழுத்தேங்காயை
நாயுருட்டி உடைக்கரியா விதமாகற்றான்
உண்டுடுத்து அலைந்துமே திரிவாரப்பா
உண்மையில்லா மடவாதி உற்றுப்பாரே. 273

உற்றுப்பார் உப்பினுட மணியைக்கேளு
உறுதிபெறக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
சத்துப்போ லுருகுமப்போ தங்கமொன்று
சரியாகக் கொடுத்துருக்கி நாகந்தாக்கு
சத்துமே தங்கமிடை சேர்த்துருக்கிப்
பதிவாகச் சூதமொரு பலமும்போட்டுச்
சித்துமே வீரமோ ரிடையைப்போட்டுத்
திரண்டுருகி வருகையிலே கெந்திபோடே. 274

போட்டுடனே களங்காகும் உப்புக்கட்டுப்
பொலிவான நவலோகம் நூற்றுக்கொன்று
ஆட்டுமே பத்தரைதான் வயதுகாணும்
அடைவாகக் கண்டுடனே கெர்ச்சிக்காதே
பாட்டுமே அன்னமரை தண்ணீர்கொள்ளு
பக்குமாய்ப் புளியுப்பை இகழ்ந்துதள்ளு
நாட்டுமே நபிசொத்தை வறுமைபோலே
நலமாக உண்டுடுத்த நல்லதாமே. 275

நல்லதாம் சமாதியிலே நின்றுதேறு
நானிலத்தி லொருவருக்குஞ் சொல்லவேண்டாம்
வெல்லவே ஏழைபோ லிருந்துதேறு
வேதாந்த நுட்பத்தின் விரிவுகேளு
கொல்லவே ஆதியுப்பைக் குறியாய்ப்பாரு
குணமாக உன்மனையி லிருந்துவாழு
வல்லமைகள் சொல்லாதே மாண்டுபோவாய்
வடிவான சித்தியாய் வண்மையாமே. 276

பாடல்கள் :270-276 : வழலை என்ற பெயர் என்ன என்றால் பூநீருடன் சுண்ணாம்பைக் கூட்டி நீர்விட்டு கலக்கிக் கொண்டு கையால் தொட்டுப் பார்க்க கையில் வழவழப்பு தெரியும். சோதி அறிய இதற்குப் பெயர் வழலையாகும். இதை அறியாத இவ்வுலக மூடர்கள் பிண்டமென்றும் (குழந்தை உடல்) தீட்டு என்றும் (மாதவிடாய் குருதி) ஏதோதோ கூறிக்கொண்டு சுட்டு

அலைவார்கள். அமுரி என்பது சிறுநீரில் எடுத்த புகை நீராகும் (சிறு நீரை வாலை கொண்டு வடித்து எடுப்பது) இதுவே சுத்த நீராகும். இதன் முறையை என்னுடைய வைத்தியம் -700 என்னும் நூலில் கூறினேன். (யாகோபு வைத்ய சிந்தாமணி 700 என்னும் நூலில் காண்க) சில பாவிகள் சாத்திரத்தைப் பொய் என்பார்கள். உண்மையாக பாட்டைப் படிக்கத் தெரியாமல் போனதாலே பொய் என்று கடுமையாகக் சொல்வார்கள் உலக வாதிகள் உண்மை தெரியாதவர்கள் மட்டிகளாகும்.

மட்டி யென்றாலும் சுண்ணாம்புக்கு உதவும், குட்டி என்றாலும் சுவருக்கு பெயர். இது ஒருவருக்கு மறைவுக்கு உதவும். கழுதை என்றாலும் பொதி சுமக்கும் பலருக்கு உதவும். படிப்பில்லார் ஒன்றுக்கு உதவாதவன் ஆவான். இப்படி ஒன்றுக்கும் உதவாதவர்கள் பிறர் பேச்சைக் கேட்டு சுட்டுக்கெட்டு ஒன்றும் காணாமல் மூலிகை தேடி அலைந்து நாய் தேங்காயை உருட்டிய கதையாக அலைந்து திரிவார்கள். இவர்கள் மடையர்கள்.

உப்பு மணியைக் கூறுகிறேன் கேள். உப்பைக் கரியில் வைத்து உருக்கு. அது உருகும் போது தங்கம் 1பலம், கொடுத்து உருக்கு. இரண்டும் உருகும்போது தங்கத்தின் எடைக்கு நாகத்தைக் கொடுத்து உருக்கு. பின்பு மூன்றும் சேர்ந்து உருகையில் பாதரசம் 1பலம் போடு, வீரம் 1பலம் போடு. எல்லாம் திரண்டு உருகி வரும் போது கெந்தகம் 1 பலம் போடு. போட்டவுடன் களங்கு ஆகும். இதை ஒன்பது உலோகங்களிலும் நூற்றுக்கு ஒன்று கொடுக்க பத்தரை மாற்றுத் தங்கம் ஆகும். உடனே பெருமைப்படாதே. பாதி சோறும் பாதி தண்ணீரும் உண்டு பக்குவமாய் புளி, உப்பை நீக்கி

இதை விற்று வறுமையில் உள்ளவன் போல் உண்டு உடுத்தி வாழ்ந்தால் நல்லது. இப்படி இருந்து கொண்டு சமாதி யோகம் செய். யாரிடமும் கூறாதே. ஏழைபோல் இருந்து வேதத்தின் உட்பொருளை உணறு. உப்பைக் குறி அறிந்து செய். உன் வீட்டில் இருந்து வாழு. உன் திறமைகளை வெளியில் சொல்லாதே உயிருக்கு ஆபத்து வரும். எனவே அடக்கமாக சித்தி செய்து கொள்.

உப்புச் செந்தூரம்

வண்மையாய் உப்பினுட செந்தூரத்தை
வகையாகச் சொல்லுகிறே னுலகோர்க்காகத்
தண்மையாய்ச் சூதமொன்று நாகமொன்று
தடையறவே உருக்கியல்லோ பொடியாய்ப்பண்ணி
திண்மையாய் வீரமொன்று சுண்ணமொன்று
சிறப்பாக மத்தித்துப் பனியில்வாங்கிக்
கண்மையாய்ச் செயநீரா மிதனைவாங்கிக்
கலனாக உப்புமணி தன்னைத்தோயே. 277

தன்னையே தோய்த்துமே பரித்தகட்டைத்
தடையறவே உப்புமணி தன்னிற்சுத்தி
வன்னையா யிலுப்பைநெய்யில் விளக்கைவைத்து
வடிவாக நூலதனால் திரியைப்போட்டுக்
கன்னையா யெரியவிட்டு வாட்டித்தீரு
கனிவாக உள்ளுருகுந்து தங்கந்தானும்
சன்னையாம் அருணன்போற் செந்தூரமாகும்
சரியான செந்தூரந் தாக்கிடாயே. 278

தாக்கிடவே நவலோகம் நூற்றுக்கொன்று
தடையறவே கொடுத்திடவே பத்துமாத்து
நோக்கிடவே செந்தூரங் குன்றியுண்ணு
நொடிக்குள்ளே கோடிவரை யிருக்குந்தேகம்
பாக்கிடவே சுக்கிலத்தை யிருக்கிப்போடும்
பதிவான நரைதிரையு மில்லைகண்டீர்

வாக்கிட்டுச் சொல்லார்கள் சித்தரப்பா
வடிவான பொருளிந்த மார்க்கமாமே 279

மார்க்கமாம் சுண்ணமென்ற காண்டந்தன்னை
மயமாக உழைத்துமே குருமுடித்துத்
தீர்க்கமாய்ச் சுண்ணமது செய்துநீயும்
செயலான சரக்கெல்லா மிருக்கிக்கட்டி
வார்க்கவே செந்தூரம் உப்புப்பண்ணு
வடிவாகச் செயமாகும் வழக்கமெத்தத்
தூர்க்கவே சொன்னாக்கா லென்னசெய்வான்
தொல்லுலகில் யாகோபு சொன்னவாறே. 280

சொன்னதொரு மலைகளிலே சித்தர்கோடி
சுருதிபெற நபிமாருங் கோடாகோடி
நன்னயமா யண்டபகி ரண்டமெல்லாம்
நலமான மலைதோறும் நாதாக்கள்கோடி
சின்னதொரு மலையெல்லாந் தர்க்காவுண்டு
சிறப்பான மலையருகே வாசமாகும்
முன்னமே மலையிலுள்ள மூலிகோடி
முனையான சாத்திரங்கள் கோடிதானே. 281

தானென்ற மலைதோறும் பாஷாணங்கள்
தாட்டிகமா யுற்பத்தி நிலத்திலுண்டு
வானென்ற அவிடத்தில் முளைக்கப்பட்ட
வடிவான மூலிகைதான் கொடியவேகம்
கானென்ற அதைப்பிடுங்கிச் சாறுவாங்கிக்
கடிதாகச் சரக்குக்குச் சுருக்குப்போட்டு
வானென்ற நவலோகந் தன்னிலீய
வடிவான தங்கமாம் வழக்கமாமே. 282

வழக்கமாங் கிழக்கிலுள்ள கடலிற்றானும்
வடிவான கல்லுப்பு வெடியுப்புத்தான்
தழக்கமாய் விளைகின்ற பூமியிற்றான்
தடையில்லா உமுரியிலை பிடுங்கிவந்து

துழக்கமாய்ச் சாரதுவும் பிழிந்துபின்பு
துணையாகச் சரக்குக்குச் சுருக்குப்போட்டுப்
பழக்கமாய்க் கொடுத்தாலும் பனிக்கும்பாரு
பதிவாக இதற்காக உப்பைப்பாரே. 283

உப்பையே கண்ணந்தான் பண்ணிப்பின்பு
உறவாகச் செயநீரைப் பண்ணிக்கொண்டு
அப்பவே துருசதுவை நீற்றிநீயும்
ஆனபின்பு மூலிகையி லிட்டுக்கட்டிக்
கொப்பவே நவலோகந் தன்னிலியக்
கொள்கியே மாற்றதுவுங் காணும்பாரு
செப்பமாய்ச் சொல்லிவிட்டேன் இன்னூல்தன்னிற்
செயமாக யாகோபு சொன்னேன்யானே. 284

சொன்னதொரு மலையடுத்து மூலிதேடிச்
சொற்பமாய்ப் பிடுங்கியே பாசாணங்கள்
நன்னயமாய்ச் சுருக்கிட்டு லோகத்துள்ளே
நாடியே கொடுத்துவிடத் தங்கமாகும்
இன்னிலத்தில் வெகுசுருக்கு மலையின்மூலி
இதமாகப் பத்துத்தான் மாற்றுமாகும்
சின்னமாய் நிமிடத்தில் முடியுங்கண்டீர்
சித்திபெற யாகோபு மொழிந்தவாறே. 285

மொழிந்திடவே உப்பைத்தான் நீற்றிமுன்னே
உறுதிபெறக் களங்குபண்ணு சத்துப்பண்ணி
வழிந்துமே செம்புபண்ணி மதியிற்தாக்கு
வடிவான பொன்னாகும் பொன்னைவிற்று
தழிந்திடாச் சொன்னபடி உண்டுபின்பு
தாட்டிகமாய்ச் சுண்ணமென்ற துறையைநாடு
கழிந்திடா நவலோகம் கண்முன்தாண்டும்
கருத்தரிய யாகோபு சொன்னார்தாமே. 286

தாமேதான் வடகடல்தென் கடலுமோடித்
தடையறவே மேற்கிலுள்ள சமுத்திரத்தில்
வாமேதான் குளிகையிட்டு ஓடிநானும்
வகையான வாதங்கள் மிகவும்பார்த்தேன்
காமேதான் கிழக்கிலுள்ள கடலினோரம்
கருத்திலே நினைத்துமே வந்துதானும்
பாமேதான் சுண்ணமென்ற காண்டம்பாடிப்
பதிவாக அறுநூறாய்ப் பாடினேன். 287

பாடினேன் புத்தியுள்ள வாதிமார்கள்
பலகாலும் பார்த்துமே கருணைகூர்ந்து
தேடியே உப்புயிரு பத்தியைந்துந்
திடமான உபரசம் நுற்றிருபதுந்தான்
கூடியே பார்த்தாலோ குறியுந்தோணும்
குறியான வாதமிதி லடங்கிப்போகும்
வாடியே திரியாதே நூலைப்பாரு
வடிவான பொருளறிந்தா லெல்லாமாகும். 288

எல்லாமு மாகுமே சவுக்காரத்தை
இதமாக வைத்துமே சொல்லக்கேட்டுப்
புல்லறிவாய்ப் பேசாமற் பாகந்தன்னைப்
பிரித்துமே கைபாக வரிசையாக
நல்லாகப் பார்த்துமே வழலையோடே
நலமாகச் சேருகிற மருந்துசேர்த்துக்
கல்லாகச் சவுக்காரம் பூக்கவைத்தால்
கனிவாகச் செயமாகுங் கண்டுகொள்ளே. 289

பாடலகள்:277-289: உப்பினுடைய செந்தூரத்தை இந்த உலகில் உள்ளவர்கள் அறியும் பொருட்டுக் கூறுகிறேன். ரசம் 1பலம், நாகம் ஒரு பலம் இவை இரண்டையும் உருக்கி பொடியாய் பண்ணி இதில் வீரச் சுண்ணம் 1பலம் சேர்த்து மத்தித்து பனியில் வைக்க செயநீராகும். இதில் உப்பு மணியைத் தோய்த்து எடுத்து அதன் மேல் தங்கத்தை1பலம் எடுத்து

மெல்லிய தகடாகத் தட்டி சுற்றிக்கொள். ஒருமண் சட்டி விளக்கில் இலுப்பை எண்ணெய் ஊற்றி நூலால் திரிபோட்டு பற்ற வைத்து அந்த தீபத்தில் உப்பு மணியை வாட்ட தங்கமானது உருகி மணியுடன் சேர்ந்து சிவந்து செந்தூரமாகும். இது மிக உயர்வானது ஆகும். இதை நவலோகங்களில் நூற்றுக்கு ஒரு பங்கு கொடுக்க பத்து மாற்றுத் தங்கமாகும். இந்த செந்தூரத்தை குன்றியளவு வீதம் உட்கொள்ள கோடியுகம் வரை உடல் அழியாது. விந்து இறுகிக் கட்டும். நரை, திரைகள் மாறும். இதை சித்தர்கள் சொல்லமாட்டார்கள். அறிந்து கொள்.

இந்த சுண்ண காண்டத்தைக் கொண்டு படித்து நீ உழைத்து குருமுடித்துக் கொண்டு சுண்ணங்கள் செய்து சரக்குகளைக் கட்டி உப்புச் செந்தூரம் செய்து சித்தி செய்து கொள். மலைகளில் சித்தர்கள், நபிமார்கள் ,நாதாக்கள், கோடான கோடி பேர்களுண்டு. மலைகளில் எல்லாம் தர்க்காக்கள் உண்டு. இவர்கள் மலையருகில் வாழ்கிறார்கள். மலையில் மூலிகைகள், சாத்திரங்கள் கோடான கோடி உண்டு. மலைகளில் எல்லாம் பாடாணங்கள் விளைகின்றன. நிலத்திலும் உற்பத்தியாகின்றன. அவ்விடங்களில் விளைகின்ற மூலிகைகளுக்கு வேகம் அதிகம். அப்படி உள்ள மூலிகைகளைப் பிடுங்கி சாறு எடுத்து சரக்குகளுக்குச் சுருக்குப் போட்டு நவலோகத்தில் கொடுக்க தங்கமாகும்.

கிழக்கிலுள்ள கடலில் கல்லுப்பு வேகமுடையது. அங்குள்ள வெடியுப்பு விளையும் பூமியில் உள்ள உமுரி என்னும் மூலிகையின் இலையைப் பிடுங்கி வந்து சாறு பிழிந்து சரக்குகளுக்கு சுருக்குப்போட்டு நவலோகத்தில் கொடுக்க வாதம் பலிக்கும். இதற்காக உப்பைப் பாரு, முதலில் உப்பை சுண்ணாம்பாக்கி அதை பின் மூலிகையில் இட்டு சாறு எடுத்து அதனால் சரக்கைக் கட்டி நவலோகங்களில் கொடுக்க தங்கம் ஆகும். இதை இந்த நூலில் யாகோபு ஆகிய நான் கூறினேன்.

இப்படி மலையை நாடிச் சென்று மூலிகைகளைத் தேடி பிடுங்கி வந்த பாசாணங்களுக்கு சுருக்குக் போட்டு உபயோகங்களில் கொடுக்க தங்கமாகும். இது வெகு சுருக்கான முறை, மலை மூலிகைகளால் பத்து மாற்று தங்கம் உண்டாகும். இது சீக்கிரம் முடியும்.

எனவே முதலில் உப்பை சுண்ணமாக்கி பின் களங்கு பண்ணி, சத்து பண்ணி, செம்பு பண்ணி வெள்ளியில் கொடுத்து உருக்க பொன்னாகும். இதை விற்று நான் கூறியபடி உண்டு உடுத்து பின்பு மற்ற சுண்ணங்கள் செய்து பார். இதனால் நவலோகமும் பொன்னாகும். இதை நான் கூறினேன். நான் ஆகாயமார்க்கமாக வடகடல் முதல்; தென்கடல் வரை ஓடி பின்பு மேற்கிலுள்ள கடலில் ஓடி பல வாதங்கள் செய்து பார்த்து பின்பு கிழக்கிலுள்ள கடலின் ஓரம் வந்து இருந்து இந்த சுண்ணம் என்ற காண்டம் பாடினேன். இதை 600 பாடல்களாகப் பாடினேன்.

புத்தியுள்ள ரசவாதிகள் பல முறை பலகாலங்கள் பார்த்து தேடி இருபத்தி ஐந்து உப்புகளையும், 120 உபரசங்களையும் பார்த்துத் தேறினால் ரசவாதம் இதற்குள் அடங்கும். எனவே சும்மாத் திரியாமல் நூலைப்பார். எனவே சவுக்காரம் வைத்துக்கொண்டு கைபாக வரிசையாக வழலையுடன் சேர்க்கிற மருந்தைச் சேர்த்து செய்து சவுக்காரத்தை சுண்ணம் செய்தால் எல்லாம் சித்தியாகும்.

உப்புமெழுகு

கண்டுமே உப்பினுட மெழுகைக்கேளு
கனிவான கல்லுப்புப் பலமுமொன்று
பண்டுமே குகையில்நின்று உருகும்போது
பதிவாகச் சாரமது பலமுங்கால்தான்
தண்டுமே நீச்சென்ற வெங்காரந்தான்
தலமாகப் பலங்காலாம் நாடிப்போடு
கொண்டுமே கெந்திபல மரைதான்போடு
குணமான சவுக்கார நீரைவாறே. 290

வார்த்துமே கலந்தரைத்துக் குன்றிபோலே
வளமாக உண்டைசெய்து மருவக்கேளு
காத்துமே கதிரில்வைத்துக் காயப்போடு
கரியான உப்புநின்று உருகும்போது
சேர்த்துமே ஒவ்வொன்றாய்க் கொடுத்துவாங்கு
சிறப்பான உண்டைபுகை யாமலுள்ளே
சாத்துமே மயனம்போல் கண்டுகொள்ளு
தனிவாக யிப்பாலே வாங்கிக்கொள்ளே. 291

கொள்ளவே நவலோகம் நூற்றுக்கொன்று
கொட்டிடவே தசமாத்துக் கூர்ந்துபாரு
துள்ளவே உப்புக்குங் காவிக்குத்தான்
துடியாக ஓடாது தொடுசிராது
உள்ளபடி யிருந்திடுங்காண் உப்புவேதை
ஒருவருக்குஞ் சொல்லாதே உற்றுப்பாரு
கள்ளமாய்ச் சொல்லவில்லை கருவின்வேதை
கைகண்ட படிசொன்னேன் கண்டுபாரே. 292

கண்டுபா ருப்பினுட மெழுகுதன்னைக்
கருணைபெறக் குன்றியுண்ணு கனிவாய்க்கேளு
கொண்டுபார் புளியுப்புப் பெண்ணுந்தள்ளு
கூரறிய நாற்பதுநா ளந்திசந்தி
பண்டுமே உள்ளரையிற் படுத்துக்கொள்ளு
பதிவாக உள்நின்று தொழுதுநீயும்
தின்றுவிடச் சட்டைகக்கும் பாலனாவாய்
திறமான நபிமார்போ லிருக்கலாமே. 293

இருக்குமே உப்பினுட மெழுகைச்சொன்னேன்
இதமாக உண்டுவிடச் சந்திரன்போலாம்
நெருக்குமே சூரியன்போல் திரேகமாகும்
நேரான நரைதிரைக ளற்றுப்போகும்
கருக்கமே நரம்பிருகும் பசுமையாகும்
காரணமாய் நோயெல்லாஞ் சொல்லாதோடும்
பெருக்கவே யோசித்துச் செய்துபாரு
பேரான நூலறிந்தாற் பெரியோராமே. 294

பெரியோரா யிருந்ததுவு மெதுவென்றாக்கால்
பிறக்குகின்ற நூலெல்லாம் படித்துத் தேறி
வரியாகப் பொய்சொல்லா வசனத்தாலே
வடிவான வாதம்வந்த வடிவத்தாலே
சிறியவரும் பெரியவராய்ப் போவார்கண்டீர்
சிறப்பான பொருளறிந்தோன் சித்தன்சித்தன்
அறிவாலே சொன்னாலே பலனுமாகும்
ஆதியாம் உப்பைத்தான் அறிந்துபாரே. 295

அறிந்துபார் உப்பைமுந்திக் கட்டியாடு
அடைவாகப் பின்னொன்றைப் பார்க்கவேண்டாம்
திரிந்துபார் பிரண்டுருண்டு உப்புதன்னைத்
திடமாகச் செய்தாக்கால் சித்தன்சித்தன்
வரிந்துபார் யெல்லாமும் உப்பினாலே
வகைகெட்டுத் திரியாதே நூலையுற்றுக்
குரிந்துபார் யெல்லாமுஞ் செய்துதேறு
கூரறிய உப்பினுட கொள்கைதானே. 296

தானென்ற உலகத்தில் வாதமெய்தில்
தருதுரும்ப னாய்த்திரிந்து பெண்ணைச்சேர்ந்து
பானென்ற அதரமுண்ட மைந்தனாகி
பலநினைவாய்க் கவலையுற்றுப் பாசமெய்தி
கோனென்ற குருவேது காயசித்தியேது
குறிப்பான ஆதார வழிதானேது
வானென்று ஆடுகிற குளிகையேது
வாய்பேசா திருந்தலைந்து மருளுவானே. 297

மருளாமற் போகவல்வோ வாதஞ்சொன்னேன்
மாண்டிறந்து போகாமற் காயசித்தி
இருளான வெளிகாண யோகஞ்சொன்னேன்
எப்போதுங் குருபதத்தைத் தொண்டுபண்ணு
பொருளான ஆனந்த மாவதற்குப்
பொருந்தவே நபிமாரைப் புகழச்சொன்னேன்
கருவான நூலறிந்தோன் வாதியாகும்
கருத்தாக உப்பைமுந்திக் கட்டியாடே. 298

ஆடவே உப்பென்ற சுண்ணமொன்று
அணைத்திடுநீ சாரத்தை ஒன்றுசேர்த்து
நீடவே கல்வத்தி லரைநால்சாமம்
நேர்ந்தபின்பு சுண்ணமென்ற குகையில்வைத்து
நாடவே கடுங்காரச் செயநீர்குத்தி
நாள்மூன்று மத்தித்து ரவியில்வைப்பாய்
ஊடவே பனியில்வைக்கச் ஜெயநீராகும்
உத்தமனே யிந்நீரி லோட்டங்கேளே. 299

கேளப்பா யிந்நீரில் வீரச்சுண்ணம்
கெடியாக மத்தித்துப் பலந்தான்பூரம்
நாளப்பா பீங்கானில் பூரம்போடு
நலமாகச் ஜெய்நீரை அதிலேவாரு
நீளப்பா மூன்றுநாள் நிழலில்வைத்து
நேர்மையா ரவியிலைந்து நாள்தான்போடு
வாளப்பா அரைத்துநன்றாய் வில்லைதட்டி
வளமான சவுக்காரச் சுண்ணம்பூசே. 300

பூசியல்லோ சுண்ணமென்ற குகையில்வைத்து
பொருந்தவே மேல்மூடிச் சீலைசெய்து
ஆசியல்லோ யீசானம் பூசைபண்ணு
ஐந்தெருவிற் புடம்போடப் பூரம்நீறும்
வாசியல்லோ கடுங்காரச் ஜெயநீர்குத்தி
மகத்தான ரவிதனிலே உலரப்போடு
தேசியல்லோ நபிமார்கள் சொன்னமார்க்கம்
திறமான ததின்வேகஞ் செப்பினேனே. 301

செப்பியதோர் பூரமது பலந்தானொன்று
தெளிவான சாரமது பலந்தானொன்று
ஒப்பியதோ ரிதுரெண்டுங் கல்வத்திட்டு
ஓங்கியதோர் நெட்டடங்க மாட்டுமாட்டு
தப்பியதோர் சுண்ணாம்புக் குகையிலிட்டுச்
சார்வாக மேல்மூடிச் சீலைசெய்து
அப்பியதோர் புடம்போட வெந்துநீறும்
ஆச்சரியம் பனியில்வைக்கச் செயநீராமே. 302

ஆமப்பா யிந்நீரில் வீரச்சுண்ணம்
அட்டியில்லா தைக்கலக்கி வைத்துக்கொண்டு
ஓமப்பா சரக்கான அறுபத்துநாலும்
உற்றுமெள்ள வாட்டிடவே மணியுமாகும்
சாமப்பா. சாரமுதல் லவணமெல்லாம்
சணத்திலே சுண்ணாம்பாய் விரிந்துபோகும்
வேமப்பா கண்டருமே வெள்ளையாகும்
வேதையாம் தாளகத்தின் மஞ்சள்போமே. 303

மஞ்சளென்ற கெந்தகமோ வெள்ளையாகும்
மரசற்ற வீரமது குருவுமாகும்
துஞ்சலென்ற லிங்கமது மெழுகுமாகும்
சோதியாங் கல்லுப்பு மணியுமாகும்
பஞ்சலென்ற உபரசங்க ளீயமாகும்
படுமுன்னே சூதமது விறைத்துப்போகும்
கஞ்சமென்ற லோகங்கள் சுண்ணமாகும்
காட்டிடவே நூற்றுக்கு ஒன்றுயியே. 304

ஈயவே ஏமமாம் பொய்போகாது
இருந்தயிடந் தன்னிலே இருப்பாய்நில்லு
மாயமாய் நிலையில்லா தலையவேண்டாம்
வடிவான கல்லுப்பை யுருக்கிக்கட்டு
தாயமா யுப்பில்லாக் கட்டுயெல்லாம்
தலைசுற்றித் தூரயெறி தரணியோர்க்கு
நாயமார் தான்சொன்னா ரிந்தநேர்மை
நாடறியச் சொல்லுகிறேன் நம்பிப்பாரே. 305

நம்பியே யிருக்கவென்றார் சொல்லக்கேளு
நாதாந்த நபிமார்கள் சொன்னநேர்மை
வம்புசெய் யாமலே தொந்தமேற்ற
வடிவாகச் சுண்ணமது வலுக்கும்பாரு
கொம்பிலே யிருந்தகனி கைக்குக்கிட்டும்
கொள்கைபோல் மனதுதனை ஒன்றுபண்ணித்
தம்பிரான் செயலாவே வாழ்ந்துதேறு
தடையறவே யாகோபு சொன்னவாறே. 306

வாரேது யென்றாக்காற் சொல்லக்கேளு
வடிவான சவுக்கார முடியாப்போனால்
தூரேது சொல்லாதே வெகுவாய்க்கேளு
துடியான களங்கொன்று சொல்வோமய்யா
பாரேநீ யிதைநம்பிச் செய்துகொண்டு
பக்குவமாய்ப் பெரியதொரு வேலைபார்த்துத்
தேரேநீ பிழைக்கவே சொன்னேன்வாவா
தெளிவாகு மிதன்கூறு கூறொண்ணாதே. 307

பாடல்கள் :290-307 : உப்பினுட மெழுகைச் சொல்கிறேன் கேள். கல்லுப்பு கட்டியது 1 பலம் எடுத்து அதை குகையில் வைத்து உருக்கு. நவச்சாரம் 1/4 பலம், வெங்காரம் 1/4 பலம், கெந்தகம்1/2 பலம் மூன்றையும் சவுக்கார ஜெயநீர் விட்டு அரைத்து குன்றிபோல மாத்திரைகளாக உருண்டையாக செய்து வெயிலில் காயப்போட்டு எடு. இந்த உருண்டைகளை உப்பு உருகும் போது ஒவ்வொன்றாய் போடு. உருண்டை புகையாமல் உள்சென்று சேர்ந்து கொள்ளும். எல்லாம் சேர்ந்த உடன் எடு. இதை நவலோகங்களில் நூற்றுக்கு ஒன்று கொடுக்க பத்து மாற்று காணும். இந்த தங்கம் உப்புக்கும், காவிக்கும் ஓடாது. இந்த உப்பு வேதையை ஒருவருக்கும் சொல்லாதே. நான் மறைப்பாகச் சொல்லவில்லை. உள்ளபடி கூறினேன் செய்து பார்.

இந்த உப்பு மெழுகை குன்றியளவாக உட்கொள். புளி, உப்பு, பெண்போகம், முதலியன நீக்கி நாற்பது நாட்கள் உண்டு காலை, மாலை உட்கொள். காற்று, வெயிலில் வராமல் உள் அறையில் இரு. தினமும் தொழு. உடல் சட்டை நீங்கி பாலனாவாய்: நபிமார்கள் போல் இருக்கலாம். உன் உடல் இளமை அடையும், முகம் சந்திரன் போல அழகு பெறும் உடல் சூரியன் போல் ஒளி வீசும். நரை, திரைகள் மாறும் உடல் நரம்புகள் இறுகும். உடலில் உள்ள நோய்கள் எல்லாம்

சொல்லாமல் ஓடும். நன்றாக யோசித்துச் செய். உண்மையான நூல்களின் பொருளை அறிந்தவர்கள் உலகில் பெரியோர்கள் ஆவார்கள்.

எப்படி பெரியோர்கள் என்றால் எல்லா நூல்களையும் பார்த்துத் தேறி, பொய் சொல்லாத வசனத்தால் ரசவாதம் செய்து சித்தியடைந்து விட்டதனால் சிறியோரும் பெரியோர்கள் ஆனார்கள். சிறப்பான நூலின் பொருளை அறிந்தவன் சித்தன் ஆவான். எனவே அறிவுடன் உப்பைப்பார். முன்னால் உப்பைக் கட்டு. வேறு ஒன்றையும் பார்க்க வேண்டாம். எப்படியேனும் உப்பைக் கட்டு. நீ நிச்சயமாகச் சித்தனாவாய். எல்லா வாதமும் உப்பாலே ஆகும். எனவே கெட்டுத் திரியாமல் நூலைப்பார்த்து குறிப்பறிந்து செய். இவ்வுலகில் வாதம் வந்து விட்டால் கர்வமாய்த் திரிந்து பெண்ணுடன் சேர்ந்து காமத்தில் திளைத்து, பல நினைவாய்க் கவலையுடன் பாசவலையில் சிக்கி குரு ஏது? காயசித்து ஏது?, ஆதார நிலைகள்தான் ஏது? குளிகை ஏது? என்று நினைத்து நினைத்து வாய் பேசாமல் அலைந்து இறப்பார்கள். இப்படி போகாமல் இருக்கவே ரச வாதத்தைச் சொன்னேன். இறக்காமல் இருக்கவே காய சித்தி முறைகளைக் கூறினேன். உண்மையான வழி அறிய யோகம் சொன்னேன். எனவே எப்போதும் குருவை வணங்கி பேரானந்த நிலையடைய நபிமாரைப் புகழ்ந்து கூறினேன். உண்மையாக நூலின் சூட்சுமத்தை அறிந்தவனே ரசவாதியாவான். எனவே உப்பை முதலில் கட்டு.

உப்புச் சுண்ணம் ஒரு பலம், நவச்சாரம் ஒரு பலம் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து கல்வத்தில் இட்டு நான்கு ஜாமம் அரை, பின்பு எடுத்து சுண்ணாம்புக் குகையில் வைத்து

கடுங்கார ஜெயநீர் ஊற்றி மூன்று நாட்கள் நன்கு மத்தித்து வெயிலில் வை. பின்பு எடுத்து பனியில் வைக்க ஜெயநீராகும். இதன் தன்மையைக் கூறுகிறேன் கேள். இந்த நீரில் வீரச் சுண்ணம் சேர்த்து நன்கு கலக்கிக் கொண்டு ஒரு பலம் கற்பூரத்தை பீங்கானில் போட்டு ஜெயநீரை அதில் ஊற்று. மூன்று நாட்கள் மூடி வைத்து பின்பு ஐந்து நாட்கள் வெயிலில் போடு. பின்பு அரைத்து நன்கு வில்லை தட்டி வெயிலில் காயவைத்து அதன் மேல் சவுக்காரச் சுண்ணத்தை ஜெயநீரில் குழப்பிப் பூசு. இப்படிப் பூசி சுண்ணாம்புக்குகையில் வைத்து சரியான மூடிபோட்டு சீலைமண் செய்து பூசை செய்து ஐந்தெருவில் புடம் போட கற்பூரம் நீறிச் சுண்ணமாகும். இந்த சுண்ணத்தை பீங்கானில் போட்டு கடுங்கார ஜெயநீர் ஊற்றி வெயிலில் உலரப்போடு. இது நபிமார்கள் எனக்குக் கூறிய முறையாகும். இதன் வேகத்தைக் கூறினேன்.

இந்த பூரச் சுண்ணம் 1 பலம், நவச்சாரம் 1பலம் இரண்டையும் கல்வத்தில் போட்டு நெடியடங்கும் வரை அரைத்து சுண்ணாம்புக் குகையில் வைத்து மேல் மூடி சீலைமண் செய்து புடம் போட வெந்து சுண்ணாம்பாகும். இதை பனியில் வைக்க ஜெயநீராகும். இந்த நீரில் வீரச் சுண்ணம் போட்டு கலக்கி வைத்துக்கொண்டு இந்த ஜெயநீரில் தோய்த்து அறுபத்து நாலு சரக்குகளையும் வாட்ட சரக்குகள் உருகி மணியாகும். இந்த நீரினால் நவச்சாரமுதல், லவணங்கள் வரை எல்லாம் நிமிடத்தில் சுண்ணாம்பாகும். இதனால் துருசு சுண்ணாம்பாகும். தாளகம் மஞ்சள் நிறம் நீங்கி சுண்ணம் ஆகும். கெந்தகம் மஞ்சள் நிறம் நீங்கி வெள்ளையாகும். இதனால் வீரம் குருவாகும், லிங்கம் மெழுகு ஆகும். கல்லுப்பு மணியாகும், உபரசங்கள் ஈயமாகும். இது பட்டஉடன் ரசம் வெண்ணெய் ஆகும். இதனால்

உலோகங்கள் சுண்ணமாகும். உலோகங்களில் நூற்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் கொடுக்க பொன்னாகும். இருந்த இடத்தில் இருந்து செய். அலையாதே. கல்லுப்பை உருக்கிக் கட்டு. உப்பு இல்லாத கட்டை எல்லாம் தூர எறி. நாயன்மார்கள் சொன்ன இந்த முறையை உலகோர் அறியும் பொருட்டு நான் கூறினேன் இப்படி நபிமார்கள் சொன்னபடி தொந்தம் ஏற்ற (ஒரு சரக்கால் அதை சரக்கை காரமேற்றுவது தொந்தம் எனப்படும்)சுண்ணம் வலுவானதாக இருக்கும். மனதை நிலை நிறுத்தி செய்.

மேலும் சவுக்காரம் முடியவில்லை என்றால் யாரிடமும் கூறாதே. கேள் களங்கு ஒன்று கூறுகிறேன். இதை நம்பி நீ செய்து கொண்டு பெரிய வேலைகளைச் செய்து பிழைத்துக்கொள்.

களங்கு வேலை

கூறொணாக் கல்லுப்புப் பலமும்பத்துக்
கொடியதொரு சீனமது பலமும்அஞ்சு
ஆறொணாப் பழச்சாறு விட்டுநீயும்
அன்பாக முச்சாமம் ஆட்டிநன்றாய்க்
காறொணா யெடுத்துமே கரண்டியிட்டுக்
கனிவாக உருக்கிடவே சொல்லக்கேளு
பாறொணாச் சிவந்துமே உருகிநிற்கும்
பண்பாக வழித்துமே பகரக்கேளே. 308

பகரவே துருசதுவும் பலமுமைந்து
பதிவான கெந்தகமும் பலமுமுக்கால்
நகரவே சேர்த்துஅரை பழச்சாற்றாலே
நாடியே உண்டைபண்ணி மணிபோல்தானும்
வகரவே காயவைத்துச் சொல்லக்கேளு
வடிவான முன்னுப்பு உருகும்போது
தகரவே யிடைக்கிடைதான் தாக்கஉண்டை
தகமையா யுருக்கியெடு தன்மைதானே. 309

தண்மையாய்க் கரிபோலே தூளாய்நிற்கும்
தடையறவே வெங்காரம் பாதிசேர்த்து
உண்மையா யரைத்துமே உருக்கிப்பாரு
உறைகின்ற சத்தாகும் ஒழுங்குமாகும்
வண்மையாய்ச் சத்துதனைச் செம்பெடுக்க
வகையாகச் சொல்லுகிறோம் வண்மைகேளு
கண்மையாய் வெங்காரம் பாதிசேர்த்துக்
கடிதாகச் சத்ததுவும் பாதிசேரே. 310

பாதிதான் சேர்த்துமே பழச்சார்விட்டுப்
பதியவே மூன்றுநா ளரைத்துநீயும்
வாதியாய் வில்லைதட்டிக் கதிரிலிட்டு
வளமாகக் காயவைத்து வண்மைகேளு
தாதியா யகலிலிட்டுப் புடத்தைப்போடு
தாக்கிடவே கரிபோலச் சிவந்துபோகும்
மோதியே கொஞ்சமா யுருக்கிப்பாரு
மோசமில்லை செம்பானால் முறையுமாமே. 311

முறைமையாய்ச் செம்பானால் கொஞ்சஞ்சத்து
மோசமா யிருந்ததென்றால் பின்னஞ்சேரு
வறமையா யரைத்துமே வில்லைதட்டி
வளமாகக் கதிரில்வைத்துப் புடமும்போடு
பறமையாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
பதையாமல் குகையிலிட்டு உருக்கக்கேளு
நறமையா யுருக்கிடவே செம்புமாகும்
நலமாக மதியெட்டில் மூன்றுதாக்கே. 312

தாக்கிடவே பொன்னாகும் பொன்னினோடே
தடையறவே சேர்த்தூது தங்கமாகும்
வாக்கிடவே வித்துமே செலவுசெய்து
வழியாகப் பார்த்துமே முன்னேசெய்து
காக்கவே பிழைத்துமே பின்னேநன்றாய்க்
கனிவாகப் பார்த்திட்டுச் சொல்லக்கேளு
நோக்கிடவே பின்னேபார் சுண்ணப்போக்கை
நொடியிலே பார்த்திடவே ஜெயமுமாமே. 313

ஜெயமாகச் சோற்றுக்கு வைத்துக்கொண்டு
செழிப்பாக யெல்லாமும் விரயம்பண்ணு
பயமாகச் செய்துமே பிழைத்துக்கொள்ளு
பதிவாக யெல்லாமுஞ் சித்தியாகும்
உயமாக நூல்தன்னில் உழைத்துப்பார்த்து
உத்துமே சொன்னாக்கா லுறுதியாகும்
வயமாக யிப்படிக்குப் பார்த்துத்தேற
வடிவான பொருளாகும் வண்மையாமே. 314

பாடல்கள் 308-314: கல்லுப்பு 10 பலம் எடுத்துக் கொள் சீனிக்காரம் 5 பலம், இரண்டையும் பழச்சாறு விட்டு மூன்று ஜாமம் கல்வத்தில் அரைத்து எடுத்து அயக்கரண்டிக்குள் போட்டு உருக்கு. சிவந்து உருகி நிற்கும். இதை வழித்து வைத்துக்கொள் துரிசு ஐந்து பலம், கெந்தகம் முக்கால்பலம் இது இரண்டையும் பழச்சாறு விட்டு மூன்று ஜாமம் அரைத்து உருண்டையாக மணிபோல் செய்து காய வை. இந்த உண்டையை முன்செய்த உப்பை உருகும் போது எடைக்கு எடை கொடு. இரண்டும் உருகி கரிபோல் தூளாய் நிற்கும் இதனுடன் வெங்காரம் பாதி சேர்த்து உருக்கிப்பார். நல்ல சத்து கிடைக்கும். இது ஒழுங்கான வேலையாகும். இந்த சத்தில் செம்பெடுக்கும் முறையைக் கூறுகின்றேன் கேள். வெங்காரம் பாதியளவு சத்தி பாதியளவு சேர்த்து பழச்சாறு விட்டு மூன்று நாள் அரைத்து வில்லை தட்டி காயவை. இதை அகலில் வைத்து புடம் போடு. கரிபோல் சிவந்து இருக்கும். இதைக் கொஞ்சம் எடுத்து உருக்கிப்பார் செம்பானது கிடைக்கும். மோசம் போகாது.

மோசம் ஆகி கிடைக்கவில்லை என்றால் இன்னும் கொஞ்சம் சத்தைச் சேர்த்து முன்போல அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து அகலில் வைத்து புடம் போட்டு எடுத்து குகையில் இட்டு உருக்க செம்பு கிடைக்கும். இதை வெள்ளி எட்டு பங்கில்

மூன்று பங்கு கொடுத்து உருக்கு. வெள்ளி தங்கமாகும். இத்துடன் தங்கம் கலந்து உருக்க சுயத்தங்கம் கிடைக்கும். இதை விற்று செலவு செயது பின்பு சுண்ணங்கள் செய். நீ உண்பதற்கு மட்டும் வைத்துக் கொண்டு மற்றவற்றை நன்றாகச் செலவு பண்ணு. மனப் பக்தியுடன், பயத்துடன் செய்து பிழைத்துக் கொள். நூலில் உள்ளபடி ஆராய்ந்து பார்த்து செய்ய எல்லாம் சித்தியாகும். இப்படி செய்து செய்து பார்த்துத் தேற வாதம் வலுப்பெறும்.

பொய்வாதி

வண்மையா யுலகத்தில் வேதந்தானும்
வடிவாகக் குருமார்கள் வகுத்துவைத்தார்
தண்மையா யதைத்தானுந் தெரியாமற்றான்
தரணியிலே பொய்க்குருவின் சொல்லைக்கேட்டுப்
பண்மையா யுலகத்தோர் கெட்டாரப்பா
பாதையிது வென்றுநீ தெரிந்துசெய்வாய்
உண்மையா யுலகத்துக் குருமார்தானும்
உறுதியாய்ப் பொய்சொல்வார் உலுத்தர்தானே. 315

உலுத்தரய்யா குருமார்கள் வேலைசெய்யார்
உறுதியாய்க் குருமார்க்குப் புத்திரெம்ப
அலுத்துமே உலகத்தில் வேலைசெய்து
அடைவாகப் பிழைப்போர்க்கு வேதமென்று
வலுத்துமே சொல்லியே பணம்பிடுங்கி
வடிவாக வாழ்வோர்க்கு நரகமாகும்
கலுத்துமே உழைப்போர்க்கு யிடஞ்சல்சொல்லிக்
கனிவாகப் பிழைப்பவற்கு நரகந்தானே. 316

நரகமிலா நால்வேத மாகத்தானும்
நாட்டிலே ஆதியிலே ரெண்டுபேரு
கரகமா யுற்பத்தி நபிமார்செய்த
கணக்கிருக்கக் குருமார்கள் பணத்தைநம்பி
வரகமா யவரவற்குப் பொய்கள்சொல்லி
வடிவான பணத்தையே பிடுங்கவென்று
சரகமாய்ச் சொல்லியே பணம்பிடுங்கும்
சண்டாளக் குருமாரை நம்பிடாதே. 317

நம்பினவர் முட்டாளாம் உலகத்தோர்கள்
நலமான நால்வேதம் பார்த்துத்தேரு
தெம்பிட்ட குருமார்சொல் நம்பிநம்பி
திட்டாகக் கலியாணம் பண்ணும்போது
வம்பிட்டுப் பணம்பிடுங்கு வார்களப்பா
வடிவான குருமாருங் கெட்டாரப்பா
தம்பமா யுந்தனுக்குச் சொல்லிவிட்டேன்
சரியான படிபாகம் பார்த்துச்செய்யே. 318

பாகமாய்ப் பணங்கொடுக்க வேண்டாந்தானே
பதிவாகப் பொருள் கொடுத்தால் நரகமெய்தும்
வாகமாய்ச் சமுசாரந் தன்னினோடே
வடிவாக யிருந்தல்லோ வாழவேணும்
சீகமா யிப்படிக்குப் பொய்கள் சொல்லும்
ஜெகசாலக் குருமாரை நம்பிடாதே
தேகமது நிலைப்பதற்கு வழியைப்பாரு
ஜெகக்குருவை நம்பாதே நபியைப்போற்றே. 319

நம்பாமல் நபிமாரை வணங்கிப்போற்று
நலமாக லெப்பைதனை வணங்கவேண்டாம்
வம்பாக உலகத்திற் பொய்கள்சொல்லி
வந்துநின்ற பொய்க்குருவை நம்பவேண்டாம்
தம்பமாம் நால்வேதக் குருக்கள்தன்னைத்
தடையறவே நம்பினால் கெட்டுப்போவார்
உம்பமாம் அல்லாவை நம்பவேணும்
உறுதியாய் வாதங்கள் மிகவுமாமே. 320

அல்லாவாம் ஒருவனன்றி வேறேயேது
அவனியிலே பொய்குருக்கள் வருவாரப்பா
கல்லாமை ஒருவரையும் நம்பவேண்டாம்
கருத்துறவே பணங்கையி லிருந்துதானால்
தெல்லாகக் குருமார்கள் வந்துகூடித்
திடமாகப் பொருள்பறிப்பார் உலகத்தோர்கள்
வல்லாமா யல்லாவும் பார்த்துக்கொண்டு
வகையாகச் சிரிப்பாராம் அல்லாதானே. 321

தானென்ற நூல்தனிலே வாதந்தன்னைத்
தடையற்றுச் சொல்லியே தானிருக்க
வானென்ற வகையறியா வாதிமார்கள்
வையகத்திற் கெட்டுமே சுடுவார்கோடி
கானென்று கேட்டுசாஸ் திரத்தைவாங்கிக்
கண்டறியா மற்கெடுவார் கோடிபேர்கள்
ஊனென்ற சோத்துக்கு யில்லாமற்றான்
ஒருகோடி பேரலைந்தா ருண்மைதானே. 322

தானென்ற கோடியிலே யொருவருண்டு
தாட்டிகவா னாயிருப்பான் தன்மைசொல்லி
வானென்ற வாதங்கள் மிகவுஞ்செய்வான்
வடிவான பொருளறிவான் மார்க்கமாக
ஊனென்ற களங்குமுதல் சத்துமார்க்கம்
உறுதியாய்ச் செந்தூரஞ் சுண்ணமோடு
கானென்றே செய்தாக்கால் வாதமாகும்
கைகண்டால் உலகதனில் நம்புவாரே. 323

நம்பவே பொருளறியார் வாதப்போக்கை
நலமில்லை யென்பார்கள் புத்தியில்லார்
தம்பமாய் வாதங்கள் மிகவுஞ்சுட்டுத்
தாட்டிகமாய்ப் பொருளறியார் உலுத்தவாதி
நம்பியே ஒருவருடன் சொல்லிச் சொல்லி
நாதாந்த வாதங்கள் தன்னைத்தானும்
வெம்பியே விந்தில்லார் பெண்களைத்தான்
விரும்பினது போலாகும் விளக்கமாமே. 324

விளக்கமாய்க் கல்லுப்பு யென்றுசொன்ன
விதமான பரிபாஷை விளம்பக்கேளு
தளக்கமாய்ச் சித்திரைவை காசிமாதம்
தனியான பனிபெய்யுந் தன்மைபார்த்துக்
களக்கமாய் வெடியுப்பு விளையும்பூமி
கனமாகக் கல்லுப்பு விளைவுசொல்வேன்
இளக்கமாய்ச் செங்கலது வீடுகட்டி
யிதமான செங்கலிலே விளையுந்தானே. 325

விளையுமே பனியதுவும் பெய்யும்போது
விருப்பமாய்ச் செங்கலிலே பூத்துதிர்ந்து
களையுமே யிருக்கின்ற மண்ணைவாரி
கனிவாகப் பாண்டத்தி லிட்டுநீயும்
பழையபடி ஒன்றுக்கு யெட்டுத்தண்ணீர்
பதிவாக ஊத்தியே கொதிக்கவைத்து
தளையவே தெளிவிறுத்து உப்பாய்க்காச்சித்
தாட்டிகமா யெடுத்துமே பின்புகேளே. 326

கேளுமே காய்ச்சினதோ ருப்புத்தானும்
கெடியாகப் படிநாலு அளந்துவிட்டு
வாளுமே வெள்ளைக்கல் சுண்ணமொன்று
வடிவான கல்லுப்புப் படியுமொன்று
தாளுமே பாணியது யெட்டுவார்த்துத்
தடையறவே பாண்டத்தி லடுப்பிலேற்றிப்
பாளுமே போகாம லெரிநேர்பாகம்
பதிவாகப் பொங்காமற் காய்ச்சிக்கொள்ளே. 327

காய்ச்சியே குளம்பான பதத்தில்வாங்கிக்
கனிவாகச் சாம்பலைத்தான் கீழேயிட்டு
தாய்ச்சியே குளம்பதனை மேலேஊற்றித்
தப்பாமற் சீலையைத்தான் மூடிப்போடு
வாய்ச்சபடி அதன்மேலே சாம்பலிட்டு
வகையாக மூடிவைக்க நீர்களற்றுப்
பாய்ச்சிடவே யிருக்குமது உப்புத்தானும்
பதிவாக உருண்டைசெய்து கதிரில்வையே. 328

வைத்துமே உண்டைக்குக் கவசங்கேளு
வகையான கடல்நுரையுஞ் சீனமோடு
நைத்துமே மேனிச்சார் விட்டரைத்து
நலமாக முன்னுண்டை மேலேகட்டு
கைத்துமே வலுவாகக் கட்டித்தீரு
கனமாகப் புடம்போட்டுப் பிரித்துப்பாரு
மைத்துமே உருகியது மணியாய்நிற்கும்
வகையாக உண்டைமேல் கவசங்கட்டே. 329

கவசமாம் முன்போலே கட்டிநீயும்
கணக்காகப் புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
தவசமா யிப்படிக்குத் தரமுமஞ்சு
தடையறவே கட்டியே புடமுமிட்டால்
பவசமா யுருகியது மணியுமாகும்
பாவகமாய்க் குகைதனிலே வைத்துருக்கத்
துவசமாய் வெள்ளிபொன்போல் கண்விட்டாடும்
துடியான வாதமிது தொன்மைதானே. 330

பாடல்கள்:315-330: உலகில் வேதங்களை குருவானவர்கள் வகுத்து வைத்தனர். இதை அறியாத உலகத்தோர்கள் பொய்யான குருமார்களின் பேச்சை நம்பி கெட்டுப் போனார்கள். நீ அறிந்து அந்த வழி செல். உண்மையைப் போல் உலக குருமார்கள் பொய்களைக் கூறுவார்கள். இவர்கள் நமக்குத்தான் வேதம் என்று கூறி ஏமாற்றி பணம்பிடுங்கி வாழ்வார்கள். இவர்களுக்கு நரகமே எய்தும் "பிறர் உழைப்பை குறை கூறி இடைஞ்சல் செய்பவர்களுக்கு நரகம் எய்தும்"

ஆதியிலே இரண்டு நபிமார்கள் சேர்ந்து எந்த தீமையும் அற்ற நான்கு வேதங்களையும் கூறினர். அதை விட்டு விட்டு உலக குருமார்களின் பொய்யான பேச்சுகளில் நம்பி பணத்தை இழந்து ஏமாந்து விடாதே. இப்படி நம்பியவர்கள் இவ்வுலகில் முட்டாள்களே ஆவார்கள். எனவே நீ நான்கு வேதங்களையும் பார்த்து தேறு. இவ்வுலகில் குருமார்கள் உனக்கு கல்யாணம் செய்து வைக்கிறேன் என்று கூறி பல மூடவழக்கங்களை உண்டாக்கி பணம் பிடுங்கி விடுவார்கள். அவர்களை நம்பி ஏமாறாதே, உனக்கு பிடித்த பெண்ணுடன் நீ வாழ்க்கை நடத்த வேண்டும். அதுவே இல்லறம். எனவே இதற்கு பொய்கள் சொல்லும் குருமார்களை, ஜெகஜால திருடர்களை நம்பாதே. உடல் நிலைக்க உள்ள வசதியான காயசித்தி மார்க்கத்தைப்

பார. உலக குருவை நமபாமல் நபியைப் போற்று. லெப்பையை வணங்காதே. (லெப்பை - இஸ்லாமிய மதகுரு) இது போன்று பொய் சொல்லும் குருவானவர்களையும், நான்கு வேதங்களை படித்த குருக்களையும் நம்பாதே. நீ கெட்டுப் போவாய். அல்லாவை நம்பு. வாதம் உறுதியாக சித்தியாகும். அல்லா என்ற இறைவன் அன்றி வேறு ஒரு பொருள் ஏது? இந்த பூமியில் பொய் குருமார்கள் பலர் வருவார்கள். உன் கையில் பணம் இருந்தால் அதைப் பறிக்க கூடித்திட்டமிட்டு பறிப்பார்கள். இவர்களைப் பார்த்து அல்லா சிரிப்பார். சிறந்த நூல்களில் ரசவாதங்கள் பல கூறியிருக்கும் போது அதை அறியாத வாதிகள் உலகில் சுட்டுக் கெட்டுப்போவார். சாஸ்திரங்களை கேட்டு வாங்கி அதைப்பார்த்து அறியாமல் சுடுவார் கோடி. உண்மையாய் சேர்மானங்கள் அறியாமல் சோத்துக்கு இல்லாமல் ஒரு கோடி பேர் அலைவார்கள். கோடியிலே ஒருவர் சிறந்த அறிவுடன், வாதங்களில் தேர்ச்சி பெற்று, பொருளறிந்து களங்குகள், சத்து எடுக்கும் முறை, செந்தூரம், சுண்ணம், முதலியவைகள் செய்து கைமேல் காட்டி நிற்பான். இவனை உலகோர் நம்புவார்கள்.

உண்மைப்பொருள் அறியாதவர்கள் வாதம் கூடாது என்பார்கள். இவர்கள் எவ்வளவு சுட்டாலும் உண்மைப் பொருளை அறியார்கள். இவர்கள் கூடி கூடி பேசி எதையும் செய்ய மாட்டார்கள். இவர்கள் ஆண்மையற்றவர்களுக்கு ஒப்பாவார்கள். உண்மையாய் கல்லுப்பு என்று சொன்ன பொருளின் பரிபாஷையைக் கூறுகிறேன்.

சித்திரை, வைகாசி மாதங்களில் பனி நன்றாகப் பெய்யும் நாளை பார்த்து உவர்மண் பூமிக்குச் சென்று அதிகாலையில் சிவப்புச் சூரியன் உதிக்கும் நேரம் பூமியிலிருந்து வீடுகட்டுவது

போன்று எழுந்து பூத்து உதிரும் (செங்கல் - சிவப்புச் சூரியன் உதிக்கும் அதிகாலை நேர ஒளி, நம்முன்னோர்கள் "செங்கல் மங்கலாக" என்று காலை, மாலை அந்தி பொழுதை கூறுவதுண்டு) இந்த உதிர்ந்த மண்ணை வாரி வந்து ஒரு பாண்டத்தில் இட்டு ஒன்றுக்கு எட்டு பங்கு நல்ல தண்ணீர் ஊற்று கொதிக்க வைத்து வடிகட்டி மரபண்டத்தில் தெளிவிறுந்து உப்பாகக் காய்ச்சி எடுத்துக் கொள்.

இந்த காய்ச்சிய உப்பு படி நாலு, கல் சுண்ணம் படி-1, நீர் எட்டுபடி ஊற்றிக் கரைத்து வடிகட்டி அடுப்பேற்றி பொங்காமல் காய்ச்சி குழம்பு போன்ற பதத்தில் எடுத்து ஒரு முழ நீளம் சாண் அகலம் சாம்பலைப் பரப்பி அதன் மீது மெல்லிய துணியை விரித்து அதன் மீது குளம்பை ஊற்றி அதன் மீது மெல்லி துணியை விரித்து அதன் மீது சாம்பலைப் பரப்பி வைக்க நீரை சாம்பல் உறிஞ்சிக் கொள்ளும். பின்பு துணியை நீக்கி நீரற்ற உப்பை உருண்டையாகச் செய்து உருட்டி வெயிலில் வை. இந்த உருண்டைக்கு கடல் நுரையும், சீனிக் காரத்தையும் சேர்த்து குப்பைமேனிச் சார் விட்டு நன்கு அரைத்து கவசம் செய்து வலுவாகச் செய்து காயவைத்து பெரிய புடமாகப் போடு.

ஆறவிட்டுப் பிரித்து பார்க்க உள்ளே மணியாக நிற்கும். மறுபடியும் எடுத்து முன்போல க்வசம் செய்து புடம்போடு. இப்படி ஐந்து தரம் செய். உப்பு இறுகி மணிபோல் ஆடும். இதை குகையில் வைத்து உருக்க வெள்ளி, தங்கம் போல் கண்விட்டு உருகி ஆடும். இது வாதத்தின் முதன்மையாகும்.

கல்லுப்பு மேரு

தானென்ற உப்பைத்தான் குகையில்வைத்துத்
தாட்டிகமா யுருக்கியே தன்மைகேளு

வானென்ற மெழுகாலே குகைதான்பண்ணி
வகையான குகையினுட மார்க்கங்கேளு
ஊனென்ற உப்புருக்கிக் குகையில்சாய்த்து
உறுதியாய் வார்த்தபின்பு யெடுத்துநீயும்
கானென்ற குகையோட்டை யில்லாமற்றான்
கனிவாகப் பார்த்துநீ வைத்துக்கொள்ளே. 331

பாடல்:331:- இந்த உப்பை குகையில் வைத்து உருக்கிக் கொண்டு மெழுகால் குகைபோல் பண்ணி உப்பை உருக்கி இந்த குகையின் அச்சில் ஊத்தி எடுத்து ஓட்டையில்லாமல் உப்புக் குகையை எடுத்து வை.

இரசச் செந்தூரம்

கொள்ளவே சூதமென்ற ராஜாதன்னைக்
குணமாகச் செந்தூரங் கூறக்கேளு
வள்ளலார் சொன்னபடி சூதந்தன்னை
வகையாயூ மத்தஞ்சார் விட்டரைத்து
உள்ளபடி யிருசாம மரைத்துநீயும்
உறுதியாய் உப்பான குகையிலிட்டுத்
துள்ளவே அடுப்புதனில் சட்டியிட்டு
துடியான மண்விபரஞ் சொல்லக்கேளே. 332

சொல்லவே சட்டிதனில் மணலைத்தானும்
துடியாக நாலுவிரற் கடைதானிட்டுக்
கல்லமருங் குகையைதன் மேலேவைத்து
கணக்காக மணலைத்தா னிரம்பயிட்டு
வல்லவே குகையின்வாய் தெரியவிட்டு
வடிவாகத் தீயெரிப்பாய் கமலம்போலே
சொல்லவே முத்தீயு மூட்டிப்பின்பு
சுகமாகப் பனிரெண்டு சாமந்தீயே. 333

தீயிட்டு ஆத்தியபின் சொல்லக்கேளு
திடமான உப்பான குப்பிதன்னைக்

காயிட்டு ஆத்தியே யெடுத்துக்கொட்டு
கனிவான சூதஞ்செந் தூரமாகும்
பாயிட்டு முருக்கம்பூப் போலாம்நன்றாய்ப்
பதியவே யெடுத்துநீ பாகங்கேளு
வாயிட்டு மகமதுவை வணங்கியேற்றி
வடிவான நபிமாரைத் தொழுதுபோற்றே. 334

போற்றியே ஈசானந் தன்னில்நின்று
பொருந்தவே நூறுசேர் செம்புருக்கிக்
கோற்றியே சூதச்செந் தூரமொன்று
குறித்துவிடு உருக்கியெடு யேமந்தானும்
மாற்றியே பத்தரையாம் ஆணிக்கொக்கும்
மதியென்ற உப்புக்குங் காவிக்குந்தான்
நாற்றிசையு மெய்க்கவே யிறங்கிப்போகும்
நாதாந்த யாகோபு சொன்னவாறே. 335

சொன்னதொரு செந்தூரந் தன்னைவைத்துச்
சொற்பெரிய நபிமாரைத் துதித்துப்போற்றி
நன்னயமா யிப்பாகஞ் செய்துகொண்டு
நாட்டிலே சொல்லாமல் மனம்நிறுத்தி
இன்னிலத்தி லிருக்கமட்டும் உண்டுடுத்தி
இதமாகச் சோற்றுக்கு யிடமேதேடி
கன்னல்போல் சூதசெந் தூரம்வைத்துக்
கருதியே கலக்கமது இல்லைதானே. 336

இல்லையென்று சொல்லாமற் செந்தூரத்தை
இதமாகப் பணவிடைதான் தேனிலுண்ணு
நல்லறிவாய் நரைதிரைக ளூற்றுப்போகும்
நாட்டமுடன் புளியுப்பு எண்ணெய்தள்ளு
பொல்லாமை யில்லாநல் மார்க்கமாகப்
போக்கோடே பாகமாய்ச் செய்துநீயும்
கொல்லவே சரக்குத்தான் செந்தூரமாகும்
கோடிகவ ராட்லாங் கொள்கைதானே. 337

தானென்ற கலுலுப்பா வெல்லாமாச்சு
தனியான சூதமது தாக்கப்பட்டு
வானென்று சாகுமது செந்தூரித்தால்
வகையான கவர்கோடி ஆடலாகும்
ஊனென்ற உடல்தனிலே செந்தூரத்தை
உண்டிடவே காயமது கற்றூணாகும்
கானென்ற நபிமார்க ளாடுமாட்டு
கருத்தான மகமதுவைக் கண்டுபோற்றே. 338

கண்டுமே மேற்குமுக மாகிநின்று
கருத்துதனை நிலைநிறுத்திக் கவலையுற்று
பண்டுமே கால்மடித்துக் கரத்தைநீட்டிப்
பதிவாக யெழுந்தருளும் பாகமாக
செண்டுமே வானத்தை நோக்கிநீயும்
செவ்வையாய்த் திரும்பியே தொழுதுபோற்றி
முண்டுமே செய்யாமற் காண்பாரல்லால்
முத்தியுண்டு தொட்டதெல்லாஞ் சித்திதானே. 339

சித்தியது ஆகவென்றால் கல்லுப்பைத்தான்
சீர்தூக்கிப் பார்த்துமெள்ளப் பாகத்தோடே
முத்தியாய்ச் செய்திடிலோ மூர்க்கமாகும்
முத்திபெறக் கல்லுப்பில் முத்தியுண்டு
சத்தியமாய்ச் சொல்லிவிட்டே னின்னூல்தன்னில்
சரியான கைபாக வரிசைகண்டு
நத்தியே செய்திட்டாற் பலனு மாகும்
நாதாந்த யாகோபு நலஞ்சொன்னாரே. 340

பாடல்கள்: 332 - 340: ரசத்தைச் செந்தூரம் செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள். ரசத்தை ஊமத்தம் சார் விட்டு இரண்டு ஜாமம் அரைத்து எடுத்து உப்புக் குகையில் போட்டு பின்பு ஒரு சட்டியில் நாலு விரல் உயரத்திற்கு மணல் போட்டு அதன் மேல் குகையை வைத்து பின்பு குகையைச் சுற்றி நிரம்ப மணலை போட்டு குகையின் வாய்பாடு தெரியும்படி போட்டு

அடுப்பேற்றி கமலம் போல் தீ எரிப்பாயாக. பின்பு முத்தீயும் மாற்றி (தீபாக்னி- கமலாக்கினி -காடாக்னி-முத்தீ. தீபாக்னி- 1 விறகு எரிப்பு -கமலாக்னி - 2 விறகு எரிப்பு, காடாக்னி 4 விறகு எரிப்பு) பன்னிரண்டு ஜாமம் எரித்து ஆறிய பின் உப்புக் குப்பியை எடுத்துத் தரையில் கொட்ட சூதம் செந்தூரமாய் இருக்கும். முருக்கன்பூ போன்று இருக்கும். இதை எடுத்து வைத்துக் கொண்டு நபிமாரைத் தொழுது போற்று.

நூறு சேர் செம்பை உருக்கிக் கொண்டு ஒரு சேர் சூத செந்தூரம் கொடுத்து உருக்கி எடுக்க பொன்னாகும். இது பத்தரை மாற்றுத் தங்கமாகும். இது உப்புக்கும் காவிக்கும் நிற்கும். இந்த செந்தூரத்தைச் செய்து விற்று யாரிடமும் கூறாமல் உண்டு, உடுத்தி வாழு. இந்த செந்தூரம் இருக்கும் வரையில் கலங்கத் தேவையில்லை. இந்த செந்தூரத்தை பணஎடைவீதம் தேனில் குழைத்து 1மண்டலம் உட்கொள். நரை, திரைகள் நீங்கும். புளி, உப்பு, எண்ணெய் நீக்கி பத்தியமாய் இரு. எந்த பொல்லாத செயல்களிலும் ஈடுபடாமல் நல்வழியில் நின்று எந்த சரக்குகளை செந்தூரித்தாலும் அது செந்தூரமாகும். கல்லுப்பால் ரசமானது செந்தூரமானால் பல வேலைகள் செய்யலாம். இந்த செந்தூரம் உடலில் சேர, உடல் கற்தூண்போல் ஆகும். இது நபிமார்கள் முறையாகும். மேற்கு முகமாக நின்று கருத்தை ஒரு நிலைப்படுத்தி கவலைகளை மறந்து அமர்ந்து கைகளை நீட்டி வானத்தை நோக்கி சிறப்பாக தொழுகை நடத்தி வாதத்தைச் செய்ய முத்தியும் உண்டு. தொட்டதெல்லாம் சித்தியாகும். இவ்வாறு சித்தியாக வேண்டும் என்றால் கல்லுப்பை வைத்து நிதானமாகச் செய்து பார்க்க முக்தி உண்டு. கல்லுப்பால் முத்தியுண்டு. இந்த நூலில் சத்தியமாக நான் கூறிவிட்டேன்.எனவே கைபாக வரிசை கண்டு செய்தால் பலன் உண்டாகும். இதை யாகோபு கூறினார்.

செய்யுந் தொழில்

நலமாகச் சவுக்காரச் சுண்ணத்தாலே
நாடினால் சகலசித்தும் நல்கும்பாரு
அலமாக வாதவித்தை அலைச்சலில்லை
ஆடினால் கவர்கோடி ஆடலாகும்
செலந்தனிலே நடந்தாப்போ லிருந்துவாழ்வீர்
சீக்கிரமாய்ச் சவுக்காரச் சுண்ணம்பண்ணு
பிலமாகச் சூதத்தைக் கட்டித்தீரு
பிரபலமா யெல்லாமுஞ் சித்தியாமே. 341

சித்தியாய் வெடியுப்புச் சுண்ணம்பண்ணிச்
செயநீரா யாக்கியே வீரமிட்டுப்
பத்தியாய் வெகுதொந்த மாகப்பண்ணிப்
பதிவாகச் சவுக்காரந் தன்னிலிட்டு
நத்தியே அரைத்திடவே கடுஞ்சுண்ணந்தான்
நலமாக ஆகிவிடுந் துருசுமேலே
கத்தியே கட்டிவிடுந் துருசுநீறும்
கனிவாக நீறியபின் சொல்லக்கேளே. 342

சொல்லவே துருசுநீர் தன்னிற்கேளு
சுருதிபெறச் சூதத்தைக் கட்டிநீயும்
நல்லவே செந்தூரம் பண்ணித்தீரு
நலமாகச் செம்புதனிற் கொடுத்துப்பாரு
வல்லமையாய்த் தங்கமது யெளிதிலாகும்
வாய்ப்பேச்சால் சொல்லாதே உழைத்துநீயும்
புல்லறிவாய்ச் செந்தூர முண்டுபாரு
பெருமைதரும் நபிமார்போ லிருக்கலாமே. 343

இருக்கவே கல்லுப்பு தன்னைவாங்கி
இயலான சவுக்காரச் சுண்ணத்தாலே
நருக்கென்று கட்டியே புடமுமிட்டு
நலமாக யெடுத்துருக்கி மேருபண்ணி
பருக்கவே சூதத்தை அதிலேவிட்டுப்
பதிவாக யெரித்திடச் செந்தூரமாகும்
கருக்குமே நவலோகம் பழுக்கும்பாரு
கணக்காகச் சொல்லிவிட்டேன் கருதிப்பாரே. 344

கருதிப்பார் நுலாய்ந்த குழந்தைக்கெல்லாம்
கணக்குப்போல் வாதத்தைப் பற்றிச்சொன்னேன்
இருதயத்தில் வாதிமார் வைத்திருத்தி
இதமாக யிக்காண்டந் தனிலுழைத்துப்
பருதிப்பார் பலனெல்லாம் கண்டுதேறிப்
பதைப்பற்று உலகத்தில் பற்றிப்பார்க்கக்
குருதிபோற் செய்திட்டுச் செந்தூரத்தைக்
குணமாகக் கொண்டிட்டவே சித்தியாமே. 345

சித்தியாம் ஏழைக்கும் வாதிக்குந்தான்
சிறப்பாக உப்பொன்று சொல்லக்கேளு
பத்தியா யிந்தஉப்பி லுழைத்துநீயும்
பதிவாகச் சூதத்தைக் கட்டிக்கொண்டு
நத்தியே செம்புதனிற் கொடுத்துப்பாரு
நானிலத்தில் வெகுவேதை யாடித்தேரு
முத்தியது வந்துவிடும் நபிமார்போலாம்
முனிவான சரக்கறிய முத்திதானே. 346

பாடல்கள்: 341-346: சவுக்காரச் சுண்ணத்தால் சகலமும் சித்தியாகும். ரசவாத வித்தை அலையாமல் செய்யலாம். எனவே சீக்கிரம் சவுக்காரச் சுண்ணம் செய். அதை வைத்து ரசத்தைக் கட்டு. எல்லாம் சித்தியாகும். அதன் பின் வெடியுப்புச் சுண்ணம் பண்ணி அதை செயநீராக்கி அதில் வீரம் போட்டு பல தொந்தம் ஏற்றி அதை சவுக்காரத்தில் விட்டு அரைக்க கடும் சுண்ணம் ஆகும். இதை துருசு மேல் கட்ட துருசு நீறும். துரிசு சுண்ணமான பின்பு அதை வைத்து பாதரசத்தைக் கட்டி அதை செந்தூரம் பண்ணி செம்புதனில் கொடுத்துப் பார். தங்கம் எளிதில் கிடைக்கும். வாய்ப் பேச்சால் ஒன்றும் ஆகாது. செய்துபார். இந்த செந்தூரத்தை உட்கொள். நபிகள் போல் ஆவாய். கல்லுப்பை வாங்கி சவுக்காரச் சுண்ணத்தை கவசம் கட்டி புடம்போடு. அதை எடுத்து உருக்கி குகைபண்ணி அதில் ரசத்தை விட்டு எரிக்க செந்தூரமாகும். இந்த செந்தூரத்தால் ஒன்பது

உலோகங்களும் பொன்னாகும். என்னுடைய நூலை ஆராயும் என் குழந்தைகள் எல்லோருக்கும் கணக்காக வாதத்தைப் பற்றிக்கூறினேன். இதை மனதில் வைத்து இந்த நூலைப் பார்த்துச் செய்து பலனை அறிந்து செந்தூரத்தை உட்கொள்ள காயம் சிவக்கும், சித்தியாகும். மேலும் ஏழையான ரசவாதிக்குச் சிறப்பான உப்பொன்றைக் கூறுகின்றேன். இதைச் செய்து ரசத்தைக் கட்டி கொண்டு செம்பில் கொடுக்க பல ரசவாத வேலைக்கு சித்தியாகும். முக்தியும் வந்து விடும்.

கரியுப்புக் கட்டு

முத்தியாய்க் கல்லுப்புச் சேருஒன்று
முனிந்துமே மேனிச்சார் தன்னாலாட்டி
நத்தியே சூதமது பலமும்நாலு
நலமான நாகமது பலமுமொன்று
சித்தியாம் நாகத்தை உருக்கிக்கொண்டு
சிறப்பாகச் சூதத்தை அதிலேவாரு
பத்தியாய்ப் புட்டுபோ லுண்டையாகும்
பகரறிய உண்டைமேற் கவசங்கேளே. 347

கவசமாய் மேனிச்சார் விட்டரைத்துக்
கனிவான உப்பைத்தான் கவசங்கட்டித்
தவசமாய் வலுவாகச் சீலைசெய்து
தாட்டிகமாய் ரவிதனிலே காயவைத்துப்
பவசமா யதன்மேலே சவுக்காரத்தைப்
பதிவாகக் கட்டியே காயவைத்து
அவசியமாய்க் காடையென்ற புடத்திலிட்டால்
அடைவாக மஞ்சள்போ லாகுந்தானே. 348

ஆகுமே மஞ்சளாம் உப்பிலேறி
அடைவாக ரசஞ்சொக்கும் அறிந்துநீயு
வேகுமே கல்வமிட்டு அரைநால்சாமம்
விதமான பொற்றலையி நீரினாலே

பாகுபெற வில்லைதட்டிக் கதிரில்வைத்துப்
பதிவாகச் சுண்ணமென்ற கவசங்கட்டி
வாகுமே முன்புடம்போல் போட்டுத்தீரு
வடிவாக யெடுத்திடவும் வகையதாமே. 349

வகையாக இப்படிக்குச் சிவக்கமட்டும்
வல்லமையாய்ப் புடம்போட்டு யெடுத்துநீயும்
தகையாக நபிமாரைத் தொழுதுபோற்றித்
தன்மைபெற மனமதுதானுருகி நீயும்
துகையாகச் செம்பதுதான் பத்துக்கொன்று
துடியாகக் கொடுத்துருக்க எட்டுமாத்து
நகைசெய்து விற்றுமே செலவுசெய்து
நலமாகச் சுழிமுனையை நாடிப்பாரே. 350

நாடிப்பா ரிப்படிக்குச் சூதங்கட்டி
நலமான ஞானவழி அடுத்துக்கூடு
தேடிப்பார் நபிமாரைத் தொழுதுபோற்றித்
திறமாகப் பத்தியே தொழுதுநீயும்
கூடிப்பார் மனதுருகிப் பார்க்கும்போது
குணமாகத் தீபவொளி குணமுந்தோணும்
பாடியே நிற்தொந்த மாடிநீயும்
பதிவான வாதவித்தை பயின்றுசெய்யே. 351

செய்யவே வாதந்தா னெளிதோவல்ல
செய்திட்டால் வெகுசுருக்கு சித்தியோர்க்குப்
பையவே கம்பமென்ன உச்சமாகும்
பதிவாக யேறியே ஆடுவோர்க்கு
நையவே வெகுசுருக்குப் பழகினோற்கு
நாட்டிலே பழகாதார் பயமுமாகும்
மெய்யுமே சொன்னாலும் பொய்யென்பார்கள்
மேன்மையில்லா வாதிக்குப் புத்திசொல்லே. 352

பாடல்கள்: 347-352: கல்லுப்பு ஒரு சேர் எடுத்து குப்பைமேனிச் சார்விட்டு அரைத்துக் கொள். ஒரு பலம் நாகத்தை சுத்தி செய்து உருக்கிக் கொண்டு அதில் நான்கு பலம் பாதரசத்தைக் கொடுக்க புட்டு போல் உண்டையாகும். இந்த உருண்டை மேல் கவசம் கூறுகிறேன் கேள். முன்பு அரைத்து வைத்திருந்த உப்பைக் கவசம் கட்டு. அதன் மேல் வலுவாக சீலை செய்து வெயிலில் உலரவை. அதன் மேல் சவுக்காரத்தைக் கவசம் கட்டி காயவை. அதன் பின் காடை புடம் போடு. ஆறவிட்டு எடுக்க மஞ்சள் நிறமாகும். ரசமானது உப்பில் ஏறி கலந்து இருக்கும். இதை கல்வத்தில் இட்டு வெடியுப்பு ஜெயநீர் விட்டு நான்கு ஜாமம் அரை. எடுத்து வில்லைதட்டி வெயிலில் காயவை. இதன் மேல் சுண்ணாம்புக் கவசம் செய். முன்போல் காடைபுடம் போடு. இப்படி சிவக்கும் வரை புடம் போட்டு போட்டு எடுத்து நபிமாரைத் தொழுது செம்பை உருக்கி பத்துக்கு ஒன்று என்ற கணக்கில் இந்த செந்தூரத்தைக் கொடுக்க எட்டு மாற்று தங்கமாகும். இதை நகையாக செய்து விற்று செலவு செய்து கொண்டு சுழிமுனையில் மனதை வைத்து யோகம் செய். இப்படி சூதத்தைக் கட்டி ஞானவழி சென்று நபிமார்களைத் தொழுது மனது உருகி யோகம் பார்க்க தீப ஒளி தோன்றும். எனவே ரசவாத வித்தையை நன்கு பயின்று செய்.

ரசவாதம் என்பது அவ்வளவு எளிதானதல்ல. ஆனால் செய்திட்டால் சித்தியுள்ளவர்களுக்கு வெகு எளிது. இதுவே வேதத்தின் உச்சியாகும். பழகினால் ஏறுதற்கு எளிது. பழகாதவர்களுக்கு பயம் உண்டாகும். உண்மையைச் சொன்னாலும் பொய் என்பார்கள். எனவே ஏழைவாதிகளுக்கு புத்தியைச் சொல்.

வாதி செய்கைகள்

புத்திதா னேதென்றாற் சொல்லக்கேளு
புகலறிய வாதிமார் செய்யுங்கூத்து

பத்தியாய்ப் பூநீரை யெடுத்துவந்து
பதிவான முத்திரத்தை அதிலேயிட்டு
நத்தியே கதிரில்வைத்துக் காயப்போட்டு
நலமாகச் சுண்ணாம்பு நீருங்கூட்டிச்
சித்தியாய்க் கல்லுப்பு மதிலேயிட்டுச்
சிறப்பாகத் தீயெரித்துக் காய்ச்சுவாரே. 353

காச்சியே குழம்பான பதத்திலப்போ
கருணைபெற நல்லெண்ணெய் தன்னைஊற்றி
வாச்சிதுகா னென்றுசொல்லி உண்டைபண்ணி
வடிவான யெண்ணெய்தனைக் கழட்டுவேன்பார்
தாச்சியோ வென்றுசொல்லிக் கழட்டும்போது
தனியாகக் கொளகொளன்று வந்துதென்று
பாச்சியே சொல்லிவிட்டு மயங்கித்தானே
பதீவாக யிப்படிக்குப் புலம்புவாரே. 354

புலம்புவார் பாகத்தை யறியாமற்றான்
போக்கோடே புடம்வைத்துப் பின்பெடுத்து
அலம்புவார் ஆயாசப் பட்டுப்பட்டு
ஆடியே மனதுபுண்ணா யலைந்துசுட்டுத்
தலம்புவார் சவுக்காரச் சுண்ணமாச்சு
தடையறவே வெடியுப்பு நீறிப்போச்சு
உலம்புவார் யின்னமென்ன பாடுயென்பார்
உற்றுணர்ந்து பாராத உலுத்தர்தானே. 355

உலுத்தராய்த் துருசுதனில் கட்டிப்போட்டு
உண்மையாய்ப் புடம்போடத் துருசைத்தானும்
அலுத்துமே கரியாச்சு தென்றுபார்த்து
அடைவாகச் சொல்லியே புலம்புவார்கள்
பலுத்துமே பல்லைத்தான் கடிப்பாரப்பா
பதமறியார் செய்கின்ற பாகம்போக்கி
உலுத்தரவர் கனபாடு படுவாரப்பா
உண்மைநூல் தெரியாத வாதிதானே. 356

வாதியாம் புத்தியுள்ள வாதிதானும்
வடிவான சாத்திரமா ராய்ந்துபார்த்துக்

கோதியே நூல்வர்மங் கண்டுதேறிக்
குணமாகப் பொறுமையாய்ச் செய்வாரப்பா
சோதியென்ற பூநீரை அறிந்தெடுத்துச்
சுருக்காகச் செய்துமே சுண்ணம்பண்ணி
ஆதியாம் சுக்கான்கல் லறிந்தெடுப்பார்
அடைவான ரசவாதி ஆண்மைதானே. 357

ஆண்மையாய் உலகோர்க்கு வாதமெய்தில்
அழிம்பான புத்திகளை மனதிலெண்ணித்
தாண்மையாய்க் கொலைகளவு பொய்மார்க்கங்கள்
தாட்டிகமாய்ச் சாராயங் கள்ளுதன்னை
வாண்மையாய் அபினியொடு கஞ்சாவெல்லாம்
வடிவாக உண்டுமே மயங்குவார்கள்
காண்மையாய்க் குடிகேடு செய்வாரப்பா
கனிவான குறும்பரவர் கணக்குமாமே. 358

கணக்காகப் பொய்க்குரும்பு வாதிதானும்
கனிவாகச் சவுக்கார முடிப்பேனென்று
இணக்கமாய்ச் சொல்லியே பூனீற்றில்தான்
இதமாக உழைக்காமல் நினைத்ததெல்லாம்
பணக்கமாய்ச் சொல்லியே செய்துபார்த்துப்
பலனில்லை யென்பார்கள் பதிவிலாதார்
உணக்கமாம் நிற்மூட வாதிக்குத்தான்
உறுதியாய் நூலதனைக் கொடுத்தார்பாழே. 359

பாழான நரகமுண்டு நூல்கள்தன்னைப்
பரிகாசஞ் செய்வதற்கு அல்லலுண்டு
சூழான கஞ்சிக்கி யேங்கியேங்கிக்
கொடுப்பாரைக் காணாமற் றிரிந்தலைந்து
வாழான வாழ்வதனைத் தானிழந்து
வடிவான மேனிகுன்றித் தயங்கிநிற்பார்
தாழாத நபிமார்க ளிட்டசாபந்
தனையகற்ற ஒருவரால் முடியாதென்னே. 360

முடிவாகச் சொன்னதொரு சுண்ணக்காண்டம்
முதலாகக் கைபாக வரிசைகண்டு

அடியாகச் செய்திட்டுச் சவுக்காரத்தை
அன்பாக முடித்துமே அறிந்துநீயும்
பிடிபாடாய்ச் சொன்னதுபோல் துருசைநீற்றிப்
பின்புதான் சூதத்தைக் கட்டிப்பாரு
முடிவாக வாதமது யேவல்கேட்கும்
முதண்ட நபிமார்கள் சொன்னதாமே. 361

பாடல்கள் :353-361: ரசவாதம் செய்யும் வாதிகள் செய்யும் கூத்தைக் கூறுகின்றேன் கேள். இவர்கள் பூநீரை எடுத்து வந்து அதில் மூத்திரத்தை விட்டு வெயிலில் காயப்போட்டு அத்துடன் சுண்ணாம்பு நீர் கூட்டி கல்லுப்பையும் அதில் போட்டு கலக்கி காய்ச்சுவார்கள், அது குழம்பு பதமாக வரும் போது நல்லெண்ணெயை அதில் ஊற்றி சித்தியாயிற்று என்று கூறி உருண்டையாகச் செய்து எண்ணெயை கழட்டுகிறேன் என்று கூறி கழட்டும் போது கொழ கொழ என்று ஆகிவிட்டது என்று கூறி புலம்புவார்கள்.

இப்படி செய்பாகம் அறியாமல் புலம்பி பின்பு புடம் வைத்து எடுத்து மிகுந்த பிரயாசைப்பட்டு மனது வேதனைப்பட்டு சுட்டு சவுக்காரம் சுண்ணம் ஆயிற்று, வெடியுப்பு சுண்ணம் ஆயிற்று என்று புலம்புவார். இவர்கள் சாஸ்திரத்தை சரியாகப் பாராத மூடர்கள் ஆவார்கள். இவர்கள் இதைத் துரிசில் கட்டிப் புடம் போட்டு எடுத்து துரிசு கரியாகப் போச்சு என்று சொல்லிப் புலம்புவார்கள். பல்லைக் கடித்து புலம்பி கனபாடுபடும் இவர்கள் உண்மையான நூல் அறியாத வாதிகள் ஆவார்கள்.

புத்தியுள்ள வாதிகள் உண்மையான சாஸ்திரத்தை ஆராய்ந்து பார்த்து நூலின் நுணுக்கங்கள் கண்டு அறிந்து குணமாகப் பொறுமையுடன் செய்வார்கள். இவர்கள் பூநீரை எடுத்து வந்து சுருக்கமாக சுண்ணம் பண்ணி சுக்கான் கல் அறிந்து எடுத்து

செய்வார். இவர்கள் உண்மையான ரசவாதிகள். இந்த உலகில் உள்ளவர்களுக்கு வாதம் வந்தது என்றால் பல அழிம்புகள் செய்து கொலை கொள்ளை, களவு, பொய் முதலியவைகளையும் செய்து சாராயம், கள்ளு, அபின், கஞ்சா இவைகளை உட்கொண்டு மயங்குவார்கள். பல குடிகளைக் கெடுப்பார் இவர்கள் சவுக்காரம் செய்கிறேன் என்று கூறி பூநீரில் உண்மையாக செய்யாமல் தான் நினைத்தது எல்லாம் சொல்லி செய்து பார்த்து பயன் இல்லை என்பார்கள்.

இப்படிப்பட்ட நிர்மூடனான ரசவாதிக்கு நூலைக் கொடாதே இவர்களுக்கு நூல் கொடுத்தால் நரகம் எய்தும். நூலைப்பரிகாசம் செய்பவர்களுக்கு பல துன்பங்களுண்டு. இவர்கள் பிச்சை எடுத்து உடல் குலைந்து அலைவார். இந்த நபிமார்கள் இட்ட சாபத்தை நீக்க யாராலும் முடியாது.

எனவே சுண்ண காண்டத்தைப் பார்த்து கைபாக வரிசை கண்டு சவுக்காரம் முடித்து அதை வைத்து துருசைச் சுண்ணம் பண்ணி அதனால் பாதரஸத்தைக் கட்டிப் பார்க்க ரசவாதம் சித்திக்கும். இது முன்னோர்களான நபிமார்கள் சொன்ன முறையாகும்.

உப்புக் கட்டு

ஆமென்ற கல்லுப்புக் கட்டக்கேளு
அடைவான பாறையுப்புப் படியும்நாலு
காமென்ற கடல்தண்ணீர் படியும்யெட்டு
கனிவாகப் பாண்டத்தி லிட்டுநீயும்
தாமென்ற உப்பையெல்லா மதிலேபோட்டுத்
தப்பாமற் கடல்நுரையும் நீற்றிப்போடு
வாமென்ற உப்புக்கு நாலத்தொன்று
வடிவாகப் போட்டுமே மார்க்கங்கேளே. 362

மார்க்கமா யடுப்பேற்றிப் பொங்காமற்றான்
மயமாகக் காய்ச்சியே குழம்பதாக்கி
வார்க்கவே மறுகத்தான் உப்புத்தண்ணீர்
வடிவாகப் படியெட்டு அளந்துவிட்டுத்
தார்க்கவே கதிரதுபோ லெரித்துக்காய்ச்சித்
தப்பாம லிப்படிக்குத் திரத்தைக்கேளு
ஆர்க்கவே முப்பத்தி ரெண்டுநேரம்
அடைவாகக் காய்ச்சினபின் அறியக்கேளே, 363

அறியவே காய்ச்சினபின் கடல்தண்ணீரை
அடைவாகப் படியெட்டு அளந்துவிட்டுப்
பறியவே கொதியிடவே கரைந்துபோகும்
பக்குவத்திற் துணிபோட்டு வடியுங்கட்டி
வறியவே மறுசட்டி தன்னிலிட்டு
நலமாக ஒட்டவே காய்ச்சிநீயும்
வறியவே யெடுத்துப்பார் தந்தம்போலே
வடிவாக யிருக்குமது வண்மைகேளே. 364

வண்மையாய்க் காய்ச்சினதோ ருப்புதன்னை
வகையான கரியில்வைத்து உருக்கிப்பாரு
உண்மையாய்ப் பொன்போலே கண்விட்டாடும்
உறுதிபெற வயிரம்போ லுருகியாடும்
தண்மையாய் முத்துப்போ லுருண்டுஆடும்
தாட்டிகமாய் நபிமார்கள் பாகமாகும்
துண்மைபெற உலகுதனில் சொன்னநீதி
துடியான பாகமிது துயர்ந்துபாரே. 365

பாடல்கள்: 362-365: கல்லுப்பு கட்டும் முறையைக் கேள். பாறையுப்பு நாலுபடி, கடல் தண்ணீர் எட்டுப்படி இதைப் பாண்டத்தில் விட்டு இதனுடன் 1 படி கடல் நுரையை சுண்ணாம்பு ஆக்கிப் போட்டு நன்கு கலந்து கொள். பின்பு இதை வடிகட்டி அடுப்பேற்றி பொங்காமல் காய்ச்சி குழம்பு பதமாக எடுத்து அதில் மறுபடியும் கடல் நீர் எட்டுபடி அளந்து விட்டு

அடுப்பேற்றி குழம்பு பதமாகக் காய்ச்சி மறுபடியும் கடல் நீர் 8 படி அளந்து விட்டுக் காய்ச்சி, இப்படிக்கு முப்பத்தி இரண்டு தடவை காய்ச்சு. பின்பு கடல் தண்ணீரை எட்டு படி அளந்து விட்டு கொதிக்க வைக்க கரைந்து போகும். துணி போட்டு நன்கு வடிகட்டி அடிப்பேற்றி ஒட்டக் காய்ச்சி எடுத்துப் பார்க்க தந்தம் போல் வெண்மையாக இருக்கும்.

இந்த உப்பை குகையில் போட்டு கரியில் வைத்து உருக்கிப்பார். வெள்ளி, தங்கம் போன்று கண்விட்டு உருகி ஆடும். வயிரம் போல இருக்கும். முத்துப்போல் உருண்டு ஆடும். இது சிறப்பான நபிமார்களின் முறையாகும். இதை உலகம் சிறக்கும் பொருட்டு கூறினேன். மிக அருமையான முறை இது செய்து பார்.

உப்புக் கெதை வேதை

துயர்ந்துதா னுப்பாலே கெதைதான்செய்து
துடியாய்நால் பட்டைவைத்து மண்ணைக்கட்டிப்
பயந்துமே காயவைத்து மெழுகுகட்டிப்
பதிவான உப்பைத்தா னுருக்கிநீயும்
நயந்துமே கருக்கட்டி அதிலேஊற்று
நலமாக நால்பட்டையாகத் தோணும்
வைந்துமே உப்பதுவும் உருகிப்பாய்ந்து
வடிவான கெதையாகும் வண்மைதானே. 366

வண்மையாய் நாலுபட்டைக் கெதையுமாகும்
வடிவான பட்டைக்குச் சாயமேற்ற
உண்மையாய்ச் சொல்லுகிறே னொருபட்டைக்கு
உறுதியாய்த் துருசுதனை யரைத்துப்பூசித்
தண்மையாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
தடையறவே நீலநிற மாகுங்கேளு
கண்மையாய் மறுபட்டை தன்னிலேதான்
காரணமாய் வீரமது காலுமிட்டே.

இட்டுமே வெடியுப்புச் ஜெயநீராட்டி
இதமாக மறுபட்டை தன்னிற்பூசி
நட்டுமே புடம்போடு வெள்ளையாகும்
நலமாக எடுத்துமே அப்பாற்பாரு
பட்டுமே மறுபட்டை தன்னிற்கேளு
பதிவான தாளகத்தை அரைத்துபூசிக்
கட்டுமே கதிரில்வைத்துப் புடமுமிட்டால்
கடிதாகச் செந்தூர மாகுந்தானே. 368

ஆகுமே மறுபட்டை தன்னிற்றானும்
அடைவான கெந்தகத்தைச் ஜெயநீராட்டிப்
பாகுபெறப் பட்டைதனிற் பூசிப்பூசிப்
பதிவாகப் புடம்போட மஞ்சளாகும்
தாகுமே நாலுபட்டை வர்ணமேத்தித்
தாட்டிகமா யெடுத்துமே கழுத்தில்வைத்து
வாகுபெற மலைகளெல்லாம் போகும்போது
வடிவாகச் சிலவுக்குச் சொல்லக்கேளே. 369

சொல்லவே வயிற்பசித்த தானாற்கேளு
சுகமான ஊர்தனிலே சென்றுபுக்கி
நல்லவே கம்மாளன் வீட்டிலேகி
நலமாகச் செம்புநூ றொன்றுருக்கிக்
கல்லவே நீலவர்ணம் ஒன்றுதாக்குக்
கருணைபெற மாத்தாறு காணும்பாரு
வல்லமையாய் விற்றுமே செலவுசெய்து
வடிவாக மறுதேசம் போகக்கேளே. 370

போகவே செலவுக்கு யில்லாப்போனால்
போக்கோடே மறுபட்டை வீரந்தன்னை
ஆகவே பிட்டுமே செம்புநூறு
அடைவாக ஒன்றுமே கொடுத்துப்பாரு
யோகமாய் மாத்ததுவும் யேழுமாகும்
ஒழுங்காக உண்டுமே வழிநடந்து

தாகவே தருகாவிற் சென்றுபுக்கித்
தாட்டிகமாய்ச் சிலவுக்குச் சொல்லக்கேளே. 371

சொல்லவே கம்மாளன் வீட்டிலேகிச்
சுருதிபெறக் கெந்தகத்தின் பட்டைதன்னை
நல்லவே பிட்டுமே கையில்வைத்து
நலமாகச் செம்புநூ றொன்றுருக்கிக்
கல்லவே கொடுத்துவிட மாத்துயெட்டுக்
கனிவாக யிருந்திடுங்காண் விற்றுநீயும்
மெல்லவே கந்திரியும் ஆக்கித்தானும்
மேன்மையாய்க் கொடுத்துவிட்டுப் பின்புகேளே.372

பின்புமே மறுதேசம் போகும்போது
போக்கோடே சிலவுக்கு யில்லாப்போனால்
அன்பதாய் தாளகத்தின் பட்டைதன்னை
அடைவாகப் பிட்டுமே கருமான்வீட்டில்
தென்புடனே போகியே செம்புருக்கித்
திடமாக நூற்றுக்கு ஒன்றுதாக்கு
அன்புடனே மாத்தெட்டுக் காணும்நன்றாய்
அதைவிற்றுச் சிலவுக்கு வைத்துக்கொள்ளே. 373

வைத்துமே இப்படிக்கு மக்காதேசம்
வடிவாகப் போகுமட்டும் நபிசொத்தைத்தான்
வைத்துமே செலவழித்துக் கந்திரிபண்ணி
வகையாக வைத்துமே நடந்துபோயி
சித்துவர மக்காவின் அல்லாவீதி
சிறப்பாக வாசலிலே போகும்போது
நத்துமே நபிமார்க ளிருப்பாரப்பா
நலமாக அவர்களுக்குச் சொல்லக்கேளே. 374

பாடல்கள்: 366-374: உப்பை உருக்கிக் கொண்டு கெதைபோல் செய்து அதில் ஊற்றி வார்ப்பு எடுத்துக் கொள் இந்த உப்புக் கெதையில் நான்கு பட்டை உள்ளது போல் செய்து

கொள். இந்த நான்கு பட்டைக்கு வர்ணம் செய்து கொள். இந்த நான்கு பட்டைக்கு வர்ணம் ஏற்றும் முறையைக் கேள். ஒரு பட்டையில் துருசை வெடியுப்பு ஜெயநீரில் அரைத்துப் பூசி மண்ணுக்குள் மற்ற மூன்று பட்டைகளும் தெரியாதபடி புதைத்து துருசு அரைத்துப் பூசிப் பட்டையை மேல்புறம் வைத்து புடம் போடு. அப்பட்டை நீலநிறமாகும். பின்பு அடுத்த பட்டையில் வீரம் கால்பலம் எடுத்து வெடியுப்பு ஜெயநீர் விட்டு அரைத்துப் பூசி முன்போல் புடம் போடு. வெள்ளையாகும், மற்றொரு பட்டையில் தாளகத்தை அரைத்து பூசி வெயிலில் காய வைத்துப் முன்போல புடம் போடு சிகப்பு நிறமாகும். நான்காம் பட்டையில் கெந்தகத்தை அரைத்துப் பூசி முன்போல காயவைத்து புடம் போடு. மஞ்சள் நிறமாகும். இதை எடுத்து கழுத்தில் வைத்துக் கொண்டு மலைகளில் சஞ்சரி. உன்னுடைய செலவுகளுக்குச் செய்யும் வேதைமுறையைக் கேள். பசி வரும்போது ஊரில் சென்று ஆசாரி வீட்டுக்கு போய் செம்பை உருக்கச் சொல்லி நூற்றுக்கு ஒன்று நீலப்பட்டையை கிரண்டிப் போட்ட ஆறுமாத்து தங்கமாகும். விற்று செலவு செய். மறு இடத்தில் வெள்ளை நிற வீரப்பட்டையை செம்பு நூறு பங்குக்கு ஒரு பங்கு கொடுக்க ஏழு மாற்று தங்கம் ஆகும். செலவு செய்து உண்டு உடுத்திச் செல். மற்றொரு இடத்தில் செம்புநூறு பங்கு உருக்கி கெந்தம் பூசிய பட்டையை உடைத்து ஒரு பங்கு கொடுக்க எட்டு மாற்று தங்கம் உண்டாகும். விற்று உன்பசியை போக்கிக் கொள். மற்றொரு இடத்தில் தாளகத்தின் பட்டையை உடைத்து செம்பு உருக்கி நூற்றுக்கு ஒன்று கொடுக்க எட்டு மாத்து தங்கம் உண்டாகும். இதை விற்று செலவு செய்து கொள். இப்படி மக்கா தேசம் செல்லும் வரை நபிகள் சொத்தை செலவு செய்து கந்தரி புண்ணி மெக்காவிற்கு சென்று அல்லாவின்

வீதியிலே சென்று நுழை வாசலுக்குச் செல்லும் போது நபிமார்கள் பலர் இருப்பார்கள். அவர்களிடம் கூறும் முறையைக் கூறுகிறேன் கேள்.

மக்காதேசப் பெருமை

சொல்லவே எங்கிருந்து எங்கேபோறாய்
சுருதியாய்க் கேட்பார்க ளவர்களோடே
நல்லபுத்தி யாகவே பேசிநீயும்
நலமாக யிசுலாத்தி லானபிள்ளை
கல்லவே மகமதுவைத் துதிக்கப்போறேன்
கனிவாக விட்டுவிடு யென்றுகேளு
தல்லவே விடமாட்டே னென்றுசொன்னால்
தடையறவே நான்சொல்லக் கேளுதானே. 375

கேளுமே வெகுகோடி காலம்நானும்
கொடியாக நபிமாரைக் கார்த்திருந்தேன்
ஆளுமே அவர்கள்தான் மனமிறங்கி
அடைவாக ஒருஉப்புச் சொன்னார்தாமும்
கூளுமே கெதைசெய்து கொடுத்தாரென்று
குறியாகச் சொல்லிடவே காட்டுயென்பார்
நாளுமே காட்டிடவே விடுவாரப்பா
நலமாக உள்ளேதான் சென்றுபுக்கே. 376

சென்றுமே உள்ளேதான் நின்றுநீயும்
சிறப்பான வீதியிலே நபிமார்ரெம்பக்
கண்டுமே அவர்களுக்கு வணங்கிப்போற்றிக்
கனிவாகத் தொழுதிறைஞ்சிப் பள்ளிதன்னில்
அன்றுமே போயுமே அடிவணங்கி
அடைவான மனதுருகிச் சென்றுயேகி
நின்றுமே உத்தரவு கேட்டுக்கொண்டு
நினைப்பைத்தா னுறுதியாய்ச் செய்திடாயே. 377

செய்திட்டு நிற்கையிலே நபிமாரெல்லாம்
திடமாகப் பள்ளிதனிற் கொண்டுபோவார்
பைதிட்டுப் பதினெட்டுப் படியிலேதான்
பதிவாக யேறாதே அடியில்நின்று
கைதிட்டுக் கால்மடித்துத் தொழுதுநீயும்
கனிவாக யெழுந்திருந்து வானம்பார்த்துப்
பைதிட்டு மகமதுவை நினைத்துப்பூசி
பதியான விதிதோன்றும் பழைமையாமே. 378

ஆமேதா னொருசத்தங் கேட்டுப்பாரு
அடைவான அதின்பேரு வாங்குசொல்வார்
நாமேதா னதைக்கேட்டுத் தொழுதுபோற்று
நலமாக வானத்தி னொளியைப்பார்த்துக்
காமேதான் சுடர்போலே கண்ணில்தோன்றும்
கலக்கமது உன்மனதைத் திடமேசெய்து
வாமேதான் வாயிலா யில்லல்லாகூ
வடிவாகச் சொல்லியே தொழுதுபோற்றே. 379

தொழுகின்றது அல்லாவைத் தொழுதுபோற்றித்
துப்பறவா யுப்பைத்தான் தொழுதுபோற்று
அழுகிறது போலழுது புலம்பியேற்றி
அடிபணிந்து மகமதுவைத் தொழுதுபோற்றி
நழுவியே போகாமல் சவுக்காரத்தை
நாடியே தொழுதிறைஞ்சி நன்மையாக
பழுகுமே நபிமாரைத் தொழுதுபோற்றிப்
பதிவாக நால்வேதம் பொய்போகாதே. 380

பாடல்கள்:375-380: அவர்கள் உன்னை எங்கிருந்து வந்தாய் எங்கு போகிறாய் என்று கேட்டால். நல்ல புத்தியுடன் அவர்களிடம் பேசி இஸ்லாமிய பிள்ளையான மகமது நபியை வணங்கப் போகிறேன் விட்டு விடுங்கள் என்று அன்பாகக் கேளு. அவர்கள் உன்னை விடமாட்டேன் என்று கூறினால், அவர்களிடம் நான் வெகுகோடி காலம் உறுதியுடன் நபிமாரை

வணங்கினேன். அவர்கள் மனமிறங்கி ஒரு உப்பு முறையைச் சொன்னார்கள். மேலும் கெதையும் செய்து கொடுத்தார்கள் என்று சொல். காட்டு என்பார்கள். நீ எடுத்துக்காட்ட உள்ளே விடுவார்கள். உள்ளே செல்.

உள்ளே சென்று வீதியில் பல நபிமார்களைக் கண்டு வணங்கி தொழுது அடிபணிந்து பள்ளிவாசல் சென்று மனது உருக நினைந்து கிடைக்கும் உத்திரவைப் பெற்றுக் கொண்டு அதை உறுதியுடன் கடைபிடி. இப்படி உறுதியுடன் இருக்கையில் நபிமார்கள் உன்னை பள்ளிக்கு கூட்டிச் செல்வார். நீ 18 படியிலும் ஏறாமல் அடியில் நின்று கால் மடித்து உட்கார்ந்து தொழுது கைளை ஏந்தி வானம் பார்த்து மகமதுவை நினைத்து பூசிக்க உன் விதி மாறி ஆதியானது தோன்றும். அப்போது ஒரு சத்தம் கேட்கும். அதன் பேரு வாங்கு என்பார்கள். அதை கேட்டு தொழுது நில். வானத்தில் ஒளியை கண்டு பார். சுடர்போலத் தோன்றும் உன் மனதை திடப்படுத்திக் கொண்டு "லாயிலாயில்லலல்லாகூ" என்று தொழுகை செய். அல்லாவைப் போல் உப்பையும் மகமதுவைப் போல் சவுக்காரத்தையும் தொழுது போற்று (இப்படிப்பட்ட இயற்கையால் நமக்கு கிடைக்கும் காயகற்ப அவுடதங்களை இறைவனுக்கு ஒப்பாக மதித்து வீணாக்காமல் முறையாக பக்தியுடன் பெரியோரை வணங்கிச் சிறப்பாக செய் என்ற பொருள்படும்) நான்கு வேதங்களும் என்றும் பொய்யாகாது.

பொய்க் குருக்கள்

பொய்போகா நால்வேதக் குருக்கள்தானும்
போக்கோடே யெதிர்வருவா ரவரைக்கண்டு
மெய்யான நடக்கையாய் நடந்துகொள்ளு
மேதினியி லிப்படிக்கு நடக்காப்போனால்
கையினால் கல்லைத்தான் வாங்கித்தானும்
கனிவாக யெறிவார்கள் ஜாதிதன்னில்
வையகத்திற் சேர்க்கார்கள் நினைப்புப்பாரு
வடிவாக உலகத்தில் மாண்பார்தானே. 381

தானென்ற இதற்கடுத்த வித்தைகேளு
தாட்டிகமாய் வாதமது அஞ்சாம்வேதம்
வானென்ற யிதைக்கற்றுக் கொண்டாயானால்
வடிவான அல்லவாம் வேறொன்றில்லை
கானென்ற யிவ்வேதம் நிசமதாகும்
கனிவான அட்டகர்ம வித்தைக்குள்ளே
நானென்ற வாதமது முதலாஞ்சித்தி
நபிமாரும் யிப்படிக்கு நாட்டினாரே. 382

நாடியே வேதமென்ற சொல்லைத்தானும்
நானிலத்தி லாணும்பெண் ணிரண்டுபேரும்
கூடியே வாழ்வதினால் விந்துதங்கிக்
குடியான மனிதனவன் பிறந்தபோது
ஆடியே ஆதிமுதல் ரெண்டுபேரு
அடைவாகப் பிறந்துமே அதன்பின்கேளு
கோடியே பேருண்டாம் பேரிற்றானும்
குடிகேடு அவரவர்க்குப் புத்திதானே. 383

தானென்ற புத்திரெண்டா யவர்க்குத்தானும்
தடையறவே யோசனைகள் தானும்பண்ணிக்
கானென்ற பொய்நூல்கள் படிக்கவைத்த்
கள்ளரைநீ நம்பாதே அப்பாகேளு
பானென்று அவரையே நம்பினாக்கால்
பதிவான பயனில்லாப் பலனுமாகும்
ஊனென்ற உலகத்துக் குருக்கள்பேச்சை
ஊறுகிற நாகம்போ லெண்ணுவாயே. 384

நாகமா மின்னூலை விரும்பிப்பாரு
நாடியே சுண்ணத்தைச் செய்துதேறு
யோகம்வரும் சுண்ணத்தால் வேதைகோடி
உற்றுணர்ந்தா லெல்லாமுஞ் சித்தியாகும்
பாகமதைக் கண்டாலே பலனுமாகும்
பாதைக்கோ யெல்லாமுஞ் சித்தியாகும்
யூகமதை அறிந்தவனே வாதியாகும்
உற்றுணர்ந்தா லெல்லாமுஞ் சித்தியாமே. 385

பாடல்கள்:381-385: இப்படிபொய்யில்லாத நால்வேதத்தைக் கற்ற குருமார்கள் உன் எதிரில் வருவார்கள். அவர்களிடம் உண்மையாக நடந்து கொள். இப்படி நடக்கவில்லை என்றால் அந்த ஜாதி வழக்கப்படி கையில் கல்லை எடுத்து எரிவார்கள். உன்னை உலகில் தங்களுடன் சேர்க்க மாட்டார்கள். எனவே நினைவாக இரு. இதற்கடுத்த வித்தை ரசவாதம் ஆகும். இது வேதங்களில் ஐந்தாம் வேதம் ஆகும். இதை நீ கற்றுக் கொண்டால் அல்லாவைத் தவிர வேறொன்றில்லை என்பதை உணர்வாய். இந்த வேதம் உண்மையானது ஆகும். அட்டகர்ம தொழில்களில் முதல் சித்தி வாதம் ஆகும். இது நபிமார்களின் கூற்று, இதைவிடுத்து வேதம் என்ற சொல்லை ஆண் பெண் இரண்டு பேரும் கூடி மனிதன் பிறந்து பலபெயர்களாகி அவரவர்க்கு பல புத்திகள் உண்டாகி, பல யோசனைகள் பண்ணி பொய்யான நூல்களைப் படிக்க வைத்த பொய்யர்களை நம்பாதே. அவர்களை நம்பினால் எப்பயனும் இல்லை. இப்படி உள்ள உலகத்தின் குருக்கள் பேச்சை எல்லாம் நாகப் பாம்பைப் போல் நினைத்து ஒதுக்கு. இந்த நூலை விரும்பிப் பார்த்து சுண்ணங்கள் செய்து அதனால் கோடான கோடி வாதவேலைகள் செய் எல்லாம் சித்தியாகும். பூகமதைக்கொண்டு செய்ய எல்லாம் சித்தியாகும். மக்காதேசத்தில் செய்யும் முறையைக் கூறினேன்.

சவுக்காரச் செய்முறை

சித்தியா யாகவென்றாற் சொல்லக்கேளு
சிறப்பான மக்காவின் தேசந்தன்னில்
பத்தியாய்ச் செய்கின்ற மார்க்கஞ்சொன்னேன்
பதிவான சவுக்கார வர்மஞ்சொல்வேன்
முத்தியாய்ச் சித்திரைவை காசிமாதம்
முனிவாகச் செங்கதிரில் பொங்கிநீரும்
சத்தியாய் பூநீரு பதக்குவாரிச்
சரியாகப் பாண்டமிட்டுச் சொல்லக்கேளே. 386

சொல்லவே பாணியது படிதானெட்டுச்
சுருதிபெறப் பாண்டத்தி லிட்டுக்கேளு
கல்லவே வெள்ளைக்கல் படியாஞ்சுண்ணம்
கனிவாகக் கல்லுப்புப் படியுமொன்று
நல்லவே போட்டுமே திரீநாள்வைத்து
நலமாகத் தெளிவிறுத்து நாட்டக்கேளு
பல்லவே புதுப்பாண்டந் தன்னிலிட்டுப்
பதிவாகக் காய்ச்சியே பருவங்கேளே 387

பருவமாய்க் குழம்பான பதத்தில்வாங்கி
பதியவே முன்போலே சாம்பலிட்டு
அருவமா யதின்மேலே குழம்பையிட்டு
அதின்மேலே துணியைத்தான் போட்டுநீயும்
வருவமா யதின்மேலே சாம்பலிட்டால்
வகையான சவுக்கார நீரைவாங்கும்
துருவமாய் விளாங்காய்போ லுண்டைபண்ணிச்
சுருக்காக யெடுத்துமே சொல்லக்கேளே. 388

சொல்லவே உண்டையதின் மேலேதானும்
சுருதிபெறக் கவசமது சொல்லக்கேளு
நல்லவே அஞ்சுசுண்ண மேலேகட்டி
நலமாகக் கதிரிலிட்டுக் காயவைத்துக்
கொல்லவே பத்தெருவிற் புடத்தைப் போடு
கொடுமையாய்ச் சவுக்காரச் சுண்ணமாச்சு
மெல்லவே யெடுத்துமே சொல்லக்கேளு
வெருளாதே யின்னமொன்று விளம்பக்கேளே. 389

விளம்பவே புடம்போட்ட சவுக்காரத்தை
விருப்பமாய்க் கல்வத்தி லிட்டுநீயும்
தளம்பவே வீரமது காலுமிட்டுத்
தாக்கிடவே வெடியுப்புச் ஜெயநீராலே
குளம்பவே அரைத்துமுன்போல் வில்லைதட்டிக்
கொடுமையாய் ரவிதனிலே காயவைத்து
வளம்பவே அஞ்சுசுண்ணக் குகையிலிட்டு
வளமாகப் புடம்போட்டு யெடுத்துக்கொள்ளே. 390

எடுத்துமே பின்புதான் வீரங்காலாம்
இசையாக முன்வைத்த சவுக்காரத்தில்
அடுத்துமே சேர்த்துநீ வெடியுப்பைத்தான்
அடைவாக நீரரலே அரைநீமுன்று
கடுத்துமே நாளரைத்து வில்லைதட்டிக்
கனிவாகக் கதிரில்வைத்து அஞ்சுசுண்ணம்
விடுத்துமே குகையில்வைத்துப் புடத்தைப்போடு
விதமாக யெடுத்துமே சொல்லக்கேளே. 391

சொல்லவே யெடுத்துமே யிப்படிக்குச்
சுயமாக அஞ்சுதரம் வீரஞ்சேர்த்து
நல்லவே அரைத்துவில்லை தட்டிநீயும்
நலமாக யிப்படிக்குப் புடமுமிட்டால்
கல்லவே கடுங்கார மேறிநீறிக்
கனமாக யிருக்குமே கனிவாய்த்தானும்
வல்லமையாய்ச் சவுக்காரம் யெளிதிலாகும்
வடிவான விதியாளி காண்பான்தானே. 392

தானென்ற சவுக்காரம் கனிவுமாகும்
தாக்கிடவே சகலமுந்தான் சுண்ணமாகும்
வானென்ற சவுக்காரம் பலமுமொன்று
வடிவான துருசதுவும் பலமுங்கால்தான்
கானென்ற வெடியுப்புச் ஜெயநீராலே
கலந்தரைத்துத் துருசின்மேல் கட்டித்தீரு
பானென்ற அஞ்சுசுண்ண மேலேகட்டிப்
பதிவாகக் கதிரில்வைத்துப் புடத்தைப்போடே. 393

போடவே துருசதுவு வெந்துநீறிப்
போக்கோடே சுண்ணாம்பாம் புகலக்கேளு
நாடவே யிச்சுண்ணங் கடுமையாகும்
நாதாந்த நபிமார்கள் சொன்னபுத்தி
ஊடாடிப் பார்த்தாக்கா லெல்லாமுண்டு
உறுதியாய்ச் ஜாதிதா னொன்றுமாகும்
கூடவே சாதிதனை ரெண்டுசொன்ன
குடிகேடன் லெப்பையைத்தான் நம்பாவாறே. 394

வாறேது வென்றாக்கால் சொல்லக்கேளு
வடிவான துரிசுனுட நீறுதன்னைக்
காறேது விராலியிலை தன்னிலிட்டுக்
கடிதாகப் பிழிந்திடவே நீருமாகும்
ஆறேது நீருதனை அயக்கரண்டியிட்டு
அப்பனே சூதமது பலமுமிட்டுப்
பாரேது அடுப்புதனில் காயவைக்கப்
பதிவாக மணிபோலே கட்டிப்போமே. 395

கட்டினதோர் மணியெடுத்து உருட்டிநீயும்
கனிவாக நல்லெண்ணெய் தன்னிலிட்டு
எட்டியே யெரித்திடவே இருகிக்கட்டும்
இதமாகக் கட்டதனைக் கரியில்வைத்து
முட்டியே உருக்கிடவே சூதந்தானும்
மூவுலக மெச்சவே உருகிநிற்கும்
நட்டியே போகாம லெடுத்துநீயும்
நலமாகச் செய்கின்ற பாகங்கேளே. 396

பாகமாய்ச் சூதமது பலமும்நாலு
பதிவாக உருகையிலே தங்கமொன்று
யோகமா யுருகையிலே நாகமொன்று
உறுதியா யெல்லாமுஞ் சேர்த்துருக்க
வாகமாய்க் களங்காகும் களங்குதன்னை
வடிவாகச் செம்புநூ றொன்றுருக்கித்
தாகமாய்க் கொடுத்திடவே ஒன்றுதானும்
தாக்கிடவே நவலோகம் யேமமாமே. 397

ஏமமாம் நூற்றுக்கு ஒன்றுயீய
இயல்பாக யெட்டரைதான் ஆணிக்கொக்கும்
ஓமமாம் புடத்திற்கும் உப்பினுக்கும்
உண்மையாய்ச் சவுக்காரச் சுண்ணம்பண்ணு
காமமாம் பெண்ணாசை தன்னைவிட்டுக்
கைப்போடு புளிப்புமுதல் யெண்ணெய்தள்ளி
வாமமாஞ் சவுக்காரச் சுண்ணத்தாலே
வகையான ஆட்டெல்லா மிதனிலாட்டே. 398

ஆட்டான கேள்வினால் வாதஞ்சுட்டு
அறியாமல் சுண்ணவகை யில்லையென்றால்
நீட்டாக யென்னசெய்யும் நூல்கள்தானும்
.நிலையாத முட்டாளின் முரட்டுப்புத்தி
காட்டாகப் படித்தாலும் புத்திவேண்டும்
கனிந்துமே புத்தியில்லார்க் கொன்றுமில்லை
தாட்டான வாதிகள்தா னிந்தப்போக்குத்
தடைதப்பில் யெல்லாமுஞ் சித்தியில்லை. 399

பாடல்கள்: 386-399: சவுக்காரத்தின் உண்மையைக் கூறுகிறேன் கேள். சித்திரை, வைகாசி மாதங்களில் உவர்பூமியில் அதிகாலை செங்கதிர்கள் படும்போது பனிவிழும் நேரம் பொங்கி பூக்கும். இதுவே பூநீறு ஆகும். இதை ஒரு பதக்கு வாரி எடுத்து ஒரு பாண்டத்தில் போட்டு சுத்தமான நீர் எட்டுபடி ஊற்றி கல்சுண்ணாம்பு ஒரு படி கல்லுப்பு 1 படி போட்டு மூன்று நாட்கள் மூடி வை. நான்காம் நாள் தெளிவை இறுத்து ஒரு புதுப்பாண்டத்தில் இட்டு மெதுவாகப் பொங்காமல் காய்ச்சு. குழம்பு பதத்தில் எடுத்து (ஒரு மூடி அகலம் நால் விரல் உயரம், ஒரு சாண் நீளத்திற்கு) சாம்பலைப் பரப்பி அதன் மேல் மெல்லிய துணியைப் போட்டு அதன்மீது குழம்பை ஊற்றி அதன் மீது துணியைப் போட்டு அதன் மீது சாம்பலைப் பரப்பு. சிறுது நேரம் சென்று மேல் துணியையும் சாம்பலையும் நீக்கி பார்க்க சவுக்காரத்தின் நீரை சாம்பல் இழுத்துக் கொள்ளும். உடனே விளாங்காய் அளவாக மருந்தை உருட்டி வெயிலில் வை. அதன்பின் காய்ந்த உடன் எடுத்து அதன்மேல் கவசம் சொல்கிறேன் கேள். அஞ்சு சுண்ணத்தை வெடியுப்பு நீர் விட்டு அரைத்து வலுவாகக் கவசம் கட்டு (அஞ்சு சுண்ணம்- 1.கிளிஞ்சல் சுண்ணம்2. நத்தை ஒடு சுண்ணம் 3. சங்குச்சுண்ணம் 4. நண்டு ஒரு சுண்ணம் 5. சுல் சுண்ணம்) வெயிலில் காய வை. காய்ந்தவுடன் பத்து எருவில் புடம் போடு. கொடுமையான

சவுக்காரச் சுண்ணம் ஆகும். இன்னும் ஒரு முறையைக் கூறுகிறேன்.

இந்த சவுக்காரச் சுண்ணத்தை கல்வத்தில் இட்டு வீரம் கால் பங்கு இட்டு வெடியுப்பு ஜெயநீர் விட்டு நன்கு அரைத்து முன் போல வில்லை தட்டி காயவை. அதன் பின் முன்சொன்ன அஞ்சு சுண்ணத்தால் செய்த குகையில் வைத்து புடம் போட்டு எடு. இப்படி ஒவ்வொரு தடவையும் வீரம் கால்பங்கு சேர்த்து வெடியுப்பு நீர் விட்டு அரைத்து வில்லை தட்டி காய வைத்து அஞ்சு சுண்ணக் குகையில் வைத்து புடம் போடு. இப்படி ஐந்து தடவை செய். இப்படி செய்தால் சவுக்காரம் கடுங்காரம் ஏறி மிக கனமாக இருக்கும். இதை விதி உள்ளவன் செய்வான்.

இதனால் எல்லாம் சுண்ணமாகும். இந்த சவுக்காரம் ஒரு பலம், துருசு கால்பலம் எடுத்து வெடியுப்பு நீர் விட்டு அரை, நன்கு அரைத்த துருசுக் கட்டியின் மேல் கவசம் கட்டி காய வைத்து அதன் மேல் அஞ்சு சுண்ணத்தை வெடியுப்பு நீர் விட்டு அரைத்துக் கவசம் கட்டி வெயிலில் காய வைத்து பத்து எருவில் புடம் போடு. துருசு வெந்து சுண்ணமாகும். இது கடுமையான சுண்ணமாகும். இது நபிமார்கள் கூறிய முறையாகும். செய்து பார்த்தால் எல்லாம் சித்தியாகும். உலகில் ஜாதி ஒன்றேயாகும். ஜாதி இரண்டு என்று சொன்ன லெப்பையை நம்பாதே.

இந்த துருசுச் சுண்ணத்தை விராலி இலையில் இட்டு நன்கு பிழிய தண்ணீர் வரும். இந்த தண்ணீரை அயக்கரண்டியில் இட்டு இதில் பாதரஸம் ஒரு பலம் இட்டு அடுப்புதனில் காய வை. பாதரஸம் மணிபோல் கட்டும். இந்த கட்டிய மணியை எடுத்து உருட்டி நல்லெண்ணெய்தனில் இட்டு அடுப்பில் வைத்து எரிக்க இறுகிக் கட்டும். இந்த கட்டிய மணியை கரியில் வைத்து உருக்க

ரசமானது உருகி நிற்கும். இதனை வீணாக்காமல் மற்றொரு விபரம் கேள். இந்த பாதரஸம் நான்கு பலம், எடுத்து உருக்கிக் கொண்டு அதில் சுத்தம் செய்த தங்கம் ஒரு பலம், நாகம் ஒரு பலம் சேர்த்து உருக்க களங்காகும். இந்த களங்கை செம்பை உருக்கிக் கொண்டு நூற்றுக்கு ஒன்று கொடுக்க ஒன்பது உலோகமும் பொன்னாகும். இது எட்டரை மாற்று உள்ள நகை செய்யும் பொன்னாகும். உப்புக்கும், காவிக்கும், புடத்தில் நிற்கும். எனவே உண்மையாகச் சவுக்காரச் சுண்ணம் பண்ணு. பெண் ஆசைதனை விட்டு புளி, உப்பு, எண்ணை இவைகளை நீக்கி காயசித்தி செய்து. இந்த சவுக்காரத்தால் பல வேலைகளை செய்யலாம்.

கேட்பார் பேச்சைக் கேட்டு வாதம் செய்து சுட்டு சுண்ண வகை பொய்யென்றால் சாஸ்திரங்கள் என்னசெய்யும். முட்டாள்களின் முரட்டு புத்தியினால் வாதம் நிலைக்காது. எவ்வளவு படித்தாலும் புத்தி வேண்டும். புத்தியில்லாதவர்களுக்கு ஏதும் இல்லை. வாதிகள் இப்படி புத்தியில்லாமல் செய்தால் எதுவும் சித்தியாகாது.

ஆட்டுரத்த வேலை

சித்தியா மின்னமொரு பாகங்கேளு
சிறப்பாக வேதந்தான் சொல்லிஆட்டைப்
பத்தியா யறுக்கையிலே ரத்தந்தன்னைப்
பதிவாக யெடுத்துமே கையினாலே
சத்தியாய்ப் பிசைந்துமே பிழிந்தநீரைத்
தானிருந்து அந்தநீர் தன்னைக்காய்ச்சே
முத்தியாய் வெள்ளையா யிருக்கும்பாரு
முனிவாக அடியில் நின்ற சிகப்புமாமே. 400

சிகப்பான அடியில் நின்ற ரத்தம் போலே
சிறப்பாக உலகத்து வாதிமார்கள்
அகப்பாகச் செய்திடுவார் புத்தியில்லார்
அறிவான புத்தியுள்ள வாதிதானும்
சிகப்பான ரத்தத்தைப் பிசைந்து நீரைத்
தெளிவிருத்துக் காய்ச்சிடவே வெண்ணெய்போல
தகப்பாகச் சவுக்காரச் சுண்ணஞ்செய்வார்
தடையறவே புத்தியுள்ள வாதிதானே. 401

தானென்ற புத்தியுள்ள வாதிதானும்
தடையறவே ரெத்தத்தில் நீர்வடித்துக்
கானென்றே செய்வார்கள் புத்திகெட்ட
கலக்கமுள்ள வாதிதான் செய்யமாட்டார்
ஊனென்ற உலகத்திற் பாடுபட்டு
உறுதியா யலைந்துமே திரிவாரப்பா
வானென்ற சாராயங்கள் குடித்து
வகையறியார் செய்யுகிற வழக்கந்தானே. 402

வழக்கமாய்ச் சவுக்காரம் யெளிதில்செய்ய
வகையாகச் சொல்லிவிட்டேன் வண்மையாகத்
தழக்கமாய் வெடியுப்புச் செய்யுமார்க்கம்
தனைச்சொன்னேன் பாகமுதல் வரிசைசொன்னேன்
பழக்கமாய்ப் பழகினாற் சுண்ணஞ்செய்வார்
பழகாட்ட லொன்றுமில்லை பலனுமில்லை
சழக்கென்று விட்டாக்கா லெல்லாம்பாழாம்
தடையறவே இந்நூல் சரியாய்ப்பாரே. 403

சரியாகப் பாகமதைக் கண்டுதேரு
சல்தியாய்ச் சுண்ணமதை வைத்துநீயும்
பரிவாகக் கடுமையாய்ச் சுண்ணம்பண்ணிப்
பாகமாய்ச் செய்திட்டுப் பலன்கள்பார்த்து
விரிவாகச் செய்யாமல் உலகநீதி
விதமாகத் துரிசதுவை நீற்றிநீயும்
குரியாகச் சொன்னதுபோல் ரசத்தைக்கட்டிக்
குணமாகச் செய்தாக்காற் பலனுமாமே. 404

பலனாகச் சவுக்காரச் சுண்ணந்தன்னில்
பாடுபட்டுச் செய்தாக்கால் பலனுமாகும்
புலனாகப் பாடுபட்டும் புத்தியில்லார்
போக்கோடே யில்லையென்பார் பிரட்டுவாதி
அலனாகப் பாடுபட்டும் பொருளைக்காணார்
ஆதியாம் சவுக்காரம் வகையாயில்லை
தலனாகச் சொல்லியே புலம்பித்தானும்
தற்கமிட்டுத் திரிவார்கள் உலகத்தோரே. 405

உலகத்திற் பெண்ணோடே கூடிவாழும்
உறுதிபெற்ற வாதிக்குப் பொன்னுமில்லை
கலகத்திற் பெண்ணோடே மருவிச்சேர்வார்
கருதிடுவார் அவளோடே சத்தொழித்து
பலகற்றும் பலனில்லை மாய்ந்துமாய்ந்து
பதிவாகச் சரசமா யிருப்பார்கண்டீர்
சலம்போலே நீராக முறிந்துநிற்பார்
சாத்திரத்தில் கவனத்தை வைத்திடாரே. 406

வைத்திட்டோ ரவர்களுக்கு வாதமுண்டு
வடிவான பொருளுண்டு மயக்கமில்லை
கைத்திடவே பணமுண்டு வாதமுண்டு
கடுமையாய்ச் சந்தோஷ மிகவுமுண்டு
நைத்திட்டு வெகுபேரோ டிணக்கமுண்டு
நலமான குளிகையுண்டு நாட்டிலேதான்
பைத்திட்டு நன்னடக்கை மிகவுமுண்டு
பதிவான களங்குண்டு செம்புதானே. 407

செம்புதா னெடுக்கமுன்னே சொல்லுக்கேளு
செயமான சத்துமுன்னே செய்துநீயும்
வம்புதான் செய்யாமல் சத்தெடுத்து
வடிவான செம்புசெய்யில் மதியிலேதான்
தெம்புடனே பொன்னாகும் பொன்னைவிற்றுத்
திடமாக உண்டுடுத்திப் பின்னேநீயும்
தம்பமறச் செலவுசெய்து சுண்ணம்பாரு
தாட்டிகமா யாகோபு சொன்னார்பாரே. 408

பாடல்கள்:400-408: இன்னும் ஒரு முறையைக் கேள். வேதஞ் சொல்லி ஆட்டை அறுக்கையில் அதன் ரத்தத்தைப் பிடித்து உறைந்த அந்த ரத்தத்தைக் கையாலே பிசைய தண்ணீர் வரும். அந்த நீரைக் காய்ச்ச வெள்ளையாய் இருக்கும். சிகப்பாக அடியில் நிற்கும்.

இப்படி அடியில் சிகப்பாக நிற்கும் கசடுபோன்று உலகவாதிமார்கள் புத்தியில்லாமல் செய்வார்கள். புத்தியுள்ள வாதிமார்கள் ரத்தத்தைப் பிசைந்து நீர் எடுத்துக் காய்ச்சுவது போன்று நூலின் சூத்திரத்தை ஆராய்ந்து செய்வார்கள். இப்படி மனக்கலக்கமுள்ள வாதிகள் உலகில் அலைந்து திரிந்து சாராயம் குடித்து வகையின்றி மாள்வார்கள். சவுக்காரம் எளிதில் செய்யும் முறையைக் கூறினேன். வெடியுப்பு செய்யும் முறையைக் கூறினேன். முறையாகச் செய்பவர் சுண்ணங்கள் செய்வார். பழகாவிட்டால் ஏதும் பலனில்லை. எனவே இந்நூல் சரிவரப்பார். எனவே முறையை அறிந்து கைபாகமாக சுண்ணம் செய்து பலன்கள் அறிந்து அதிக விரிவாக செய்யாமல் உலக நீதியுடன் துரிசை சுண்ணம் பண்ணி அதனால் ரசத்தைக் கட்டினால் பலன் கிடைக்கும்.

இப்படி முறையாக சவுக்காரச் சுண்ணத்தைப் பாடுபட்டு செய்தால் பலன் கிடைக்கும். புத்தியில்லாத ரசவாதிமார்கள் எவ்வளவு பாடுபட்டாலும் சவுக்காரம் முடியாமல் புலம்புவார்கள் இவ்வுலகில் பெண்ணாசை கொண்டவர்களுக்கு ரசவாதத் தங்கம் சித்தியாகாது. இவர்கள் போகத்தால் சத்திழந்து மாய்ந்து நீர் போல முறிந்து இருப்பார்கள். சாஸ்திரங்களில் கவனம் வைக்க மாட்டார்கள்.

இப்படி சாஸ்திரங்களில் கவனம் வைப்பவர்களுக்கு ரசவாதம் கைகூடும். பொருள் அறியலாம். பணம் கிடைக்கும். மிக

சந்தோஷம் உண்டாகும். பல பேர்களுடன் தொடர்பு உண்டு குளிகை சித்தியடையும், நன்னடத்தை உண்டாகும். களங்குகள் செம்புகள் சித்தியாகும். செம்பு எடுக்கும் முன்பு சொல்கின்றேன் கேள். முதலில் சத்தெடுத்து அதிலிருந்து செம்பு எடுத்து அதை வெள்ளியில் கொடுக்க பொன்னாகும். இதை விற்று சாப்பாட்டிற்கு வைத்துக் கொண்டு பின்பு சுண்ணங்கள் செய்து பார் என்று யாகோபு கூறினார்.

தங்கச் செந்தூரம்

சொன்னதொரு தங்கச் செந்தூரந்தன்னைச்
சுருதிபெறச் சொல்லுகிறேன் நபிமார்சொன்ன
இன்னிலத்திற் தங்கமது உருக்கிநீயும்
இதமாகத் தகடுதட்டிச் சொல்லக்கேளு
நன்னயமாய்க் கற்காவிப் பழச்சார்விட்டு
நாடியே யரைத்துயிரு சாமங்கேளு
கன்னலாய்த் தங்கத்தின் மேலேபூசிக்
கடிதாகக் காய்ச்சியே தோய்த்திடாயே. 409

தோய்த்திடவே தங்கமது சுத்தியாகும்
துடியாகக் குகைதனிலே உருக்கிப்பாரு
வாய்த்திடவே யெடுத்துமே பலம்நிறுத்து
வடிவாக உருகையிலே நாகந்தன்னை
ஓய்த்திடவே முன்சொன்ன படியேநாகம்
உறவாகச் சுத்திபண்ணி உறுதியாகக்
காய்த்திடவே நாகமதை யெடுத்துநீயும்
கனிவான சாரத்தோ டீயக்கேளு
பாய்த்திடவே தங்கமது சுழித்துவாங்கும்
பதிவாகப் புட்டுப்போல் நொறுங்குந்தானே. 410

நொறுங்கும் தங்கத்தில் நாகஞ்சேர்த்து
நொடிக்குமுன்னே கல்வமிட்டுச் சூதந்தன்னை
வருங்குமே சேர்த்துஅரை மல்லிச்சாற்றால்
வடிவாகச் கெந்தியது சூதத்துக்கு

நருங்குமே யிடைபோட்டு மல்லிச்சாற்றால்
நலமாக யிருசாமம் நலியவாட்டு
கருத்துமே யிருக்குமது அரைத்துநீயும்
கதிரிலிட்டுப் பொடியாக்கிக் குப்பிக்கிட்டே,

இட்டுமே வாலுகையி லெரிநேர்பாகம்
இதமாக முத்தீயு மாட்டுஆட்டு
கட்டுமே பனிரெண்டு சாமமானால்
கணக்காக அடுப்பெரித்து ஆற்றிநீயும்
பட்டுமே யெடுத்துப்பார் அருணன்போலே
பதையாம விருந்திடுமே முருக்கம்பூப்போல்
வட்டுமே நபிமாரைத் துதியேசெய்து
வசமாக யெடுத்துமே சொல்லக்கேளே. 412

சொல்லவே செந்தூரந் தன்னைத்தானும்
சுருதிபெற நவலோகம் நூற்றுக்கொன்று
கல்லவே இட்டிடவே பத்துமாத்து
கருணைபெற மாத்தான தங்கந்தன்னை
மெல்லவே விற்றுமே செலவுசெய்து
விருதுபெறப் பள்ளியையும் நன்றாய்க்கட்டி
நல்லவே தொழுதிறைஞ்ச நல்லதாகும்
நாடினாற் குருவாகும் நயந்துபாரே. 413

பாடல்கள் :409-413: நபிமார்கள் எனக்குக் கூறிய தங்கச் செந்தூரத்தைக் கூறுகிறேன் கேள். தங்கத்தை உருக்கி தகடாகத் தட்டிக் கொண்டு கற்காவியை எலுமிச்சம் பழச்சாறு விட்டு இரண்டு ஜாமம் அரைத்து குழம்பாக வைத்துக் கொண்டு அந்தக் குழம்பை எடுத்து தங்கத் தகட்டின் மீது பூசி உலையில் சிவக்கக் காய்ச்சி அந்த குழம்பில் தோய்த்து எடு. இப்படி தோய்த்து எடுக்க தங்கம் சுத்தியாகும். இதை குகையில் வைத்து உருக்கு. இப்படி ஒரு பலம் தங்கத்தை உருக்கையில் முன் சொன்னபடி சுத்தி செய்த நாகம் 1 பலத்தைக் கொடுக்க நவச்சாரம் சேர்த்துக்

கொடு. தங்கம் சுழித்து நாகத்தை உள்வாங்கி புட்டுப் போல் நொறுங்கும். இப்படி தங்கத்தில் நாகம் சேர்த்து தங்கம் எடை பாதரஸம் சேர்த்து பாதரஸ எடை கெந்தகம் சேர்த்து மல்லிகைச் சாறு விட்டு இரண்டு ஜாமம் நன்கு ஆட்டு. இதை வெயிலில் காயவைத்து பொடி பண்ணிக் குப்பியில் அரைவாசி போடு. இதை வாலுகா இயந்திரத்தில் வைத்து பன்னிரெண்டு ஜாமம் முத்தீயும் எரித்து முடி. (தீபம் போல் 4 ஜாமம்,கமலம் போல் நான்கு ஜாமம் காடாக்கினியாக 4 ஜாமம்-1ஜாமம் / 2 மணி 24 நிமி) பின்பு ஆறவிட்டு எடுத்துப் பார்க்க சூரியன் போன்ற செந்தூரம் கிடைக்கும். நபிமாரை வணங்கி இந்த செந்தூரத்தை நவலோகங்களில் நூற்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் உருக்கு முகத்தில் கொடுக்க பத்து மாற்று தங்கம் உண்டாகும். இதை விற்று செலவு செய்து பள்ளிவாசல் கட்டு. தொழுது போற்ற உனக்கு நன்மை கிடைக்கும். இது குரு மருந்தாகும் செய்து பார்.

கோடாசூரி வீரவைப்பு

நயந்துமே சவ்வீர வைப்புதன்னை
நலமாகச் சொல்லுகிறே னாட்டுள்ளோர்க்குப்
பயந்துமே போகாதே சொல்லக்கேளு
பதிவாகச் சொன்னதெல்லாம் சணத்தில்சித்தி
கயந்துமே உபரசங்கள் தன்னைக்கட்டக்
கனிவாகப் பழுத்துவிடுங் கருணையோர்க்கு
வயந்துமே யிவ்வீரம் யெல்லாத்துக்கும்
வடிவாகச் செய்திடவே வலுவுமாமே. 414

வலுவாகக் கோடாசூரி வீரங்கேளு
வைத்திடவே பலனாகும் வண்மையோர்க்கு
நலுவாக வெடியுப்பு அஞ்சாங்காய்ச்சல்
நலமாக நாலுபத்து பலம்நிறுத்து

கலுவாகச் சீனமது அஞ்சுபத்து
கனிந்துமே யிதுரெண்டுங் கல்வத்திட்டு
தலுவாக மணிச்சாறு விட்டுஆட்டித்
தடையறவே வில்லைகட்டி உலரப்போடே. 415

போடவே சிறுதோண்டி தன்னிலிட்டுப்
புகழாக வாலையென்ற சட்டிமூடி
ஆடவே உளுந்தாலே மண்ணுஞ்செய்து
அடைவாக அடுப்புதனி லேற்றிநீயும்
காடவே தீயெரித்துப் பீங்கான்வைத்துக்
கனிவாக வெள்ளைநீர் வருகும்பாரு
கூடவே வெள்ளையைத்தான் வீசிப்போட்டுக்
குடியாகப் பின்னீரையெடுத்துக் கொள்ளே. 416

எடுத்துமே குப்பிதனி லடைத்துக்கொண்டு
இதமாகச் சூதமது பலந்தானெட்டு
அடுத்துமே பெரும்பீங்கான் றன்னிலிட்டு
அடைவாகத் திராவகத்தை அதிலேவிட்டு
கடுத்துமே பீங்கானைக் கரிநெருப்பில்
கனிவாக வைத்துமெள்ளக் கொஞ்சமுத
தடுத்துமே வெள்ளைபோ லாகும்பாரு
தாக்கினார் யாகோபு தர்மவானே. 417

தர்மமாய்க் கல்லுப்புப் பலந்தானாலு
தாட்டிகமாய்த் துரிசியது பலந்தானாலு
வர்மமாய்ப் பூனீறு பலந்தான்ரெண்டு
வகையான வெடியுப்பு ஒன்னரைதானப்பா
கர்மமாய்ச் சீனமது ஒன்னரையேயாகும்
கனமான அன்னமென்ற பேதிதானும்
பர்மமாய் ஒருபலந்தான் கூடப்போடு
பதிவான காரமது அரையேபோடே. 418

போடுமே கல்லுப்புத் துருசுதன்னைப்
போக்கோடே வறுத்துமே கூடப்போடு

நாடுமே யெல்லாமும் பொடியதாக்கி
நலமாகச் சூதத்தில் ஒன்றாய்ப்போடு
காடுமே யிதுவெல்லாம் பொடித்துநீயும்
கனிவாக வாலுகையினுள்ளே போட்டுப்
பாடுமே அடுப்பேற்று யெரிநேர்பாகம்
பதிவாகப் பனிரெண்டு சாமந்தீயே. 419

தீயெரித்து ரெண்டுநா ளாறப்போட்டுச்
சிறப்பாகத் தேங்காய்போ லேறிநிற்கும்
வாயெரித்துச் சவ்வீர மாச்சுதையா
வடிவாக அதைமடக்க வண்மைகேளு
தாயகமாய்ச் சவ்வீரம் பொடிதான்சேரைத்
தடையற்ற கல்லுப்பு ஒன்றுமுக்கால்
மாயகமாய்ச் சவ்வீரப் பொடிக்குப்பாதி
மகத்தான துரிசியென்ற பொடிதான்பாரே. 420

பாருமே துருசுக்குப் பாதினீர்
பதிவான சீனமுக்கால் பாகமாகக்
காருமே வெடியுப்பு அப்படியேயாகும்
கனிவாக முன்றிலொன்று சாரஞ்சேரு
வாருமே அன்னமென்ற பேதிதானும்
வடிவான பூனீர்க்குப் பாதியப்பா
ஆருமே யெல்லாமும் பொடியதாக்கி
அடைவான குப்பிக்கு அரைவாசியிட்டே. 421

இட்டுமே வாலுகையில் வைத்துநீயும்
இதமாகத் தீயெரிப்பாய் கமலம்போல
பட்டுமே பனிரெண்டு சாமந்தானும்
பதிவாகத் தீயெரித்து ஆற்றிநீயும்
கட்டுஒரு நாளைக்கு ஆறப்போடு
கனிவாக யெடுத்திடவே கொச்சியென்றவீரம்
திட்டுமே யிப்படிக்கு அஞ்சுமுறைசெய்தால்
திடமான கோடாசூரி யாகுந்தானே. 422

தானென்ற யிவ்வீரச் சுண்ணஞ்செய்தால்
தடையறவே தங்கமது பூப்போல்நீறும்

கோனென்ற சரக்கெல்லாஞ் சுண்ணமாகும்
குழந்தைதான் ரசவாத மாடுமாடும்
கானென்ற வாதமது கொஞ்சமாகும்
கடிதான நபிமார்க ளெல்லாந்தானும்
ஊனென்ற வெகுபாடு பட்டுப்பட்டு
உறுதியாய்த் தேறினார் உரைசெய்தேனே. 423

பாடல்கள்:414-423: சவ்வீர வைப்பு முறையைச் சொல்லுகிறேன் கேள். உபரசங்கள் பழுக்கவும் எல்லா முறைகளும் சித்தியாகவும் இந்த வீரத்தைச் செய்ய நன்று. கோடாசூரி வீர வைப்பு முறையைக் கேளு. இதைச் செய்தால் புத்தியுள்ளோர்க்குப் பலனாகும்.வெடியுப்பு ஐந்தாம் காய்ச்சல் நாற்பது பலம் நிறுத்து எடுத்துக் கொள். சீனிக்காரம் ஐம்பது பலம் நிறுத்து எடுத்துக்கொள். இரண்டையும் கல்வத்தில் போட்டு வேலிப்பருத்திச் சாறுவிட்டு நன்கு அரைத்து வில்லை தட்டிக் காயவை. இதை ஒரு சிறு தோண்டியில் போட்டு வாலை வைத்து மூடி சீலை செய்து (உளுந்து சீலை) உலர்த்தி அடுப்பேற்றி எரிப்பாய். இதனால் வரும் முன்னால் விழும் வெள்ளை நீரை நீக்கி விட்டு பின்னால் விழும் சிவப்பு நீரை எடுத்து புட்டியில் அடைத்துக் கொள். முதலில் சூதம் என்ற பாதரஸம் எட்டு பலம் எடுத்துக் கொண்டு அதை ஒரு பீங்கானில் விட்டு அதில் மேற்படி திராவகத்தை விட்டு பீங்கானை கரிநெருப்பில் வைத்து மெதுவாக ஊது. ரசம் வெண்ணெய் போல் ஆகும். இதைத் தனியாக வை. கல்லுப்பு நான்கு பலம். துரிசு நான்கு பலம், பூநீறு ரெண்டுபலம், வெடியுப்பு ஒன்னரைப் பலம், அன்னபேதி ஒரு பலம் வெங்காரம் அரைப்பலம் எடுத்துக் கொள். இதில் கல்லுப்பையும், துரிசையும் வறுத்துப் போடு. மற்ற எல்லாச் சரக்குடன் போட்டு நன்கு பொடியாக்கி முன் வைத்துள்ள வெண்ணெய் போல்

உள்ள பாதரஸத்தில் கூடப்போடு. எல்லாவற்றையும் உதிர்த்து குப்பியில் அரைவாசி போட்டு வாலுகையில் வைத்து பன்னிரெண்டு ஜாமம் தீ எரித்து 1 ஜாமம் ஆறப்போடு. பின்பு எடுத்துப்பார். இதற்கு கொச்சி வீரம் என்று பெயர். இப்படி ஐந்து முறை செய்தால் அதற்கு கோடாசூரி வீரம் என்று பெயர்.

இந்த வீரத்தைச் சுண்ணம் செய்தால் தங்கமானது சுண்ணமாகும். இதனால் எல்லா சரக்கும் சுண்ணமாகும்.

இது இருந்தால் ரசவாதம் குழந்தை கூட செய்யும் இதையெல்லாம் நபிமார்கள் வெகு பாடுபட்டுச் செய்தனர். அதை இங்கு கூறினேன்.

சவ்வீரத் தொந்தம்

உரைசெய்தேன் சவ்வீரத் தொந்தந்தன்னை
உற்றுமே சொல்லுகிறே னுறுதியாகப்
பரைசெய்தேன் முன்வைத்த சவ்வீரத்தைப்
பதிவாகப் பலமதுதா னெட்டெடுத்துக்
கரைசெய்த கல்வத்திற் பொடியாய்ச்செய்து
கனமான கல்லுப்புச் சுண்ணம்ரெண்டு
வரைசெய்த துரிசியென்ற சுண்ணம்ரெண்டு
வடிவான வெடியுப்புச் சுண்ணம்ரெண்டே. 424

ரெண்டான சாரமென்ற சுண்ணம்ரெண்டு
நேரான வெடியுப்புச் சுண்ணம்ரெண்டு
பண்டான சீனமென்ற சுண்ணம்ரெண்டு
பாங்கான பொடியோடே ஒக்கக்கூட்டிச்
சண்டான மேருவுக்கு அரைவாசிபோட்டுச்
சாதகமாய் வாலுகையின் மேலேவைத்துச்
செண்டான அடுப்பேற்றி யெரிப்பாயப்பா
செகமறியப் பனிரெண்டு சாமந்தானே 425

தானென்ற வீரத்தை யெடுத்துப்பார்த்தால்
சாதகமா யடியிலே நிற்கும்பாரு

காரினென்ற யிரும்புமே லணுப்போல்வைத்துக்
கனமான நீரையள்ளி அதிலேகுத்தத்
தேனென்ற குருவாகும் பாணிஊற்றித்
திடமான காகத்தி னிறகிற்பூசில்
கோனென்ற கொக்கிறகு போலேயாகும்
கொள்ளையே கொள்ளையிது வாதந்தானே. 426

வாதந்தா னெப்படிந்தான் வருகுமக்காள்
வடிவான துருசுக்குள் செம்பைக்கொல்ல
நீதியாய் மதிபழுக்கும் பொன்னேயாகும்
நீனிலத்தில் உண்டுடுத்தித் திரிந்துதானும்
காதமாய்த் துருசதுவை நீற்றிநீயும்
கணக்கவே சூதத்தைக் கட்டிக்கொள்ளு
பாதமது பூமியிலே நடவாமற்பண்ணும்
பதிவான சித்தியாம் பாரிலோர்க்கே. 427

பாடல்கள் 424-427: சவ்வீரத்தைத் தொந்தம் ஏற்றும் முறையைக் கூறுகின்றேன் கேள். முன் வைத்த சவ்வீரம் எட்டு பலம் எடுத்துக் கொள். இதை கல்வத்தில் பொடி செய்து கொள். இத்துடன் கல்லுப்புச் சுண்ணம் இரண்டு பலம், துரிசுச் சுண்ணம் இரண்டு பலம், வெடியுப்புச் சுண்ணம் இரண்டு பலம் நவச்சாரச் சுண்ணம் இரண்டு பலம், சீனிக்காரச் சுண்ணம் இரண்டு பலம் இவைகளை பொடி செய்த சவ்வீரத்துடன் போட்டு குப்பியில் அரைவாசி போட்டு வாலுகையில் வைத்து அடுப்பேற்றி பன்னிரெண்டு ஜாமம் எரித்து எடு. குப்பியின் அடியில் நிற்கும். இதை எடுத்து ஒரு இரும்புத் துண்டில் ஒரு அணு அளவுக்கு வைத்து ஒரு சொட்டு தண்ணீர் ஊற்ற குருவாகும்.இதை வழித்து காகத்தின் இறகில் பூசிப்பார்க்க அது கொக்கு இறகு போன்று வெள்ளையாகும். இதனால் வாதம் சித்தியாகும். ரசவாதமானது எப்படி வரும் எனில் துரிசில் செம்பைக் கொன்று வெள்ளியில் கொடுக்க பழுத்து பொன்னாகும். இதை விற்று உண்டு, உடுத்தி

வாழ்ந்து துரிசை சுண்ணமாக்கி அதனால் ரசத்தைக் கட்டினால் பூமியில் நடக்காமல் ஆகாய பிரவேசம் சித்தியாகும் உலகில் உள்ளவர்களுக்கு.

ரசக்கட்டு

பாரிலே துரிசியது பலமேதூக்கு
பதிவான சோரமென்ற வீரந்தன்னைத்
தாரியாய் மூன்றுகா சிடைதான்தூக்கித்
தப்பாமல் வாய்நீரால் வீரந்தன்னைக்
காரியமாய்க் குழைத்துநீ துருசில்பூசிக்
கதிரில்வைத்துப் பத்துநாள் போட்டபின்பு
வேரிலே நீரிருந்தால் துளிர்க்கும்போல
விதமாக நீறுமது வித்தைதானே. 428

தானென்ற சாறுவராத் தழைகளெல்லாம்
தாட்டிகமாய்க் குருபோட்டுப் பிழிந்துபாரு
போனென்ற ஆறுபோல் தண்ணீராகும்
போக்காகப் புஷ்டியில்லாச் ஜெலமுமாகும்
வாமென்ற சரக்குகளிற் சுருக்குப்போட்டால்
வடிவான சரக்கெல்லாஞ் சாகுஞ்சாகும்
கோமென்ற நவலோக மெல்லாந்தங்கம்
குணமாக யாகோபு கூறினாரே. 429

கூறினார் விராலியிலை தனைப்பிடுங்கிக்
குணமாகத் துருசினுட சுண்ணங்கொஞ்சம்
பாரிலே யிட்டுமே யிடிக்கத்தண்ணீர்
பதிவான ஆறுபோல் ஜெலமுமாகும்
காரியமாய் அய்ச்சட்டி தன்னிலேதான்
காரணமாய்ப் பிழிந்துமே சூதமிட்டு
வாரியே சூதமது பலமுமிட்டு
வடிவாகக் காய்ச்சிடவே வழக்கமாமே. 430

வழக்கமா யிட்டலிபோல் வெண்ணெய்யாகும்
வடிவான போக்குத்தான் மெத்தவுண்டு
தழக்கமாய்ச் சூதமதைக் கரியில்வைத்துத்
தனையுருக்க பொன்போலே கண்விட்டாடும்
இழக்கமாய்த் தங்கமிட்டுக் கெந்தியிட்டு
இதமான தாளகமுஞ் சிலையுமிட்டுப்
பழக்கமாய் மல்லிகையின் சாற்றாலாட்டிப்
பண்புடனே குப்பியிலே பாதிபோடே. 431

போட்டுமே வாலுகையில் மேலேவைத்துப்
பொருந்தவே பனிரெண்டு சாமந்தீதான்
காட்டுமே யெரித்துயெடு செந்தூரமாகும்
கனிவான செந்தூரம் நவலோகத்தில்
தாட்டுமே கொடுத்திடவே பத்துமாத்துத்
தடையில்லா நபிமார்கள் சொன்னநீதி
ஊட்டுமே உப்புக்கும் காவிக்குந்தான்
உறுதியா யிருக்குமது உண்மைதானே. 432

உண்மைதா னுபரசங்கள் காரசாரம்
உற்றுமே லவணமுத லிருபத்தைந்து
தண்மையாய்ப் பாஷாண மறுபத்துநாலும்
தடையறவே நவரத்ன மெல்லாந்தானும்
கண்மையாய் யிதுவெல்லாஞ் சத்துவாங்கிக்
காரணமாய்ச் சூதமதி லீய்ந்தால்கேளு
பெண்மையாய்க் குளிகையாம் பெலக்கும்வேதை
பேர்பெரிய யாகோபு பேசினாரே. 433

பேசினதோர் துருசியென்ற சுண்ணந்தொட்டு
பெலக்கவே சாருவராத் தழையிலிட்டு
ஆசியே பிழிந்துநீ வைத்துக்கொண்டு
அடைவாக நெடுங்கம்பி லிங்கம்வாங்கித்
தாசியே பழச்சாறு சுருக்குத்தாக்கு
தாட்டிகமாய் விராலிச்சார் சாமம்பத்து

வாசியே சுருக்கிடவே மெழுகுமாகும்
வடிவான நவலோகம் நூற்றுக்கொன்றே. 433

ஒன்றிட்டு உருக்கியே பார்க்கும்போது
உறுதிபெறத் தங்கமது உயரவோடும்
நன்றுமே உப்புக்குங் காவிக்கப்பா
நாடியே யிறங்கிவிடும் நன்மையாக
கன்றுமே போட்டதுபோல் கனிந்துஓடும்
கருணைபெற நபிமார்க ளாடும்நேர்மை
பண்டுமே யிருந்ததுவை யாகோபுதானும்
பலன்பார்த்துச் சொன்னதிந்த வண்மைதானே.435

வண்மையாந் துருசினுட நீறினாலே
மகத்தான நபிமார்கள் கெவுனம்பண்ணித்
தண்மையாய் ஓடினார் தனுமப்போ
தாட்டிகமாய் நான்கூடப் போனேன்பாரு
கண்மையாய் வெகுகாலஞ் சென்றபின்பு
கனிவாக அடியேனைக் கருதிச்சொன்னார்
இண்மையா யிவ்வேலை கற்றுக்கொண்டு
இனிதான பாகமெல்லா மோதினேனே. 436

ஓதினேன் வடமொழியைப் பார்த்துத்தேறி
உறுதிபெறக் கைபாக வரிசையோடு
நீதியாய்ச் சுண்ணத்தின் செயலுங்கண்டு
நிதானித்துச் சவுக்காரச் சுண்ணஞ்சொல்லி
சோதிபெற வருந்தியே நபிமாரோடே
சுருதிபெறக் கைபாக வரிசைசொல்லி
வேதிபெறச் சொல்லிவிட்டேன் துருசுநீற்றை
விதமாகக் கைகண்டால் விதமுமாமே. 437

விதமாக விராகனிடை துருசுச்சுண்ணம்
வீதிபெறக் கள்ளிப்பால் தன்னிலிட்டு
அதமாக மூன்றுநாள் வைத்துப்பாரு
ஆதியாய் சுத்தசலம் போலேயாகும்
நிதமாக வெள்ளையென்ற பாசாணத்தை
நெடிதான அயச்சட்டிக் குள்ளேயிட்டு

பதமாக நால்சாமஞ் சுருக்குப்போடப்
பதிவான வெள்ளையது மெழுகுமாமே. 438

மெழுகான வெள்ளையைத்தா னெடுத்துநீயும்
வித்தகமாய் வெள்ளீயந் தனையுருக்கி
வழுவாக யிடைக்கிடைதா னீய்ந்துபாரு
வடிவான வங்கமது வெள்ளிதன்னில்
அழுவான வங்கத்தை வெள்ளிதன்னில்
அடைவாக யிடைக்கிடைதான் கொடுத்துருக்க
நழுவாமற் றூளாக நொறுங்கிப்போகும்
நாட்டிலே சொல்லாதே நன்மைதானே, 439

பாடல்கள் : 428-439: துரிசு ஒரு பலம் எடு. வீரக் குருவை காசிடை எடுத்து வெடியுப்பு திராவகத்தால் குழைத்து துரிசின் மேல் பூசி வெயிலில் போடு. இப்படி 10 நாட்கள் போட்ட பின்பு எடுக்க துரிசு நீர்ந்து சுண்ணமாகும். இதைச் சாறு வராத தழைகளில் போட்டுப் பிழிய சாறு வரும். சக்கையில்லாமல் நீராகும். இந்த நீரில் சுருக்குப் போட்டால் சரக்குகள் சாகும். இதனால் நவலோகங்களும் தங்கமாகும்.

விராலி இலையைப் பிடுங்கி வந்து இதில் துரிசுச் சுண்ணத்தை போட்டு இடிக்க தண்ணீர் போல் நீர் வரும், இந்த நீரை அயச்சட்டியில் போட்டு அதில் பாதரஸத்தை ஒரு பலம் போட்டு கரிநெருப்பில் வைத்துக் காய்ச்சு. இது போல் காய்ச்ச பாதரஸமானது இட்லிபோல் வெண்ணெய் ஆகும். இந்த ரஸத்தை கரியில் வைத்து உருக்க வெண்ணெய் போன்று உருகி கண்விட்டு ஆடும். இந்த ரஸத்துடன் தங்கம், கெந்தகம், தாளகம், மனோசிலை இவைகளை சேர்த்து மல்லிகைச் சாறு விட்டு அரைத்து காயவைத்து உதிர்த்து குப்பியில் பாதி போட்டு வாலுகையில் வைத்து பன்னிரெண்டு ஜாமம் முத்தீயும் எரித்து ஆறவிட்டு எடுக்க செந்தூரம் ஆகும்.

இந்த செந்தூரத்தை ஒன்பது உலோகங்களில் கொடுக்க பத்து மாற்றுத் தங்கம் ஆகும். இது உப்புக்கும் காவிக்கும் நிற்கும். இது நபிமார்கள் கூறிய உண்மையான முறையாகும்.

மேலும் நூற்றி இருபது உபரசங்கள், கார சாரங்கள் இருபத்தி ஐந்து உப்புகள், அறுபத்தி நான்கு பாடாணங்கள், ஒன்பது இரத்தினங்கள் இவற்றை எல்லாம் முறைப்படி செய்து சத்து வாங்கி பாதரஸக் கட்டில் கொடுக்க சிறந்த குளிகையாகும் இதனால் வாதம் வலுப்பெறும்.

இந்த துருசுச் சுண்ணத்தை சாறுவராத தழைகள் மீது இட்டு இடித்துப் பிழிய சாறு வரும். இப்படி விராலியின் இலையில் சாறு வாங்கி வைத்துக் கொண்டு ஜாதிலிங்கம் நல்ல கம்பிகம்பியாக உள்ளதாக வாங்கி வந்து முதலில் எலுமிச்சம் பழச் சாற்றில் சுருக்குக் கொடு. பத்து ஜாமம் சுருக்குக் கொடுத்து எடுத்து பின்பு விராலி இலைச் சாற்றில் பத்து ஜாமம் சுருக்கிடு. லிங்கம் மெழுகு போல் ஆகும். இதை ஒன்பது உலோகங்களில் நூற்றுக்கு ஒன்று கொடுத்து உருக்க நல்ல தங்கம் கிடைக்கும். இது உப்புக்கும், காவிக்கும் நிற்கும். இது நபிமார்கள் சொன்ன முறையாகும். இதைச் செய்து பார்த்து யாகோபு ஆகிய நான் உறுதியுடன் கூறினேன்.

இப்படி துரிசு சுண்ணத்தால் நபிமார்கள் கெவுனக் குளிகை செய்து ஆகாய மார்க்கமாகப் போனார்கள். நானும் கூடச் சென்றேன். வெகுகாலம் சென்ற பின்பு எனக்கு இம்முறையைக் கூறினார். நான் இதைக் கற்றுக் கொண்டு உனக்குக் கூறினேன் வடமொழியாகி கிரந்தத்தைப் பார்த்துப் புரிந்து கொண்டு கைபாக வரிசையுடன் சுண்ணங்களின் செயல்பாட்டை அறிந்து பார்த்து

சவுக்கார சுண்ண முறையைச் சொல்லி நபிமார்களின் கைபாக வரிசையையும் கூறினேன். இதைப் புரிந்து துரிசைச் சுண்ணம் செய்தால் எல்லாம் சித்தியாகும்.

வெள்ளைப்பாடாண மெழுகு

தானென்று நொறுங்கினதோர் வெள்ளைதன்னைத்
தாக்கிடவே சமனாகச் சூதஞ்சேர்த்துக்
கானென்ற பால்முறிந்த நீராலாட்டிக்
கனிவாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
ஊனென்ற அயவகலில் மூடிநீயும்
உறுதிபெற மண்செய்து சொல்லக்கேளு
வானென்ற பத்தெருவில் புடமுமிட்டால்
வடிவான குருவாகும் வண்மைதானே. 440

வண்மைதான் குருவெடுத்து வைத்துக்கொண்டு
வடிவான வங்கம்நூ றொன்றுருக்கித்
தண்மையாய்க் குருவொன்று கொடுத்துப்பாரு
தடையறவே கிழத்தோல்போற் கிளம்புமீயம்
கண்மையாய் வெள்ளியது பத்துமாத்து
கனிந்துமே யெண்ணாதே செம்புநூறில்
தண்மையாய் ஒன்றுகொடு வெள்ளியாகும்
தாக்கிடவே நாகத்துக் கிப்படியேயாமே. 441

ஆமேதான் நபிமார்கள் மக்காதேசம்
அடைவாக வெள்ளீயம் நீரைவாங்கி
போமேதான் விற்றுமே செலவுசெய்து
போக்கோடே அத்தேச மெல்லோருந்தான்
வாமேதான் பிழைப்பார்க ளத்தேசத்தில்
வடிவாக வாதிக்குச் சொன்னேனப்பா
காமேதான் துருசினுட சுண்ணத்தாலே
கைக்கடங்கா வித்தையெல்லாங் கருதிப்பாரே. 442

பாடல்கள்: 438-442: துரிசுச் சுண்ணத்தை ஒரு விராகன் எடை திருகுகள்ளிப் பாலில் போட்டு மூன்று நாட்கள்

அசையாமல் வை. பால் முறிந்து சுத்த நீராகும். வெள்ளை பாடாணம் ஒரு பலம் எடுத்து இரும்புச் சட்டிக்குள் வைத்து இந்த நீரால் நான்கு ஜாமம் சுருக்குப் போடு. வெள்ளைப் பாடாணம் மெழுகு ஆகும். இந்த வெள்ளை பாடாணத்தை எடுத்து வெள்ளீயத்தை உருக்கி கொண்டு எடைக்கு எடை கொடுக்க வெள்ளீயம் நொறுங்கும். இந்த நொறுங்கிய வங்கத்தை வெள்ளியில் எடைக்கு எடை கொடுத்து உருக்க தூளாக நொறுங்கும். இந்த தூளை எடுத்து எடைக்கு எடை பாதரஸம் சேர்த்து கள்ளிப்பால் முறிந்த நீரால் ஆட்டி வில்லை தட்டி வெயிலில் காயவைத்து ஒரு இரும்பு அகலில் மூடி உறுதியாக சீலைமண் செய்து பத்து எருவில் புடம் போட குரு மருந்தாகும்.

இந்த குருவை எடுத்து வைத்துக் கொண்டு வெள்ளீயத்தை நூறு பலம் உருக்கிக் கொண்டு குரு ஒன்று கொடுக்க நயம் பிரிந்து பத்து மாற்று வெள்ளி கிடைக்கும். இப்படி செம்பு நூறுபலத்தில் ஒரு பலம் குருவைக் கொடுக்க வெள்ளியாகும். நாகத்துக்கும் இப்படியே ஆகும். மக்கா தேசத்தில் உள்ள நபிமார்கள் இப்படி வெள்ளீயத்தில் உள்ள நீரை வாங்கி வெள்ளியாக்கி விற்று செலவுகள் செய்து பிழைப்பார்கள். இந்த துரிசு சுண்ணத்தால் பல வேலைகள் செய்யலாம். இதை ரசவாதிக்காக கூறினேன்.

காரீய குரு/கௌரி பாடாணமெழுகு

கருதிப்பார் துரிசினுட சுண்ணந்தானும்
கதராமல் விராகனிடை யெடுத்துக்கொண்டு
நருதியே எருக்கினுட பாலுதன்னில்
நலமாகப் போட்டுதிரி நாளும்வைத்துக்
கருதியே பார்த்திடவே முறிந்துபோகும்
தாட்டிகமாய்ப் புஷ்டியில்லாத் தகமையாகும்
வருதியே ஜெலமாகும் ஜெலத்தைத்தானும்
வடிவாக இருத்துமே வழக்கங்கேளே. 443

வழக்கமாய் அயச்சட்டி தன்னைவாங்கி
வடிவாகக் கெவுரியென்ற பாஷாணத்தைப்
பழக்கமாய் அயச்சட்டிக் குள்ளேயிட்டுப்
பதிவாக நால்சாமம் சுருக்குப்போடு
தழக்கமா யிருசாமஞ் சுருக்குப்போடத்
தன்னாலே மெழுகாகும் கண்டுநீயும்
கழக்கமாய்க் கெவுரியென்ற மெழுகுதன்னைக்
கணக்கிட்டுச் சொல்லாலே முடிப்பாய்பாரே. 444

முடியவே கெவுரியென்ற மெழுகைத்தானும்
முக்கியமாய்க் காரீயம் பலந்தானொன்றில்
வடிவாக உருக்கியே இடையேதாக்கு
வகையான யீயமது நொறுங்கித்தூளாம்
துடியாக யித்தூளைத் தங்கத்திலியத்
துணையாகத் தங்கமது நொறுங்கித்தூளாம்
படிவாகக் கல்வத்தி லிட்டுநீயும்
பாங்காகச் சூதத்தை யிடையேகூட்டே. 445

கூட்டியே எருக்கம்பால் தெளிந்தநீரால்
குணமாக அரைத்துவில்லை கட்டிநீயும்
தாட்டிகமாய்க் கதிரில்வைத்து உலர்ந்தபின்பு
தண்மையாய் அயச்செப்பில் வைத்துமூடிக்
காட்டியே சீலைசெய்து சொல்லக்கேளு
கனிவாகப் பத்தெருவிற் புடத்தையிட்டு
ஒட்டியே குருவாகும் நூற்றுக்கொன்று
உடனீய மாத்ததுவுஞ் சொல்லக்கேளே. 446

சொல்லவே வங்கத்தின் குருவைப்போலே
தொல்லுலகில் கண்டதில்லை தோய்வுமாகும்
மெல்லவே வங்கத்தால் தங்கமாகும்
மேதினியில் வங்கத்தி லுழைக்காமூடர்
கல்லவே வெகுபேச்சுப் பேசுவார்கள்
கனிவாக யீயத்தின் பெருமைசொல்லார்
நல்லவே யேருழுகத் தெரியாமூடர்
நலமான சாத்திரங்கள் பொய்யென்பாரே. 447

பொய்யென்று சொல்லாமற் சொல்லக்கேளு
போக்கான வங்கத்தின் குருவுதன்னை
மெய்யென்று யெடுத்துமே செம்புநூறில்
மேன்மையா யொன்றுகொடு யேமமாகம்
பையில் வைத்த பொருள் போலே பதியவூடும்
பதிவான உப்புக்குங் காவிக்குந்தான்
வையகத்தி லிரங்கிடுங்காண் தங்கந்தானும்
வடிவான பொருளறிந்தால் மார்க்கமாமே. 448

மார்க்கமா யிம்மெழுகிற் சூதங்கட்டும்
மயமாகச் சரக்கெல்லாங் கொல்லுங்கொல்லும்
ஆர்க்கமாய் நவலோக மெல்லாந்தானும்
அடைவாக மெழுகாகும் வேதையாகும்
தார்க்கமாய் வங்கத்தின் பெருமைதன்னைத்
தடையில்லா நபிமார்கள் தருகாவிற்றான்
வார்க்கவே செய்திடுவார் நபிமார்தானும்
வடிவறிந்தால் யெல்லாமும் வழக்கமாமே. 449

வழக்கமாய் வங்கத்தின் தங்கந்தானும்
வடிவாகக் கிணறுபோல் பெருகிநிற்கும்
தழக்கமாய் அமுர்தப்பால் சுரந்தாப்போலே
தாட்டிகமாய் வங்கத்தின் பெருமையாகும்
இழக்கமா யெண்ணாதே பாகமாக
இதமாக யிறைக்கிறைக்கத் தொலையாதப்பா
கழக்கமாய்ப் பாகமது கற்றுக்கொண்டால்
கனிவாகத் தரணிதனில் நபிமாராமே. 450

பாடல்கள் : 443-450: இந்த துரிசினுடைய சுண்ணத்தை ஒரு விராகன் எடை எடுத்து எருக்கன் பாலில் போட்டு மூன்று நாட்கள் வைத்திருக்க முறிந்து கப்பியில்லாமல் நீராகும். இதை இறுத்து வைத்துக் கொள்.

ஒரு இரும்புச் சட்டியை எடுத்து அதற்குள் கெவுரி பாடாணத்தை வைத்து மேற்படி நீரால் நான்கு ஜாமம் சுருக்குப் போடு. இரண்டு ஜாமம் சுருக்கிட்டவுடனேயே மெழுகு ஆகும். இதைக் கண்டு முழுதும் சுருக்கிட்டு எடு. இந்த கௌரி மெழுகால் அளவிடமுடியாத வேலைகள் செய்யலாம். இந்த கெவுரி மெழுகை ஒரு பலம் சுத்தி செய்த காரீயத்தில் உருக்கு முகத்தை சம எடை கொடுக்க ஈயம் நொறுங்கித் தூளாகும். இந்தத் தூளை கல்வத்தில் போட்டு எடைக்கு எடை பாதரஸம் கூட்டு.

கூட்டி எருக்கம் பால் தெளிந்த நீர் விட்டு நன்கு அரைத்து வில்லையாகத் தட்டி வெயிலில் காயவைத்து உலர்ந்த பின்பு இரும்பு அகலில் வைத்து மூடி வலுவாகச் சீலைமண் செய்து பத்தெருவில் புடம் போட குருவாகும். இதனால் நவலோகமும் நூற்றுக்கு ஒரு பங்கு கொடுக்க பொன்னாகும். இந்த வங்கத்தின் குருபோல் உலகில் வேறு இல்லை. இந்த வங்கத்தை குருவாகச் செய்யாத மூடர்கள் பலபேச்சு பேசி அலைவார்கள். ஈயத்தின் பெருமையைக் கூறமாட்டார்கள். இவர்கள் மூடர்கள் சாத்திரத்தைப் பொய்யென்பார்கள். இப்படிக் கூறாமல் வங்கக் குருவை எடுத்து நூறு பங்கு செம்பில் உருக்கு முகத்தில் ஒரு பங்கு குருவைக் கொடுக்க தங்கமாகும். இந்த தங்கம் உப்புக்கும் காவிக்கும் நிற்கும். இந்த கௌரி மெழுகால் சூதம் கட்டும். இது எல்லா சரக்கையும் கொல்லும். ஒன்பது உலோகங்களும் மெழுகாகும். இதனால் வேதை கைகூடும். இந்த வங்கத்தின் பெருமையான செயல்களை நபிமார்கள் தர்காவில் சொல்வார்கள் இந்த வங்ககத்தால் குறையாத அளவு தங்கம் கிடைக்கும். இந்த முறையைக் கற்றுக் கொண்டால் நீயும் நபிமாராவாய்.

தாளக வேலை

நபியாகப் போகவென்றால் சொல்லக்கேளு
நானிலத்திற் தாளகத்தின் மார்க்கந்தானும்

துமியாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
துடியான தாளகந்தான் பலமும்பத்து
வமியாகச் சுக்கான்போல் சுத்திபண்ணி
வடிவான அயச்சட்டிக் குள்ளேயிட்டு
தமியாக யிலைக்கள்ளிப் பாலுக்குள்ளே
தடையறவே துருசுநீர் களஞ்சிபோடே. 451

போடவே ஜெலமாகும் ஜெலத்தினூடே
பெருகவே தாளகத்திற் சுருக்குப்போடு
ஆடவே யிருசாமஞ் சுருக்குப்போட
அப்பவே தாளகமும் மெழுகாய்ப்போகும்
ஊடவே மெழுகெடுத்து வைத்துக்கொண்டு
உறுதிபெற நபிமாரைத் தொழுதுபோற்று
நாடவே தொழுதிறைஞ்சி அல்லாதன்னை
நலமாக மெழுகெடுத்து நாட்டக்கேளே. 452

நாட்டமென்ன செம்பதுதான் பலமும்நூறு
நலமாக முன்சுத்தி யெழுநூறுதன்னில்
கூட்டமாய்ச் சொல்லிவிட்டேன் குறித்துக்கேளு
குணமாகத் தாளகத்தின் மெழுகொன்றீய
வாட்டவே வெண்கலம்போல் நொறுங்கிப்போகும்
வடிவான வெண்கலத்தின் மார்க்கங்கேளு
காட்டவே நொறுங்கினதோர் தூளுதன்னைக்
கனிவாகத் தங்கத்தி லிடையேதாக்கே. 453

தாக்கிட்டு யெடுத்துப்பார் தங்கந்தானும்
தடையறவே நொறுங்கிப்போந் தகமைகேளு
வாக்கிட்டுக் கல்வமிட்டுச் சொல்லக்கேளு
வடிவாகச் சூதமது இடையேசேர்த்துப்
பாக்கிட்டுச் சூதமிடை கெந்திசேர்த்துப்
பதிவாக முன்பாலா லாட்டிநீயும்
காக்கிட்டு வில்லைதட்டிக் கதிரில் வைத்துக்
கனமாக மேல்மூடி மண்ணுஞ்செய்யே. 454

செய்துமே பத்தெருவிற் புடமுமிட்டுச்
ஜெயமாகச் செந்தூர முருக்கம்பூப்போல்
பைதுமே யிருக்குமந்தச் செந்தூரத்தைப்
பலன்கண்டு நபிமாரை வணங்கியேற்றிக்.
கைதுமே அல்லாவின் துணையினாலே
கனிவாகச் செந்தூர மெடுத்துநீயும்
பெய்துமே மலைமேலே கொடுத்துப்பாரு
பிரபலமாய்ப் பழுத்துவிடும் துலையிதாமே. 455

துலையாத செம்புநூ றொன்றுருக்கித்
துடியாக ஒன்றுயிடு மாற்றுக்கேளு
வலையாக மாற்றுத்தா னிருபதாகும்
வடிவான தங்கமது மருவுங்காலை
அலையாமல் தாளகத்தை உறுதியாக
அடைவாக வைத்துமே நொறுக்கிநீயும்
தலைபோலக் கொடுத்திடவே யெல்லாந்தங்கம்
தாட்டிகமா யாகோபு தண்மைதானே. 456

தண்மையாய்த் தாளகத்தின் வேலைபோலே
தாக்கிடவே ஒன்றுக்குங் கிடையாதப்பா
உண்மையாய் உலகத்தில் வாதிமார்கள்
உறுதியாய்ச் செய்வார்கள் உலுத்தவாதி
வண்மைபெறப் பேசுவார் கேலியாக
வடிவான பொருளறிந்து மார்க்கஞ்செய்யார்
கண்மையாய்க் கைபாக வரிசைகண்டால்
கர்த்தாவாம் நபிமாரா யிருப்பார்தானே. 457

பாடல்கள்: 451-457: இவ்வுலகத்தில் தாளகத்தின் முறையைக் கூறுகின்றேன் கேள். பத்து பலம் தாளகத்தை எடுத்து சுக்கான் கல்லால் சுத்தி செய்து இதை இரும்புச் சட்டிக்குள் போட்டு இலைக் கள்ளிப் பாலில் துரிசுநீர்ச் சுண்ணம் போட்டு முறித்து நீராக்கு. இந்த நீரால் தாளகத்தை இரண்டு ஜாமம் சுருக்குப் போடு. இரண்டு ஜாமம் சுருக்குப் போட தாளகம் மெழுகு

ஆகும். இதை எடுத்து நபிமாரை வணங்கி அல்லாவை வணங்கி வைத்துக் கொள். முன்னுடைய என் நூலான " வைத்ய சிந்தாமணி-700" என்னும் நூலில் கூறியபடி செம்பைச் சுத்தி செய்து நூறுபலம் உருக்கி தாளகத்தின் மெழுகை ஒரு பங்கு கொடுக்க செம்பு வெண்கலம் போல் நொறுங்கிப் போகும். இந்த தூள் எடைக்கு சுத்தி செய்த தங்கத்தை உருக்கிக் கொண்டு தூளைக் கொடுக்க தங்கம் நொறுங்கிப் போகும். இதை கல்வத்தில் போட்டு இதன் எடைக்கு பாதரஸம் சேர்த்து பாதரஸ எடைக்கு கெந்தகம் சேர்த்து மூன்றையும் முன்பு எடுத்த இலைக்கள்ளி நீரால் ஆட்டு, நன்கு ஆட்டி வில்லைதட்டி வெயிலில் காயவை, இதை அகலில் வைத்து மேல் அகல் மூடி கனமாக சீலைமண் செய்து பத்து எருவில் புடம் போடு. நல்ல சிவந்த செந்தூரமாகும்.

இந்த செந்தூரத்தைக் கொண்டு, நபிமாரை வணங்கி, அல்லாவின் துணையுடன் தொழுது செம்பை நூறு பங்கு உருக்கிக் கொண்டு செந்தூரம் ஒரு பங்கு கொடுக்க இருபது மாற்று பொன்னாகும். இந்த தங்கத்தை வைத்துக் கொள். இந்த தாளகச் செந்தூரத்தால் எல்லாம் தங்கமாகும். இந்த தாளகத்தின் வேலைபோல் ஏதுமில்லை. உலகவாதிகள் பலபல விதமாக பேசி கேலி செய்வார்கள். உண்மையான முறையை அறிய மாட்டார்கள், கைபாக வரிசையை அறிந்தால் இதைச் செய்து முடித்து நபிமார்கள் போல் இருப்பார்கள்.

சிகப்புச் சாரவைப்பு

இருக்கவே சிகப்பான நவச்சாரத்தை
இதமாகச் சொல்லுகிறேன் நபிமார்சொன்ன
பெருக்கவே பாகத்தை முயன்றுகேளு
பேர்பெரிய வெடியுப்பு ரெண்டுபத்து
கருக்கவே சீனமது யிருபத்தைந்து
கனிவாக ரெண்டையுந்தான் கல்வத்திட்டு

நருக்கவே நாயுருவிச் சாற்றாலாட்டி
நலமாகத் தெல்லுப்போல் வில்லைதட்டே. 458
தட்டியே கதிரில்வைத்துக் காயப்போடு
கனிவாக தெல்லுப்போல் வில்லைகட்டி
முட்டியே காயவைத்து யெடுத்துநீயும்
முடிவாகப் பொடியாக்கிக் கலையத்திட்டு
நட்டியே சக்கரமாம் வாலைமேலே
நலமாக வைத்துமே யெரித்துக்கொள்ளு
தட்டியே நீர்வருகும் வெள்ளையாக
தள்ளிவிட்டுச் சிவந்தநீர் வரவும்பாரே. 459

பாரென்ற அரக்காலே குப்பிபண்ணிப்
பதிவாக அதுக்குள்ளே திராவகத்தை
நேரென்று ஊத்தியே அதிலேவைத்து
நிலையாக நவச்சாரம் சேருவொன்று
காரென்று கல்வத்தி லிட்டுநீயும்
கடிதான திராவகத்தைக் குத்துகுத்து
வாரென்று ரவியில்வைத்து மூன்றுநாளும்
வடிவாக யெடுத்துமே மார்க்கங்கேளே. 460

மார்க்கமென்ன சொல்லுகிறே னுற்றுக்கேளு
மயமாகப் பீங்கானில் வைத்துநீயும்
கார்க்கமாய் மெல்லெனவே வறுத்துக்கொள்ளு
கனிவாக யெடுத்துமே காசிமேரு
ஆர்க்கமாய்ப் பாதிநீ போட்டுநீயும்
அடைவாக வாலுகையின் மேலேவைத்து
தார்க்கமாய்ப் பனிரெண்டு சாமந்தானும்
தடையறவே யெரித்துமே தண்மைகேளே. 461

தண்மையா யெரித்துயோடு பின்புதானும்
தடையறவே குப்பியைநீ உடைத்துவாங்கிக்
குண்மையாய்ப் பீங்கானி லிட்டுநீயும்
குணமாகத் திராவகத்தை அதிலேயூற்றி

வண்மையா யுமிநெருப்பில் வறுத்துப்போடு
வளமாக முன்போலே யெரித்துவாங்கு
தண்மையாய் வாங்கியபின் சொல்லக்கேளு
கனிவாக யாகோபு கருதினாரே. 462

கருதியே தேங்காய்போ லிருக்கும்பாரு
கனிவாக யிப்படிக்கு அஞ்சுதானும்
பருதியே யெரித்தெடுத்துப் பின்புதானும்
பதிவாக யெடுத்துமே பாகமாக
வருதியே கைபாக மாகத்தானும்
வடிவாக யெரித்துமே மார்க்கமாக
முருதியா யெரித்திட்டு யெடுத்துப்பாரு
முடியாவ சிவப்பாகுஞ் சாரந்தானே. 463

சாரமாய்ச் சிவந்திருக்குஞ் சாரந்தன்னைச்
சரியான நபிமார்கள் சொல்லப்போகா
பாரமாய்ச் சூரியன்போல் நிறமுமாகும்
பதைபதைத்துத் திரியாதே பாரமில்லை
வாரமாய் மகமதுவும் ஆடித்தேர்ந்த
வகையான கைபாக வரிசைமெத்த
காரமாய்ச் செய்திடிலோ வேதைவேதை
கனிவான பொருளறிந்தோர் கணக்குமாமே. 464

கணக்காகச் சிவந்திருந்த சாரந்தன்னைக்
கனிவர்க நபிமார்கள் சித்தர்தானும்
வணக்கமாய்ச் சொல்லார்கள் வலுமைமெத்த
வலுவான அல்லாவைக் கேட்டுக்கொள்வார்
தணக்கமாய்ச் சூரியன்போல் நிலமுமாகும்
தடையறவே சாரத்தின் பெருமைதன்னை
உணக்கமாய்ச் சொல்லிவிட்டே னுறுதிதன்னை
உறுதிபெறச் சாரத்தின் பெருமைதானே. 465

பெருமைதான் யென்பேரு ராமதேவர்
பிரட்டாகச் சொல்லவில்லை சாரந்தன்னை

அருமையாய் நாலுயுக மாடித்தேர்ந்து
அடைவாகத் தமிழ்வேதம் படித்துப்பார்த்துக்
கருமையாய் மக்காவின் தேசம்புக்கிக்
கடிதான . யிசுலாத்தில் புகுந்துயானும்
வருமைவிட்டு வேதத்தைப் பார்த்துத்தேறி
வளமாகக் கண்டுகொண்டேன் ஆதியாமே. 466

ஆதியாம் வேதத்தைப் பார்க்கப்பார்க்க
அடைவான யெச்சிலில்லை தீட்டுமில்லை
வாதியா மென்றபேர் தனக்குத்தானும்
வடிவான யெச்சிலில்லை யிதுக்குழுப்பு
சோதியாஞ் சுடரொளியாந் துலுக்குவேதம்
சுருதிபெறக் கோரானைப் பார்த்தேன்யானும்
பாதியாம் நால்வேதம் ஒன்றதாகும்
பகுத்துணர்ந்து யாகோபு பாலித்தேனே. 467

பாலித்தேன் பாஷாணச் சரக்கைக்கொல்லப்
பகர்கின்ற கருவேது சொல்லக்கேளு
சாலித்த சூதமொன்று கெந்தியொன்று
சரியான தாளகமுஞ் சிலையும்லிங்கம்
காலித்த சிகப்பான சாரமொன்று
கனிவான பழச்சாறு சாமமாட்டித்
தேலித்த வில்லைகட்டி உலரப்போடு
திறமாக அயக்குகையில் வைத்திடாயே. 468

வைத்துமே சீலைசெய்து புடத்தைப்போடு
வடிவான நபிமாரைத் தொழுதுபோற்று
கைத்துமே களங்காக யிருக்கும்பாரு
கணக்காக யிருந்துமே கருதக்கேளு
நைத்துமே நவலோகந் தன்னீலிய
நலமாக யேமமாம் நாட்டிலோர்க்குப்
பைத்துமே களங்கைத்தான் செம்பெடுக்கப்.
பஞ்சமித்ர முன்னூறும் பாருபாரே. 469

பாரப்பா முன்சொன்ன நவச்சாரந்தான்
பதிவாக நாகத்தை உருக்கிக்கொண்டு

தாரப்பா நாகத்தின் மேலேதூவு
தடையறவே நாகமது கட்டிப்போகும்
காரப்பா நவலோகந் தன்னிலிய
கனிவான தங்கமாம் கருத்துள்ளோர்க்கு
வாரப்பா பாகமாய்ச் செய்துகொண்டால்
வடிவாகப் பொருளாகும் வண்மைதானே. 470

பாடல்கள் : 458-470 இப்போது சிகப்பு நவச்சார வைப்பைக் கூறுகிறேன். இது நபிமார்கள் சொன்ன முறையாகும். ஐந்தாம் காய்ச்சல் வெடி உப்பு இருபது பலம், சீனிக்காரம் இருபத்தி ஐந்து பலம் இந்த இரண்டையும் கல்வத்தில் போட்டு நாயுருவிச் சாறு விட்டு நன்றாக ஆட்டி மெல்லிய தெல்லுபோல வில்லை தட்டி வெயிலில் காயவை. இதைப் பொடித்து கலையத்தில் போட்டு வாலையை மேல் மூடி சீலைமண் செய்து எரிக்க முன் நீர் வெள்ளையாக வரும். இதை நீக்கி பின்னால் வரும் சிவப்பு நிற நீரைப் பிடித்து அரக்கை உருக்கி குப்பி செய்து அதில் ஊற்றி வை.

ஒரு சேர் நவச்சாரத்தை கல்வத்தில் போட்டு அதில் திராவகத்தை ஊற்று. இதை வெயிலில் மூன்று நாட்கள் வை. பின்பு எடுத்து பீங்கானில் போட்டு கரி நெருப்பில் வைத்து மெதுவாக வறுத்துக் கொள். வறுத்து எடுத்து காசிக்குப்பியில் அரை வாசி போட்டு வாலுகையில் வைத்து பன்னிரெண்டு ஜாமம் கமலம் போல் எரித்து ஆறிய பின்பு குப்பியை உடைத்து உள்ளே உள்ள மருந்தை எடுத்து பீங்கானில் போட்டு அதில் திராவகத்தை ஊற்றி மூன்று நாட்கள் வெயிலில் வை.

பின்பு எடுத்து பீங்கானில் வறுத்து காசிக் குப்பியில் போட்டு வாலுகையில் வைத்து முன்போல எரித்து எடு. ஆறியபின்

பார்க்க தேங்காய் போல் இருக்கும். இப்படி ஐந்து தடவைகள் செய்து எடுக்க சிகப்பாக இருக்கும். இது சூரியன் போல் நிறத்தில் இருக்கும். இது மகமது நபிகள் செய்த முறை, இதைச் செய்தால் சிறந்த வேதையாகும். இதைச் சித்தர்கள் செய்வார்கள். யாரிடமும் கூற மாட்டார்கள். இதன் பெருமையை உனக்குக் கூறி விட்டேன்.

என் பெயர் இராமதேவர் . நான் பொய் கூறவில்லை. நான் நான்கு யுகங்கள் செய்து பார்த்து தமிழ் வேதங்கள் படித்துப் பார்த்து பின்பு மக்காவிற்குச் சென்று இஸ்லாமிய வேதத்தைப் படித்து வறுமையை நீக்கிக் கொண்டு வேதத்தைப் பார்த்துத் தேறி உண்மையை தெரிந்து கொண்டேன். இப்படி உண்மையான வேதத்தைப் பார்க்க பார்க்க எச்சில், தீட்டு எதுவும் இல்லை. சோதிச்சுடர் ஒளிபோன்ற வேதமான குரானை நான் படித்தேன். நான்கு வேதங்களும் ஒன்றேயாகும். இதை பகுத்து உணர்ந்து யாகோபு ஆகிய நான் கூறினேன். மேலும் பாஷாணங்களைக் கொல்லக் கருவைக் கூறுகின்றேன் கேள். பாதரஸம்,கெந்தகம், தாளகம், மனோசிலை, லிங்கம், சிகப்புச்சாரம் இவைகள் வகைக்கு ஒரு பலம் எடுத்துக் கொள். இதை எலுமிச்சம்பழச் சாறு விட்டு 1 ஜாமம் ஆட்டு. வில்லை தட்டி வெயிலில் காயவை. பின்பு இரும்புக் குகையில் வை. சீலைமண் செய்து பத்து எருவில் புடம் போடு. எடுத்துப்பார்க்க களங்காக இருக்கும். இதை நவலோகங்களில் கொடுக்க தங்கமாகும். இதில் இருந்து செம்பு எடுக்கும் மார்க்கத்தை என் நூல் பஞ்சமித்ரம் 300 என்னும் நூலில் கூறியுள்ளேன். முன் சொன்ன சிகப்பு நவச்சாரத்தை எடுத்து நாகத்தை சுத்தி செய்து உருக்கிக் கொண்டு அதன் மேல் தூவ நாகமது கட்டும். இந்த கட்டிய நாகத்தை நவலோகங்களில் கொடுக்க பொன் ஆகும் கைமுறையோடு செய்தால் பொருள் அறிந்து செய்பவருக்கு சித்தியாகும்.

சூதக் கட்டு

வண்மையாய்ச் சூதத்தைக் கட்டுதற்கு
வகையாகச் சொல்லுகிறேன் வலுவுமெத்த
உண்மையா யெழில்தனிலே சூதங்கட்டும்
உறுதியாய்ச் சொல்லிடுவா ருலகவாதி
கண்மையாய்க் கட்டுவகை யறியமாட்டார்
கனிவாக உறுதிபெறக் கணக்குமாகும்
தண்மையா யுறுதிக்குப் பாகமாகத்
தடையறவே சொல்லிவிட்டேன் தன்மையாமே. 471

தண்மையா யிச்சாரம் பொடியாய்ப்பண்ணித்
தனியான மஞ்சளென்ற கருவிற்போட்டு
வண்மையாய் விட்டுவைக்கச் ஜெயநீராகும்
வடிவான ஜெயநீரில் வண்மைகேளு
பெண்மையாய்க் கரண்டியுண்டால் காயசித்தி
பேதமையாம் நோயெல்லாந் தவிடுமாகும்
செண்மையா யுறுதிபெறச் சவுக்காரத்தைச்
செய்திடவே சகலதொழில் சித்தியாமே. 472

பாடல்கள் :471-472: ரசத்தைக் கட்டும் முறை ஒன்றைக் கூறுகிறேன் கேள். அழகாக ரசத்தைக் கட்டுவேன் என்பார். ஆனால் அறியமாட்டார். கணக்காகச் சொல்கிறேன். இந்த சிகப்புச் சாரத்தைப் பொடியாக பண்ணி முட்டையின் மஞ்சள் கருவில் போட்டு வைக்க அது முறிந்து ஜெய நீராகும். இதன் வலிமையைக் கேள். இதை ஒரு கரண்டி உட்கொண்டால் காயசித்தி உண்டாகும். இதனால் சூதம் கட்டும், உடலில் உள்ள நோயெல்லாம் நீங்கும் இந்த மாதிரி சவுக்காரத்தை செய்திட எல்லா தொழில்களும் சித்தியாகும்.

துருசு வைப்பு

சித்தியா யின்னமொரு செய்திகேளு
சிறப்பான துரிசினுட வைப்புதன்னைப்
பத்தியாய் சொல்லுகிறேன் பலனுமாகும்
பண்பாகச் செம்பாலே பாணைபண்ணி
நந்தியே கல்லுப்புப் பொடியாய்ப்பண்ணி
நலமாகப் பதினாறுக் கொன்றுபோடு
சித்தியாய் வெடியுப்புச் சீனம்பாதி
சிறப்பாக நிறுத்திப்பா னையிலேபோடே. 473

போட்டுமே பழச்சாறும் மோரும்வார்த்துப்
பொலிவாக மேல்மூடிப் புதைத்துப்போடு
காட்டுமே மண்டலந்தான் கடந்தபின்பு
கனிவாக யெடுத்துப்பார் பச்சையாகும்
நாட்டுமே யிருந்துவிடுஞ் சொல்லக்கேளு
நாகமாய்த் துருசென்ற நாமமாச்சு
வாட்டுமே உப்பதுவுஞ் சத்தியாச்சு
வளமான செம்பதுவும் அல்லாவாச்சே. 474

ஆச்சப்பா தயிரதுவும் நபிமாராச்சு
அடைவான எலுமிச்சம் பழச்சார்தானும்
பாச்சப்பா வெவையென்ற பேருமாச்சு
பதிவான யித்துருசை நீற்றினாக்கால்
நாச்சப்பா ரசங்கட்டுங் குளிகையாகும்
நலமாகச் சகலசித்து மிதற்குள்ளாகும்
வாச்சப்பா சத்துவகை செய்துசெம்பில்
வடிவாக யெடுத்தாக்கால் மட்டமாமே. 475

மட்டமாந் துருசதுவை வைத்துநீயும்
மகிமைபெறத் துருசுதனை நீற்றிக் கொள்ளு
திட்டமாய்ச் சூதமதைக் கட்டிநீயும்
திறமாகச் செந்தூரம் பண்ணில் ரெம்ப
வட்டமாய் நவலோக மெல்லாந்தானும்
வடிவாகப் பழுக்குமே வாதம் ரெம்ப
கட்டமிலா திருந்துமே விற்றுநீயும்
கனிவாகச் செய்துமே பிழைத்திடாயே. 476

பிழைத்திடவே சத்துக்குத் துருசுவேணும்
பேராகச் செம்புதனில் சத்துச்செய்தால்
தழைக்கவே வாராது செம்புதானும்
தடைறவே வெள்ளிதான் பழுக்கமாட்டா
கழைக்கவே துருசுதனில் செம்புதன்னைக்
காரணமாய்க் கொன்றாக்கால் தங்கமாகும்
அழைத்தபிள்ளை வந்ததுபோல் வந்துகூடும்
ஆதியாய்த் துருசைநீ பேணிப்பாரே. 477

பாடல்கள்: 473-477: சிறப்பான துரிசின் வைப்புமுறையைக் கூறுகிறேன் கேள். செம்பு உலோகத்தால் வாய் அகன்ற பானையும் மூடியும் செய்து கொள். பானையின் எடைக்கு பதினாறுக்கு ஒன்று பங்கு கல்லுப்புப் போடு. அதில் பாதி அளவு வெடியுப்பும், சீனிக்காரமும் நிறுத்துப் போடு. பின்பு மருந்துகள் மூழ்கும் அளவு எலுமிச்சம் பழச்சாறும், புளித்த மோரும் ஊற்றி மேல் மூடியால் மூடி இடுப்பளவு குழி தோண்டி அதில் புதைத்துப் போடு. 48 நாட்கள் கடந்தபின்பு எடுத்துப் பார்க்க பச்சையாக கட்டியாய் இருக்கும். இதற்கு துரிசு என்று பெயர். உப்பானது சக்தியாகவும், செம்பானது அல்லாவாகவும் தயிரானது நபிமார் ஆகவும், லெவை என்ற பெயர் எலுமிச்சைப்பழச் சாறாகவும் ஆயிற்று. இத்துருசை நீத்து சுண்ணாம்பு ஆக்கினால் ரசம் கட்டி குளிகையாகும்.

இதனால் சகலமும் சித்தியாகும். இதனால் சத்து எடுத்து செம்பு எடுக்கலாம். இந்த துருசை செய்து அதை நீத்து சுண்ணமாக்கி அதனால் பாதரஸத்தைக் கட்டி அதை செந்தூரம் செய்து நவலோகங்களில் கொடுக்க பொன் ஆகும். இதை விற்று பிழைத்துக் கொள். சத்து எடுக்க இந்த துரிசு வேணும். வெறும் செம்பில் சத்து எடுத்தால் சிறப்பாக வராது. தடையின்றி வெள்ளி பொன் ஆகாது. எனவே துரிசில் உள்ள செம்பைக்

கொன்றாக்கால் தங்கம் கிடைக்கும். எனவே துரிசை வைத்து செய். பிள்ளையைக் கூப்பிட்டால் வருவது போல ரசவாதம் உன்னிடம் வரும்.

துருசுக் களங்கு

பேணியே துருசொன்றில் களங்குசொல்வேன்
போக்கோடே துருசதுவும் பலமும்பத்து
ஆணியே பொடியாக்கிச் சட்டியிட்டு
அடைவாக நீர்வற்றச் சாமமொன்று
காணியே யெரித்துயெடு சுண்ணம்போலாம்
காரியமாய் நின்றயிடை முக்கால்கெந்தி
வாணியே நிறுத்துமே கல்வமிட்டு
வகையான பழச்சாற்றில் சாமம்நாலே. 478

நாலாக ஆட்டியே சொல்லக்கேளு
நலமாக முன்துருசு நிறுத்துநீயும்
காலாக வைத்திடுநீ அரப்பொடியைத்தான்
கணக்காகக் கூடவே சேர்த்துநீயும்
வாலாக அரைத்துவில்லை காயவைத்து
வடிவான உப்புநேர் சுண்ணங்கூட்டிப்
பாலாக அரைத்துவில்லை மேலேகட்டிப்
பதிவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடே. 479

புடம்போட்டு மேற்கவசம் பிரித்துப்பாரு
போக்கோடே கரிபோலே தூளாய்நிற்கும்
அடைவாக வெங்காரம் யெட்டிலொன்று
அடைவாகப் பொரித்துமே கூடவைத்து
திடமாக அரைத்துவிட பாணியாலே
திட்டமாய்க் குகையில்வைத்து உருக்கித்திரு
கடமாக உருகியது சத்தாய்நிற்கும்
கணக்காக ஐந்துதர முருக்கிக்கொள்ளே. 480

உருக்கியே யிப்படிக்குத் தரமுமைந்து
உறுதிபெற யெடுத்துமே சொல்லக்கேளு
நருக்கியே கல்வமிட்டுப் பாதிதானும்
நலமாகச் சூடனைத்தா நிறையைக்கேளு
கருக்கியே சத்துக்குக் காலுமிட்டுக்
கனிவாகப் பாணியினா லரைநேர்சாமம்
பருக்கியே அரைத்துமே வில்லைகட்டிப்
பதிவாகக் காடையென்ற புடத்தில்போடே. 481

போட்டுமே யெடுத்துநீ பிரம்பாய்வைத்துப்
போக்கோடே வங்கமது பலமும்நாலு
நாட்டுமே கரண்டிதனில் வைத்துருக்கி
நலமான தாளகந்தான் யிடைக்கிடையேதாக்கி
பாட்டுமே யெடுத்துப்பார் கரியாய்நிற்கும்
பதிவான கரியதனைக் கல்வத்திட்டு
வாட்டுமே சாரத்தைப் பாதிசேர்த்து
வடிவாகப் பாணியினா லரைத்திடாயே. 482

அரைத்துமே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடம்போட்டு யெடுத்துநீயும்
கரைத்துமே குகையிலிட்டு உருக்கித்திரு
கனிவாக யீயமாய் உருகிநிற்கும்
தரைத்துமே தட்டியதை நையத்தானும்
தகமையாய் முன்சத்தில் நாலத்தொன்று
யரைத்துமே சேர்த்துஅரை அன்னத்தாலே
வடிவாக வழித்துமே வில்லைகட்டே. 483

கட்டியே கதிரில்வைத்து மேலேதானும்
கனிவாக உப்பினாற் கவசஞ்செய்து
நட்டியே காயவைத்துப் புடமுமிட்டு
நாடியே புடந்தானும் பெரிதாய்ப்போடு
முட்டியே யெடுத்துநீ கல்வமிட்டு
முனிவாக அன்னத்தால் சாமம்நாலு

கொட்டியே அரைத்துமே வில்லைகட்டிக்
குணமாகக் கதிரில்வைத்துக் காயப்போடே 484

காயவே வைத்துமுன்னால் கவசஞ்செய்து
கனிவாகப் பெரியபுடம் போட்டெடுத்து
நாயமார் சொன்னபடி சொல்லக்கேளு
நலமாக முன்போட்ட கரியைநேராய்த்
தாயகமாய்த் தங்கமிட்டு உருக்கிக்கொண்டு
தாட்டிகமாய் நிறைபாகந் தகமைகேளு
மாயவே வெள்ளியெட்டுக் களங்குநாலு
மயமாகச் சேர்த்துருக்கிப் பின்புகேளே. 485

பின்புதா னெடுத்துமே சொல்லக்கேளு
பேராகக் கேளெருமைச் சாணிசேர்த்துத்
தென்பாகக் கிளிஞ்சியது சுண்ணஞ்சேர்த்துச்
சிறப்பாக அரைத்துமே நீகடைபண்ணி
அன்பாக அதில்வைத்துக் கணக்காயூது
அடைவாக ஊதியே பின்புகேளு
நன்பாகக் கரியில்வைத்து உருக்கித்தீரு
நலமாக மாத்தேழு காணுந்தானே. 486

காணுமே கடையில்விற்றுச் ஜீவனத்தைக்
கனிவாகச் செய்துமே கருணைகூர்ந்து
வேணபடி செலவுசெய்து என்னூரல்பூராய்
விருப்பமாய் எல்லாமும் படித்துநீயும்
நாணயமாய்ச் சுண்ணங்கள் மிகவுஞ்செய்து
நலமாகப் பெரியதொரு வேலைசெய்து
தாணுவாய் குளிகைகட்டி ஆடித்தேற
தடையறவே யாகோபு சொன்னார்தானே. 487

சொன்னபடி முன்னேதான் துருசைவைத்துச்
சொல்பெரிய களங்கைத்தான் பின்னேசெய்து
நன்னயமாய் வங்கத்தை உருக்கிநீயும்
நலமாகத் தாளகத்தைக் கொடுத்துப்பின்பு

இன்னிலத்தில் நொறுக்கியே செத்தசெம்பை
இதமாக யிழுத்துமே தங்கஞ்சேர்த்துக்
கன்னலா யுருக்கிட்டு வெள்ளிதன்னில்
கனிவாகக் கொடுத்துமே வேதைபாரே. 488

வேதைதா னிப்படிக்குச் செய்யாமற்றான்
விரைந்துமே மட்டத்தி லியந்தன்னைச்
சேதையாய்க் கொடுத்துமே ஊதிப்பார்த்துத்
திறமாக வர்ணங்க ளில்லையென்று
காதையாய்ப் பலவார்த்தை மிகவும்பேசிக்
கடிதாக வாதந்தான் பொய்யோயென்பார்
பேதையாய் மிகப்பாடு பட்டுப்பட்டுப்
பொலிவாகத் திரிந்தலைவார் வாதிதானே. 489

பாடல்கள்: 478-489: துரிசுக் களங்கைச் சொல்கிறேன் கேள். துரிசு பத்துபலம் எடுத்துக் கொள். இதை பொடித்துச் சட்டியில் போட்டு ஒரு ஜாமம் எரிக்க நீர் வற்றி சுண்ணம் போல் வெள்ளையாக இருக்கும். இதன் எடைக்கு முக்கால் பங்கு கெந்தகத்தைப் போட்டு இரண்டையும் கல்வத்தில் போட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நான்கு ஜாமம் அரை. பின்பு முன் துரிசின் எடைக்கு கால்பங்கு சுத்தி செய்த அயப்பொடியைச் சேர்த்து நன்கு அரைத்து (முதலிலேயே சேர்த்து நான்கு ஜாமம் அரைக்கவும்) வில்லை தட்டி காய வைத்து எடுத்து கல்லுப்பும், சுண்ணாம்பும் சம அளவாக எடுத்து நன்கு அரைத்து மேற்படி வில்லையின் மேல். கவசம் கட்டு. காயவைத்து பத்து எருவில் புடம் போடு. புடம் ஆறிய பின்பு பிரித்துப் பார். கரித்தூள் போல் இருக்கும். இதனுடன் எட்டுக்கு ஒரு பங்கு வெங்காரத்தைப் பொரித்துச் சேர்த்து தண்ணீர் விட்டு அரைத்து குகையில் வைத்து உருக்கு. மருந்துகள் உருகி சத்தாய் நிற்கும். சத்தை ஊற்றிப் பொறுக்கிக் கொண்டு மீதமுள்ள கரடை பொடித்து வெங்காரம் சேர்த்து முன்போல் உருக்கிக் கொட்டு.

மணிமணியாய் சத்து கிடைக்கும். இப்படி ஐந்து தடவை உருக்கி ஊற்றிக் கொள். இப்படி எல்லா சத்தையும் எடுத்து கல்வத்தில் போடு.

இதன் எடையில் பாதி எடை சத்தை எடுத்து தனியே வை. சூடத்தை சத்தின் எடைக்கு கால்பங்கு எடுத்து கல்வத்தில் போட்டு தண்ணீர் விட்டு ஒரு ஜாமம் அரை. இதை எடுத்து வில்லையாகத் தட்டி வெயிலில் உலரவைத்து காடைப்புடம் போட்டு எடுத்து வைத்துக் கொள். பின்பு சுத்தம் செய்த வங்கம் நான்கு எடுத்து அயக்கரண்டியில் வைத்து உருக்கு. இதன் எடைக்கு சம எடை சுத்தி செய்த தாளகத்தைக் கொடுக்க கரியாய்ப் போகும். இதனைக் கல்வத்தில் போட்டு இதன் எடைக்கு பாதி எடை நவச்சாரம் சேர்த்து தண்ணீர் விட்டு அரை. அரைத்து வில்லையாக்கி வெயிலில் வை. பின்பு எடுத்துப் புடம் போடு ஆறிய பின் எடுத்து குகையில் வைத்து உருக்கு. ஈயமாக உருகி நிற்கும். இதை மனையில் வைத்து நையத் தட்டி முன்பு எடுத்த சத்தில் நாலுக்கு ஒன்று என்ற பங்கில் சேர்த்து கற்றாழை சோற்றால் அரை. நன்கு நான்கு ஜாமம் அரைத்து வழித்து வில்லையாகத் தட்டி வெயிலில் வை. இந்த வில்லையின்மேல் உப்பையும், சுண்ணாம்பையும் சமஎடை எடுத்து அரைத்து கவசம் செய்து காயவைத்துப் புடம் போடு. பெரிய புடம் போட்டு எடுத்து கல்வத்தில் போட்டு மறுபடியும் சோற்றக்கற்றாழை சோற்றால் நான்கு ஜாமம் அரை.

வில்லையாகத் தட்டி வெயிலில் காயவைத்து முன்போல் கவசம் செய்து பெரிய புடம் போடு. இத்துடன் சம எடை தங்கம் சேர்த்து உருக்கிக் கொண்டு பார்க்க களங்கு ஆகும். வெள்ளி எட்டு பங்கு களங்கு நான்கு பங்கு சேர்த்து உருக்கு. பின்பு எருமைச் சாணியில் கிளிஞ்சல் சுண்ணாம்பைச் சேர்த்து

நிகடை (உருக்கும் சிறு உலை) செய்து அதில் வைத்து ஊது ஊதிய பின்பு எடுத்து கரியில் வைத்து உருக்க ஏழுமாற்று உள்ள தங்கம் கிடைக்கும். இதைக் கடையில் விற்று ஜீவனத்திற்கு வைத்துக் கொண்டு வேண்டிய வரை செலவு செய்து என்னுடைய நூல் எல்லாவற்றையும் விருப்பமுடன் படித்து சுண்ணங்கள் செய்து பார்த்து பின்பு பெரிய வேலைகளைச் செய்து ரசமணி கட்டி சித்தாடி தேர்ச்சி பெற யாகோபு கூறினார். எனவே கூறியபடி துரிசை வைத்து முதலில் களங்கை செய்து, பின் வங்கத்தை உருக்கி தாளகத்தைக் கொடுத்து நொறுக்கி செத்த செம்பை இழுத்து தங்கம் அதனுடன் சேர்த்து உருக்கி வெள்ளியில் கொடுத்து ரசவாதம் செய்து பார். இப்படி முறையாகச் செய்யாமல் மட்டமான செம்பில் ஈயத்தைக் கொடுத்து பழுக்கவில்லை. வர்ணம் வரவில்லை என்று பலவாறாகப் பேசிப் வாதத்தைப் பொய் என்பார்கள். மிக கஷ்டப்பட்டு திரிந்து அலைவார்கள் புத்தியில்லாத வாதிகள்.

இந்துப்பு வைப்பு

தானென்ற யிந்துப்பு வைப்புக்கேளு
தடையறவே நாலடுப்பு வரிசையாகக்
கானென்ற கட்டியே சொல்லக்கேளு
கனிவான அடிக்கனத்த சட்டிவைத்துப்
பானென்ற கடல்நீரி லுப்புக்காய்ச்சிப்
பதிவாகத் தினந்தினமுங் காய்ச்சிநீயும்
பானென்ற அடிப்பார முள்ளபானை
பதிவாக யிட்டுமே காய்ச்சிடாயே. 490

காய்ச்சிடவே காடாக்கினி யாகவேதான்
கனமாகத் தீமூட்டிக் கணக்கதாகப்
பாய்ச்சிடவே வெந்துருகிச் ஜலமாய்நிற்கும்
பதிவாக முப்பதுக்கு ஒன்றுசீனம்

நாச்சியே வெடியுப்பு முப்பத்திலொன்று
நலமாகப் பொடிபண்ணி அதிலேபோட்டுத்
தாச்சிடவே வெந்துநன்றாய்க் குழம்பாய்க்காய்ச்சித்
தலமாக ஆறவிட்டுப் பானைதன்னை, 491

தன்னிலே ஊத்தியபின் னுடைத்துவாங்கித்
தனியாகப் பார்த்திடவே வெளுப்பாய்நிற்கும்
முன்னிலே மட்டியாய்க் கல்லுப்போலே
முடிவாக யிருந்திடுமே அதிகவேதை
கன்னியே யிப்படிக்குக் காய்ச்சிநீயும்
கனிவாக யெடுத்துமே சுண்ணம்பண்ணு
மன்னியே சொல்லுகிறே னுற்றுக்கேளு
மகிமைதா னதின்பேரு கூறொணாதே. 492

பாடல்கள்: 490-492: இந்துப்பு செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள். வரிசையாக நான்கு அடுப்பு வைத்துக் கொள். இதில் அடிகனத்த சட்டி வைத்து கடல்நீரை அதில் ஊற்றி வற்றக் காய்ச்சி உப்பாக எடு. இந்த உப்பையெல்லாம் சுரண்டி ஒரு அடிகனத்த பானையில் போட்டு அடுப்பேற்றி காடாக்கினியாக எரி. உப்பானது வெந்து உருகி தண்ணீர் போன்று நிற்கும் இந்த உப்பின் எடைக்கு முப்பதுக்கு ஒன்று என்ற விகிதத்தில் சீனிக்காரமும், சீனிக்கார எடையுடன் வெடியுப்பும் பொடி பண்ணி அந்த உருகிய உப்பில் போட்டு நன்கு காய்ச்சி வெந்து உருகி குழம்பாக வரும் போது இறக்கி ஆறப்போடு. பின்பு பானையை உடைத்துப் பார்க்க வெள்ளையாக நிற்கும் கல்லுப்போன்று இருக்கும். இதனால் அதிக ரசவாதம் உண்டாகும். இப்படி நீ காய்ச்சி எடுத்து சுண்ணம் செய். சுண்ணம் செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள்.

இந்துப்புச் சுண்ணம்

கூறவே யிந்துப்புப் பலமும்பத்துக்
குணமான கடல்நுரையும் பலமும்பத்து

நாறாவே கல்வமிட்டு அரைநேர்சாமம்
நலமான நாயுருவிச் சாறுதன்னில்
பாறவே யிருசாம மரைத்துநீயும்
பதிவாக அடுப்புதனில் அயச்சட்டியிட்டு
காறவே வறுத்துவிடு பனிரெண்டுசாமம்
கனிவாகக் கல்வமிட்டுப் பின்புகேளே. 493

கேளுமே முன்சத்தால் நேகஆட்டிக்
கெடியான வில்லைகட்டிக் கதிரில்வைத்து
நாளுமே மேற்கவசஞ் சொல்லக்கேளு
நலமாக ஐந்து சுண்ணமேலேகட்டு
பாளுமே போகாமல் உலரவைத்துப்
பதிவாகப் பெரியபுடம் போட்டெடுத்துக்
காளுமே கடுஞ்சுண்ணம் யிந்துப்புச்சுண்ணம்
கடிதாக யாகோபு கருணையாமே. 494

கருணையாம் வீரமது கொஞ்சமிட்டால்
கனமாக ரெத்தம்போல் சிவந்துநிற்கும்
அருணையா மிதையெடுத்து வைத்துக்கொண்டு
அடைவாகச் சூடனது பலமுமொன்று
தருணமாய்ப் பூரமது பலமுமொன்று
தாக்கியதை யிந்துப்புச் செயநீராலே
வருணமா யரைத்துவில்லை கதிரில்வைத்து
வளமாக ஐந்துசுண்ணக் குகையில்வையே. 495

வைத்துமே புடம்போடச் சுண்ணமாகும்
வாகான சுண்ணத்தின் பெருமைதன்னைக்
கைத்துமே நபிமாரால் சொல்லப்போகா
கனிவாக நான்கண்டு யெழுதிப்போட்டேன்
செத்துமே போகாம லின்னங்கேளு
சிறப்பாகப் பூரமென்ற சுண்ணத்தோடே
தைத்துமே சாரமது சேர்த்துநீயும்
தடையறவே பொடியாக்கிப் பீங்கான்வையே. 496

பீங்கானி லிட்டிடவே ஜெயநீராகும்
பெருமையாய்ச் ஜெயநீரில் வீரமிட்டுத்

தாங்காமல் வைத்துமே சொல்லக்கேளு
தடையறவே வெள்ளீயம் பலத்தைநீயும்
பாங்கமாய்த் தட்டியே பிச்சுப்போட்டுப்
பதிவாகப் பூரமென்ற ஜெயநீராலே
நீங்காம லரைத்துவில்லை கதிரில்வைத்து
நிலையாகக் காய்ந்தபின்பு சொல்லக்கேளே. 497

சொல்லவே கரியோட்டில் வைத்துஊது
சுருதிபெற யெடுத்துமே சொல்லக்கேளு
நல்லவே கல்வமிட்டுச் ஜெயநீராலே
நலமாக அரைத்துவில்லை காயவைத்து
மெல்லவே முன்போலே ஊதித்தீரு
மேன்மையா யிப்படிக்குத் தரமுமஞ்சு
கல்லவே ஊதியேடு கடுஞ்சுண்ணமாகும்
கனமான சுண்ணத்தின் பெருமைகேளே. 498

பெருமையாய் வங்கமென்ற சுண்ணத்துக்குப்
பெரிதாக வீரமது நாலத்தொன்று
அருமையா யிட்டுமே வாய்நீர்விட்டு
அடைவாக அரைத்துமே ஆனபின்பு
கருமையாந் துருசின்மேற் கட்டித்தீரு
கனமான அஞ்சுசுண்ணங் கவசங்கட்டி
நருமையாய்ச் சேவலென்ற புடமுமிட்டால்
நலமாகத் துருசதுவுஞ் சுண்ணமாமே. 499

சுண்ணமாந் துருசினுட சுண்ணந்தன்னில்
துடியான வீரமிட்டுச் சொல்லக்கேளு
நன்னயமாய்த் தாளகத்தின் மேலேகட்டி
நலமாக அஞ்சுசுண்ண மேலேகட்டிக்
கன்னலாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
கட்டியாய் நீறுமது யிடைபோகாது
சொன்னபடி நீறுமது வாதமாகும்
துடியான யாகோபு சொன்னவாறே. 500

வாறேது வென்றாக்கால் சொல்லக்கேளு
வடிவான தாளகத்தின் சுண்ணந்தன்னைக்

காறேது வீரத்தின் மேலேகட்டிக்
கனிவாகக் கதிரில்வைத்துச் சொல்லக்கேளு
நாறேது பத்தெருவிற் புடத்தைப்போடு
நலமாக யெடுத்துப்பார் வீரச்சுண்ணம்
கூறேது வாதமது கொள்ளைகொள்ளை
குணமான யாகோபு கூறினாரே. 501

கூறினார் வீரத்தின் சுண்ணந்தன்னைக்
குணமாக விராகனிடை உமிழ்நீர்விட்டுப்
பாரிலே அரைத்துநீ பலனைக்கேளு
பதிவாகத் தங்கமென்ற தகட்டிற்பூசிச்
சாரியே காயவைத்துப் புடமுமிட்டால்
சரியாகத் தங்கமது நீறிப்போகும்
வாரியே நவலோகம் நூற்றுக்கொன்று
வடிவாகக் கொடுத்திடவே வண்மைதானே. 502

வண்மையாய் நவலோகம் நூற்றுக்கொன்று
வடிவாகக் கொடுத்திடவே பத்துமாத்து
உண்மையாய் உப்புக்குங் காவிக்கப்பா
உறுதியா யேகாது புடமிறங்கும்
தண்மையா யிதைவிற்றுச் செலவுசெய்து
தடையறவே வெகுநூல்கள் சம்பாதித்துப்
பண்மையாய்ச் சுண்ணங்கள் பார்த்துநீயும்
பலகாலுந் தொழுதிடவே பாங்குமாமே. 503

பாங்காக வங்கமது நீறாவிட்டாற்
பலனில்லை துருசதுவும் நீறமாட்டா
நீங்கமால் தொந்தமில்லை வேதையில்லை
நெடிதாக ஒன்றுமில்லை சூட்சமில்லை
வாங்காமல் துருசினுட ஒட்டமில்லை
வடிவான சூதமது கட்டமாட்டா
தாங்காமற் றூங்கிடுவா ருலகவாதி
தடையறவே யாகோபு சொன்னேனானே. 504

நானென்ற நபிமாரை அடுத்துமிக்க
நலமாக வேதையெல்லாங் கற்றுக்கொண்டு

காரனென்ற வடதேசந் தன்னிற்சென்று
கனிவாக முகமதுவைக் கண்டுபோற்றி
வாரனென்ற சாத்திரங்கள் மிகவும்பாடி
வகைகண்டு துகையாகப் பாடினேன்யான்
ஊரனென்ற உறுதியுள்ள நபிமார்பாதம்
உற்றுமே போற்றியே இருந்தேனானே. 505

பாடல்கள்:493:505: இந்துப்பு பத்துபலம், கடல்நுரை பத்துபலம் இது இரண்டையும் நாயுருவிச் சாறு விட்டு இரு சாமம் அரை. பின்பு அடுப்பில் ஒரு இரும்புச் சட்டி வைத்து இதை அதில் போட்டு பன்னிரெண்டு ஜாமம் வறு. பின்பு கல்வத்தில் போட்டு நாயுருவிச் சாறு விட்டு நன்கு அரை. வில்லை தட்டி வெயிலில் காயவை. இதன் மேல் ஐந்து சுண்ணக் கவசம் செய்து வெயிலில் உலரப்போடு. எடுத்து பெரியபுடமாகப் போட்டு எடுக்க கடுமையான இந்துப்புச் சுண்ணம் கிடைக்கும். இந்த சுண்ணத்தில் வீரம் கொஞ்சம்பட்டால் ரத்தம் போல் சிவக்கும். இதை எடுத்து வைத்துக் கொள்.

பின்பு சூடம் ஒரு பலம், பூரம் ஒரு பலம். இது இரண்டையும் இந்துப்பு ஜெயநீரால் அரைத்து வில்லை தட்டி வெயிலில் வைத்து ஐந்து சுண்ணக் குகையில் வை. புடம் போடு, சுண்ணம் ஆகும். இந்த சண்ணத்தின் பெருமையை நபிமார்கள் கூட கூற முடியாது. நான் செய்து பார்த்து எழுதி வைத்தேன். இந்த பூரச் சுண்ணத்துடன் நவச்சாரம் சமமாக சேர்த்து அரைத்து பீங்கானில் போட்டு பனியில் வை. ஜெயநீராகும். இந்த ஜெயநீரில் வீரம் போட்டு வைத்துக்கொள்.

வெள்ளீயம் ஒரு பலத்தை சிறு சிறு துண்டுகளாக பிய்த்துப்போட்டு மேற்படி பூர ஜெயநீர் விட்டு நன்கு அரை. வில்லை செய்து வெயிலில் உலர்த்து காய்ந்த பின்பு கேள்.

எடுத்து கரிஓட்டில் வைத்து ஊது. பின்பு எடுத்து பிய்த்துப் போட்டு ஜெயநீர் விட்டு அரை வில்லை செய்து வெயிலில் காயவை. முன்போல ஊது. இப்படி ஐந்து தடவை ஊதி எடுக்க கடுமையான சுண்ணம் ஆகும். இந்த சுண்ணத்தின் பெருமையைக் கூறுகிறேன் கேள்:

இந்த வெள்ளீயச் சுண்ணத்துடன் நான்குக்கு ஒரு பங்கு வீரம் சேர்த்து வெடியுப்பு திராவகம் விட்டு அரைத்து துரிசின்மேல் கவசம் கட்டி அஞ்சு சுண்ணக் கவசம் கனமாக அதன் மேல் கட்டி உலர்த்தி சேவல் புடம் போட துரிசு சுண்ணமாகும். இந்த துரிசுச் சுண்ணத்துடன் நான்குக்கு ஒரு பங்கு வீரம் சேர்த்து வெடியுப்புத் திராவகம் விட்டு அரைத்து தாளகத்தின் மேல்கட்டி அதன் மேல் அஞ்சு சுண்ணம் கவசம் கட்டி புடம் போட்டு எடுத்து நிறுத்துப்பார். சுண்ணமாகி இருக்கும். எடை குறையாமல் இருக்கும். சிறப்பான வாதம் இதனால் உண்டாகும். இதை யாகோபு கூறினார்.

இந்த தாளகத்தின் சுண்ணத்தை வீரத்தின் மேற் கவசமாகக் கட்டி வெயிலில் காய வைத்து பத்து எருவில் புடம் போடு எடுத்துப் பார்க்க வீரம் சுண்ணமாகும். இதனால் வாதம் மிக அற்புதமாக சித்தியாகும். இந்த வீரச் சுண்ணத்தை ஒரு விராகன் எடை எடுத்து வெடியுப்பு திராவகம் விட்டு அரைத்து தங்கத் தகட்டின் மேல் பூசி காயவைத்து புடம் போடு. தங்கம் நீறி சுண்ணாம்பாகும். இந்த தங்க சுண்ணத்தை நவலோகங்களில் நூற்றுக்கு ஒன்று கொடுக்க பத்து மாற்றுப் பொன்னாகும். இந்த பொன் உப்புக்கும் காவிக்கும் நிற்கும். இதை விற்று பணமாக்கி பல நூல்கள் வாங்கி சுண்ணங்கள் செய்து இறைவனை வணங்கு காரீயம் சுண்ணமாகாவிடில் துரிசு சுண்ணமாகாது. இதனால் தொந்தம் ஏற்றமுடியாது. ரசவாதம் இல்லை. எந்த சூட்சுமமான

வேலையும் செய்யமுடியாது. துரிசு சுண்ணமாகாது. ரசம் கட்டாது. இது தெரியாமல் உலகவாதிகள் உறங்குவார்கள். இதை யாகோபு கூறினேன். நான் நபிமாரை அணுகி இருந்து ரசவாதம் எல்லாம் கற்றுக் கொண்டு வடதேசம் சென்று முகமது நபியைக் கண்டு வணங்கி பல சாஸ்திரங்கள் பாடினேன். மன உறுதியுள்ள நபிமார்களின் பாதங்களை வணங்கி இருந்தேன்.

துருசுச் செந்தூரம்

இருந்திடவே துருசென்ற செந்தூரத்தை
இதமாகக் கேளுங்கள் பாவாநீரும்
அருந்திடவே துருசதுவும் பலமோபத்து
அடைவாக நிறுத்துடனே கல்வத்திட்டுப்
பொருந்திடவே ரோமமென்ற தைலங்கேளு
போக்கான இளவயது ரோமந்தன்னில்
கருத்திடவே நரையில்லா மயிரைவாங்கிக்
கனிவான சுத்திபண்ணிக் கருதிக்கேளே. 506

பாடல்:506: துரிசை செந்தூரம் செய்யும் முறையை கூறுகிறேன் கேள். பத்துபலம் துருசை நிறுத்து எடுத்துக் கொள். இதற்குண்டான ரோமத் தைலம் செய்யும் முறையைக் கூறுகின்றேன் கேள். இளவயது பிள்ளைகளின் நரைக்காத ரோமமாக பார்த்து வாங்கி வந்து சுத்தி பண்ணு. அதன் விபரம் கேள்.

ரோமத் தைலம்

கருதவே சீயக்காய் தனையரைத்துக்
கனிவாகப் பாணிவிட்டுக் கரைத்துநீயும்
வருதவே ரோமத்தை யதிலேபோட்டு
வளமாகக் கொதிகிளம்ப யெரித்துநீயும்
உறுதியாய் ரவிதனிலே உலரப்போட்டு
உற்றுமே நல்லெண்ணெய் தன்னைவிட்டு
அறுதியாய்ப் பிசைந்துமே அப்பால்நீயும்
ஆதியாய்க் குழித்தைலம் வாங்கிக்கொள்ளே. 507

கொள்ளவே சீசாவி லடைத்துநீயும்
குணமாக வைத்துப்பின் சொல்லக்கேளு
நள்ளவே முன்னெடுத்த துருசுதானும்
நலமாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வள்ளவே கெந்தியுடன் துருசுமுக்கால்
வளமாக அரைபொடியும் பலமோபத்து
துள்ளவே முன்றையுந்தான் கல்வத்திட்டுத்
துடியான பழச்சாற்றி லாட்டிடாயே. 508

ஆட்டிடவே நாலாறு சென்றபோது
அடைவாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நீட்டிடவே உப்புநேர் சுண்ணஞ்சேர்த்து
நிலையாக மேல்கவசங் கட்டிநீயும்
பாட்டிடவே பெரியபுடம் போட்டெடுத்துப்
பதறாமல் கவசத்தைப் பிட்டுப்பார்த்தால்
நாட்டிலே சொல்லாதே கருப்பாய்நிற்கும்
நாதாந்த யாகோபு நலமதாமே. 509

நலமாகப் புடம்போட்ட மயினந்தன்னை
நாடியே கல்வமிட்டு வெங்காரத்தைப்
பிலமாக நாலிலொன்று சேர்த்துக்கொண்டு
பேசாதே யரைத்துமெல்ல உண்டைபண்ணி
அலமாகக் குகையில்வைத்து உருக்கித்தீரு
அடைவாக யியம்போற் சத்துமாகும்
கலனாகச் சத்தெடுத்துக் கல்வத்திட்டுக்
கனிவான வெங்காரங் காலதாமே. 510

காலதாம் வெங்காரஞ் சேர்த்துநீயும்
கனிவாக பாணிவிட்டு அரைத்துஉண்டை
வாலதாய்ச் செய்துடனே சொல்லக்கேளு
வடிவாக உண்டைபண்ணிக் குகையில்வைத்துச்
சேலாக உருக்கிடவே சத்துமாகுஞ்
செல்வம்வரும் அயக்கசடு கழிந்துபோகும்
பாலாக யிப்படிக்கு உருக்கிநீயும்
பதிவாகச் சத்தெடுத்துப் பார்த்திடாயே. 511

பார்த்திடவே சத்தெடுத்துக் கல்வத்திட்டுப்
பதறாத வெங்காரம் பாதியிட்டு
நாத்திடவே ரோமத்தின் தைலத்தாலே
நலமாக அரைத்திரண்டு சாமமாட்டிக்
கோத்திடவே வில்லைபண்ணிக் காயவைத்துக்
குணமாக அகலிலிட்டுப் புடமுமிட்டுச்
சாத்திடவே கல்வமிட்டுத் தைலத்தாலே
சரியாக யிருசாம மாட்டிடாயே. 512

ஆட்டிட்டு வில்லைபண்ணிக் கதிரில்வைத்து
அடைவாகப் புதுஅகலில் வைத்துமுடி
ஏத்திட்டுத் திரியாதே முன்போற்றானும்
இதமாகப் புடமிட்டு எடுத்துநீயும்
காத்திட்டுப் பார்த்திடவே சிவந்துபோகுங்
கருணைபெறச் சிவப்பாகு மட்டும்போடு
மாத்திட்டு வருகுமது நபிமார்சொன்ன
வடிவான செந்தூர வண்மைகேளே. 513

வண்மையாய் வெடியுப்புப் பலமோபத்து
வடிவான சீனமது இருபத்தைந்து
உண்மையாய்ப் பொடித்துமே சொல்லக்கேளு
உறுதிபெற வாலையென்ற சட்டியிட்டுத்
தண்மையாய்ப் புகைநீரை வாங்கும்போது
தனியான முன்நீரைத் தள்ளிப்போட்டுப்
பெண்மையாய்ப் பின்நீரை மஞ்சளாகப்
பேசாதே யிருக்குமந்த நீரைவாங்கே. 514

வாங்கியே குப்பிதனி லடைத்துநீயும்
வகையான சூதமது சேருஒன்று
தேங்கியே பீங்கானில் வைத்துநீயும்
திடமாகத் திராவகத்தை விட்டுப்பாரு
ஓங்கியே காளான்போற் பூத்துநிற்கும்
உறுதியாய் அயக்கதிரி னாலெடுத்துத்
தாங்கியே பின்புநீ புகைநீர்குத்து
தயவாகக் காளான்போற் பூக்குந்தானே. 515

பூக்குமே எல்லாமும் பூக்கவைத்து
புனிதமா யெடுத்துகதிர் காயவைத்துப்
பாக்குப்போற் கட்டியா யிருந்ததூளைப்
பக்குவமா யுடைத்துமே பொடியதாக்கு
தாக்குமே ஈரமது இருந்ததானாற்
தடையறவே உமிநெருப்பில் வறுத்துப்போடு
சூக்குரலாய்ச் செய்யாதே யாகோப்சொன்ன
குணமதனைப் பாகமாய்ச் செய்திடாயே. 516

செய்திடவே சூதமது மஞ்சளாகச்
சீருபெற விருக்குமது சொல்லக்கேளு
பைதிடவே முன்வைத்த செந்தூரத்தைப்
பதிவாக திராவகத்தாற் பூத்துநின்ற
கைதிடவே செந்தூர மிடையேசேர்த்துக்
கனிவாக ரோமத்தின் தைலத்தாலே
வைதிடவே இருசாம மரைத்துநீயும்
வடிவாகக் கதிர்வைத்துக் காயப்போடே. 517

காயவே நாளெட்டுக் கடந்தபின்பு
கனிவாக உமிநெருப்பில் வறுத்துநீயும்
நாயமார் சொன்னபடி குப்பிதன்னில்
நலமாக அரைவாசி போட்டுத்தீரு
மாயமாய் மண்ணேழு சீலைசெய்து
மதியாகக் கதிர்வைத்துக் குப்பிவைத்து
தாயகமாய் மேருவைத்துக் காயப்போடு
தயவாக அடுப்பேற்ற வளமையாமே. 518

வளமையாய் முத்தீயு மெரித்துநீயும்
வடிவுபெறப் பனிரெண்டுங் கடந்தபின்பு
தளமையாய்த் தீயாற்று நீதான்மூன்று
தாட்டிகமாய் நாளாறு சென்றபின்பு
பழமையா யெடுத்துநீ மெள்ளத்தானும்
பதிவான குப்பிதனைப் பிரித்துப்பாரு
கழமையாய்க் குப்பியுடை கல்வமிட்டுக்
கணக்காக ரோமத்தின் தைலமுற்றே. 519

ஊற்றியே நால்சாமம் நேகவாட்டி
உறுதிபெற அதையெடுத்துக் கதிரிலிட்டு
ஏற்றியே உமிநெருப்பில் வறுத்துப்போடு
ஏழைமதி போகாமற் குப்பிதன்னிற்
பார்த்திட்டு அடைத்துமே முன்போல்சீலை
பதியவே செய்திட்டு மேருக்கிட்டுக்
கார்த்திட்டு எரித்தெடுப்பாய் கணக்கதாகக்
கதிர்பெருக யாகோபு சொன்னவாறே. 520

சொன்னதுவு மிப்படிக்குச் சிவக்கமட்டுஞ்
சுருதிபெற எரியிட்டு எடுத்துநீயும்
கன்னலாய்ப் பார்த்திடவே செந்தூரந்தான்
கண்கொள்ளா முருக்கம்பூப் போற்சிவந்து
நன்னயமா யிருக்குமந்தச் செந்தூரத்தை
நலமாய்க் கைபாகமாய்ச் செய்துகாட்ட
இன்னிலத்தில் நான்கற்று உங்களுக்கு
இனிமையாய்ச் சொன்னதிந்த உண்மைதானே. 521

தானென்ற செந்தூரம் நவலோகத்திற்
றாக்கிடவே பத்தரைதா னப்பாபாரு
ஊனென்ற உப்புக்குங் காவிக்கப்பா
உறுதியா யிறங்கிவிடும் உண்மைமெத்த
நானென்ற நவலோக மெல்லாந்தானும்
நாட்டினாற் பழுக்குமது நன்மைமெத்தக்
கானென்ற உலகத்தில் வாதிமார்கள்
காணார்கள் கண்டாலுந் தெரியாவாரே. 522

தெரியாமற் போகுமது பாகந்தானுந்
திறமாக அவசரத்திற் செய்துபார்த்து
அறியாமற் பொய்யென்றா லாரென்செய்வார்
அடைவாகக் குழந்தைபோற் றவித்துஏங்கி
குறியாக ஆறதா னிச்சுப்போலக்
குணங்கண்டு அளந்ததுபோல் வாதிமார்கள்
பரியாசம் பண்ணியே திரிவார்பாரு
பகலறிந்தார்க் கண்துலங்கும் பாகமாமே. 523

பாகமா யிருட்டறையிற் புகுந்துநின்று
பதிவாய்க்கண் தெரியாமற் போனதன்பின்
யோகமாய் வெளியில்வந் தொன்றைப்பார்த்து
உறுதிபெறக் கண்துலங்கும் உண்மைபோலக்
காகமா யலைந்தாக்கா லென்னலாபங்
கற்றுணர்ந்தாற் சித்தியுமாங் கண்டுகொள்ளு
மோகமாய்ப் பெண்ணுடனே சேர்ந்துகெட்டு
முனிவான புத்தியில்லா முடிவுதானே. 524

முடிவான துருசென்ற செந்தூரத்தை
முக்கியமாய்ப் பணவிடைதான் தேனிலுண்ணு
குடியாக மேனியது கற்றூணாகும்
குணமாக நரைதிரைக ளற்றுப்போகும்
வடிவாக நோயெல்லாம் பறந்து போகும்
வாதமடை திறந்தவெள்ள மடைக்கக்கூடா
படிபோலே யாகுமது யிந்தநேர்மை
பாகத்தை யறிந்தாலோ சித்தியாமே. 525

சித்தியாந் துருசென்ற செந்தூரந்தான்
திடமாக யிக்காண்டந் தனிலேசொன்னேன்
முத்தியா யிதையறிந்து செய்துகொண்டு
மூவுலகு மெச்சவே உண்டுதேரு
கத்தியே திரியாதே கண்டுகொள்ளு
கனிந்துமே விதியாளி கண்டுகொள்வான்
சத்தியமா யென்வசன மெய்யதாகுந்
தாக்கிவிட்டேன் நூலினுட தன்மைபாரே. 526

தண்மையாந் துருசினுட செந்தூரந்தான்
தாக்கியே நபிமார்கள் செய்துபார்த்து
உண்மையென்று நம்பியே தங்கஞ்செய்து
உறுதிபெற வேதத்திற் காட்டினார்கள்
வண்மைபெற உலகத்தோர் பிழைக்கத்தானும்
வடிவாகச் சொல்லியே வண்மைகாணத்
துண்மையா யாகோபு சொன்னேன்பாவா
துடியான பொருளையறிந் தோர்க்குத்தானே. 527

பாடல்கள்: 507-527: சீயக்காய் வாங்கி வந்து அரைத்து தண்ணீர் விட்டு கரைத்துக் கொண்டு ரோமத்தைப் பொடியா நறுக்கிக் கொண்டு அதை சீயக்காய் கரைசலில் கொட்டி அடுப்பேற்றி நன்கு கொதி கிளம்ப எரித்து எடுத்துக் கழுவி வெயிலில் உலரப் போடு. பின்பு நல்லெண்ணெய் விட்டு உலர்ந்த முடியை பிசைந்து ஒரு பானையில் போட்டு குழித்தைலம் வாங்கிக் கொள். இதை சீசாவில் அடைத்துக் கொள். முன்பு வைத்த துரிசை பத்துபலம் நிறுத்துக் கொண்டு கெந்தகம் முக்கால் பங்கு, இரும்புப் பொடி பத்து பலம் மூன்றையும் கல்வத்தில் போட்டு பழச்சாற்றில் அரைப்பாய். ஆறு நாட்கள் அரைத்து வில்லைதட்டி வெயிலில் வைத்து பின்பு உப்பும், சுண்ணமும் சேர்த்து அரைத்து வில்லைக்கு மேல் கவசம் கட்டி பெரிய புடமாகப் போடு.

ஆற விட்டு பிரித்துப் பார்க்க கருப்பாக நிற்கும். இதை கல்வத்தில் போட்டு நாலில் ஒரு பங்கு வெங்காரம் சேர்த்து அரைத்து உருண்டையாக்கி குகையில் வைத்து உருக்கு. ஈயம் போன்ற சத்து கிடைக்கும். இந்த சத்தை எடுத்து கல்வத்தில் போட்டு சத்திற்கு நாலிற்கு ஒரு பங்கு வெங்காரம் சேர். தண்ணீர் விட்டு அரைத்து உருண்டை செய்து குகையில் வைத்து உருக்கிட சத்து கிடைக்கும். இதனால் இரும்பில் உள்ள கசடு நீங்கும். இப்படி சத்தெடுத்து கல்வத்தில் போட்டு சத்தில் எடைக்கு பாதி வெங்காரம் பாதி போட்டு ரோமத்தின் தைலம் விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை பண்ணி காயவைத்து அகலில் வைத்து இரண்டு ஜாமம் அரை, வில்லை தட்டி வெயிலில் காய வைத்து புது அகலில் வைத்துப் புடம் போடு எடுத்துப் பார்க்க சிவந்து இருக்கும். இல்லையென்றால் மறுபடியும் போடு. இப்படி சிவப்பாகும் வரை போடு. இது நபிமார்கள் சொன்ன செந்தூரம்

இதன் தன்மையைக் கேள். பின்பு வெடியுப்பு பத்துபலம், சீனக்காரம் இருபத்தி ஐந்து பலம் இரண்டையும் பொடி பண்ணி சட்டியிட்டு வாலை மூடி திராவகமாக வாங்கு. முன்னால் வரும் வெள்ளை நீரை நீக்கி பின்னால் வரும் மஞ்சள் நிற நீரை வாங்கு. பாதரஸம் ஒரு சேர் எடுத்து ஒரு பீங்கானில் வைத்து அதில் திராவகத்தை விட்டு வெயிலில் வை. காளான் போல் பூத்து நிற்கும். இதை சிறிய இரும்புக் கத்தி கொண்டு எடுத்துக் கொண்டு மறுபடியும் புகைநீரை ஊற்று. காளான் போல் பூக்கும். இப்படி பாதரஸத்தை எல்லாம் பூக்க வைத்து பூவை எல்லாம் எடுத்துச் சேர்த்து வெயிலில் காயவைத்து பொடி செய்து கொள். ஈரம் இருந்தால் பீங்கானில் போட்டு உமி நெருப்பில் வறுத்து விடு கைபாகமாகச் செய். பாதரஸமானது மஞ்சள் நிறமாக இருக்கும் இந்த ரஸத் தூளுக்கு சரி எடை முன்புடம் போட்டு எடுத்த செந்தூரத்தைச் சேர்த்து ரோமத் தைலம் விட்டு இரண்டு ஜாமம் அரை, வெயிலில் காயப்போடு. எட்டு நாட்கள் காய்ந்த பின்பு எடுத்து உமி நெருப்பில் வறுத்து எடுத்து காசிக் குப்பியில் அரைவாசி மருந்தைப் போட்டு வாய்ப்பாட்டிற்கு மாக்கல் வைத்து மூடி குப்பிக்கு ஏழுசீலை மண் செய்து வெயிலில் உலரப் போடு. பின்பு வாலுகையில் வை. பன்னிரெண்டு ஜாமம் முத்தீயும் எரித்து (முத்தீ விளக்கம் முன்னால் காண்க) பின்பு ஆறு நாட்கள் ஆறப்போடு. பின்பு எடுத்து மெள்ளப் பிரித்துப் பார்த்து குப்பியை உடைத்து கல்வமிட்டு ரோமத்தின் தைலம் ஊற்று.

ஊற்றி நான்கு ஜாமம் ஆட்டி எடுத்து வெயிலில் வை. பின்பு எட்டு நாட்கள் கடந்து எடுத்து உமி நெருப்பில் வறுத்துப் போடு. பின்பு முன்போல குப்பியில் போட்டு சீலைமண் செய்து வாலுகையில் வைத்து முன்போல பன்னிரெண்டு ஜாமம் எரி,

இப்படி அரைத்தும், உலர்த்தியும், வறுத்தும் எரித்தும் சிவப்பாகும் வரை செய். முருக்கன் பூ போல் செந்தூரம் சிவந்து நிற்கும். இந்த செந்தூரத்தை கைபாகமாய்ச் செய்து காட்ட நான் முதலில் கற்றுக்கொண்டு பின்பு உங்களுக்குக் கூறினேன். இந்த செந்தூரத்தை நவலோகங்களில் கொடுக்க பத்தரை மாற்று பொன் கிடைக்கும். இது உப்புக்கும் காவிக்கும் உறுதியாக நிற்கும். இதை உலக வாதிமார்கள் காணமாட்டார்கள். அவசரமாய் செய்து பார்த்து கைபாகம் இன்றி தெரியாமல் பொய்யென்று கூறினால் யார் என்ன செய்ய முடியும். தவித்து ஏங்கி செய்தால் என்ன பலன். உண்மையாகச் செய்தால் பலன் உண்டு.

இருட்டின அறையில் சென்று நின்று கண்ணுக்கு ஏதும் புலப்படாமல் போய் வெளியில் வெளிச்சத்துக்கு வந்த பின்பு கண் நன்றாகத் தெரிவது போன்று, காகம் போல் அலைந்தால் என்ன பலன். கற்று உணர்ந்தாலே எல்லாம் சித்தியாகும். பெண்மோகம் கொண்டு கெட்டு போவதால் புத்தியில்லாத முடிவாகும். இந்த துரிசுச் செந்தூரத்தை பணஎடை வீதம் தேனில் உட்கொள்ள உடல் கல்தூண்போல் ஆகும். நரை,திரைகள் நீங்கும். உடலில் நோய்கள் எல்லாம் நீங்கும். வாதம் என்ற வெள்ளம் மடைதிறந்தது போல் உண்டாகும். இந்த உண்மையான முறையை அறிந்து செய்தால் எல்லாம் சித்தியாகும். இதற்காக துரிசு செந்தூரத்தை இந்த நூலில் கூறினேன். விதியுள்ளவன் அறிந்து கொள்வான். இதை அறிந்து செய்து மூவுலகும் மெச்சும்படி வாழு. வெட்டியாய்த் திரியாதே. இந்த துரிசுச் செந்தூரத்தை நபிமார்கள் செய்து பார்த்து அதை வைத்து தங்கம் செய்து பார்த்து வேதத்தில் சொன்னார்கள். இவ்வுலகோர் பிழைக்கவேண்டி யாகோபு ஆகிய நான் கூறினேன். பொருளை அறிந்து கொள்.

ஏமாற்றும் உலகத்தோர்கள்

தானென்ற நூல்பார்த்து உலகவாதி
தவித்துமே மனம்புண்ணாய் வறுமையுற்று
ஊனென்ற சோற்றுக்கு யிடமில்லாமல்
உண்பாரை யுடுப்பாரைப் பார்த்துயேங்கி
நானென்ற ஆணுவத்தாற் கெட்டோமென்று
நாய்கள்போ லலைந்துமே கெஞ்சிக்கெஞ்சி
வானென்ற நூலினுட பாகம்விட்டு
வடிவாகத் தெரியாத மார்க்கந்தானே. 528

மார்க்கமாய் நால்வேதத் தொப்பாய்நின்ற
வடிவான அல்லாவுந் தானிருக்க
ஊர்க்குள்ளே கம்மாளன் கல்லைத்தானும்
உறுதிபெற மனிதனைப்போ லடித்துவைத்துப்
பார்க்குள்ளே சீவனத்தைப் பண்ணுவோர்கள்
பதியான புத்தியைத்தான் கேட்டுக்கேட்டு
நீர்க்குள்ளே முழுகியே சாம்பல்தன்னை
நிலையாகப் பூசியே பொய்சொல்வாரே. 529

சொல்லவே கோவிலுக்குட் போகச்சொல்லித்
துறப்பான பாப்பார்தான் காலில்வீழ
நல்லதென்று பாப்பாரும் பணமுங்கேட்டு
நால்பணத்தைப் பிடுங்கியே போவென்பார்கள்
கொல்லவென்ற யிப்படிக்குச் செய்யுமுடர்
குணமான நூல்மர்மங் காணப்போறார்
வில்லங்கப் பட்டுமே கரிகள்சுட்டு
வீணாச்சு யென்பார்கள் வேடத்தோரே. 530

வேடத்தோ ரிப்படிக்கு வேடம்பூண்டு
விதமான சாத்திரத்தை மிகவுங்கற்றுத்
தாடமாய்த் தாவடத்தைப் பூண்டுகொண்டு
தனைநினைத்துப் பூசையது நிறம்பச்செய்து
கூடவே தபசியென்ற பிள்ளைவைத்துக்
குணமாக நெய்யன்ன மிகவுமுண்டு

பாடமாய்ப் பாட்டைத்தான் மிகக்கற்றோர்க்குப்
பலியாது வாதத்தின் பரிசுதானே. 531

தானென்ற யின்னுமொரு வேடக்காரன்
தாட்டிகமாய் வாதம்வந்த தென்றுசொல்லி
வானென்ற சாராயம் அபினியுண்டு
வடிவான கள்ளுத்தான் மிகக்குடித்து
ஊனென்ற உலகத்திற் பிச்சைவாங்கி
உணர்வாக அலைந்துமே திரிவாரப்பா
கானென்ற யிவ்வேடம் பூண்டவர்க்குக்
கருத்தரிய வாதமது யில்லைதானே. 532

இல்லையென்று சிறிதுபேர் ஒருவரோடே
இதமாகக் கேட்டுமே வாதமாச்சு
கல்லையென்று அவசரத்தில் நடந்துயேங்கிக்
கனிவாக யெல்லோர்க்குஞ் சொல்லிக்காட்டி
முல்லைமலர் போலவே சிரித்துச்சுற்றி
முனையாக அலைந்துமே மூலிதேடி
வில்லங்கப் படுபவர்க்கு வாதமில்லை
வேணமட்டுஞ் சோதிப்பார் உலுத்தர்தாமே. 533

உலுத்தரா மின்னமொரு வாதிதானும்
உளவான பெண்ணைத்தான் கண்டபோதே
வலுத்துமே பெண்ணையருகிற் கூப்பிட்டுத்தான்
வளமாக அவளோடு நேசித்தப்பா
சலுத்துமே சலிப்பாக வாதந்தன்னைத்
தாட்டிகமாய்க் கொஞ்சமாய்ச் சுட்டுப்பார்ப்பார்
அலுத்துமே யில்லையென்பார் வாதந்தன்னை
அலைவார்கள் அவர்க்காப்பி டாதுதானே. 534

ஆப்பிட்ட பேர்களுக் கிவர்களெல்லாம்
அந்திதனில் வழியிலே நினைவுபூண்டு
கூப்பிட்டுத் திரிந்தாக்கால் வாதமாமோ
குணமான மனதுக்கு ரூபமில்லை
வாப்பிட்டுத் திரிந்தாக்கால் லாபமென்ன
வகையறிந்த பேருக்கு வடிவந்தங்கும்

சாப்பிட்டு நன்றாகத் திரிபவர்க்குச்
சரியான வாதம்வரத் தாட்சிதானே. 535

தாட்சிதான் வாராமல் வாதம்வந்தோர்
தான்பேசார் பொறுமையா யிருந்துகொள்வார்
வாட்சியாய்ப் பதறாமற் செய்துபார்ப்பார்
வடிவான நூல்களையே விரும்பிப்பார்த்துக்
காட்சியாய்க் கலக்கமற்றுப் படித்துக்கொள்வார்
கைபாக வரிசையாய்ச் செய்துகொள்வார்
வாட்சியாய் மனந்தன்னிற் சாத்திரத்தை
வடிவாகப் படிப்பார்கள் வழக்கத்தோரே. 536

வழக்கந்தா னால்வேதம் பூண்டுகொண்ட
வடிவான யெங்களுட ஜாதிதன்னிற்
கலக்கமாய்ப் போச்சுதென்று சொல்லிச்சொல்லிக்
கனிவாகப் புலம்பியே வாதயிச்சை
தழக்கமாய்ப் பட்டுமே கரியைச்சுட்டுத்
தாட்டிகமாய் வீண்பாடு பட்டேனென்பார்
உழப்பான சாத்திரத்தி லுழைப்பிலாதார்
உறுதிபெறப் பிச்சைதான் வாங்கநன்றே. 537

நன்றாகச் சவுக்காரச் சுண்ணஞ்சொன்னேன்
நானிலத்தில் கைபாக வரிசைசொன்னேன்
கன்றாகக் களங்கினுட பாகஞ்சொன்னேன்
கனிவான துருசுச்செந் தூரஞ்சொன்னேன்
பன்றாக வெடியுப்புச் செய்யுமார்க்கம்
பதிவாக கைபாக வரிசைசொன்னேன்
வன்றாகப் புதையலெல்லாம் வெளியாய்த்தோனும்
வடிவான படிப்பாளி வகையுமாமே. 538

வகையாகக் களங்குதனிற் செம்பெடுக்க
வண்மையாய்ப் பாகமது கொஞ்சந்தானும்
துகையாகச் சொல்லிவிட்டேன் அதனைத்தானும்
சுண்ணமென்ற காண்டத்திற் தொடர்புசொல்வேன்
பகையாகப் பார்க்காதே மறைத்தபாகம்
பதிவாக உலகத்தில் எல்லோர்தானும்

முறையாகச் செய்திடுவா ரென்றுசொல்லி
முனையான யென்னூரலை யெல்லாம்பாரே. 539

பார்த்துமே யெல்லாநூல் தன்னைப்பார்த்துப்
பதிவாக யெல்லாமும் ஒன்றாய்ச்சேர்த்துக்
காத்துமே கைபாக வரிசையோடே
காட்டுவேன் கடைசிதனிற் கண்டுபாரு
கூத்துவனா யெண்ணாதே புத்திதன்னைக்
குடிலமாய் விசாரித்துப் பார்த்துத்தேர்ந்து
நேர்த்தியாய்ச் செய்துவிட்டாற் பலனுமாகும்
நிலவரமுந் தப்பினா லில்லைதானே. 540

பாடல்:528-540: இந்த உலக வாதிகள் எல்லா நூலையும் பார்த்து மனம் புண்பட்டு வறுமையுடன் சோற்றுக்கு வழியின்றி உண்டு உடுப்பவர்களைப் பார்த்து ஏங்கி நான் என்ற ஆணவத்தால் நாம் கெட்டோம் என்று நினைத்து நாய்கள் போல் அலைந்து பிறரிடம் கெஞ்சிக் கெஞ்சி நூலினுடைய நுட்பம் தெரியாமல் அலைவர். நான்கு வேதங்களுக்கு ஒப்பான அல்லா இருக்க ஊரில் உள்ள சிற்பிகள் கல்லினால் மனிதனைப்போல் செய்து அதை வைத்து சீவனம் செய்வார்கள். அவர்களுடைய பேச்சைக் கேட்ட மானிடர்கள் தண்ணீரில் தலை முழுகி நெற்றியில் சாம்பலைப் பூசிக்கொண்டு பலவாறு பொய் கூறுவார்கள்.

இவர்கள் கோவிலுக்குச் சென்று அங்குள்ள ஐயரின் காலில் வீழ்வார்கள். நல்லது நடக்கும் என்று பார்ப்பனரும் பணத்தைச் கேட்டு பிடுங்கிக் கொண்டு போவென்பார்கள். இப்படி அலையும் மூடர்கள் நூலினுடைய சூட்சுமங்களை அறிய மாட்டார்கள். வீணாகச் சுட்டு கெட்டுப்போவார்கள். இப்படி பலர் வேடம் போட்டுக் கொண்டு வேதமந்திரங்கள் கற்றுக் கொண்டு உருத்திராட்ச மாலையை அணிந்து கொண்டு பூசைகள் செய்து கொண்டு கூடவே சீடர்களை வைத்துக் கொண்டு நெய்யுடன்

சோறு தின்று கொண்டு பாட்டுகளைப் பாடிக்கொண்டு அலைவார்கள். இவர்களுக்கு ரசவாதமானது பலிக்காது, இன்னும் சிலர் பொய் வேடதாரிகள் தனக்கு ரசவாதம் வந்ததென்று கூறி சாராயம், அபின், கள்ளு இவைகளை குடித்துக் கொண்டு உலகில் பிச்சை வாங்கி உண்டுகொண்டு அலைந்து திரிவர். இவர்களுக்கு ரசவாதம் பலிக்காது.

இன்னும் சிலர் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொண்டு வாதம் வந்து விட்டது என்று கூறி அவசரத்தில் செய்து எல்லோருக்கும் சொல்லிக் காட்டி சிரித்துச் சிரித்துப் பேசி மூலிகைகளை தேடி அலைந்து வேண்டிய மட்டும் சோதித்துப் பார்ப்பார். இவர்களுக்கும் ரசவாதம் பலிக்காது. இன்னும் சிலர் உலகில் பெண்போகம் செய்து கொண்டு மனச்சலிப்புடன் ரசவாதத்தை கொஞ்சமாகச் செய்வார்கள் அவர்களுக்கும் பலிக்காது. அப்படி ரசவாதம் வந்தவர்கள் எங்கே? இவர்கள் எங்கே? ரசவாதமானது சொல்லால் வராது. மனதிற்கு உருவமில்லை. வாய்ச்சொல்லால் லாபமில்லை. உண்மையான முறையை அறிந்தவர்க்கு ரசவாதம் நிலைக்கும். நன்றாக உண்டு உறங்குபவர்களுக்கு ரசவாதம் சித்தியாகாது.

இப்படி இன்றி ரசவாதம் சித்தியானவர்கள் யாருடனும் பேசாமல் பொறுமையாய் இருப்பார்கள். பதறாமல் செய்து பார்ப்பார். நல்ல நூல்களை விரும்பிப் பார்த்து கலக்கமின்றிப் படித்துக் கொள்வார். மனதில் சாத்திரத்தை நிதானமாகப் படிப்பார்கள். இப்படி நான்கு வேதங்களையும் அறிந்த எங்கள் சித்தர்கள் இனத்தில் இல்லாதவர்கள் மனக்கலக்கத்துடன் ரசவாதம் செய்யும் ஆசையினால் சுட்டுச் சுட்டு வீணாகப் பாடுபட்டேன் என்று புலம்புவார்கள். சாஸ்திரப்படி செய்யாதவர்கள் பிச்சை எடுப்பது நன்று.

நான் நல்லபடியாக சவுக்காரம் செய்யும் முறையைக் கூறினேன். உலகில் கைபாக வரிசையைச் சொன்னேன். துரிசு செந்தூரம் சொன்னேன். வெடியுப்பு செய்யும் முறை கூறினேன். களங்குகளில் செம்பெடுக்கும் முறையை கொஞ்சம் கூறினேன். அதன் தொடர்ச்சியை சுண்ணம் என்ற காண்டத்தில் கூறினேன். நீ என்னை தவறாக எண்ணாதே இந்த உலகில் எல்லோரும் செய்து விடுவார்கள் என்று எண்ணித்தான் பிரித்துக் கூறியுள்ளேன். எனவே பொறுமையாக என் நூலில் எல்லா சாஸ்திரங்களையும் பார். உனக்குப் புரியும். எனவே என்நூலில் உள்ள எல்லாவற்றையும் பார்த்து என்னூல் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து கைபாக வரிசைதனில் நான் கூறியவற்றையும் பார்த்து நல்ல புத்தியுடன் ஆராய்ந்து செய்தால் பலன் கிடைக்கும். இது மாதிரி செய்யவில்லை என்றால் பயனில்லை.

துருசுக்குப் புருஷன்

இல்லையென்று யெண்ணாதே துருசுதானும்
இதமான பெண்ணாகும் பெண்ணுக்குத்தான்
நல்லாகப் புருஷனவன் ரெண்டுபாகு
நான்சொல்வேன் முதற்புருஷன் அயமுமாகும்
கொல்லவே ரெண்டுபேர் சேர்ந்தபோது
குணமாகக் கெந்தியது ரெண்டுபேர்க்கும்
வல்லமையாய் ஆத்தாளம் மூன்றுஞ்சேர்த்து
வகையாகப் பழச்சாறு விட்டுஆட்டே. 541

ஆட்டியே புடம்போட்டு உருகும்போது
அடைவான சத்தாகுஞ் சேர்ந்துகொண்டு
வாட்டியே யிருக்குமது துருசுச்செம்பு
வகையான பொன்போலே உள்ளேதானே
தூட்டியே இருந்திடுமே மூன்றுஞ்சேர்ந்து
துணையாக ஆணாகப் போச்சுதானும்
பாட்டியே ஆணுக்கு ஆணுசத்துரு
பதிவாகக் கொடியோனும் ஆணுமாமே. 542

ஆமேதான் ஆணைத்தான் சேருபாகி
அடைவாகப் பழச்சாறு யிதுக்குஅப்பன்
நாமேதான் சொல்லிவிட்டோம் சேர்த்தரைத்து
நலமாக வில்லைதட்டிக் கதிரில்வைத்துப்
பூமேவும் அகலிலிட்டுப் புடத்தைப்போடப்
புகலாகப் பிரிக்குமே செம்பைத்தானும்
வாமேதான் பிறிந்திருந்த செம்பெடுக்க
வகையான புருஷனைத்தான் வண்மைகேளே. 543

பாடல்கள்: 541-543: இந்த ரசவாத வேலையில் துரிசானது பெண் அகும். இதற்கு இரண்டு புருஷன் உண்டு. முதற்புருஷன் அயம் ஆகும். இது இரண்டும் சேர்த்து இதற்கு தாய் கெந்தகம் ஆகும். இந்த மூன்றையும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரை. அரைத்து வில்லைதட்டி காயவைத்து புடம் போட்டு உருக்கும் போது சத்து கிடைக்கும். துரிசுச் செம்பானது பொன் போன்று கிடைக்கும். இந்த மூன்றும் சேர்ந்து கிடைக்கும் இந்த செம்பு. ஆணாகும். இந்த ஆணுக்கு ஆண் எதிரி என்பது வீரம் ஆகும். இந்த வீரத்தை முன் சத்தின் எடைக்குப் பாதி சேர்த்து இதுக்கு தந்தை போன்ற எலுமிச்சம்பழச் சாறுவிட்டு நன்கு அரைத்து வில்லைதட்டி வெயிலில் வை. பின்பு அகலில் இட்டு புடம் போடு. செம்பும் பிரியும். இந்த பிரிந்த செம்பை எடுக்கும் வகையானதை கூறுகிறேன். இதற்கு பயன்படும் வங்கமே இரண்டாவது துரிசின் புருஷன் ஆகும்.

வங்க நீர்

வண்மையாய்ப் புருஷனவன் சேர்ந்தபோது
வகையான கருத்தரித்து உருவுமாச்சு
உண்மையா யிதுபோல வங்கந்தானும்
உறுதிபெறக் காரியம் பலமும்பத்து
தண்மையாய்க் கற்றாளம் பாலிற்றானும்
தடையறவே உருக்கியே சாய்த்துநீயும்
கண்மையாய் யேழுதரஞ் சாய்த்தபின்பு
கருத்தாகத் தகடுதட்டிக் கனிவாய்க்கேளே. 544

கனிவாகக் கல்வத்தி லிட்டுநீயும்
கருதியே பழச்சாறு விட்டரைத்து
வனிவாக நாளெட்டு அரைத்துஊற
வகையாக நாளேழு சொல்லக்கேளு
சனிவாக பழச்சாறு தளரவிட்டுச்
சாரித்து மேற்றெளிவை யிறுத்துநீயும்
கனிவாக முன்போட்ட சத்துதன்னில்
காரியமாய்க் கல்வமிட்டு அரைத்துக்கொள்ளே. 545

அரைத்துமே யிருசாமஞ் சென்றபின்பு
அடைவாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
பரைத்துமே புடம்போட்டுப் பின்புநீயும்
பாகமாய்க் கல்வமிட்டு வங்கநீரால்
அரைத்துமே யிருசாமம் வில்லைதட்டி
அடைவாக முன்போலே புடமுமிட்டால்
கரைத்துமே யெடுத்துப்பார் களங்குபோலாம்
கனிவாகச் செத்தசெம்பை யிழுக்குந்தானே. 546

இழுக்குமே வங்கநீர் சென்றுபுக்கி
இதமான செம்புதான் சிக்கிப்போகும்
அழுத்தமாய்ப் பிடித்துமே புகைபோகாமல்
அடைவாக உருகியது யிருக்கும்பாரு
கழுத்துமே யிதையெடுத்து வைத்துக்கொண்டு
காரணமாய் வெள்ளியெட்டில் மூன்றுசேர்த்து
பழுக்கவே கொடுத்தூதிப் பார்க்கும்போது
பதிவான மாத்தேழு காணுந்தானே. 547

காணுமே யிதினோடே தங்கத்தாயைக்
காரணமா யிடைசேர்த்து உருக்கிப்பாரு
வீணிலே போகாது மாத்துப்பத்தாம்
விரும்பியே யிதைவிற்றுச் செலவுசெய்து
தாணுவாய் நபிமாரைப் பணிந்துபோற்றித்
தருகாவி லேகியே தொழுதுநீயும்
பாணுவாய்ப் புத்தியாய்ப் பிழைத்துக்கொள்ளு
பதிவான யாகோபு பலன்சொன்னாரே. 548

சொன்னதொரு வங்கமில்லாச் செம்புவெல்லாம்
சுகமாக உருகையிலே ஓடிப்போகும்
கன்னதொரு தாயில்லாப் பிள்ளைப்போலே
கனிந்துமே அழுதுமே புலம்புவார்கள்
இன்னிலத்தில் வங்கமல்லோ சேர்ந்தபோது
இனிதான பொன்னாச்சு இயற்கையாகும்
முன்னமே சொல்லிவிட்டேன் முந்நூறுதன்னில்
முடியமட்டுஞ் சோதித்து முடிவுபாரே. 549

முடிவான சத்துக்கு அயமும்வேணும்
முனையான களங்கிலுள்ள செம்பெடுக்க
குடியுள்ள காரீயம் நீர்கள்வேண்டும்
குணமாகச் செம்புதான் வருகும்பாரு
படியான நூலறியா அசட்டுவாதி
பதிகாணாப் புலம்பியே மாழுவார்கள்
செடிதனையே பிடிங்கியே சார்பிழிந்து
திடமாகத் திரிவார்கள் உலகத்தோரே. 550

உலகத்தில் வாதந்தான் பொய்யாமென்று
உற்றுணர்ந்து அறியாத மூடர்சொல்வார்
பலகற்றும் பலனில்லை முரட்டுவாதி
பழிப்பார்கள் அவர்முகத்தில் காரித்துப்பு
நிலைபெற்றால் நீடூழி வாழலாகும்
நிலையில்லார் ஒருபோதும் வாழமாட்டார்
சிலைபோலே நிற்பார்கள் முரட்டுவாதி
செழிப்பில்லை வங்கத்தை அறியார்தானே. 551

வங்கந்தான் களங்குக்கு ஆதிஆதி
வடிவான சத்துக்கு ஆதிதானும்
சிங்கந்தா னிரும்பாகுஞ் சேர்க்கமுத்தி
திறமான சிங்கத்தை யறியாமுடர்
பங்கமாய்ச் சொல்லிடுவார் பரிட்சைகேட்பார்
பாபத்துக் கிடமாகச் சொல்லிச்சொல்லி
எங்களைத்தான் சொல்லியே வைவார்முடர்
ஏற்றமா யுலகத்தில் வாதிதானே. 552

தானென்ற உலகத்தில் வாதிமார்கள்
　　தருதுரும்பாய்ச் சுட்டுமே கெட்டுத்தானும்
வானென்ற பொருளறியா மார்க்கத்தாலே
　　வடிவுபெற ரசவாத மில்லையென்று
கானென்ற உலகத்தில் சொல்லிச்சொல்லிக்
　　கனியாத பழம்போலே கேட்டுத்தேர்ந்து
ஊனென்ற வழிபாடாய்த் திரியாமற்றான்
　　உலுத்தனவன் செய்வதிந்த முறையுமாமே. 553

முறையாகச் சகலநூல் சித்தியாக
　　முதன்மையாய்ப் படித்துணர்ந்து கவலைகொண்டு
வறையறவாய்ப் புத்தியிலே நினைவுபூண்டு
　　வடிவான செயலறிந்து வண்மைபேசிச்
சிறைபோலே வெகுநாளாய்க் காத்திருந்து
　　ஜெயம்பெறவே வாதிகையி லடுத்துநீயும்
பறையாகச் செய்துவிட்டால் பலனுமாகும்
　　பகுத்துணர்ந்து சித்திபெறச் செய்திடாயே. 554

பாடல்கள்: 544-554: காரீயம் பத்து பலம் எடுத்துக் கொள். இதை உருக்கி கற்றாழம் பாலில் ஏழுதரம் சாய்த்து பின் எடுத்து தகடாகத் தட்டிக் கொள். இதை பிய்த்துப் போட்டு கல்வத்தில் எலுமிச்சம்பழம் சாறு விட்டு எட்டு நாட்கள் அரைத்து பின் பழச்சாற்றை தளர விட்டு ஏழுநாட்கள் ஊறப்போடு. பின்பு மேல் தெளிவை இறுத்துக் கொள். இதை முன் புடம் போட்டு எடுத்த சத்தில் விட்டு இரண்டு ஜாமம் அரை.

இரண்டு ஜாமம் அரைத்து வெயிலில் வில்லை தட்டிக் காயவைத்து புடம் போடு. மறுபடியும் ஒரு முறை அரைத்து வங்க நீரால் இரண்டு ஜாமம் அரைத்து இரண்டு ஜாமம் சென்று எடுத்து வில்லை தட்டி காயவைத்து புடம் போடு. களங்கு போல் ஆகும். செத்த செம்பை இழுத்து விடும். வங்கநீர் உட்சென்று நுழைந்து செம்பைப் பிடித்து புகையாமல்

உருகிநிற்கும். இதை எடுத்து வைத்துக் கொண்டு வெள்ளி எட்டு பங்கில் களங்கு மூன்று சேர்த்து கொடுத்து ஊத ஏழு மாற்றுதங்கம் உண்டாகும். இதனுடன் தங்கம் சேர்த்து உருக்க பத்து மாற்று தங்கம் உண்டாகும். இதை விற்று செலவு செய்து பிழைத்துக் கொண்டு நபிமாரைத் தொழுது போற்றி வாழு என்று யாகோபு ஆகிய நான் கூறினேன்.

வங்கம் இல்லாத செம்பு எல்லாம் உருகையில் ஓடி விடும் தாயில்லாத பிள்ளை போல மார்க்கம் தெரியாத ரசவாதிகள் அழுது புலம்புவார்கள். வங்கம் சேர்ந்தால் இயற்கையான பொன் உண்டு. என்னுடைய நூல் சுண்ணம்-300ல் இது பற்றி கூறியுள்ளேன். உன்னால் இயன்றவரை சோதித்துப்பார். சத்து எடுக்க அயம் வேண்டும். களங்கில் செம்பெடுக்க வங்க நீர் வேண்டும்.

இந்த முறையான நூல் சூட்சுமம் அறியாத அசட்டு ரசவாதிகள் புலம்பிக் கொண்டு செடிகளைப் பிடுங்கி சார் பிழிந்து கொண்டு உலகில் திரிவார்கள்.உலகில் ரசவாதம் பொய்யென்று மூடர்கள் சொல்வார்கள். அவர்முகத்தில் காரித்துப்பு. வாதம் நிலைபெற்றால் பலகாலம் வாழலாம். இல்லை என்றால் முடியாது. வங்கத்தின் பெருமையை அறியாத முரட்டு வாதிகள் சிலை போன்றவர்கள். வங்கம்தான் களங்கிற்கு ஆதியாகும். சத்துக்கு ஆதி இரும்பாகும். இதை அறியாத மூடர்கள் பலவிதமாகச் சொல்லி பாபங்கள் செய்து எங்களை சொல்லி வைவார்கள். இவர்கள் மூடர்கள் ஆவார்கள்.

இவ்வுலக ரசவாதிகள் சுட்டுக் கெட்டு உண்மையான சூட்சுமத்தை அறியாமல் ரசவாதம் இல்லையென்று உலகத்தில் கூறிக்கொண்டு திரியாதவர்கள். முறையாக எல்லா நூல்களின்

முறையும் சித்தியாகும் பொருட்டு முதலில் படித்து உணர்ந்து சித்தியாக வேண்டும் என்ற மனப்பயத்துடன் வரைமுறையுடன் புத்தியில் நினைவுடன் உண்மையான முறையை அறிந்து மௌனமாக இருந்து சிறையில் அடைப்பட்டவர் போல வெகுநாட்கள் காத்திருந்து வெற்றிபெறவே ரசவாசதத்தைக் கையிலெடுத்து நூல் முறையில் கூறியபடி செய்துவிட்டால் பலன் கிடைக்கும்.எனவே நன்றாய் உணர்ந்து செய்திடுவாயாக

சாரச் சுண்ணம்

செய்திடவே யின்னமொரு சாரந்தன்னைச்
ஜெயமான சுண்ணமதாய்ச் செய்யத்தானும்
பைதிடவே சாரமது பலமும்பத்து
பதிவான சீனமது பலமும்ரெண்டு
கைதிடவே யோடென்ற கிளிஞ்சிதானும்
கருவாகப் பலம்ரெண்டு நிறுத்துக்கொண்டு
வைதிடவே கல்வத்தி லிதனையிட்டு
வடிவாக அரைத்துவில்லை காயவையே. 555

காயவைத்துப் பத்தெருவில் புடத்தையிட்டால்
கனிவாகக் கடுஞ்சுண்ணச் சாரமாகும்
மாயவைத்த சுண்ணமிடை சாரஞ்சேர்த்து
மத்திச்சுப் பனியில்வைக்கச் ஜெயநீராகும்
நாயமார் சொன்னபடி வீரமிட்டு
நயமாகச் செயநீரை வடித்துநீயும்
தாயகமாய்த் தாளகமும் பலமும்பத்து
தாட்டிகமாய்ச் சுண்ணாம்பில் சுத்திசெய்யே 556

சுத்திசெய்து சாரத்தின் செயநீராலே
சுருக்கிட்டு ஒருசாமஞ் சென்றபின்பு
பத்தியா யெடுத்துமே சொல்லக்கேளு
பதிவான அண்டோட்டைப் பதியவூது
சித்திபெறத் தாளகத்தின் மேலேகட்டிச்
சிறப்பாகப் பத்தெருவில் புடமுமிட்டு
நத்தியே யெடுத்துப்பார் காரியாய்நிற்கும்
நலமாகச் சொல்லுகிறே னாட்டங்கேளே. 557

நாட்டமென்ன சொல்லுகிறேன் தாட்சேறதில்
நலமான யீயமது நல்லதாகும்
கூட்டமுடன் சொல்லாதே துருசுநேராய்க்
குணமாக யிதுரெண்டுங் கல்வமிட்டுத்
தாட்டிகமாய்ச் சாரத்தின் ஜெயநீராலே
தாக்கிட்டு அரைத்திடுவாய் நாலுசாமம்
போட்டியாய்ப் பண்ணாதே அரைத்துவில்லை
போக்கோடேபுடம்போட்டு யெடுத்துக்கொள்ளே 558

எடுத்துமே இப்படிக்கு ஐந்துநேரம்
இதமாகப் போட்டுயெடு குருவுமாகும்
அடுத்துமே வெள்ளியெட்டு மூன்றுஞ்சேர்த்து
அதையுருக்கி அகலில்வைத்து ஊதிப்பாரு
தடுத்துமே மதிசிவக்கும் மதியினூடே
தடையறவே தஙகமது யிடையேசேரு
கடுத்துமே சேர்த்துநீ புடமுமிட்டால்
கனிவாகத் தாய்போலே இருக்கும்பாரே. 559

இருக்குமே இதைவிற்றுச செலவுசெய்து
இதமாக இதினடுத்த பெரியவேலை
நருக்காகத் தெரிந்துகொள்ள வேணுமிப்போ
நலமான பொருளறிந்தால் பொருளேயாகும்
பருக்குமே பொருளறியா மூடர்தானும்
பக்குவமாய் நினையார்கள் மூடரப்பா
இருக்குதென்று நாய்போலே தேங்காய்தன்னை
இதமாக உருட்டுவார் உடையார்தானே. 560

உடையாமல் நபிமாரைத் தொழுதுபோற்றி
உலகத்தி லிருக்கமட்டும் வாதஞ்செய்து
அடைவாக விற்றுமே செலவுசெய்து
ஆதியோ டந்தவரை பார்த்துத்தேறு
கடையாகப் பார்த்துமே விற்றுநீயும்
கனிவாகப் பொருளெல்லாங் கண்டுதேறு
முடையாகச் சொல்லாதே மேன்மையாகும்
முத்திக்கு வித்தாக முதலைத்தேடே. 561

தேடவே சீவனத்துக் கிடமேயானால்
திடமாகச் சத்துயெடு செம்புபண்ணு
ஆடவே மதிதனிலே விட்டுநீயும்
அடைவாகச் செலவுரெம்பச் செய்துகொண்டு
காடவே சுண்ணமென்ற காண்டந்தன்னைக்
கனிவாக அறுநூறுங் கருவாய்ப்பாரு
நாடவே சகலமுந்தான் சித்தியாகும்
நாதாந்த யோகம்வரும் நன்மையாமே. 562

நன்மையாய் கருவறியா முரட்டுவாதி
நலமான சாத்திரங்கள் பொய்யேயென்பார்
தன்மையாய்ப் பொய்யென்று சொன்னவாதி
சண்டாளன் அவனுக்கு நூல்கொடாதே
இன்மையாய் அவனுக்கு நூல்கொடாதே
இதமாக மூவேழு வங்கிஷத்தில்
தன்னகரில் அலைந்துமே கெட்டுப்போவார்
தாட்டிகமா யாகோபு சொன்னவாரே. 563

வாரேது யென்றாக்கால் சொல்லக்கேளு
வடிவான சவுக்கார முன்னேவைத்துக்
காரேது வங்கத்தைச் சுண்ணம்பண்ணிக்
கடுமையா யதின்பின்னே துருசைநீற்று
பாரேது அதன்பின்னே சூதங்கட்டு
பதிவாக ரசவாதம் செய்துநீயும்
ஊரேது ஊருதனில் விற்றுநீயும்
உறுதிசொன்ன யாகோபு உண்மைதானே. 564

சொன்னதொரு நூலில்லா வாதம்பார்த்தால்
துணையாகப் பலனில்லை விழலாய்ப்போகும்
கன்னதொரு விழலென்றால் வீட்டுக்காகும்
கனிவாக மடையரப்பா ஒன்றுக்காகார்
தன்னகரில் நினைவுதனில் நினைத்துநீயும்
தாட்டிகமாய்ப் புத்தியிலே கண்டுகொள்ளு
இன்னிலத்தில் ரசவாதம் யேவலாகும்
இருந்துரைத்தார் யாகோபு யிதமதாமே. 565

இதமாகப் பொய்சொல்லும் வாதிக்குத்தான்
இன்பமாய் ரசவாதம் பலனுமில்லை
அதமாக வங்கிஷங்க ளெல்லாம்பாழாம்
அடுத்தவரைக் கெடநினைத்தால் அலைச்சல்மெத்த
பதமாகக் கொடுப்போரைத் தடுத்தபேரைப்
பதிவான அல்லாவுங் கெடநினைப்பார்
சதமாகப் புத்திநான் சொன்னேன்பாரு
தாட்டிகமா யாகோபு திடஞ்சொன்னாரே. 566

திடமாக மகமதுவின் மார்க்கத்தோர்கள்
திட்டமாய் வேதமது ஒன்றிருக்க
அடவாக அல்லாவும் ஒன்றிருக்க
ஆண்மையாய் மகமதுவும் அறிந்திருக்க
படமாகப் பேர்றெம்பச் சொல்லிச் சொல்லி
பார்தனிலே நினைத்தபடி கும்பிட்டேத்தி
வடமான கயர்போலே கட்டுவார்கள்
வடிவான படிப்பில்லார் சொல்லுவாரே 567

சொல்லுவார் நால்வேதம் உயர்த்திகேளு
சுகமான மகமதுவின் மார்க்கமெத்த
நல்லுவார் சத்தியமா மார்க்கந்தானும்
நலமான தாயதனைப் பூசிப்பார்கள்
வெல்லுவார் ஆண்டவனை மூன்றுபோது
மேதினியில் தொழுவார்கள் மொழிகள்மெத்த
கல்லுமே யெரிந்தாலோ பூமிவீழா
கனிவான வேதமது கணக்குத்தானே. 568

பாடல்கள்: 555-568: சாரத்தை ஜெயச் சுண்ணமாக செய்யும் முறையைக் கேள். சாரம் பத்து பலம் எடுத்துக் கொள். சீனிக்காரம் இரண்டுபலம், கிளிஞ்சல் இரண்டு பலம் நிறுத்துக் கொண்டு மூன்றையும் கல்வத்தில் இட்டு நன்கு அரைத்து வில்லை தட்டி காயவை. பின்பு பத்து எருவில் புடமிட்டால் கடுமையான சுண்ணம் ஆகும். இந்த சுண்ணத்தின் எடைக்கு நவச்சாரம்

சேர்த்து அரைத்து பீங்கானில் போட்டு பனியில் வைக்க ஜெயநீராகும். இதில் கொஞ்சம் வீரம் போட்டு கலக்கி வடித்து வைத்துகொள்.

தாளகம் பத்து பலம் எடுத்து சுண்ணாம்பில் சுத்தம் செய் இதை நவச்சார ஜெயநீரால் 1 சாமம் சுருக்கிட்டு எடுத்துக்கொண்டு அண்டச் சுண்ணத்தை இதன் மேல் கவசம் கட்டி பத்தெருவில் புடம் போட்டு எடுத்துப்பார்க்க கரியாய் நிற்கும். இதன் எடைக்கு துரிசு சேர்த்து கல்வத்தில் போட்டு மேற்படி ஜெயநீரால் நாலு ஜாமம் அரைத்து வில்லை தட்டி காயவைத்து முன்போல புடம்போடு. இப்படி ஐந்து தடவை புடம் போட்டு எடுக்க குருமருந்தாகும். இதை எடுத்து வெட்டி எட்டில் மூன்று பங்கு சேர்த்து அகலில் வைது ஊது. வெள்ளி சிவப்பாகும். இதன் எடை தங்கம் சேர்த்து புடம் போட தங்கம் போன்று இருக்கும். இதை விற்று செலவு செய்து கொண்டு அடுத்து பெரிய வேலைகளை யெல்லாம் செய்வாயாக.

சூட்சுமங்களை அறிய வேண்டும். மூடனாக இருக்காதே, நபிமார்களைத் தொழுது இவ்வுலகில் இருக்கும் வரையில் ரசவாதம் செய்து அதை விற்று செலவு செய்து எல்லாவித நூல்களையும் பார்த்துத் தேறு. யாரிடமும் சொல்லாதே ,உன் ஜீவனத்துக்கு இடம் செய்து கொண்டு அதறகடுத்து சத்து எடுத்து செம்புபண்ணு. அதை வெள்ளியில் கொடுத்து தங்கமாக்கி விற்று நன்றாகச் செலவு செய்து கொண்டு சுண்ணக்காண்டம் -600 ஐ கருத்தாகப் பார். எல்லாம் சித்தியாகும். உள்ளான சூட்சுமத்தை அறியாத முரட்டு வாதிகள் சாஸ்திரத்தை பொய் என்று கூறுவார்கள். இப்படிக் கூறுபவர்களுக்கு நூலைக் கொடுக்காதே. இவர்கள் அலைந்து கெட்டுப் போவார்கள்.

இப்படி போகாமல் சவுக்காரத்தை முதலில் செய்து அதை வைத்து வங்கத்தை சுண்ணம் செய்து அதன் பின்பு துருசை சுண்ணம் பண்ணி அதன் பின் பாதரஸத்தைக் கட்டி ரசவாதம் செய்து ஊரில் விற்று வாழு. நூலில்லாத வாதத்தை செய்து பார்த்தால் பலனில்லாமல் வீழ்ந்து போவாய். மடையர் எதுக்கும் ஆகமாட்டார். இதை மனதில் கொண்டு இவ்வுலகில் உள்ளவரை ரசவாதம் செய்த பிழை. பொய்கூறும் ரசவாதிகளுக்கு வாதம் பலன் தராது. அடுத்தவர் கெட நினைத்தால் உனக்கு மனம் அலையும். கொடுப்பவர்களை தடுக்க நினைத்தவர்களை அல்லாவும் கெடுப்பார்.

உனக்கு புத்தி கூறினேன். மகமதுவின் வேதம் ஒன்று இருக்க அல்லவும் ஒன்று இருக்க மகமதுவை அறிந்திருக்க பல பேர்கள் இவ்வுலகில் தாங்கள் நினைத்தபடி வணங்கிக் கொண்டு பல சிக்கல்களைச் செய்வார்கள். இவர்கள் அறிவில்லாதவர்கள். நான்கு வேதங்களிலும் உயர்வானது மகமதுவின் முறையாகும். நல்ல சத்தியமான மார்க்கம் ஆகும். நலமான தங்கத்தாயைப் பூசிப்பார்கள். ஆண்டவனை மூன்று நேரமும் தொழுவார்கள். இதன் வேதமுறை மிகச் சிறப்பானது ஆகும்.

துருசு நீறு

கணக்காக யின்னமொரு துருசுச்சுண்ணம்
கைகண்ட வித்தையிது கருவாய்ச்சொல்வேன்
தணக்கமாய்த் துருசதுவும் பலமும்பத்து
தடையறவே வங்கமது பலமும்பத்து
குணக்கமாய் வெடியுப்புப் பலமும்பத்து
குணமாகக் கல்வமிட்டு அன்னத்தாலே
துணக்கமா யரைத்துயில்லை காயவைத்துத்
துடியாக அகலிலிட்டுப் புடத்தைப்போடே 569

போடவே யெடுத்துப்பார் கருப்பாய்நிற்கும்
பொருந்தவே மஞ்சளதில் போட்டுத்தீரு
ஆடவே ரெத்தம்போல் சிவந்துபோகும்
அடைவாகத் துருசதுவும் சுண்ணமாகும்
நாடவே யிச்சுண்ணத் துறைகள்தோறும்
நலமாக யெடுத்துமே போட்டுத்தானும்
காடவே சகலசரக் கெல்லாங்கட்டும்
கைகண்ட வித்தையிது கருவாய்ப்பாரே. 570

கருவாக யிச்சுண்ணந் தன்னில்தானும்
காரணமாய்ச் சாரமதை யிடையேசேர்த்து
உருவாக அரைத்துமெள்ளப் பனியில்வைக்க
உறுதியாய்ச் ஜெயநீராம் உண்மைதானும்
திருவாகச் சரக்கெல்லா மிதிலேசாகும்
திடமாகக் கட்டுகிற வரிசைகேளு
பரிவாக லிங்கமது பலமுமொன்று
பத்தியாய் முலைப்பாலில் சுருக்குப்போடே. 571

போட்டுமே அதன்பின்பு சொல்லக்கேளு
புகழாகத் துருசினுட ஜெயநீர்தன்னைத்
காட்டுமே யிருசாமஞ் சுருக்குப்போடக்
கைகண்ட லிங்கமது மெழுகுமாகும்
நாட்டுமே நவலோகந் தன்னிலீய
நலமாக மாத்ததுதான் பத்துமாகும்
கூட்டுமே யிதுயெளிதிற் செய்யலாகும்
குணமாக யிதன்பெருமை கூறினேனே. 572

கூறினேன் இன்னமொரு பாகந்தன்னைக்
குணமாகச் சொல்லுகிறேன் குறியதாக
வேறுவினை யில்லாமல் தாளகத்தை
விதமாகச் சுத்திசெய்து சொல்லக்கேளு
காறுமே கரியோட்டில் வைத்துநீயும்
கனிவாகச் சாமமது ரெண்டுதானும்

பாறுமே யெரித்திடவே மெழுகதாகும்
பாதையிது வெகுபோக்குப் பரிவுதானே. 573

தானென்ற . செம்புருக்கி நூற்றுக்கொன்று
தடையறவே கொடுத்திடவே தன்மையாக
நானென்ற பத்தரைதான் ஆணிக்கொக்கும்
நலமான உப்புக்குங் காவிக்கப்பா
கானென்று இறங்கிவிடுந் தங்கந்தானும்
கனிவாக யெடுத்துமே விற்றுநீயும்
கோனென்று செலவுசெய்து பின்புநீயும்
கொடிதான சுண்ணமது செய்திடாயே. 574

செய்திடவே ரெம்பவது பலனுமாகும்
சிறுயாக உழைத்துரெம்பத் திறமைபார்த்துக்
கைதிடவே கைபாக வரிசைதன்னைக்
கணக்காகக் கண்டுகொள்ளப் பலனுமாகும்
மெய்திடவே யேருழுதால் பலனுமாகும்
மேதினியில் வாதமது ஏவல்கேட்கும்
நைதிடவே திரியாதே வாதமார்க்கம்
நாடாளச் செய்திடவே பலனுமாமே. 575

ஆமேதான் முன்சொன்ன துருசுச்சுண்ணம்
அறுபத்து நால்சரக்கை இருக்கிக்கட்டிக்
காமேதான் வேதைமுகந் தெரியப்பாரு
கனிவான ஞானமுதல் கண்டுதேரு
வாமேதான் கண்டபின்பு ஒருவரோடே
வடிவாகச் சொல்லாதே வழக்கங்கெட்டு
நாமேதான் பாகமது வரிசைகண்டால்
நாடாண்ட யாகோபு நலஞ்சொன்னாரே. 576

நலமாக ஏருழுது பரம்படித்து
நாடியே பயிர்செய்தால் விளைவுமாகும்
அலமாக உழுகாமல் போனதாலே
அதுவிளையு மாசொல்லு பயிருமில்லை

கலனாகச் செய்தாக்கால் வாதந்தன்னைக்
கைமிலே அகப்பட்ட கருத்துமொக்கும்
பெலமாகச் செய்யாட்டால் வாதமேது
பிரட்டாகும் வாதிமார் சொல்லுத்தானே. 577

சொல்லேது யென்றாக்கால் சொல்லக்கேளு
சுகமாக விடியுகிற போதுதானும்
நல்லவே வாக்குதான் சொல்லுவார்கள்
நலமான வாக்குதான் செவியிற்கேட்டால்
கல்லேது ஆண்டவனைத் துதித்துப்போற்றிக்
கனிவான சொல்லாகும் கருணைமெத்த
வல்லேது பொருளேது அலிமாவேது
வடிவான பொருளறிந்தால் மார்க்கமாமே. 578

மார்க்கமாய்ப் பிசுமில்லா வென்றநாமம்
மயமான ஆண்டவர்க்கு ஒப்புமொப்பும்
கார்க்கமாய் ரகுமானி னென்றநாமம்
கனிவான பொருள்மெத்தக் கனிந்தபேச்சு
ஏர்க்கவே இதிலிருந்து பிறந்தபேச்சு
இதமாகக் கவர்கோடி யீமான்கோடி
தார்க்கவே இப்படிக்கு ஓதினாக்கால்
தப்பாமல் நீடூழி வாழலாமே. 579

வாழவே தனையறிந்து யீமானைத்தான்
வடிவாகக் கண்டுகொள்ளப் பொருளைக்கேளு
தாழவே செய்யார்கள் அல்லாதானும்
தாட்டிகமாய் வாதவித்தை தானுஞ்சொல்வார்
மாழவே விடமாட்டார் சொல்லுவிப்பார்
மதிபெருகச் சீவகளை தானுமீவார்
வாழவே செய்துவைப்பார் சித்தியாகும்
வடிவான பொருளறிந்த மார்க்கமாமே. 580

பாடல்கள் : 560 - 580: இன்னுமொரு துருசுச் சுண்ணத்தை கூறுகிறேன் கேள். துருசு பத்துபலம், வங்கம் பத்துபலம்,

வெடியுப்பு பத்துபலம் இவை மூன்றையும் கல்வத்தில் போட்டு கற்றாழைச் சோறு விட்டு நன்கு மயனமாக அரைத்து வில்லை தட்டி காய வைத்து அகலில் போட்டு புடத்தைப் போடு. போட்டு எடுத்துப் பார்க்க கருப்பாய் இருக்கும். இதை மஞ்சளில் போட்டு பார்க்க இரத்தம் போல் சிவக்கும். இதனால் துருசு சுண்ணம் ஆகும். இதை சுண்ணம் வந்த இடங்கள் தோறும் எடுத்துப் போட்டு செய்ய எல்லா சரக்கும் கட்டும். இது கைகண்ட வித்தையாகும்.

இந்த சுண்ணத்தின் எடை நவச்சாரம் சேர்த்து அரைத்து பனியில் வைக்க ஜெயநீராகும் , எல்லா சரக்கும் இதில் சாகும் இதனால் ஒரு கட்டு முறையைக் கூறுகிறேன் கேள். ஜாதி லிங்கம் ஒரு பலம் எடுத்து தாய்ப்பாலில் சுருக்குப்போடு அதன் பின் எடுத்து துரிசு ஜெயநீரால் இருஜாமம் சுருக்குப்போடு லிங்கம் மெழுகு ஆகும். இதை ஒன்பது உலோகங்களில் கொடுக்க பத்துமாற்று தங்கமாகும். இது எளிதாகச் செய்யலாகும் எனவே இதைக் கூறினேன்.

இன்னுமொரு முறையைக் கூறுகின்றேன் கேள். தாளகம் ஒரு பலம் எடுத்து சுத்தி செய்து கொள். இதை கரியோட்டில் வைத்து இரண்டு ஜாமம் சுருக்குப்போடு. தாளகம் மெழுகாகும் இதன் போக்கு மிக அற்புதமானது. செம்பை உருக்கிக் கொண்டு நூற்றுக்கு ஒன்று கொடுக்க பத்தரை மாற்று தங்கம் உண்டாகும் இது உப்புக்கும் காவிக்கும் இறங்கிவிடும். சிறப்பான தங்கம் ஆகும். இதை விற்று செலவு செய்து பின்பு கடுமையான சுண்ணங்கள் செய். இப்படி செய்ய சிறந்த பயன் கிடைக்கும். கைபாக வகையுடன் செய்ய பலன் கிடைக்கும்.உழுதாலே பலன் கிடைக்கும். அதேபோல முறையாகச் செய்தால் பலன் கிடைக்கும்.

முன் சொன்ன துரிசுச் சுண்ணம் செய்து அறுபத்தி நான்கு பாடாணங்களையும் கட்டி ரசவாதம் செய்து பார்.ஞானம் நிலை அறிந்து தேறு. ரசவாதத்தை கண்ட பின்பு ஒருவரிடமும் கூறாதே கைபாக வரிசை அறிந்து செய். இதை யாகோபு ஆகிய நான் கூறினேன்.

நிலத்தில் ஏர் உழுது, பரம்படித்து, பயிர் செய்தால் நன்கு விளையும். இல்லையென்றால் பயிர் கிடைக்காது. அதுபோல் இரவுபகலாக கஷ்டப்பட்டு செய்தால் ரசவாதம் சித்தியாகும். செய்யாட்டால் வாதம் ஏது. ரசவாதிகளின் சொல்லெல்லாம் பிரட்டாகும். எப்படி என்றால் அதிகாலையில் சுகமாக விடியும் நேரம் வாக்கு சொல்வார்கள். அந்த நேரம் ஆண்டவனை வணங்கினால் கருணையுண்டு மற்றவைகள் ஏது? அலிமா ஏது? சூட்சமத்தை அறிந்தால் எல்லாம் உண்டு "பிஸ்மில்லா" என்ற சொல் ஆண்டவர்க்கு ஒப்பாகும் "ரகுமானின்" என்ற சொல் இனிமையானது. இதிலிருந்து பிறந்த பேச்சு கோடான கோடி ஆகும். இப்படி ஓதினால் நீடூழிகாலம் நீ வாழலாம். இப்படி உன்னை அறிந்து அல்லாவை வணங்க வாத வித்தைகளைக் கூறுவார். உன்னை இறக்க விடமாட்டார். சொல்லிக் கொடுப்பார். உனக்கு சீவகளையை உண்டாக்குவார். உனக்கு எல்லா சித்திகளையும் கொடுப்பார்.

நூல் விபரம்

மார்க்கமாய் வயித்தியத்தை முன்னேசொன்னேன்
மயமாக அதன்பின்னே களங்குசொன்னேன்
ஆர்க்கவே அதிலெடுக்கும் வகையுஞ்சொன்னேன்
அடிவான பாகமுதல் வரிசைகண்டு
ஏர்க்கவே உலகத்தின செய்கைகண்டு
இதமான பொருளறிந்து இயற்கைபார்த்து

கார்க்கவே குருமாரை வருஷம்யெட்டு
கருதியே பார்த்தாலே பலனுமாமே. 581

பலனாக அயச்செம்பை முன்னேபார்த்து.
பதிவாக அதின்பின்னே சுண்ணம்பாரு
பிலனாக அதன்பின்னே நூலைப்பார்த்துப்
பிசகாம லதின்பின்னே பெருமைகண்டு
வலனாக அதின்பின்னே வலுமைகண்டு
வாதியுட பரிட்சைதான் கண்டுதேறி
அலனாகப் பின்செய்தால் சுண்ணந்தன்னை
அடைவாகப் பலனாகும் ஆண்மைதானே. 582

ஆண்மையாய் முப்பூவின் பொருளைத்தானும்
அடைவாக அறியாத வாதிமார்கள்
தாண்மையாய்க் கடைகெட்ட வாதிபோலே
தனித்துமே நான்செய்வே னென்றுசொல்லி
காண்மையாய்ப் பேராசைப் பட்டுப்பட்டுக்
காரணமாய்ச் சாத்திரத்தி லில்லையென்று
வாண்மையாய்ச் சொல்லியே புலம்பியேங்கி
வடிவான விதியறியார் மார்க்கந்தானே. 583

தானென்ற உலகத்தில் வாதம்பொய்யோ
தடையில்லா நபிமார்கள் வேதம்பொய்யோ
கானென்ற அட்டகர்ம வித்தைபொய்யோ
கனிவான ஆண்டவனார் செய்கைபொய்யோ
நானென்ற சாத்திரங்கள தானும்பொய்யோ
நலமான நபிமார்கள் பொய்யுமானால்
மானென்ற வாதவித்தை பொய்யுமாகும்
மதியறிந்தால் வாதமுண்டு மார்க்கமாமே. 584

மார்க்கமா யிப்படிக்குச் செய்யாப்பேர்க்கு
வடிவான பலனதுவு மில்லையில்லை
ஏர்க்கவே சொன்னதுபோல் செய்யாமுடர்
இதமான பொருளறியார் இழுக்குச்சொல்வார்
கார்க்கவே முன்னேதான் கவலைதன்னைக்
கனிவாக நினைக்காத முடர்தானும்

தார்க்கவே சொல்லியே புலம்புவார்கள்
தடையறவே புலம்பாத மார்க்கந்தானே. 585

தானென்ற நூல்பார்த்தோன் உலகவாதி
தவித்துமே மனம்புண்ணாய் வறுமைசொல்லி
ஊனென்ற சோற்றுக்கு 'இடமேயில்லை
உறுதியில்லை யென்றுமே மனம்வேறாகி
நானென்ற ஆணுவத்தால் கெட்டோமென்று
நாய்போலே குலைத்துமே வாதமில்லை
மானென்று சொல்லியே யிப்படிக்கு
மதிமயங்கித் திரிவார்கள் வாதிமாரே. 586

வாதிமார் நீசவேலை செய்யும்பேர்கள்
வடிவான சாத்திரத்தின் வகையைக்கண்டு
சோதிபெறச் சொல்லியே நினைவிற்பூண்டு
சுருதிகளை யாறுதிர மறிந்துதானும்
நீதிபெறப் பாகமாய்ச் செய்துகொண்டு
நிலவரத்தைக் கண்டறிவார் நேராய்த்தானும்
பீதியே மதிதனிலே வேலைசெய்வார்
பிரட்டாக இருக்காது பிசகாவாறே. 587

வாறேது யென்றாக்கால் சொல்லக்கேளு
வடிவான பொன்னெல்லாம் சத்தினாலே
தாறேது சவுக்கார்ச் ஜெயநீரலே
தாட்டிகமாய் வெடியுப்புச் ஜெயநீராலே
ஊறேது கைபாக வரிசையாலே
உறுதிமிக நின்றதந்த மார்க்கத்தாலே
கூறேது வித்துநின்ற விளைவுனாலே
கொடுமூடர் அறியார்கள் குரூரமாமே. 588

குரூரமா யிப்படிக்குச் சொல்லிச்சொல்லிக்
குணக்கேடு சொல்லியே புலம்பியேங்கி
வருவாரு போவாரும் அவர்களோடே
வார்த்தைகளைப் பேசியே வழக்கத்தாலே
நருவாகச சொல்லியே புலம்புவார்கள்
நலமாகத் தெரியாதார் நேர்த்தியென்பார்

திருவாக இந்நூலைச் சேர்த்துப்பார்த்தால்
ஜெகதலத்தில் நீவாதி தேர்ந்துபாரே. 589

தேர்ந்துமே கைப்பொருளா முப்பூச்சுண்ணம்
திடமான மெய்ப்பொருளாங் களங்குதானும்
வார்ந்துமே சமயப்பொருள் நபிமாரெல்லாம்
வடிவான மெய்ப்பொருளாம் அல்லாதானும்
கூர்ந்துமே மெய்ப்பொருளாம் மகமதுவுந்தானும்
குறியான மெய்ப்பொருளாம் அல்லாதானும்
ஆர்ந்துமே மெய்ப்பொருளாம் அல்லாதானும்
ஆதியா மெய்ப்பொருளாம் அல்லாதானே. 590

பாடல்கள்: 581-590: நான் வயித்திய முறையை முதலில் கூறினேன். அதன் பின் களங்கு செய்யும் முறையைக் கூறினேன். அதில் செம்பு எடுக்கும் வகையைக் கூறினேன். கைபாகம், செய்பாகம் வரிசையைக் கண்டு உலகத்தாரின் செயல்களைக் கண்டு பொருளை அறிந்து இயற்கையை ஆராய்ந்து எட்டு வருஷம் குருமார்களை அண்டியிருக்க எல்லா பலனும் உண்டாகும். அயச்செம்பை முதலில் செய்து பார்த்து அதன்பின் சுண்ணங்களை செய்து பார்த்து அதன் பின் நூலைப்பார்த்து உள்ள விஷயங்களை அறிந்து மனஉறுதியுடன் பரீட்சித்துப் பார்த்து சுண்ணங்கள் செய்தால் பலன் உண்டாகும். முப்பூவின் பொருளை அறியாத மூடர்கள் அறிவு கெட்டு நான் செய்வேன் என்று கூறி பேராசைப்பட்டு சுட்டு சரியாக சாஸ்திரங்களில் இல்லையென்று சொல்லி புலம்பி ஏங்குவார்கள். இவர்கள் அறிவு இல்லாதவர்கள்.

இவ்வுலகில் ரசவாதம் பொய்யோ? நபிமார்கள் எழுதிய வேதம் பொய்யோ? அட்டகர்ம வித்தைகள் பொய்யோ? உண்மையான ஆண்டவனின் செய்கை பொய்யோ? சாஸ்திரங்கள் பொய்யோ? நபிமார்கள் எல்லாம் பொய்யோ?

இவர்கள் எல்லாம் பொய் என்றால் வாத வித்தை பொய்யாகும். உண்மையை அறிந்தால் வாதம் உண்டு. இப்படி செய்யாதவர்களுக்கு எந்தப்பலனும் இல்லை. நூலில் கூறியது போன்று செய்யாத மூடர்கள் உண்மையான பொருளை அறியார்கள், பலவித இழுக்குகள் கூறுவார்கள். கவலைப்பட்டு புலம்புவார்கள். நான் புலம்பாத வழியைக் கூறினேன். நூலைப் படித்துவிட்டு நான் என்ற ஆணவம் கொண்டு திரிவோர்கள் சாப்பாட்டுக்கு வழியின்றி ஆணவத்தால் கெட்டு நாய்போல் அலைந்து ரசவாதம் இல்லை என்று கூறி அறிவு மங்கி அலைவார்கள். உண்மையான வேலை செய்பவர்கள் சாஸ்திரங்களின் வகையை உணர்ந்து நினைவில் அறிந்து எல்லா பாடல்களின் பொருளையும் அறிந்து கைபாகம் செய்பாகம் அறிந்து செய்து கொண்டு ரசவாதத்தை அறிவார்கள். அறிவு கொண்டு செய்யும் இவர்கள் வேலையில் பிசகு இருக்காது.

ஏனெனில் சத்தாலே தங்கம் கிடைக்கும், சவுக்காரச் செயநீரால் கிடைக்கும். வெடியுப்பு ஜெயநீரால் கிடைக்கும் கைபாக வரிசையாலும், மனஉறுதியுடன் செய்வதாலும், கூறிய அறிவினாலும் உண்டான வாத வித்தையை கொடூரமான மூடர்கள் அறிய மாட்டார்கள்.

அறிவு கெட்டவர்கள் புலம்பி புலம்பி ஏங்கி பலருடன் பேசி புலம்பி அலைவார்கள். விபரம் அறியாதவர்கள் இவர்களைக் கண்டு புகழ்வார்கள். அப்படி நீ இல்லாமல் இந்த நூலில் உள்ளபடி திறமையாக செய்து பார்த்தால் இவ்வுலகில் நீயும் ஒரு ரசவாதி ஆவாய். கைப்பொருள் உண்டாக முப்பு சுண்ணமும், உண்மைப் பொருள் செய்ய களங்கும், சமயக் கோட்பாடுகள் அறிந்த நபிமார்கள் எல்லாம் உண்மைப்பொருளான அல்லாவையும் வணங்குவார்கள்.

நன்நடக்கை

அல்லாவை முப்போதுந் தொழுதிறைஞ்ச
அறிவாகப் பலனுண்டு அறிந்துநீயும்
எல்லாமும் படைத்தவரைத் துதித்துப்போற்று
ஏழைமதி போகாம லியல்புகாட்டிச்
சொல்லாலே நினைத்துமே கோழிதன்னைச்
சுகமாக அறுப்பவர்க்குப் பாவமாகும்
கொல்லாமல் எல்லாமும் படைத்தஅல்லா
குணமதனை உயிர்போக்கக் கொடுமையாமே. 591

கொடுமையாய்த் தம்முயிர்போ லெவ்வுயிர்க்கும்
கொண்டாட்ட மில்லார்க்குக் குறைச்சலுண்டு
அடுமையாய்க் காத்தோர்க்கு இடுக்கஞ்செய்ய
ஆண்மையாய்ச் செய்திடிலோ நரகமுண்டு
படுபாடா யாட்டைத்தா னறுப்பவர்க்குப்
பலனில்லை யேமமென்ற பொருளுமில்லை
இடுகாட்டில் கார்த்திருந்த பிணமும்போல
இருந்தேங்கி மாண்டுமே திரிவார்பாரே. 592

தானென்ற யெழுநூறு முன்னேபார்த்துத்
தாட்டிகமாய் வயித்தியங்கள் மிகவுஞ்செய்து
ஊனென்ற சோற்றுக்கு யிடத்தைப்பண்ணி
ஒழுங்காக அதன்பின்னே முன்னூறுரெண்டும்
வானென்று பார்த்துமே களங்குசெய்து
வடிவாக ஐம்பத்து ஐந்தும்பார்த்து
கானென்ற செம்புதான் பிரித்தெடுக்கும்
கைபாக மறிந்துமே தேறுவாயே. 593

தேறுவாய் செம்பெடுத்து மதியில்தாக்கித்
திடமாக விற்றுமே செலவுசெய்து
ஆறுவாய் வீடுமனை பெண்டீர்மக்கள்
அடைவாக வீட்டுக்குச் செல்லுமானம்
பாறுவாய் கொடுத்துமே செலவுசெய்து
பக்குவமா யதின்பின்னே சொல்லக்கேளு
ஊறுவா யுண்டுடுத்திப் பின்புநீயும்
உறுதிபெற அதின்பின்னே சொல்லக்கேளே. 594

சொல்லவே அதின்பின்னே செந்தூரத்தைச்
சுகமாகச் செய்திட்டுப் பின்புநீயும்
வெல்லவே நவலோகந் தன்னிலிட்டு
விருப்பமாய் விற்றுமே செலவுசெய்து
பல்லவே பள்ளிதான் வாசல்கட்டிப்
பதிவான தைக்காலைப் பதியவாங்கி
நல்லவே கந்தரிதா னாக்கிநீயும்
நலமாகக் கொடுத்திடவே பலனுமாமே. 595

பலனாகச் சவுக்காரச் சுண்ணஞ் செய்தால்
பதிவான வெடியுப்புச் சுண்ணஞ்செய்து
அலனாகச் ஜெயநீரா யாக்கிக்கொண்டு
அடைவான சவுக்காரந் தன்னையாட்டிக்
கலனாகப் புடம்போடச் சுண்ணமாகும்
கடுங்காரச் சுண்ணமாம் வீரமிட்டுப
பிலனாகத் துருசின்மேல் லப்பிநீயும்
பிரபலமாய்ப் புடம்போட நீறுமாமே. 596

நீறான துருசினுட நீறுதன்னை
நேராக பணவிடைதான் விராலிக்கிட்டு
வாராகப் பிழிந்துமே சூதமிட்டு
வகையாகக் காய்ச்சிட்வே சூதங்கட்டும்
நேராக யிச்சூதங் கரியில்நின்று
நிகராக உருகுமப்போ தங்கஞ்சேர்த்துப்
பாராகச் செந்தூரம் பண்ணிநீயும்
பதிவாக நவலோகந் தன்னிலியே 597

ஈயவே நவலோகம் பழுத்துப்போகும்
இதமாக உலகத்தில் விற்றுநீயும்
நாயமார் சொன்னபடி அல்லாவுக்கு
நலமான பள்ளிதான் வாசல்கட்டிக்
காயவே கந்தரிதான் ஆக்கிநீயும்
கனிவாகக் கொடுத்துமே அப்பாற்கேளு
வாயவே இச்சொத்தை வீட்டிலேதான்
வடிவாக உண்டிடவே வேண்டாந்தள்ளே 598

உண்டிட்டால் சித்தியில்லை உலகத்தோரே
உறுதியாய்ச் சொல்லிவிட்டேன் அறுநூறுதன்னில்
கண்டிட்ட படிபோலே செய்துநீயும்
கனிவான பதினாறில் கணக்குக்கண்டு
முண்டிட்டுச் செய்யாதே கொஞ்சஞ்செய்து
முக்கியமாய் விற்றுமே செலவுசெய்து
வண்டிட்ட பாவனைபோல் மனதிலெண்ண
மகத்தான சித்தியாம் மருவிப்பாரே. 599

மருவவே அல்லாவைத் தொழுதுபோற்றி
மகமதுவைத் தொழுதுமே போற்றித்தானும்
உருகவே நபிமாரைத் தொழுதுபோற்றி
உற்றுணர்ந்து வெகுபாடு பட்டுத்தேரு
பருகவே மக்காவின் தேசந்தன்னில்
பதிவாகச் சென்றுமே வேலைகற்றுத்
தருகாவில் சென்றேறிச் சுண்ணக்காண்டம்
தப்பாமல் பாடினே னறுநூறுதானே. 600

பாடல்கள்:591-600: அல்லாவை மூன்று நேரமும் வணங்கி போற்று, படைத்தவனை துதித்து போற்று. அதை விடுத்து எல்லாம் படைத்த அல்லாவிற்கு கோழியை அறுத்து கொலை செய்வது பவமாகும். தம்முயிர் போல எல்லா உயிர்களையும் நிலையற்றவர்களுக்கு வாழ்வில் பல இடைஞ்சல்களும் வளர்ச்சியின்மையும் உண்டு. உயிர்களை எல்லாம் தம்முயிர்போல் காப்பவர்களுக்கு இடைஞ்சல் செய்பவர்கள் நரகத்தை அடைவர். அல்லாவிற்கு ஆட்டை அறுப்பவர்களுக்கு என்னாளும் பலனில்லை. தங்கம் செய்வதும் சித்தியாகாது. இவர்கள் பிணம் போல அலைவார்கள்.

முதலில் என்னுடைய நூலான “ வைத்யம்-700” என்னும் நூலைப்பார்த்து வயித்தியங்கள் செய்து சோற்றுக்கு வழியை செய்து கொண்டு அதன் பின்பு “சுண்ணம்-300” யோக

செந்தூரம்-300" என்னும் இரண்டு நூலும் பார்த்து களங்குகள் செய்து கொண்டு, அதன் பின் சூத்திரம் -55 என்னும் நூல் பார்த்து செம்பு எடுத்து கைபாகமாக செய்து தேறு. இப்படி செம்பு செய்து வெள்ளியில் கொடுத்து பொன்செய்து விற்று செலவு செய்து வீடு, நிலம், மனைவி, பிள்ளைகள் குடும்பச் செலவு இவைகளுக்கு செலவு செய்து அதன் பின்பு உன் உணவு மற்றும் உடைக்கு செலவு பின்பு உன் உடல் உறுதிபெறும் பொருட்டு கூறுகின்றேன் கேள். அதன் பின்பு செந்தூரம் செய்து அதை நவலோகங்களில் கொடுத்து பொன்னாக்கி விற்று செலவு செய்து பள்ளி வாசல் கட்டி யோகப்பியாசம் செய்து கந்திரிச் சோறு செய்து அன்னதானம் செய்ய பலன் உண்டாகும்.

சவுக்காரச் சுண்ணம் செய்தால் முதலில் வெடியுப்புச் சுண்ணம் செய்து அதை ஜெயநீராக்கி அதனால் சவுக்காரத்தை ஆட்டி புடம் போட சவுக்காரம் சுண்ணம் ஆகும். கடுங்காரச் சுண்ணமான இதை வீரத்துடன் கலந்து துருசின் மீது பூசி புடம்போட துரிசு சுண்ணமாகும். இந்த துரிசை விராலி இலையில் பணஎடை போட்டு பிழிய ஜெலம் ஆகும். இந்த விராலி இலை நீரில் பாதரஸத்தை விட்டு அயக்கரண்டியில் காய்ச்ச சூதம் கட்டும். இந்த பாதரஸத்தை கரியில் வைத்து உருக்கி அத்துடன் தங்கம் சேர்த்து செந்தூரம் பண்ணி அதை நவலோகங்களில் கொடுக்க பொன்னாகும். இதை விற்று செலவு செய்து நான் சொன்னபடி அல்லாவுக்கு பள்ளி வாசல் கட்டி பல கந்திரிகள் கொடுத்து இந்த சொத்தை வீட்டிற்கு செலவு செய்ய வேண்டாம். இதை விற்று சாப்பிட்டால் சித்திகள் கிடைக்காது. இதை இந்த சுண்ணகாண்டம் -600 ல் தெளிவாகச் சொல்லிவிட்டேன் எனவே நூலில் கண்டபடி செய்து "கைபாகம்-16" என்னும் நூலில் உள்ள கணக்குப்படி செய்து பார். நிறையச்

செய்யாமல் கொஞ்சமாக செய்து செலவு செய். எந்நேரம் மனதில் ஆண்டவனை வணங்க எல்லாம் சித்தியாகும். அல்லாவையும், மகமதுவையும், நபிமார்களையும் தொழுது போற்றி நன்கு உணர்ந்து பாடுபட்டு தேறு. இதற்காக நான் மக்கா சென்று அங்குள்ளவர்களிடம் வேலைகளைக் கற்று தருகாவில் சென்று தங்கி சுண்ணகாண்டம்-600 என்னும் நூல் பாடினேன்.

நூல்களின் தொகை

தானென்று சதுரகிரி தன்னில்முன்னந்
தானிருக்கும் போதுஎன்பேர் இராமதேவர்
நானென்று பேருபெற்று இருக்கும்போது
நாலுமலைச் சித்தர்களுங் கற்பங்கேட்டார்
கோனென்று அவர்களுக்கு மகிழ்வதாகக்
குறிப்புடனே கற்பமாயிரமுஞ் சொன்னேன்
மானென்று அதைக்குறுக்கி முன்னூறுந்தான்
மகிழ்வாகச் சொல்லிவிட்டே னறியத்தானே. 601

அறியவே அதீதமை நூறுசொன்னேன்
அதைத்தெளிவாய்த் தெரிவதற் கைனூறுசொன்னேன்
தெரியவே சாலமெண்ணூறு சொன்னேன்
சிறப்பாகக் குறுக்கிமுந்நூறு சொன்னேன்
பெரியசிவ யோகமிரு நூறுசொன்னேன்
பேரான சூத்திரமுந் நூறுசொன்னேன்
உரியதொரு தண்டகமே நூற்றிப்பத்தும்
உயர்வாகச் சொல்லிவிட்டேன் கருவாய்த்தானே.602

கருவாகப் பட்சணிதான் நூற்றுப்பத்தும்
கனிவாகக் கேசரியும் நூறுசொன்னேன்
உருவாக வயித்தியமெண் பத்துமூன்றும்
உண்மையுடன் சுத்திமுறை ஐம்பதுந்தான்
திருவாக யோகமைம் பதுவுஞ்சொன்னேன்
சிறப்பாக முப்பூமுப் பதுவுஞ்சொன்னேன்
தருவாகப் பரிபாஷை இருபத்தேழும்
சாற்றினேன் சித்தர்களுஞ் சரியென்றாரே. 603

சரியென்று சொன்னபின்பு ஞானந்தன்னைச்
சாற்றினேன் பதினாறில் சுருக்கமாகத்
தெரியவே குருசூத்திரம் பதினாறோடு
சீராக ஞானமதைப் பத்திற்சொன்னேன்
உரிமையுட னதைக்குறுக்கி ஐந்திற்சொன்னேன்
உற்றிடுபூ ஜாவிதிதான் பத்திற்சொன்னேன்
பெரியதொரு சாத்திரத்தைக் கோர்வைநூலாய்ப்
பேணியே பார்த்தோர்க்குச் சித்தியாமே. 604

சித்தியென்ற என்னூலைத் தெரிந்துகொண்டால்
சித்தனென்று சொல்வதற்குத் தடைவேறுண்டோ
பத்தியுடன் நூல்கள் சொல்லிமக்காதேசம்
பரிவாக வந்தவுடன் நபிமாரெல்லாம்
எத்திசையுந் தானறிய யாகோப்பென்று
எனக்குப்பேரிட்டுச் சுண்ணத்துஞ்செய்தார்
புத்தியுட னங்கிருந்து வெகுநூல்சொல்லிப்
புகழாக அறுநூறுஞ் சொன்னேன்முற்றே. 605

யாகோபு சுண்ணக்காண்டம் 600

பாடல்கள்: 601-605: நான் சதுரகிரி மலைமீது இருந்து வாழும்போது என் பெயர் இராமதேவர். நான் அன்று பெயர்பெற்று விளங்கும்போது என்னிடம் நான்கு மலைகளில் உள்ள சித்தர்களும் கற்பங்களைப்பற்றி கேட்டார்கள். அவர்களின் மகிழ்ச்சிக்காக "கற்பம் ஆயிரம்" என்னும் நூல் சொன்னேன் பின்பு அதைக் குறுக்கி 300 பாடல்களாகக் கூறினேன்.

அதன் பின் எல்லோரும் அறியும் படி அதீதமை-100 கூறினேன். அதை தெளிவாய் அறிவதற்கு 500 பாடல்கள் கூறினேன். " சாலம் - 800 "என்னும் நூல் கூறினேன் அதைக் குறுக்கி - 300 என்னும் நூல் சொன்னேன். சிவயோகம் 200 சொன்னேன். சூத்திரம் 100 என்னும் நூல் கூறினேன். "தண்டகம்-110" என்னும் நூல் உயர்வாகக் கூறினேன்.

"கேசரி-100" சொன்னேன் " வைத்யம் -83" சுத்திமுறை-50" " யோகம்-50" ஆகியவைகள் கூறினேன் "முப்பூ.30" " பரிபாஷை 27" இவைகள் கூறினேன். இவைகளைப் படித்து சித்தர்கள் சரியாக உள்ளது என்றனர். பின்பு ஞானத்தை .-16 பாடல்களில் சுருக்கமாக பாடினேன் "குருசூத்திரம்-16" என்னும் நூலுடன் "ஞானம்-10" என்னும் பாட்டும் பாடினேன். அதையும் குறுக்கி 5 பாடல்களில் சொன்னேன். "பூஜாவிதி-10" பாடல்களில் சொன்னேன். இந்த சாஸ்திரங்களைக் கோர்வையாய் பார்த்த பேர்களுக்கு எல்லாம் சித்தியாகும்.

என்னுடைய நூலை அறிந்து கொணடவர்களுக்குச் சித்தன் என்ற பெயர் தடையின்றி கிடைக்கும். இப்படி பல பாடல்களாக நூல்கள் சொல்லி மக்காதேசம் வந்தவுடன் நபிமார்கள் எல்லோரும் எல்லா திசைகளிலும் என் பெயர் அறியும் பொருட்டு யாகோபு என்று பெயரிட்டு எனக்கு சுன்னத்தும் செய்தார்கள். நல்ல புத்தியுடன் அங்கிருந்து பல நூல்கள் சொன்னேன். அப்படி கூறிய புகழ்பெற்ற சுண்ணகாண்டம் - 600 என்னும் இந்த நூல் இத்துடன் முடிவு பெற்றது.

முற்றிற்று.

தாமரை
நூலகம்